# இந்து தருமம் 2007



இந்து மாணவர் சங்கம் 2007/2008,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

'மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்'

# இந்து தருமம்
# 2007

**இந்து மாணவர் சங்கம் - 2007/2008**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**

# Hindu Dharmam
# 2007

Hindu Students' Union - 2007/2008
University of Peradeniya,
Peradeniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூல் | : | இந்து தருமம் - 2007 |
| இதழாசிரியர்கள் | : | இ. றஞ்சித்<br>வே. சிவாகரன் |
| வெளியீடு | : | இந்து மாணவர் சங்கம், 2007/2008.<br>பேராதனைப் பல்கலைக்கழகம்,<br>பேராதனை. |
| பிரதிகள் | : | 400 |
| அட்டைப்படம் | : | அபிராமி, த. |
| அச்சுப்பதிப்பு | : | சந்துனி பதிப்பகம் |

| | | |
|---|---|---|
| Title | : | Hindu Dharmam |
| Editors | : | R. Ranjith (*Faculty of Engineering*)<br>V. Sivakaran (*Faculty of Arts*) |
| Published By | : | Hindu Students' Union, 2007/2008.<br>University of Peradeniya,<br>Peradeniya. |
| Copies | : | 400 |
| Cover Design | : | Abirami, T. (*Faculty of Arts*) |
| Printed By | : | Sanduni Offset Printers |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காப்பு

முப்புரம் எரிசெய்த அச் சிவன்
உறை ரதம் அச்சது
பொடி செய்த - அதிதீரனுக்கு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்



**பேராதனை உறைந்து**
**பேணி நம்மைக் காப்பதற்குக்**
**கூரான வேல் தாங்கும்**
**குறிஞ்சிக் குமாரனுக்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டவிழும் மலர் குறித்து...

ஈழ நாட்டின் முதற் பல்கலைக்கழகம் பேராதனைப் பல்கலைக்கழகம். இலங்கையில் உயிரின வாழ்விற்கு உகந்த இடம் என புவியியல் ரீதியாக நிறுவப்பட்ட இப்பிரதேசம், மலையும் மலை சார்ந்ததான குறிஞ்சியாக அமைந்துள்ளது. பல்மத, மொழி, கலாசார, பண்பாட்டுச் சூழலில் அறிவுடன் ஆன்மீகமும் மிளிரச் செய்வதற்காக மதசார் ஆலயங்கள் அமைக்கப்பட்டபோது, ஆலயங்களுக்கான அமைவிடத் திருவுளச் சீட்டில் 'கொடி பறக்கும் உயர் குறிஞ்சியில்' கோயில் கொண்டவனே கற்றோரும், மற்றோரும் போற்றும் குறிஞ்சிக் குமரன். அவனுக்கு மாணவர் எடுத்த கோயில் இன்று மாண்புற விளங்குகிறது. இச் சூழலில் தமிழ் மணம் வீசும், ஆன்மீகம் தெள்ளும், ஞானம் கைகூடும், அறிவு பெருகும், துக்கம் பறந்தோடும். ஆடவர், மங்கையர் அணி திரள்வர். பன் மத, இன, மொழி மாணவரும் மற்றோரும் களிப்புற நாடுவர்.

ஆலயத்தின் நித்திய கருமங்களுக்கு உறுதுணையாக இருப்பது 'இந்து மாணவர் சங்கம்'. இதன் இரு கண்கள் இந்துப் பட்டதாரிகள் சங்கம், பொறுப்பாண்மைக் குழு என்பனவாம். இவற்றைவிட தமிழ்ச் சங்கம், சங்கீத நாட்டிய சங்கம் என்பவையும் இதனுடன் இணைந்து செயற்படுபவை.

'இந்து நெறி - தரும நெறி'. இந்நெறியை, 'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்பதற்கிணங்க, இந்து மாணவர் சங்கம் தனது செயற்பாட்டின் மணி மகுடமாக 'இந்து தருமம்' எனும் நூலினை வருடாவருடம் வெளியிடுகிறது. இத்தகைய மலர் இம்முறையும் சமய, சமூக, தரும, அறிவியல், ஆய்வுக் கருத்துக்களைத் தாங்கிய வண்ணம் வெளிவருகின்றது.

'அவன் அருளாலே அவன்தாள் வணங்கும்' அவன் அருள், இந்நெறிக்கு என்றும் தேவை. இம்மலர் ஒரு சில வருடங்கள் வெளிவராதபோதும் இன்று தொடர்ந்து வெளிவருவது நன்றிக்கும் மகிழ்ச்சிக்குமுரியது. "இந்து தருமம்" தொடர்ந்து வெளிவர குறிஞ்சிக் குமரனே துணை.

2007 இற்கான இம்மலர் ஆறு இயல்களைத் தாங்கி வருகிறது. அவை, வாழ்த்தியல், ஆய்வியல், கருத்தாக்கவியல், திருப்புகழியல், மொழிபெயர்ப்பியலும் கவிதையியலும், பதிவியல் என்பனவாம். நூலின் முக்கியம் கருதி பயன்மிகு ஆக்கங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆக்கங்கள் அனைத்தும் ஆக்கியோரையே சாரும்.

இதில் சில ஆக்கங்கள் 'இந்து தருமத்துக்கு'ப் பொருந்துமா, என்ற வினா எழலாம். இவை அறிவியல், பயன் என்பன கருதி இணைக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஆக்கங்கள் இணைத்துக் கொள்ளப்படாமையே 'இந்து தருமத்தின்' மந்த நிலைக்குக் காரணம் எனவும் சிந்திக்கத் தூண்டுகிறது. திருப்புகழியலிலுள்ள 'திருப்புகழ் ஆரம்' போற்றுதற்குரியது. இது எதிர்காலத்தில் பஜனையில் இடம்பெற வேண்டும். 'இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்', மற்றும் ஏனைய ஆய்வுகள், உயர்தர, பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் மிகவும் பயனுடையவை. ஆக்கங்களும் இத்தகையதே! மேலும், சில ஆய்வுகள், ஆக்கங்கள் விமர்சனங்கள் போலத் தோன்றினாலும், கூர்ந்து நோக்குமிடத்து அவை இந்துமத வளர்ச்சிக்கான அத்திவாரங்களே என்பது புலனாகும்.

மேலும், இந்நூல் சிறப்புற வெளிவர தமது ஆக்கங்களைத் தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், மற்றும் ஆசியுரைகள் வழங்கியோர், நூல் சிறப்புற உதவிய பேராசிரியர்கள் கனகரத்தினம், அருணாசலம், திரு சி.சிவகாந்தன், செ.சுதர்சன் பல் வழிகளிலும் உதவிகள் புரிந்த சுரேந்திரன், பகீதரன், திருவரங்கன், சுதர்சன், நவநீதன், சுபாஸ், கீதா,அ., கலைமதி,நா. மற்றும் தத்ரூப அட்டைப்படம் வரைந்த அபிராமி,த. நூலைச் சிறப்புற அச்சிட்டு உதவிய சந்துனி பதிப்பகத்தார் என்போர் நன்றிக்குரியவர்கள்.

இந்நூலின் 'குற்றங்களைப் பொறுத்து குணங்களை ஏற்பீர்கள்' என நம்புகிறோம்.

***'என்னை நன்றாக இறைவன் படைத்தனன்***
***தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே'.***

**வே. சிவாகரன் (கலைப்பீடம்)**
**இ. ரஞ்சித் (பொறியியற் பீடம்)**
**(இதழாசிரியர்கள்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அட்டைப்பட விளக்கம்...

## விஞ்ஞானம் வியக்கும் மெய்ஞ்ஞானம்

அம்மை, அப்பன், ஆசிரியன், இறைவன்
ஆல யத்தின் கூற்றாய் - இவ்
அண்ட சராசரம் அனைத்தும் கடந்து
ஆத்ம வடிவாகி நின்றாய்...

சாதி, மத, பேதம் வென்ற பேராதனைப்
பதியில், மானுடமே சான்றோர் - என உணர்த்த,
நீயும் வந்தமர்ந்தாய் குறிஞ்சிக்கு, மானிடற்கு
சாற்றுகிறாய், மானுடத்தைத் தருமவழியில்...

பல்கலை நாம்பாட வரமருளும் கந்தா!
வேலாலே உணர்த்திடு, மேலான மெய்ஞ்ஞானம் - நின்
கூரான வேலின்நுனி நுண்ணறிவு அன்றோ!
தாங்கிடும் திருக்கரங்கள் பல்கலைகளன்றோ..!

வேகம் நிறைந்த வேரற்ற இவ்வுலகில்
மறைந்தது ஞானம், நிறைந்தது ஆசை - இதனால்,
கெட்டது வாழ்வு, வென்றது வெகுளி,
விட்டதே வீடு, செத்ததே நாடு.

மானம் பெரிது, ஔவையின் வடிவாய்
அன்று சொன்னது நீயே - இஃது பெற
இன்று, கல்வி பெரிது, செல்வம் பெரிது
வீரமென் றோது, குறிஞ்சியனே!

தேவர்கள் துயர், நின்செவி எட்டியது.
மானுடர் நம் துயர், நின்செவி எட்டலையா! - சொல்!
நின் வேல்,(லா) ஆயுதமா, அகிம்சையா?
நம் நாட்டுத் தீர்வுக்கு!

விஞ்ஞானம் கண்டது இன்று, அதை
மெய்ஞ்ஞானம் சொன்னது அன்று - விஞ்ஞானம்
நிரூபித்து உண்மை கண்டது, இது
நிரூபணமாகி நின்றது.

அன்று! நீ, சொன்ன வார்த்தைகள்
இன்று, விஞ்ஞானம் மெய்ப்பிக்கும் உண்மைகள் - இது
வெற்றித் திருவேல் ஞானம், அது
இன்று, விஞ்ஞானம் வியக்கும் மெய்ஞ்ஞானம்.



வேலாயுதம் சிவாகரன்.
(கலைப்பீடம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் இதழ்கள்...


### 1. வாழ்த்தியல்

i. **ஆலயப் பிரதம குரு** i

ii. **துணைவேந்தர்** (Vice Chancellor) ii

iii. **இந்து மாணவர் சங்கப் பெருந்தலைவர்** iii

iv. **பெரும் பொருளாளர்** iv

v. **கௌரவ கணக்காய்வாளர்** v

vi. **இந்துப் பட்டதாரிகள் சங்கத் தலைவர்** vi

vii. **இந்து மாணவர் சங்கத் தலைவர்** vii

### 2. ஆய்வியல்

1. காரைக்கால் அம்மையார் : ஒரு படிமவியல் நோக்கு. 1
**பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்**

2. இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள். (1960களுக்கு முற்பட்டவை) 7
**பேராசிரியர் க. அருணாசலம்**

3. தொன்மையும் மேன்மையும். 18
**சி. சிவசேகரம்**

4. அடியவர் அடிகளில் அடிமை. 20
**செ. சுதர்சன்**

5. சமயத்தின் சமூகவியல். 26
**சி. சிவகாந்தன்**

6. வேதகால மரபு : ஒரு மெய்யியல் நோக்கு. 29
**முபிஸால் அபூபக்கர்**

7. சிவனின் பாம்பும் காரைக்காலம்மையாரின் பாடல்களும். 34
**மா. ரூபவதனன்**

8. திருமுருகாற்றுப்படை காட்டும் முருகனின் திருக்கோலப் பண்பாடு. 37
**விஜிதா, சி.**

9. ஒரு ‘சமூகவியல்’ ஆய்வு. 41
**அ. குககுமாரன்**

### 3. கருத்தாக்கவியல்

10. இந்துமதம் காட்டும் வாழ்க்கைநெறி. 47
**வே. சுபாஸ்காந்தன்**

11. மஹோற்சவத்தின் மகிமை. 49
**மகிஜினி, பா.**

12. இந்து மதத்தில் பெண்மை. 52
**கௌசல்யா, செ.**

13. வணிகத் தளமாகவும் வன்முறைக்களமாகவும் மாறிவரும் வணக்க ஸ்தலங்கள். 54
**கா. கார்த்தீபன்**

14. இந்தியக் கலையும் ஆனந்தகுமாரசுவாமியும். 56
**தி. திலீபன்**

15. தியானமும் வாழ்வும். (Meditation & life) 58
**ச. செல்வநாயகம்**

16. வாழ்க்கையில் சைவம். 61
**சிவராணி, ச.**

17. ஆயுர்வேதமும் இந்து சமயமும். 63
**அ. சிவஷாந்தன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. திருப்புகழியல்

18. குறிஞ்சிக் குமரன் திருப்புகழ் ஆரம் 65
**பூ.சோதிநாதன்**


## 5. மொழிபெயர்ப்பியலும், கவிதையியலும்.

19. மேலும் நான் இரக்கின்றேனே 69
**தமிழில் - புருஷோத்தமஞானி**
20. வரம் கொடு தாயே! 70
**தேவப்பிரியா, பெ.**
21. துயர் துடைப்பாய் வேலவா...! 71
**ந. பாலமுரளி**
22. நாள் கோள்தான் என்ன செய்யும்...! 72
**கலைமதி, நா.**
23. மௌனம் கலைத்து எழு 73
**ஜெ. பிறேம்குமார்**
24. வாரீர் குமரன் அடி வணங்குவதற்கு... 74
**ஸ்ரீ. பகீதரன்**
25. காத்தருள் ஐயா..! 75
**ச. லவப்பிரதன்**
26. அறம் செய்ய விரும்பு 76
**யவநீதா, ந.**
27. பொழுது விடியாதோ 78
**ம. சிவகுமார்**

## 6. பதிவியல்

I. செயலாளர் அறிக்கை 79
II. நிகழ்வுகளின் நிழல்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்தியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் விக்னராஜ கணேசான சிவபுத்ர விநாயகாய நமஹ"

# ஆலயப் பிரதம குருவின் ஆசி

*"ஓம் ஸாம் ஸ்கந்தாய கார்த்திகேயாய பார்வதீ*
*நந்தனாயஸ / மகாதேவ குமாராய*
*குறிஞ்சிக்குமராயதே நமஹ"*

*"சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியவாம்*
*சொல்லிய வண்ணம் செயல்"*

சொல்லுதல் எளிது, சொல்லியவாறு செய்தல் கடினம். வள்ளுவப் பெருந்தகையின் பெறுமானம் மிகுந்த நறுக்கான குறள் அது.

மனிதர்கள் அகந்தூய்மை, புறந்தூய்மை பேணவும், உடல் ஆரோக்கியத்துடன் கூடிய மனத்திருப்தியையும் வழங்கி, நல்ல வண்ணம் வாழ்வாங்கு வாழவைப்பது இந்து சமயச்சூழல் ஆகும். கோவில் திருவிழாக்கள், சமய விழாக்கள், பண்டிகைகள் நடைபெறுங் காலங்களில் ஒழுங்கு, கட்டுப்பாடுகளுக்கும் ஆசார சீலங்களுக்கும் உட்படுத்தப்படுகின்றோம். கொலை, களவு, காமம், பொய் பேசுதல், மது அருந்துதல், புலால் உண்ணுதல் போன்ற பாதகங்களை விலக்கிக்கொள்ள வைப்பதுடன் தானதர்மம் செய்யவும் தூண்டப்படுகின்றோம். குறைந்த பட்சம் மனஆறுதலுடன் கூடிய நற்சிந்தனைகளாவது உருவாகின்றன.

இத்தகைய இந்துசமய வாழ்வியல் நெறியை நடைமுறைப்படுத்தும் நோக்கில், பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாணவர் சங்கத்தினரும் அவர்களைச் சார்ந்தவர்களும் குறிஞ்சிக்குமரன் ஆலயத்தை உருவாக்கியதுடன் தத்துவங்களில் உள்ளனவற்றை செயல்படுத்தல், அறிவில் உள்ளனவற்றை அனுட்டிப்பது, சாத்திரங்கள், சமயப் பேச்சுக்கள், போதனைகளை சாதனைகளாக மாற்றுவது போன்ற விடயங்களில் பெரும்பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

இதன் ஓர் அங்கமாகவே இந்து தருமம் நூலையும் வெளியிட்டு வருகின்றனர். பல்வேறு துறை சார்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றுகூடி ஆற்றுகின்ற இப்பணிகள் ஏனையோருக்கு எடுத்துக்காட்டாகவும், ஒழுக்கம், உண்மை, நீதி, அன்பு, அறம், சாந்தி, சமாதானம், அமைதி முதலிய நல்லனவெல்லாம் மலரும் வண்ணமாயும், கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் முயற்சிகள் சித்திக்கும் வகையிலும் மேன்மை பெற எல்லாம் வல்ல குறிஞ்சிக்குமரன் திருவருள் பாலிப்பாராக எனப் பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து.

**குறிஞ்சிக்குமர சேவா சிரோன்மணி,**
**சிவஸ்ரீ பா. நித்தியானந்தக்குருக்கள்,**
**பிரதம குரு,**
**குறிஞ்சிக்குமரன் கோயில்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Message from the Vice Chancellor

I have great pleasure in sending this message to the annual magazine of the Hindu Students' Union, "Hindu Dharmam" – 2007. During the last several decades the Hindu Students' Union has played a very important role in bringing Tamil speaking student population together, promoting brotherhood and harmony.

The Hindu Students' Union, as a students' organization, has conducted various extra curricular activities and cultural programmes for the students. I greatly value the services of the Union and congratulate the present committee members for their enthusiasm and dedication in promoting extra-carricular activities and cultural events among Tamil speaking students.

I wish the members of the committee and the general membership of the Hindu Students' Union, every success in their future endeavours.

24/1/08

**Prof. H. Abeygunawardena,**
**Vice Chancellor,**
**University of Peradeniya.**

**24 January 2008**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெருந்தலைவரின் வாழ்த்துச்செய்தி

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வளாகத்தினுள் கோயில் கொண்டிருக்கும் குறிஞ்சிக்குமரனாகிய முருகப்பெருமான் அன்றுமுதல் இன்றுவரை அடியார்களுக்கு அருள் பாலித்து வருவதற்கு எமது இந்து மாணவர்களின் அயராத அர்ப்பணிப்பும் ஒரு காரணம் என்றால் மிகையாகாது. ஆலயத்தின் நித்திய பூசைகளுக்கும் சிறப்பான உற்சவங்களுக்கும் தங்கள் பங்களிப்பைச் செய்து வருவதோடு தமது கல்வியிலும் கவனம் செலுத்தும் வல்லமையை முருகன் இந்து மாணவர் சங்கத்தினர்க்கு வழங்கி வருகின்றான்.

இலங்கைத் திருநாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இருந்து எட்டுப்பீடங்களுக்கும் தெரிவுசெய்யப்பட்ட இந்து மாணவர்களில் சமயத்தொண்டில் ஆர்வமும் ஆலயப்பணிகளில் அர்ப்பணிப்பும் நிறைந்த பல மாணவமணிகளின் செயற்பாடுகளால் ஆலயம் சிறப்புற விளங்குகின்றது. தர்மம் மெதுவாக நிலை குலைந்து அதர்மம் தலை தூக்கியுள்ள இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கவும் எமது ஆலயம் அரிய பங்களிப்பை வழங்கி வருவது பிரத்தியட்சமானதாகும்.

இத்தருணத்திலும் இந்து சமயத்தின் உயர்ந்த கோட்பாடுகளைப் பரப்பவும் மாணவர்கள் மத்தியில் இறையுணர்வை வெளிக்கொணரவும் பல சிறந்த ஆக்கங்களைத் தாங்கியவாறு பொலிவுடன் வெளிவரும் "இந்து தருமம்" எல்லோரும் படித்துப் பயன் பெற வேண்டும். இந்த இதழ் தொடர்ந்தும் தனது கருத்துக்களைப் பரப்பும் பணிக்கு குறிஞ்சிக்குமரன் பேரருள் கிடைக்க வேண்டி எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் இறும்பூதெய்துகின்றேன்.

*"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"*

**வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி,**
பெருந்தலைவர்,
இந்து மாணவர் சங்கம்,
பேராதனைப்பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெரும் பொருளாளரின் வாழ்த்து

"சேயோன் மேய மைவரை உலகமும்" என்று நமது தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியம் கூறுகின்றது. குறிஞ்சி என்பது மலையும் மலை சார்ந்த இடமும் ஆகும். அதற்குரிய தெய்வம் குமரன். குன்றுதோறாடல் செய்த குறிஞ்சிக்குமரன் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர்களின் வழிபடுதெய்வமாக உள்ளான். குறிஞ்சிக்குமரன் கோயில் பல்லின, பன்மொழி, பல்பண்பாட்டுச்சூழலில் இந்துமத அடையாளமாக இருப்பது சிறப்பிற்குரியது. "நூற்பயன் இறைவனை அடைதல்" இந்துமதத்தின் கொள்கைகளில் ஒன்று. கல்வி, ஆய்வு முதலியவற்றின் எல்லையாக, எல்லை காண முடியாத எல்லையாக இறைவன் அமைந்துள்ளான்.

கல்விச் சமூகத்தின் நிறுவனமாகிய குறிஞ்சிக்குமரன் கோயிலும் அதை முன்னின்று நடத்தும் இந்து மாணவர் சங்கமும் உலக இந்துமத வரலாற்றில் குறிப்பிடத்தக்கனவாகும். கல்விச் சமூகத்தில் ஆலயமும் அது சார்ந்த நிறுவனங்களும் வழிபடுதலை மட்டும் முதன்மையாகக் கொள்வதில்லை. சமூகக் கடமை, சமூகப் பொறுப்பு என்ற தளங்களில் சரியை முதலிய நாற்பாதங்களுக்கு அப்பால் செயலாற்ற வேண்டிய தேவை உள்ளது. இதனை உணர்ந்து சமூக நற்பணிகளில் இந்து மாணவர் சங்கம் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. "மக்கள் தொண்டே மகேசன் தொண்டு" என்பது ஆன்றோர் வாக்கு.

ஆண்டுதோறும் வெளிவரும் 'இந்து தருமம்' என்ற இந்த சஞ்சிகை ஆய்வுலகுக்கு பயன் செய்யும் பல கட்டுரைகளைத் தாங்கி இம்முறையும் சிறப்பாக வெளிவருகிறது. மாணவர்களின் வழிபாடு, அடையாளப் பேணுகை, சமூகப்பணி, வெளியீடுகளம் முதலிய அனைத்துக்கும் அடிப்படையாக அமையும் இந்து மாணவர் சங்கத்தினைக் கொண்டு நடாத்தும் உறுப்பினர்களுக்கு என் வாழ்த்துக்கள். இதழாசிரியர்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

*"தீயவை புரிந்தாரேனும் குமரவேல் திருமுன் உற்றால்*
*தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்"*

வடிவேல்முருகன் தர்மதாசன்,
முதுநிலை விரிவுரையாளர்,
முகாமைக் கல்வித்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கௌரவ கணக்காய்வாளரின் வாழ்த்து

இந்துக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தி வழிப்படுத்தும் மூத்த மதமாகிய இந்துமதம் ஆதியில் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் தோன்றி பின்னர் தென்கிழக்காசிய நாடுகளிற்குப் பரவியது. ஆனால் இன்றோ இந்துக்கள் இல்லாத நாடே இல்லை எனும் அளவிற்கு இந்துமதமானது ஆல் போல் தளிர்த்து அறுகு போல் வேரூன்றி பாரெங்கும் பரந்திருப்பதை நாம் அறிகின்றோம். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஆன்றோர் வாக்கு. இதற்கமைய எங்கெல்லாம் இந்துக்கள் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் ஆலயங்கள் அமைத்து வழிபாடு மேற்கொள்வது மட்டுமன்றி இந்து மன்றங்களையும் அமைத்து இந்து தர்மத்தை வளர்ப்பதுடன் இந்து கலாச்சாரத்தை நெறிப்படுத்துவதிலும் இம்மன்றங்கள் பெரும்பங்காற்றுகின்றன.

அந்த வகையில் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கமானது குறிஞ்சிக்குமரன் கோயிலை மையமாகக் கொண்டு இந்துமாணவர்களிற்கு மட்டுமன்றி இப்பிரதேசத்தில் வாழும் இந்துக்களிற்கும் அளப்பெரிய சேவையாற்றி வருகின்றது என்பது பெருமைப்படக்கூடிய விடயமாகும்.

பல்லின மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் வெளிநாட்டு நாகரிகங்கள் நம்மவரிடையே கலந்துள்ள இன்றைய காலகட்டத்தில் இங்கு வாழ்கின்ற இந்துக்கள் அனைவரும் இந்து கலாச்சாரத்தைப் பின்பற்றுவதுடன் இந்துமத விழாக்களையும், கொண்டாட்டங்களையும் சிறந்த முறையில் பின்பற்றுவதற்கு பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்டு சிறந்த முறையில் செயற்படுகின்ற இந்து மாணவர் சங்கம் பெரும்பங்காற்றுவதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்.

குறிஞ்சிக்குமரன் கோயிலில் நடைபெறுகின்ற விழாக்கள், கொண்டாட்டங்கள் அனைத்திலும் எம் மாணவர்கள் மிகு ஆர்வத்துடன் பங்குபற்றுவதுடன் அவற்றினை ஒழுங்கமைத்து நடாத்துவது மிக மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாகும். அத்துடன் வருடந்தோறும் இச்சங்கத்தினரால் வெளியிடப்படும் "இந்து தருமம்" நூலானது இந்துமதம் சார்ந்த பல்வேறு கட்டுரைகளைத் தாங்கி வருதல் இச்சங்கத்திற்கு மேலும் மகுடம் சூட்டுவதாக அமைகின்றது.

இச்சங்கத்தின் வளர்ச்சியானது குறிஞ்சிக்குமரன் அருளால் மென்மேலும் ஓங்கவேண்டுமென ஆசி கூறுகின்றேன்.

*'ஓங்குக சைவநெறி'*

கலாநிதி. வே. சிவகுமார்,
கௌரவ கணக்காய்வாளர்,
இந்து மாணவர் சங்கம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்துப்பட்டதாரிகள் மன்றத் தலைவரின் செய்தி

பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் வருடாந்த சஞ்சிகையான இந்து தருமத்துக்கு வாழ்த்து வழங்குவதில் மிகவும் பெருமகிழ்வடைகின்றேன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல பீடங்களிலும் பயிலும் இந்து மாணவர்களுடைய புகலிடமாகவும், அவர்களை ஆற்றுப்படுத்துகின்ற நிறுவனமாகவும், அவர்களது சமய விழுமியங்களைப் பேணுகின்ற களமாகவும் குறிஞ்சிக்குமரன் ஆலயம் விளங்குகின்றது. அந்த ஆலயத்துடன் தொடர்புபட்டதாய் அதன் நித்திய, நைமித்திய, காமிக கிரியைகளில் பங்கேற்பாளர்களாய், இந்து சமூகத்தையும் ஆலயத்தையும் இணைக்கும் இணைப்பாளர்களாய் இந்து மாணவர் சங்கம் விளங்குகின்றது. கலை மற்றும் அறிவியல் துறைகளில் கற்கும் நமது மாணவர்கள் சமய விழுமியங்களை நடைமுறையில் கற்பவர்களாகத் திகழ வகை செய்வதில் இந்து மாணவர் சங்கத்துக்குப் பெரும் பங்குண்டு. அதுபோலவே இந்து மாணவர்களது ஆக்கச் செயற்பாடுகளைப் பதிவு செய்யும் ஆவணமாக இந்து தருமத்தையும் வருடாவருடம் வெளிக்கொண்டு வருகின்றது. இந்து தருமத்தின் பதிவு மற்றும் ஆவணப்படுத்தும் பணிகள் மேலும் சிறக்க இந்துப்பட்டதாரிகள் மன்றத்தின் சார்பில் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

கலாநிதி வ. மகேஸ்வரன்,
தலைவர்,
இந்துப் பட்டதாரிகள் மன்றம்,
பேராதனைப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## தலைவர் தன் உள்ளத்திலிருந்து....

இயற்கை எழில் கொஞ்சும் பேராதனையில் பசுமை நிறைந்த குறிஞ்சிக்குன்றின் மேல் இதமாக வீற்றிருந்து தன்னை நாடிவரும் அடியார்களுக்கு கோடி அருள் பொழிந்துவரும் குறிஞ்சிக்குமரனின் கோவிலை அடியொற்றி இயங்கிவரும் பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத் தலைவராக இருந்து குமரனுக்குத் தொண்டாற்றக் கிடைத்த பேறை நான் பெரும் பாக்கியமாக நினைக்கின்றேன்.

ஒவ்வொரு இந்து மாணவரும் இது எமது கோவில் என்பதை உணர்ந்து தொண்டாற்றிக் குறிஞ்சிக்குமரனின் புகழ் எண்திசையும் பரவ, அவனது அருள் அவனியெங்கும் பொழியப்படச் செய்யவேண்டும்.

ஒரு சங்கத்தின் வளர்ச்சியானது அதன் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மாணவர்களின் பங்களிப்பிலேயே முழுமை அடைகின்றது. அந்த வகையில் இவ்வருடம் செயற்குழு உறுப்பினர்களாக இருந்து எமது தொண்டினை சிறப்புற செய்ய உதவிய அனைவருக்கும், மாணவர்களுக்கும், "இந்து தருமம்" மலரை மிகவும் அழகுற வடிவமைத்த இதழாசிரியர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள் கூறி நிற்பதோடு குறிஞ்சிக்குமரனின் நல்லருள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.


*"நான் என்ற அகங்காரம் இங்கில்லை*
*இறைவன் திருவருளும் எமக்குத் தூரமில்லை"*

*'இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!'*

சி. திவாகரன்,
தலைவர்,
இந்து மாணவர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆய்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைக்கால் அம்மையார் : ஒரு படிமவியல் நோக்கு

**பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்,**
**தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

தமிழ் இலக்கிய வரலாற்றிலும் பக்தி இலக்கிய வரலாற்றிலும் முக்கிய இடத்தைப் பெறுபவர் காரைக்கால் அம்மையார். பல்லவர்காலப் பக்தி இயக்கத்துக்குக் கால்கோள் விழா நடத்தியவர் காரைக்கால் அம்மையார். காரைக்கால் அம்மையார் இறைவன் மீது கொண்ட பக்தியும் பயனும் இறைவனின் இருப்பை மெய்ப்பித்தது. இதன்மூலம் மக்களை இறைவன் பால் திரும்பவர் இறைவன் மீது பக்தி கொள்ள வைத்தவர். அம்மையார் காட்டிய பக்திப் பிரவாகம் பல்லவர் காலத்தில் நாயன்மார்கள் பணியால் கரை புரண்டோடியது. அம்மையாரால் முன்னெடுக்கப்பட்ட பக்தி இயக்கம், பக்தி இயக்க வரலாற்றில் அம்மையாரின் இருப்பையும் முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தி நிற்கும் அதேசமயம் அவரது வரலாற்று முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தும்.

பக்தி இயக்கத்துக்கு முதல்வராக விளங்கும் காரைக்கால் அம்மையார், படிமயியலிலும் தனியானதோர் இடத்தைப் பெறுபவர். படிமங்கள் யாவும் ஒரே இலட்சண விதிகளிலோ அளவுப் பிரமாணங்களிலோ படைக்கப்படுவதில்லை. இறைவன், தேவர், மானிடர் என்னும் வகையிலும் மானிடரின் இறை நாட்டத்திற்கும் முத்திப்பேற்றுக்கும் அமைவாகப் படிமங்கள் வேறுபட்டும் வடிக்கப்படுகின்றன. அம்மையாரின் அநுபூதி நிலை ஏனைய இறையியல் ஞானிகளின் தோற்றங்களை விட முற்றிலும் வேறுபட்டது. அம்மையாரின் இறையியல் நாட்டம் "*செடித்தலைக் காரைக்காற் பேய், காடு மலிந்த கலைவாய் எயிற்றுக் காரைக்காற் பேய்*" என்பதாம். இத்தகைய தோற்றப் பொலிவு பொதுவாக நாயன்மார்களைப் படைக்கின்ற ஸ்தான நிலையில் (நிற்கின்ற) படைக்காமல் ஆசன நிலையில் வைத்துப் படைக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஆறுமூன்று நாயன்மார்களுள் மூன்று பெண் அடியவர்கள். அவர்கள் முறையே மங்கையற்கரசியார், இசைஞானியார், காரைக்கால் அம்மையார் ஆவர். அவர்களுள் அருளாற்றலுள் சிறப்புடையவர் காரைக்கால் அம்மையார். காரைக்கால் அம்மையார் தவிர, ஏனைய இரு பெண் அடியார்களின் படிமங்களின் புறத்தோற்ற வடிவங்கள் பிரதிமா இலட்சணங்களுக்கு அமைவாக ஸ்தான நிலையிலே வடிக்கப்படுகின்றன. ஆனால் காரைக்கால் அம்மையார் படிமம் ஸ்தான நிலையில் படைக்கப்படுவதில்லை.

இந்த வகையில் காரைக்கால் அம்மையார் படிமம் பெறும் முக்கியத்துவத்தை நோக்குவதற்கு முன்பாக, காரைக்கால் அம்மையாரின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத்தையும் அவர் வாழ்ந்த காலகட்டத்தையும் நோக்குதல் அவசியமானதாகும்.

தமிழ் நாட்டில் காரைக்கால் என்னுமிடத்தில் பெருங்குடி வணிகக் கணத்தின் தலைவனாக விளங்கிய தனதத்தன் என்பவருக்கு மகளாகப் பிறந்தவர்.[1] இவரது இயற்பெயர் புனிதவதியார். இளமை முதலே சிவன் மீது பேரன்பு கொண்டு போற்றி வந்தாள்.

> "*பிறந்த மொழிபயின்ற பின்னெல்லாங் காதல்*
> *சிறந்து நின் சேவடியே சேர்ந்தேன்*".[2]

என அம்மையார் தனது இளமை நிகழ்வை அற்புதத் திருவந்தாதியில் நினைவு கூருவார்.

செல்வ வளமும் நல்லொழுக்கமும் அழகும் மிக்க புனிதவதியாரை, நாக பட்டணம் நீதிபதி என்னும் பெருங்குடி வணிகன் மகன் பரமதத்தன் என்பானுக்கு மணம் முடித்து வைத்தனர். புனிதவதியார் இல்லற வாழ்வில் ஈடுபட்ட பொழுதும் இறைவனுக்குத் திருத்தொண்டு செய்வதையோ, பாடித் துதிப்பதையோ மெய்யடியார்களைப் போற்றுவதையோ மறந்தவரல்லர். இத் திருத்தொண்டுகள் அம்மையாரின் வாழ்வியலின் திருத்தொண்டாக இருந்து வந்தது.

அம்மையாரின் இல்வாழ்வு இறையியல் சார்ந்ததாக மாறுவதற்கு மாங்கனி அடிப்படையாக அமைந்தது. ஒருநாள் பரமதத்தனுக்கு இரு மாங்கனிகள் கிடைக்கப்பெற்றன. அவற்றை அவன் தனது வீட்டிற்கு அனுப்பி வைத்தான். அம்மையாரும் தனது கணவனால் அனுப்பப்பட்ட மாங்கனியை வாங்கி வைத்து விட்டு, அமுது சமைப்பதில் ஈடுபட்டார். அப்பொழுது ஒரு மெய்யடியார் அம்மையாரின் இல்லக் கதவைத் தட்டி தனக்கு அமுது படைக்கும்படி வேண்டி நின்றார். அம்மையார் அம் மெய்யடியார்க்கு திருவமுது சமைத்துப் பரிமாறியதோடு, தனது கணவனார் அனுப்பிய மாங்கனிகளுள் ஒன்றினையும் அளித்து அம் மெய்யடியாரின் பசியினைப் போக்கினார். பசியினைப் போக்கிக் கொண்ட மெய்யடியார் அம்மையாரின் மெய்யடியார் பக்தியினைப் போற்றிக்கொண்டு விடைபெற்றுச் சென்றுவிட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யடியார் சென்றதும் புனிதவதியாரின் கணவன் உணவு அருந்தும் பொருட்டு வீட்டிற்கு வந்தார். புனிதவதியாரும் மிகுந்த அன்புடன் தன் கணவனுக்கு உணவு பரிமாறினார். பின்னர் மிகுதியாக இருந்த மாங்கனியையும் சாப்பிடுமாறு பரிமாறினாள். மாங்கனி மிகுந்த கனிவாகவும் மதுரமாகவும் இருந்தமையால் மற்ற மாங்கனியையும் புசிக்கத் தரும்படி வேண்டினன். செய்வது அறியாத புனிதவதியார், இறைவனிடம் மாங்கனிக்காக இரந்து நின்றனர். இறைவனின் திருவருளால் மாங்கனியொன்று புனிதவதியாரின் திருக்கரங்களில் வந்து சேர்ந்தது. இது இறைவனின் திருவிளையாடல் என மகிழ்வுற்று, அம் மாங்கனியினைக் கணவரிடம் கொடுத்தனள். அக் கனியினை வாங்கி உண்ட கணவனான பரமதத்தன் இது முன்னதைவிட மிகவும் மதுரமாக இருக்கின்றது. இக்கனி எப்படி உனக்குக் கிடைத்தது, என வினாவினான். அதற்குப் புனிதவதியார் "கணவனுரை காவாது விடுதல் கற்பு நெறியன்று" என்பதால் நடந்தவற்றை நடந்தவாறு குறிப்பிட்டார். அதனைக் கேட்ட பரமதத்தன் இக்கனி செஞ்சடைப் பெருமான் அருளால் கிடைத்ததாயின் மற்றுமொரு கனியைப் பெற்றுத் தரும்படி வேண்டினன். புனிதவதியார் தனது பக்தியையும் சொற் திறம்பாமையையும் வேண்டி இறைவனிடம் இரந்து நின்றார். அப்பொழுது ஒரு மாங்கனி புனிதவதியாரின் கையில் தவிழ்ந்தது. அதனை எடுத்து தனது கணவனிடம் கொடுத்தனள். அதனைப் பரமதத்தன் வாங்கியதும் உடனே அவனது கையை விட்டு மாயமாக மறைந்தது. அதனைக்கண்டு அதிசயித்த பரமதத்தன், புனிதவதியார் ஒரு மானிடப் பெண்ணல்ல. அவள் தெய்வப் பெண், அவளுடன் கூடி வாழ்வது தெய்வத்திற்கு ஆகாது என நினைந்து கூடி வாழாது வாழ்ந்து வந்தான்.

பரமதத்தன் பாண்டி நாட்டிற்குப் பெரு வணிகம் செய்யும் பொருட்டுச் சென்று, குலசேகரப் பட்டணத்தில் தங்கி வாணிபம் செய்து வந்தான். அங்கு ஒரு வாணிப குலக் கன்னியைத் திருமணம் செய்து கொண்டான். அவர்கள் இருவருக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அக் குழந்தைக்கு புனிதவதியார் என்று பெயர் சூட்டினான். பரமதத்தனுக்கும் புனிதவதியாருக்கும் இடையிலான பிரிவை அறிந்த உறவினர்கள் மீண்டும் அவர்களை இணைந்து வாழ வைக்க முயற்சித்தனர். இதை அறிந்த பரமதத்தன் தன் மனைவியுடனும் மகளுடனும் புனிதவதியாரிடம் சென்று புனிதவதியாரை வீழ்ந்து வணங்கியதுடன், உமது ஆசியினால் வாழ்கின்றோம், எனது மகளுக்கு உங்கள் திருநாமத்தையே சூட்டியுள்ளேன் என்றனன். புனிதவதியார் தனது கணவனின் செயலைக் கண்டு அச்சமடைந்து ஒதுங்கி நின்றனள். அச்சமயம், உனது மனைவியை நீ ஏன் வணங்குகின்றாய் என்று பிறர் வினாவ, புனிதவதியார் சாதாரண மானிடப் பெண்ணல்ல. தெய்வாம்சம் பொருந்திய தெய்வப் பெண். இதனாலேதான் யான் இவரை விட்டகன்றேன். வணங்கினேன், நீங்கள் எல்லோரும் வணங்கலாம் என்றனன்.

புனிதவதியார், கணவனான பரமதத்தன் சொல்லிய வார்த்தையைக் கேட்டு, பரம சிவனுடைய திருவடிகளைச் சிந்தித்து, சுவாமி! இவனுடைய கொள்கை இது. இனி "இவன் பொருட்டுத் தாங்கிய அழகு தங்கிய தசைப் பொதியை நீக்கி, தேவரீரைச் சூழ்ந்து நின்று துதிக்கின்ற பேய் வடிவை அடியேனுக்குத் தந்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.[3] அக்கணமே கடவுளின் திருவருளினாலே மாமிசம் முழுவதும் உதறிய ஏற்புடம்பாக மண்ணுலகமும் விண்ணுலகமும் வணங்கும் பேய் வடிவமாயினார். அப்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்தனர், தேவதுந்துபிகள் ஒலித்தன. சுற்றத்தார்கள் எல்லோரும் அஞ்சி, அவரை வணங்கிச் சென்றனர்.

புனிதவதியார் திருக்கைலாசத்துக்குப் போக விரும்பி, மனசிலும் பார்க்க மிகுந்த வேகத்தோடு சென்று, அந்தத் திருக்கைலாசங்கிரியின் பக்கத்தை அடைந்து, அங்கே காலினால் நடத்தல் தகுதியன்றென்று ஒழிந்து, தலையினாலே நடந்து போய், மலையிலேறினார். ஏறும் பொழுது உமாதேவியார் அதைக்கண்டு எம்போலிகள் புனிதவதியாருடைய திடப்பக்தியைக் குறித்து உலக மாதாவாகிய உமாதேவியாரே ஆச்சரியம் அடைந்தார். அவருடைய பக்தி மகிமையை உயர்வொப்பில்லாத பரம சிவனுடைய திருவாக்கினாலே நமக்கு உணர்த்திவித்து நம்மை உய்விக்கத் திருவுளம் கொண்டு, அக்கடவுளை வணங்கி நின்று "*சுவாமி! அடியேனுக்கு இறவாத பேரின்பமாகிய அன்பு வேண்டும் இனி பிறவாமை வேண்டும் பிறக்கினும் தேவரீரை ஒரு காலமும் மறவாமை வேண்டும் இன்னும் தேவரீர் திருநிருத்தம் செய்யும் பொழுது, தேவரீருடைய திருவடியின் கீழே சிவானந்தத்தை உடையேனாகி, தேவரீரைப் பாடிக்கொண்டிருத்தல் வேண்டும்*" என்று விண்ணப்பித்தார்.[4] சுவாமி அவரை நோக்கி தென்திசையிலே உள்ள திருவாலங்காட்டில் நம்முடைய ஆடலை எப்பொழுதும் கண்டு மகிழ்ந்து, நம்மைப் பாடிக்கொண்டிரு" என்றார். அப்பேறு பெற்ற அம்மையார் திருவாலங்காட்டிற்கு தலையினால் நடந்து சென்று சேர்ந்தார். அங்கு இறைவனின் திருநடனத்தைத் தரிசித்து "கொங்கை திரங்கி" என்னும் திருப்பதிகத்தையும் "எட்டியிலவமீகை" என்ற மூத்த திருப்பதிகத்தையும் பாடியருளினார். அம்மையார் இறைவனுடைய தூக்கிய திருவடிக்கீழ் சிவானந்தப் பேற்றை அனுபவித்துக்கொண்டிருக்கின்றார் என்பர் பெரியோர்.[5]

மேற்காட்டிய அம்மையாரின் பேறே ஏனைய நாயன்மார்களைப் பார்க்கிலும் திருவுருவ அமைப்பில் வேறுபட்டுக் காட்டுவதற்கு அடிப்படைக் காரணங்களாயின.

அம்மையார் வாழ்ந்த காலம் ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டென்பர் சிலர். சிலர் ஐந்தாம் நூற்றாண்டென்பர். பேராசிரியர் கே. கே. பிள்ளை அவர்கள் பின்வரும் காரணங்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையாகக் கொண்டு, அம்மையார் வாழ்ந்த காலம் ஐந்தாம் நூற்றாண்டு என்பார். அவர் முன்வைக்கும் காரணங்கள் பின்வருமாறு அமையும்.

1. காரைக்கால் அம்மையாரின் பாடல்களில் வடமொழிச் சொற்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. எனவே தமிழில் வடமொழிச் சொற்கள் விரவிக் காணப்பெற்ற காலத்திலே அம்மையார் வாழ்ந்தார்.
2. திருஞானசம்பந்தர் திருவாலங்காட்டை அடைந்தபொழுது அத்தலம் அம்மையாரால் பெருமை பெற்றதால் அங்கு அடியெடுத்து வைக்கத் தயங்கி நகர்ப் புறத்தே ஒதுங்கினார் எனச் சேக்கிழார் குறிப்பிடுவதால் திருஞானசம்பந்தருக்கு முற்பட்ட காலத்தில் அம்மையார் வாழ்ந்தார்.

மேலும், காரைக்கால் அம்மையார் கையாண்ட யாப்பமைதிக்கும் நாயன்மார்கள் பாடிய திருமுறைகளின் சொற்பொருள் அமைதிக்கும் இடையே வேறுபாடுகள் உண்டு என்பதும், தேவார முதலிகளைவிடக் காலத்தால் முற்பட்டவர் என்பதற்கு ஆலயங்களில் அம்மையாரின் பாடல்களின் பின்பே ஏனைய நாயன்மாரின் பாடல்கள் பாடுவது வழமை என்பதும் காரைக்கால் அம்மையார் தேவார முதலிகளுக்கு முற்பட்டவள் என்றும் அம்மையார் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவள் என்பதும் பெறப்படும். பல்லவர் காலத்தில் நாயன்மார்களினாலும் ஆழ்வார்களினாலும் நடத்தப்பெற்ற பக்தி இயக்கத்தின் காரணமாக இறைவனின் இருப்பும், தோற்றமும், பயனும் வெளிப்படுத்தப்பட்டது. இதனால் தம்மை ஒருமைப்படுத்தி இறைவனை வணங்கும்பொருட்டுப் பல உறுதிமிக்க ஆலயங்கள் கட்டப்பட்டன. இறைவனின் தோற்றங்கள் சுதையாலும் கற்களினாலும் மரத்தினாலும் செதுக்கப்பட்டன. ஆனால் உலோகத்தில் இறைதிருவுருவங்கள் படைக்கப்படவில்லை என்பர். ஆனால், தற்காலத்தில் பல்லவர் காலத்துக்கான செப்புத் திருமேனிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தொல்லியலறிஞர் நடன-காசிநாதன் கருத்துத் தெரிவிக்கையில்[6]

'பல்லவர் காலச் செப்புத் திருமேனிகளே இல்லையென்று சில ஆண்டுகளுக்கு முன்புவரை கூறிவந்தனர். தற்பொழுது பல்லவர் காலச் சிற்பங்களுக்கும் சில செப்புத் திருமேனிகளுக்கும் உள்ள கலைத் தன்மையின் ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு பல்லவர்காலத் திருமேனிகள் கிடைத்துள்ளன என ஒப்புக்கொள்கின்றனர். தஞ்சை மாவட்டம் திருவாலங்காட்டு சோமாஸ்கந்தர், விஷபாஹரணர், கூரம், நடராசர், காவிரிப்பூம் பட்டணத்து மைத்திரேயர், வேளச்சேரி விஷ்ணு, சிங்கா நல்லூர், திரிவிக்கிரமர், திருநெய்ப்பேர், திரிபுராந்தகர், வடகாலத்தூர் கலியாண சுந்தரர் ஆகியவை பல்லவர் காலத்துச் செப்புத் திருமேனிகள் என்று உறுதியாகக் கூறுகின்றனர்' என்பர்.

பல்லவர் காலத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் அசைவியக்கம், இறைவனின் இருப்பின் உண்மைத் தன்மையும், சோழர்களின் நிர்வாகச் சிறப்பும் செல்வப் பெருக்கும் கலைநோக்கும் செல்நெறி இலக்கியத்திற் கொண்ட ஈடுபாடும், மறுபிறப்பில் கொண்ட நம்பிக்கையும் சோழப் பெரு மன்னர்களையும் அவர்களைச் சார்ந்தோரையும் கலை வனப்புடைய கோயில்களையும் கட்ட வழி வகுத்தது.

சோழர் காலக் கோயில்கள் ஒரு மூலவரையும் பரிபாலக தேவர்களையும் சுற்றுப் பிரகாரர்களையும் நாயன்மார் படிமங்களையும் கொண்ட கோயில்களாக அமைந்தன. கோபுரங்களும் விமானங்களும் ஆலயக் கட்டடத்தை அழகுபடுத்தின. தஞ்சைப் பெருவுடையார் கோயில் சோழப் பெருமன்னர் காலத்தில் எழுந்த கோயிற் கட்டடக் கலைக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. இங்கு அமைந்த படிமங்களும் இக்காலத்தில் எழுந்த செப்புப் படிமங்களும் உலகச் சிறப்பு வாய்ந்தன.

சோழர்காலத்திலே வளர்த்தெடுக்கப்பட்ட வார்ப்புக் கலையினைப் பின்வருமாறு வகுத்து நோக்குவர்.

1. ஆதித்தியன் காலத்துக் கலைப்பாணி
2. செம்பியன்மாதேவி காலத்துக் கலைப்பாணி
3. இராஜராஜன் காலத்துக் கலைப்பாணி

1. ஆதித்தன் காலத்துக் கலைப்பாணியைச் சேர்ந்த படிமங்கள் பருத்தியூர், பனையூர், திருச்சேறைகப்பபூர் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற இராமர், திருமால் முதலான படிமங்களைக் குறிப்பிடலாம்.

2. கோனேரிராஜபுரத்து செப்புத் திருமேனி, நல்லூர் பார்வதி, திருவளம்குளம், நடராசா, முதலான செப்புத் திருமேனிகளையும் ஈழ நாட்டிலே இரண்டாம் சிவ தேவாலயத்தில் கிடைக்கப்பெறும் திருமேனிகளும் செம்பியன்மாதேவி காலத்துக்குரிய கலைப்பாணிக்குரிய படிமங்கள் எனக் குறிப்பிடலாம்.

3. இராஜராஜன் காலத்துக் கலைப்பாணி கம்பீரமும் கலைத் தன்மையும் கொண்டது. திருவாலங்காட்டு நடராசர், உமை, கலியாணசுந்தரர், கண்ணப்பர், அர்த்தநாரீஸ்வரர், தஞ்சைப் பெருங்கோயில் நடராசர், கங்கைகொண்ட சோழபுரம் சோமாஸ்கந்தர், சுப்பிரமணியர் முதலான படிமங்களும் ஈழநாட்டு – ஜனநாத மங்கள நடராச வடிவம் முதலான படிமங்களும் இக்காலப் பாணிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழப்பெருமன்னர் ஆட்சிக் காலத்தில், குறிப்பாக இராஜராஜன் காலத்தில் படிமமொன்றினை வார்க்கும்பொழுது அக் கலையின் தியான மந்திரங்களையும் இலட்சண விதிகள் சிறிதும் பிசகாவண்ணம் வார்ப்பதில் மிகுந்த கவனம் செலுத்தினர். 'ஸ்தபதிகள்' என்பதை தஞ்சைப்பெருவுடையார் கோயிற் கல்வெட்டு பின்வருமாறு கூறுவதைக் கொண்டு அவதானிக்க முடிகிறது.

*"ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீராஜராஜதேவர் உடையார் ஸ்ரீராஜராஜீச்சரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளிவித்த செப்புத் திருமேனிகள்"*

*உடையார் கோயிலில் முழத்தால் அளந்து கல்லில் வெட்டின*
*ஆஸநமாக எழுந்தருளி இருந்த பர்வதத்திற்கு மேல்*
*கேசாந்தத்[7] தளவுஞ் செல்லப் பதின் எண்விரல்[8]*
*உசரத்து நாலு ஸ்ரீ ஹஸ்தம்[9] உடையராகக் கனமாக[10]*
*எழுந்தருளி வித்த தக்ஷிணா மூர்த்திகள் ஒருவர்.*

*இவரே எழுந்தருளி இருந்த பர்வதத்தில் அடியில் ஒரு முழமேய் பதிற்று மேல் நீளத்து ஒரு முழமேய் நால் விரல் அகலத்துப் பன்னிருவிரல் உசரத்து, பர்வதம் ஒன்று.*
*இந்தச் சிகரங்களோடுங் கூடச் செய்த பாதாதி கேசாந்தம் நூல்விரல் உசரத்து இரண்டு கை உடையராகக் கனமாகச் செய்த கின்னரர் இருவர்.*
*பாதாதி கேசாந்தம் மூவிரலரை உசரத்து இரண்டு கை உடையாராகக் கனமாகச் செய்த கின்னரிகள் இருவர்.*
*தேவர் ஸ்ரீ பாதத்தின் கீழ் கிடந்த பாதாதி கேசாந்தம் பதிற்றுவிரல் நீளத்து இரண்டு கை உடையராகக் கனமாகச் செய்த முசலகன் ஒன்று.*
*இருந்த ஆஸநத்துக்கு மேல் கோசாந்தத் தளவுஞ் செல்ல மூவிரல் உசரத்து இரண்டு கை உடையர்களாகக் கனமாகச் செய்த புலி ஒன்று.*
*பர்வதத்திற்கு மேல் அக்ரத்தளவுஞ் செல்ல ஒரு முழமேய் எண் விரலரை நீளத்து அறு விரலேய் ஆறுதோரைச் சுற்றும் உடையதில் வேறாகச் செய்து தைத்த மஹாசாஹை ஒன்பதும் இவற்றுள் அனுசாகை நாற்பத்திரெண்டும் உடைத்ததாகக் கனமாகச் செய்த ஆலவிருஷம் ஒன்று.*
*மூவிரலே நாலு தோரை நீளத்து ஒரு விரலே இரண்டு தோரை அகலத்து நாலு தோரை கனத்து செய்த தூக்கின பொக்கணம் ஒன்று.*
*ஆறுவிரலே ஆறு தோரை நீளத்து ஒரு விரலரைச் சுற்றிக் கனமாகச் செய்த கையும் இதனோடுங் கூட ஐய்விரல் நீளத்து மூவிரற் சுற்றிச் செய்த கைத்தழை ஒன்று."*

இக்கல்வெட்டுக் கூறும் தக்ஷிணாமூர்த்தி வடிவம் பெரிதும் வியாக்கியான தக்ஷிணாமூர்த்தி வடிவத்தைக் குறிப்பதாக அமைகின்றது. பர்வதத்திற்கு மேலே - இமயமலைச் சாரலிலே பரந்த பீடத்தின்மேல் கேசாந்தத்தளவுஞ் செல்ல - திரண்ட சடாமுடியை உடையவராய் பதின் எண் விரல் உசரத்து –, உதம தச தாள அளவினை உடையவராய், நாலு ஸ்ரீ ஹஸ்தம் உடையவராய் - கைகள் சின்முத்திரை, வரத முத்திரை, களை உடையதாகவும் அக்ஷமாலை அக்கினி தாங்கியதாகவும், கனமாக எழுந்தருளிவித்த தக்ஷிணாமூர்த்திகள் ஒருவர் - மிகுந்த கனதியான சுற்றளவினை உடைய, அழகிய தக்ஷிணாமூர்த்தி படிமம் ஒன்று வடிக்கப்பட்டது.

இக் கல்வெட்டு எமக்குப் புலப்படுத்துவது, ஒரு படிமத்துக்கு அளவுப் பிரமாணம், இலட்சணவிதி, தொன்மம் முதலான பிரதிமாலட்சணங்கள் அவசியம் என்பதையேயாகும்.

சோழர் காலப்பகுதியில் சிற்ப நூல்களான சகளதிகாரம், காசியபம், மனுகாரம், மயமதம், மாநசாரம் முதலான நூல்களோடு, சைவாகமங்கள், வைணவ ஆகமங்கள், குமார தந்திரம், புராணங்கள், சுக்கிரநீதி முதலான நூல்களும் வழக்கில் இருந்தன. இதனாலே சோழர் காலப்பகுதியில் சிறந்த நுண்கலைப் படைப்புக்களை அக்காலக் கலைஞர்களால் படைக்க முடிந்தது. ஆலயங்களைக் கட்டுவதற்கும், கிரியைகள் நடத்துவதற்கும், தெய்வ விக்கிரகங்களைப் படைப்பதற்கும் ஆகமங்களும் சிற்ப நூல்களும் இடமளித்தபொழுதும் மாந்தரைக் குறிப்பாக நாயன்மார்களை வார்ப்பதற்கான விதிமுறைகளை இந்நூல்கள் குறிப்பிடவில்லை என்பர். ஆழ்வார்களுக்கும் இதே நிலைதான் இருந்தது. முதன்முறையாக நாயன்மார்களைப் படைக்கும் விதி முறைகளை மாநசாரமே குறிப்பிடுகின்றது. மாநசாரத்தின் ஐம்பத்தோராவது அத்தியாயம் முதல் எழுபதாம் அத்தியாயம்வரை உள்ள பகுதி விக்கிரகவியல் பற்றிக் கூறுகின்றது. ஐம்பத்தொன்பதாவது அத்தியாயம் மெய்யடியவர்களுக்குப் படிமம் அமைக்கும் முறை பற்றிக் குறிப்பிடுகின்றது. இந்நூல் மெய்யடியார்கள் இறைவனோடுகொண்ட தொடர்பினை அடிப்படையாகக்கொண்டு, அவர்களைப் பாகுபாடு செய்து அதற்கு அமைவாகவே படிமங்களை வார்க்க வேண்டும் என்று வற்புறுத்தும். மாநசாரம் மெய்யடியார் படிமங்களைப் பின்வரும் இலட்சணங்களுக்கு அமைவாகப் படைத்தல் வேண்டும் எனக் குறிப்பிடும்.

*'அந்தப் பக்தர்களின் பாதமானது (பரமனை அடைந்த நிலையானது) நான்கு விதங்களை உடைத்தாகக் கூறப்படுகின்றது. ஆகவே அவர்களுடைய அந்நிலைக்கிதமாகவே அவர்களின் பின்பக்தி அளவு கூறப்படுகின்றது.*
*அந்த நால்வகைப் பக்தி நிலைகளில் ஸாலோக்யம் முதற்பக்தி நிலை எனவும், ஸாரூப்யம் மூன்றாவது பக்தி நிலையெனவும் ஸாயுஜ்யம் நான்காவது பக்தி நிலையெனவும் கூறப்படுகின்றது.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*பக்தியைப் பற்றிய நல்லறிவும் அது மொழிந்தவற்றில் அசைவற்ற தன்மையும், அந்தப் பக்திக்கு உறைவிடமான பக்தர்களுடன் கூடியிருத்தலும் ஸாலோக்கியம் எனக் கூறப்பட்டிருக்கின்றது.*
*விஷய வைராக்கியத்துடன்கூடிய பரமாத்ம விஷயமாண ஸ்வரூபவைபவஞானம் ஸாமீப்யம் எனக் கூறப்படுகின்றது.*
*உலகை மறந்து அவனது ஸகுண ஸ்வரூபத்யானத்துடன் கூடியிருத்தல் ஸாரூப்யம் எனத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றது.*
*நிர்குண விஷயமான நிர்விஷய சுத்த ஞானத்துடன் கூடியிருத்தல் ஸாயுஜ்யமாகும்.*[11]

இத்தகைய நால்வகைப் பக்தி நிலைகளிலேயும் பக்தர்களின் விக்கிரகத்திற்குப் பொதுவான அளவு கூறப்படுகின்றது. ஸாலோக்கிய நிலையுடன் கூடிய விக்கிரகத்தை உத்தம தச தானத்தினால் கணக்கிட வேண்டும். ஸாமீப்ய நிலையுடன் கூடிய விக்கிரகத்திற்கு அதம தச தானத்தினால் நிர்மாணம் கூறப்பட்டிருக்கின்றது. ஸாரூப்ய நிலையுடன் கூடிய விக்கிரகத்தை அறிஞர் மத்திம தச தானத்தினால் கணக்கிட வேண்டும். ஸாயுஜ்ய நிலையுடன் கூடிய விக்கிரகத்தை உத்தம தசதானத்தினால் கணக்கிட வேண்டும்.

சிற்பநூலார் அங்க அபிநயங்களை மூன்று வகையாகப் பிரிப்பர்.[12] அவை (i) சமபங்கம் (ii) அபங்கம் (iii) அதிபங்கம் அல்லது திரிபங்கம் என்பனவாம். சமபங்க நிலையானது ஒரு சிற்பமானது ஒரு பக்கமும் சரியாது நிமிர்ந்து, சுமுகமான நிலையில் நிற்றல் அல்லது இருத்தல் ஆகும். சாந்தமும் அகமும் நிறைந்து அநுக்கிரக பாவனையில் நிற்கும் அல்லது இருக்கும் படிமங்கள் சமபங்க நிலையைக் குறிக்கும் படிமங்களாகும். சந்திரசேகரர், விஷ்ணு, சுப்பிரமணியர் முதலானோர்களின் படிமங்கள் இவ்வகைத்தன.

அபங்கம் என்பது ஒருபக்கம் சற்றே சரிந்து நிற்கும். தேவிமார், அடியார் படிமங்களை இவ்வகையில் குறிப்பிடலாம். அதிபங்கம் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட உடல் அசைவுகளை உடையதாக இருத்தலாகும். வீரம், கோபம், சாந்தம், கருணை முதலான குணங்களை உணர்த்தும் தாண்டவ மூர்த்தங்களும் சௌத்திர மூர்த்தங்களும் அதிபங்க வடிவங்களாகவே அமையும்.

ஸ்தபதிகள், கைவிரல்களை நீட்டுதல், மடக்கல், கூட்டுதல், விலக்கல், குவித்தல் என்னும் ஐந்து நிலைகளை அடிப்படையாகக்கொண்டு படிமத்தின் அக வெளிப்பாட்டை வெளிப்படுத்துவர். இதனைக் 'கை அமைதிகள்' என்றும் 'கை முத்திரை' என்றும் குறிப்பிடுவர். 'முத்திரை' என்பது புலன்சார்ந்த குறியீடாகும்.

ஏற்கனவே மாநசாரம் முதலான நூல்கள் குறிப்பிடுவதுபோல அடியார் படிமங்களை உத்தம நவ தானத்தில் படைக்க வேண்டும். விஷ்ணு தத்துவம் என்னும் நூலும் பன்னிரு ஆழ்வார் படிமத்தை உத்தம அதம தசம தானத்தில் படைக்க வேண்டும் என்று குறிப்பிடும். அந்த வகையில் காரைக்கால் அம்மையாரின் படிமத்தை எத்தகைய பிரதிமாலட்சணங்களை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்கு முன்பாக அம்மையார் எத்தகைய முத்தியைப் பெற்றார் என்பதைத் தீர்மானித்தல் வேண்டும்.

- அம்மையார் நாயன்மார் யாவர்க்கும் காலத்தால் முற்பட்டவர்.
- பக்தி இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.
- இறையின் இருப்பையும் தோற்றத்தையும் ஆற்றலையும் முதன்முதல் வெளிப்படுத்தியவர்.
- இறைவனால் அம்மையே என்று அழைக்கப்பட்டவர்.
- இறைவனை அப்பாவென்று போற்றியவர்.
- இறைவனை வேண்டிப் பேய் வடிவம் பெற்றவர்.
- தலையால் நடந்து கைலாசம் சென்றவர்.
- இறைவன் அருள் பெற்றுப் பதிகங்கள் பாடியவர், அடியவர்களைப் போற்றியவர்.
- திருநடனம் தரிசிக்கப் பேறு பெற்றவர்.
- இறைவன் பாதம் தொழுதிருப்பவர்.

இத்தகைய பேறுகளைப் பெற்ற காரைக்கால் அம்மையார் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே நடராசா வடிவத்தின் தூக்கிய திருவடிக்கீழ் அம்மையாரின் திருவுருவமே அமைக்கப் பெற்றிருந்தமை அம்மையாரின் உயர்ந்த முத்திப்பேற்றை வெளிப்படுத்தி நிற்கும். இந்த வகையில் காரைக்கால் அம்மையார் சாயுச்சிய முத்தியைப் பெற்றார் எனக் கூறலாம்.

அம்மையார் சாயுச்சிய முத்தியைப் பெற்றதினால் அவரின் படிமம் உத்தம சதம தானத்திலே படைக்கப்பட வேண்டும் என்பது பொதுவிதி. அளவுப் பிரமாணத்தை நோக்குவதற்கு முன்பாக அம்மையார் படிமத்தின் தியான மந்திரம் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை நோக்குதல் வேண்டும். அம்மையாரின் வரலாற்றையும் பாடல்களையும் அநுபூதியையும் அடிப்படையாகக் கொண்டு அம்மையாரின் தியான மந்திரத்தைத் தீர்மானிக்க வேண்டும். அது பின்வருமாறு அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுத்தமாயை உருவம் பெற்றவராய், இறையொளி பொருந்திய பக்தியின் திருவுருவாய், நீண்ட குழிந்த கண்களை உடையவளாய், வெளிப்போந்த வெண்ணிறப் பற்களையுடையவளாய், மெலிந்து, நரம்புகள் புடைப்பின்றி அமைந்த கொங்கைகளையும், மெலிந்து குழி விழுந்த வயிற்றினையும், நீண்டு மெலிந்த கால்களையும் இரு கரங்களையும் உடையவளாய், தாளங்களைக் கையில் ஏந்தியவளாய், நூல் ஆடையை இடுப்பில் தரித்தவளாய், பரந்த நெற்றியையும் நீண்ட காதுகளையும் மழித்த தலையினையும் உடையவளாய் பலகையில் ஆசன நிலையில் வீற்றிருப்பவளாய் தம்மை வணங்குவோருக்கு ஆன்மீக நாட்டத்தை அளிப்பவளாய் உள்ளாள்".

காரைக்கால் அம்மையார் படிமம் உத்தம தசம தானத்தில் 10' * 12' + 4' = 128' என்னும் பிரமாண அடிப்படையில் படைத்தல் வேண்டும்.

ஈழ நாட்டில் காலத்தால் முந்திய காரைக்கால் படிமம் சோழர் காலத்தைச் சேர்ந்த படிமமாகும். சோழர்கள் ஈழத்தைக் கைப்பற்றி பொலனறுவையைத் தலைநகராகக் கொண்டு, இதற்கு ஜனநாத மங்களம் எனப் பெயர்சூட்டி ஆட்சி செய்து வந்தனர். அது சோழ மண்டலங்களுள் ஒன்றானபோது அது மும்முடிச் சோழ மண்டலம் என்று அழைக்கப்பட்டது. மாதோட்டம், திருகோணமலை, பதவியா, அநுராதபுரம். மண்டலகிரி, கந்தளாய், யாழ்ப்பாணம் முதலான இடங்கள் சோழர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இவ்விடங்களில் சைவசமயம் போற்றப்பட்டது.

பொலனறுவையில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழ்வின்போது ஏழு சிவன்கோயிலும் ஐந்து விஷ்ணு கோயிலும் ஒரு காளி கோயிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் இரண்டாம் சிவ தேவாலயம் என்று அழைக்கப்படும் வானவன்மாதேவி ஈஸ்வரம் என்னும் கோயிலும் ஐந்தாம் சிவ தேவாலயமும் குறிப்பிடத்தக்கன. இவை வரலாற்றுப் புகழ் மிக்கவை. இன்றும் பேணப்படும் நிலையில் உள்ளவை. ஐந்தாம் சிவாலயத்தின் அழிபாட்டினூடே காரைக்கால் அம்மையார் படிமம் கிடைக்கப் பெற்றுள்ளது. இக்கலைப்படைப்பின் கலை விமர்சனம் பின்வருமாறு அமையும்.

இப்படிமம் தட்டையான பீடத்தில், ஆசன நிலையில் (அம்மையார்) தம் இரு பாதங்களையும் பக்கவாட்டில் வீசி, மடக்கி அமைந்துள்ளவராய், அவரது உடல் மெலிந்து, எலும்புகள் வெளிக்கிளர்ந்து நிற்பனவாய், தலைமுடி மழிக்கப்பட்டு அக்ஷமாலையை அணிந்தவராய், முகமானது விகாரமான தோற்றத்துடன் காணப்பட, கண்கள் இரண்டும் அகன்று கீழ்நோக்கிய வண்ணம் அமைந்துள்ளதாய், வாய் அகன்றும் உதடுகள் பருத்தும் இருக்க, இவற்றிலிருந்து கூரிய பற்கள் வெளிக்கிளம்புகின்றனவாய், காதுகள் இரண்டும் நீண்டும் தொங்கியும் காணப்பட, அவற்றில் அக்ஷமாலை குண்டலங்களாகத் தொங்கிநிற்ப, கைகள் இரண்டும் மெலிந்தனவாய். கூம்பிய கரங்கள் இரண்டும் தாளம் ஏந்தியனவாய், கைகளில் தோல் மாலையும் கடகமாலையும் இடம்பெறுமிடத்தில் அக்ஷமாலையை அணிந்தவராய், இடுப்பில் நூல் ஆடை அணிந்தவராய் படைக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டுக் கலைஞர்களால் படைக்கப்பட்ட படிமக்கலைப் படைப்புக்களில் காரைக்கால் அம்மையார் படிமம் வார்ப்பு, பிரதிமாலட்சணம் முதலானவற்றால் ஏனைய படிமங்களில் இருந்து வேறுபட்டு, அஃதோர் தலைசிறந்த படைப்பாக கலைவரலாற்றில் கணிக்கப்படுவது அதன் பெருமையையும் சிறப்பையும் எடுத்துக்காட்டி நிற்கும்.

**அடிக்குறிப்புகள்:**

1. *வணிகர்பெருங் குலம்விளங்க வந்து பிறந் தருளியபின்*
   *அணிகிளர்மெல் வடிதளர்வுற் றசையுடைநடைப் பருவத்தே*
   *பணியணிவார் கழற்கடிகை பழகிவரும் பாங்குபெறத்*
   *தணிவில்பெரு மனக்காதற் றதும்பருவ மொழிபயின்றார்.*
2. ***அற்புதத் திருவந்தாதி***
3. *வனப்புநின்ற தசைப்பொதி கழித்திங் குன்பால்*
   *அங்கு நின்றான்கள் போற்றும் பேய் வடிவு.*
4. *இறவாத இன்ப அன்பு வேண்டியபின் வேண்டுகிறார்*
   *பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேலுன்னை யென்ஞான்றும்*
   *மறவாமை வேண்டும் இன்னும் வேண்டுநான் மகிழ்ந்து பாடி*
   *யறவாநீயாடும் போதுன்னடியின் கீழிருக்க வென்றார்.*
5. ஆறுமுக நாவலர், 1986, ***பெரிய புராண வசனம்***, பக் - 257
6. காசிநாதன், நடன., 2003, ***தமிழர் தெய்வங்கள்***, தென்றல் நிலையம், சிதம்பரம்.
7. கேசாந்தம் - முடியின் அளவு.
8. பதின் எண்விரல்- அளவு.
9. நாலு ஸ்ரீ ஹஸ்தம்- நாலுவகை முத்திரை.
10. கனமாக - கனதியான சுற்றளவினை உடையவராக.
11. சரஸ்வதி மகால் வெளியீடு, 1963, ***மாநசாரம்***, பக் - 49 - 221
12. நவரத்தினம்.க.,1941. ***இந்திய சிற்ப வடிவங்கள்***, திருமகள் அழுத்தகம். சுன்னாகம்,பக்-85- 86.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் (1960களுக்கு முற்பட்டவை)

**பேராசிரியர் க. அருணாசலம்,**
**தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

இந்தியாவின் தென் பகுதியில் அமைந்துள்ள தமிழகம் தமிழ் மக்களது பூர்வீகமாகக் கொள்ளப்படுகின்றது. லெமூரியாக் கண்டம், அது கடற்கோள்களால் அழிந்தமை முதலியன பற்றிய அபிப்பிராயங்கள், சர்ச்சைகள் முதலியன ஒருபுறமிருக்க, இன்றைய தமிழகத்திற்கும் ஒரு சிறு நீரிணையால் பிரிக்கப்பட்டு அதன் அருகே காணப்படும் இலங்கைக்குமிடையில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலிருந்தே அரசியல், வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகள் நிலவி வந்துள்ளமையையும் தமிழ் பேசும் மக்கள் நெடுங்காலமாக இலங்கையில் வாழ்ந்து வருகின்றமையையும் வரலாற்றுச் சான்றுகள் மெய்ப்பித்து நிற்கின்றன.

கி.பி. மூன்றாம் நூற்றாண்டுவரை நிலவியதாகக் கொள்ளப்படும் சங்க காலத்திலேயே இலங்கையைச் சேர்ந்த ஈழத்துப் பூதந்தேவனாரால் தமிழ் இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்படலாயின என்னும் கருத்து இன்று வலுப்பெற்று வருகிறது.[1] ஈழத்துப் பூதந்தேவனாருக்கும் கி.பி.1310 ஆம் ஆண்டில் நான்காம் பராக்கிரமபாகுவின் அவையில் அரங்கேற்றப்பட்ட சரசோதி மாலையின் ஆசிரியர் போசராச பண்டிதர் (தேனுவரைப் பெருமாள்) அவர்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற இலக்கிய முயற்சிகள் பற்றித் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் அறிந்து கொள்வதற்குப் போதிய சான்றுகள் கிடைக்காதபோதும் இவ்விடைப்பட்ட காலப்பகுதியில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள பாடல்கள் ஈழத்து இலக்கிய முயற்சியின் தொடர்ச்சியை ஓரளவேனும் காட்டுவனவாக அமைந்துள்ளன.[2]

ஏறத்தாழக் கி.பி. 13ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து, குறிப்பாக யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றக் காலத்திலிருந்து இன்றுவரையிலான இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தொடர்ச்சியாகவும் பெருமளவு தெளிவாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. அதேபோன்று மரபு முறையிலான ஆய்வு முயற்சிகளும் இடம்பெற்று வந்தவாற்றையும் அவை ஏறத்தாழப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து படிப்படியாக அறிவியல் பூர்வமான ஆய்வுகளாகப் பரிணமித்தவாற்றையும் அவதானிக்கலாம். இலங்கையில் நவீன ஆய்வு நெறிமுறைகளின் அடிப்படையிலான முயற்சிகள் பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளை எய்திக் கொண்டிருக்கின்றமை பெருமளவிற்கு மன நிறைவைத் தருவதாகும்.

தமிழியல் தொடர்பாக இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்களைச் சேர்ந்தோரது ஆய்வு முயற்சிகள் மட்டுமே இச் சிறு கட்டுரையில் நோக்கப்படும். இலங்கையின் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களும் இலங்கையில் வாழ்ந்த மேலைத்தேயத்தவர்களும் தமிழியல் தொடர்பாக ஆய்வுகள் செய்துள்ளனர் என்பதை நாம் மனங்கொளல் வேண்டும்.

இலங்கையில் தமிழியல் தொடர்பாக இடம்பெற்று வந்துள்ள ஆய்வு முயற்சிகளை முக்கியமான மூன்று பிரிவுகளுள் வகுத்து நோக்கலாம். அவையாவன;

1. மரபு முறையிலான ஆய்வு முயற்சிகள்
2. மரபு முறையுடன் ஓரளவேனும் நவீன ஆய்வு நெறிகளைப் பின்பற்றிய ஆய்வு முயற்சிகள்
3. அறிவியல் பூர்வமானதும் நவீன ஆய்வு நெறிமுறைகளுடன் கூடியதுமான ஆய்வு முயற்சிகள்.

இம் மூவகைப் பிரிவுகளினுள்ளும் பல்வேறு உப பிரிவுகள் இடம்பெற்று வந்துள்ளன என்பதனையும் நாம் மனத்திருத்துதல் அவசியமாகும். எனினும் அவை பற்றியெல்லாம் நுணுக்கமாக நோக்குவதற்கு இச்சிறு கட்டுரையில் இடமில்லை. அதேபோன்று தமிழியல் தொடர்பான இலங்கையின் ஆய்வாளர்கள் எல்லோரையுமோ அவர்களது ஆய்வு முயற்சிகள் பற்றிய எல்லா விபரங்களையுமோ இக் கட்டுரையிற் குறிப்பிடுதல் சாத்தியமன்று.[3]

மேலும் இலங்கையில் இடம்பெற்று வந்துள்ள ஆய்வு முயற்சிகளைப் பின்வரும் முக்கிய தலைப்புகளில் நோக்கலாம்.

1. பதிப்பு முயற்சிகளும் அகராதி முயற்சிகளும்
2. தமிழ் இலக்கிய வரலாறு
3. தமிழ் மரபிலக்கணமும் மொழியியலும்
4. பண்டைய தமிழ் இலக்கியங்களும் இடைக்காலத் தமிழ் இலக்கியங்களும்
5. நவீன தமிழ்க் கவிதையும் புதுக் கவிதையும்
6. நாவலும் சிறுகதையும்
7. இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்
8. மலையகத் தமிழியல்
9. அவைக்காற்றுக் கலைகள்
10. நாட்டார் வழக்காற்றியல்
11. வரலாற்று நாயகர்களும் அறிஞர் பெருமக்களும்
12. சாசனவியலும் தொல்பொருளியலும் வரலாற்றியலும்
13. சமூகமும் பண்பாடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சமயமும் தத்துவமும்
15. அரசியலும் பொருளாதாரமும்
16. கல்வியியலும் மருத்துவமும்
17. பெண்ணியம்
18. பத்திரிகை
19. தமிழும் அறிவியலும்
20. பல துறைகள் சார்ந்த மொழிபெயர்ப்பு முயற்சிகள்

இத்தகைய பிரிவுகள் கூட முழுமையான ஒன்றல்ல.

தமிழியல் தொடர்பாக இலங்கையில் ஏறத்தாழ 1960 களின் இறுதிவரை இடம்பெற்ற ஆய்வு முயற்சிகளுள் மிகப் பெரும்பகுதி தமிழகத்தைப் பற்றியதாகவே அமைந்துள்ளமையையும் ஏறத்தாழ 1970 களின் ஆரம்பத்திலிருந்தே இலங்கையைப் பற்றிய ஆய்வு முயற்சிகள் பெருகத் தொடங்கியமையையும் அவதானிக்கலாம்.[4] இவற்றுக்குப் பல்வேறு காரணங்கள் காணப்பட்டாலும் முக்கியமான ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடலாம். தமிழகமே தமிழியலின் தாயகமாக விளங்கி வந்துள்ளமை, தமிழகம் பற்றிய குறைந்த பட்ச அறிவேனும் இல்லாது தமிழகத்திற்கப்பாலுள்ள தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடுகளின் தமிழியல் பற்றி ஆய்வுசெய்ய முடியாமை, தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையிலான நீண்டகால நெருங்கிய பிணைப்புகள், 'தமிழகம் தாயகம் : ஈழம் சேயகம்' என்னும் கருத்துநிலை நீண்ட காலமாக வலுப்பெற்றிருந்தமை, 1950 களிலிருந்து இலங்கையில் ஏற்பட்டுக்கொண்டிருந்த மாற்றங்கள் முதலியனவாகும்.

## மரபு முறையிலான ஆய்வு முயற்சிகள்

இலங்கையில் இடம்பெற்று வந்துள்ள ஆய்வு முயற்சிகளுள் மரபு முறையிலான ஆய்வு முயற்சிகளை முதலில் நோக்குவது பொருத்தமானதாகும். அவர்களது ஆய்வு முயற்சிகள் என்னும் பலம் வாய்ந்த அத்திவாரத்தின்மீதே பிற்கால ஆய்வு முயற்சிகள் இடம்பெற்றுள்ளன. இவ்வகையிலே இலங்கையின் புகழ்பூத்த உரையாசிரியர்களும் புராண - இதிகாசச் சொற்பொழிவாளர்களும் வித்துவ பரம்பரையினரும் எமது கவனத்திற்குரியவர்கள். இவ்வகையிலே ஞானப்பிரகாசம் முனிவர், வித்துவ சிரோமணி ந.ச.பொன்னம்பலபிள்ளை, சபாபதி நாவலர், புலோலியூர் கதிரைவேற்பிள்ளை, ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, ம.க.வேற்பிள்ளை, பூபாலபிள்ளை, பண்டிதர் வி.சி.கந்தையா, மகாவித்துவான் கணேசையர், பிரமஸ்ரீ தி.சதாசிவ ஐயர், பிரமஸ்ரீ நவநீத கிருஷ்ண பாரதியார், பண்டிதர் பொ.கிருஷ்ணன், பண்டிதமணி சு.அருளம்பலவனார், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், ஆசுகவி வேலுப்பிள்ளை, நமசிவாய தேசிகர், நா.சிவபாதசுந்தரனார், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, பண்டிதர்கள் வீரகத்தி, இ.வடிவேல், வே.அகிலேசபிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.[6]

காலத்தால் முற்பட்டவர்களான வையாபுரி ஐயர் எழுதிய வையாபாடல் இலங்கையின் மன்னர் பரம்பரையினையும் வன்னிமைகளையும் காலத்துக்குக்காலம் இலங்கையில் இடம்பெற்ற குடியேற்றங்களையும் விபரிக்கும் வரலாற்று நூலாக விளங்குகிறது. இதேபோன்று முத்துராசக்கவிராசரால் எழுதப்பட்ட கைலாயமாலை யாழ்ப்பாணத்தரசர் காலத்தில் சிறப்புடன் விளங்கிய கோயில்களுள் ஒன்றான கைலாசநாதர் கோயிலைப் பற்றியும் யாழ்ப்பாணத்தரசர்களின் சமயப் பணிகள் பற்றியும் யாழ்ப்பாணத்தரசு பற்றியும் விபரிக்கின்றது.

கவிராசவரோதயனால் இயற்றப்பட்ட கோணேசர் கல்வெட்டு என்னும் நூல் குளக்கோட்டனின் திருப்பணிகள், வன்னிமைகள் முதலியன பற்றி விபரிக்கின்றது. மேற்கண்ட நூல்களின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாகச் சில நூல்கள் தோன்றின. அவற்றுள் விதந்து கூறத்தக்கவை மாதகல் மயில்வாகனப் புலவரின் யாழ்ப்பாண வைபவமாலை, கல்லடி ஆசுகவி வேலுப்பிள்ளையின் யாழ்ப்பாண வைபவ கௌமுதி, சைமன் காசிச் செட்டியின் சிலோன் கசற்றியர், தமிழ் புளூராக் ஆகியனவாகும். பொதுவாக இலங்கையினதும் சிறப்பாக யாழ்ப்பாணத்தினதும் வரலாறு, குடியேற்றங்கள், சாதியமைப்பு, ஆசாரங்கள் முதலியனவற்றை இவை விபரிக்கின்றன. ஆய்வு முயற்சிகள் என்ற வகையில் மேற்கண்ட நூல்களிற் குறைபாடுகள் சில காணப்பட்டபோதும் பின்னாளில் புலமைசார் ஆய்வாளர்கள் காத்திரமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு இவை அருந்துணையாக அமைந்தன என்பதில் ஐயமில்லை.

இலங்கையின் வித்துவ பரம்பரையின் முக்கியஸ்தருள் ஒருவரும் தொல்காப்பியக் கடல் எனப் போற்றப்படுபவருமான வித்துவ சிரோமணி சி. கணேசையரது தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகள், பல்வேறு இலக்கியங்களுக்கும் எழுதியுள்ள உரைகள், ஈழ நாட்டுப் புலவர் சரிதம், குமாரசுவாமிப் புலவர் சரிதம் முதலியவை பாராட்டத்தக்கவை. தமிழகத்தைப் போன்று இலங்கையிலும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவிற்கு உரைப் பாரம்பரியம் ஒன்று இடம்பெற்று வந்துள்ளது. உரையாசிரியர்களின் உரைக்குறிப்புகளும் விளக்கவுரைகளும் இரசனை முறையும் நவீன திறனாய்வு முயற்சிகளுடன் ஒப்பிட முடியாதெனினும் நவீன திறனாய்வுக்கேற்ப மூலவேர்களாக அவை அமைந்துள்ளன என்பதில் ஐயமில்லை. மேலும் இவ்வுரையாசிரியர்களிடம் பொதுப் பண்புகளில் சில காணப்பட்டபோதும் இவர்கள் எல்லோரும் ஒரே ரகத்தினர் என்றோ ஒரே தரத்தினர் என்றோ கூறவியலாது. இலங்கையில் உரைப் பாரம்பரியத்துடன் இணைந்து வளர்ந்துவந்த புராண படன முறையும் இத்தகையதே. இவ்வகையில் ஆறுமுக நாவலர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை, வித்துவசிரோமணி கணேசையர், உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், நவநீத கிருஷ்ண பாரதியார், பண்டிதர் சு.அருளம்பலவனார், வல்வை. வயித்தியலிங்கம்பிள்ளை, ம.க.வேற்பிள்ளை முதலியோர் மனங்கொளத் தக்கவர்கள்.

இத்தகைய மரபில் வந்த பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, கனக செந்திநாதன், புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலியோர் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் தங்களது அயராத முயற்சிகளினால் தமக்கென்றொரு பரம்பரையை உருவாக்கியமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்துக்கேற்ற வகையில் சாதாரண கல்வி அறிவுடையோரும் படித்து விளங்கக்கூடிய வகையில் எளிய நடையைக் கையாண்டு எளிமையாக விடயங்களை விளக்கிச் செல்லுந் திறனை இவர்களிடத்துக் காணலாம். இவர்களுள் கனக-செந்திநாதன் நவீன இலக்கியங்களில் ஈடுபாடு மிக்கவராகவும் நவீன இலக்கிய கர்த்தாவாகவும் நவீன இலக்கிய ஆய்வாளராகவும் விளங்கியமை விண்டுரைக்கத்தக்கதாகும்.

## மரபு முறையுடன் ஓரளவேனும் நவீன ஆய்வு நெறிமுறைகளைக் கைக்கொண்ட ஆய்வு முயற்சிகள்.

இவ்வகையில் மாதகல் மயில் வாகனப் புலவர், ஆறுமுக நாவலர், குல.சபாநாதன், கனக செந்திநாதன், தி.த.கனக சுந்தரம்பிள்ளை, F.X.C.நடராசா, க.சொக்கலிங்கம், கலாநிதி ஆ.கந்தையா, கு.சோமசுந்தரம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது ஆய்வு முயற்சிகள் இக் கட்டுரையில் ஆங்காங்கே நோக்கப்படும்.

## அறிவியல் பூர்வமானதும் நவீன ஆய்வு நெறிமுறைகளுடன் கூடியதுமான ஆய்வு முயற்சிகள்.

இலங்கையின் தமிழியல் ஆய்வு முயற்சிகளைப் பொறுத்தவரை விதந்து கூறக்கூடியதோர் அம்சம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து ஆங்கிலமொழி மூலம் நவீன கல்வியைப் பயின்றவர்களுட் பலர் ஆய்வு முயற்சிகளிலீடுபட்டமையாகும். இலங்கையில் அறிவியல் பூர்வமானதும் நவீன ஆய்வு நெறிமுறைகளுடன் கூடியதும் பல துறைகள் சார்ந்ததுமான ஆய்வு முயற்சிகள் பல்கிப் பெருகுவதற்கு முதலில் வித்திட்ட முன்னோடிகள் இவர்களே என்பதில் ஐயமில்லை. இவர்களது ஆய்வு முயற்சிகளில் பல குறைபாடுகள் காணப்படுகின்ற பொழுதும் அவை ஆரம்ப முயற்சிகள் என்பதையும் நாம் மனங்கொளல் வேண்டும்.

இவ்வகையில் வி.கனகசபைப்பிள்ளை, சி.வை.தாமோதரம்பிள்ளை, அறிஞர் சித்திலெவ்வை, சைமன் காசிச்செட்டி, முதலியார் இராசநாயகம், கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி, சேர்.பொன்னம்பலம் அருணாசலம், கலைப்புலவர் க.நவரத்தினம், ஐசாக்.தம்பையா, C.S.நவரத்தினம், சுவாமி ஞானப்பிரகாசர், J.V.செல்லையா, E.S.W. சேனாதிராஜா, V.J.தம்பிப்பிள்ளை, ஆனல்ட் சதாசிவம்பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

## பதிப்பு முயற்சிகளும் அகராதி முயற்சிகளும்.

நவீன தமிழ் இலக்கிய வளர்ச்சியில் அச்சியந்திர விருத்தி வகிக்கும் பங்கு எத்துணை முக்கியமானது என்பதனை இங்கு வற்புறுத்த வேண்டியதில்லை. நீண்டகாலமாக அழியும் நிலையிலிருந்த ஏட்டுச் சுவடிகள் நூல் வடிவம் பெறுவதற்கும் பாதுகாக்கப்படுவதற்கும் குறைந்த விலையில் பல்லாயிரம் பிரதிகளை வெளியிடுவதற்கும் அவை மக்கள் மத்தியில் பரவுவதற்கும் ஆய்வு முயற்சிகள் பெருகுவதற்கும் மூலகாரணம் அச்சியந்திர விருத்தியேயாகும். இலங்கையிலே முதன் முதல் 1736 ஆம் ஆண்டு அச்சியந்திரம் நிறுவப்பட்டது. எனினும் சுதேசிகள் அச்சியந்திரத்தை நிறுவும் உரிமையைப் பெற நூறாண்டுகளுக்கு மேற் சென்றது. 1849 ஆம் ஆண்டு நல்லூரிலே ஆறுமுக நாவலர் வித்தியாநுபாலன யந்திரசாலையை நிறுவினார். இதனைத் தொடர்ந்து சுதேசிகள் பலர் அச்சியந்திரசாலைகளை நிறுவினர். அச்சியந்திர விருத்தியினால் பழைய ஏட்டுச் சுவடிகள் பதிப்பிக்கப்பட்டது மட்டுமன்றிப் புதிய நூல்களும் அறிக்கைகளும் துண்டுப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன. பத்திரிகைகள் பெருகலாயின.

ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, வல்வை ச.வயித்தியலிங்கம்பிள்ளை, ச.தம்பிமுத்துப்பிள்ளை, மு.கார்த்திகேய ஐயர், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை எனப் பலரும் தமிழ்நூற் பதிப்பிலே ஈடுபட்டனராயினும் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களே பதிப்பாசிரியர் என்னும் சிறப்புப் பெயரைப் பெறுமளவிற்கு அருந்தொண்டாற்றியுள்ளார். ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலியோர் தாம் பதிப்பித்த நூல்களுக்கு எழுதியுள்ள முன்னுரைகள், விளக்கக் குறிப்புகள், மூல பாடத் திறனாய்வு முதலியவை தமிழியல் ஆய்வு முயற்சிகளுக்கு வழி காட்டியாக அமைந்தன.[6] சி.வை.தாமோதரம்பிள்ளையின் முன்னுரைகளது முக்கியத்துவம் கருதியே அவை தொகுக்கப்பட்டு 'தாமோதரம்' என்னும் பெயரில் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அகராதி ஆக்கத்திலே மேலை நாட்டவர்களுடன் சுதேசிகளும் இணைந்து செயற்பட்டமை விண்டுரைக்கத்தக்கது. ஜோசப் நைற் பாதிரியார், சாமுவல் ஹற்சிங்ஸ், வின்ஸ்லோ, பேர்சிவல், ஆறுமுகநாவலர், கறல் விசுவநாதபிள்ளை, வில்லியம், இருபாலைச் சேனாதிராஜ முதலியார், கெலக் விசுவநாதபிள்ளை, வில்லியம் நெவின்ஸ் முதலியோரது கூட்டு முயற்சியினால் தமிழ் - தமிழ், தமிழ் - ஆங்கிலம், ஆங்கிலம் - தமிழ் அகராதிகள் வெளிவந்தன. தமிழியல் ஆய்வின் ஒரு பகுதியாக இம் முயற்சிகள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் இலக்கிய வரலாறு

தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வு முயற்சிகளை இரு முக்கிய பிரிவுகளாக வகுத்து நோக்கலாம். அவையாவன இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாறு, தமிழக இலக்கிய வரலாறு என்பனவாகும். தமிழ் இலக்கிய வரலாறு என்ற வகையில் காலத்தால் முற்பட்ட ஆய்வு முயற்சிகளாக 1859 ஆம் ஆண்டில் சைமன் காசிச் செட்டி என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட தமிழ்ப் புலவர் சரித்திரம், 1886 ஆம் ஆண்டில் ஆனல்ட் சதாசிவம்பிள்ளை அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட பாவலர் சரித்திரதீபகம், 1916 ஆம் ஆண்டில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரால் எழுதி வெளியிடப்பட்ட தமிழ்ப் புலவர் சரித்திரம், 1922 ஆம் ஆண்டில் ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை என்பவரால் எழுதி வெளியிடப்பட்ட ஈழ மண்டலப் புலவர் சரித்திரம், 1939 ஆம் ஆண்டில் வித்துவ சிரோமணி கணேசையரால் எழுதி வெளியிடப்பட்ட ஈழ நாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம் முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆய்வு முயற்சிகளில் பல குறைபாடுகள் காணப்பட்டபோதும் ஏறத்தாழ எழுபது முதல் நூறு ஆண்டுகளுக்கு முன்னதாக நிலவிய சூழ்நிலையில் இம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பலராலும் மேற்கொள்ளப்பட்ட தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வு முயற்சிகளுக்கு இவை ஏற்றதொரு பலம் வாய்ந்த அத்திவாரத்தை இட்டன என்பதையும் நாம் மனம் கொளல் வேண்டும்.

இவர்களது முயற்சிகளை அடியொற்றி இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வெளிவந்த கனக - செந்திநாதன் அவர்களின் ஈழத்து இலக்கிய வளர்ச்சி (1964), மு. கணபதிப்பிள்ளை அவர்களின் ஈழ நாட்டின் தமிழ்ச்சுடர் மணிகள் (1967), கா. பொ. இரத்தினம் அவர்களின் இலங்கையில் இன்பத் தமிழ் (1959) ஆகிய நூல்கள் 'புலமைசார்' ஆய்வாளர்களின் முயற்சிகளுக்குப் பல வகையிலும் முன்னோடி முயற்சிகளாக அமைந்தன எனலாம்.

தமிழக இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வு முயற்சிகளிலும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் தமக்குரிய பங்கிலும் பார்க்க மிக அதிக அளவிலான பங்களிப்பினைச் செய்துள்ளமை மறுக்க முடியாத ஒன்றாகும். இலங்கைக்கும் தமிழகத்திற்குமிடையிலான நீண்டகாலப் பிணைப்பும் இலங்கைத் தமிழர் தமிழகத்தின் மீது வைத்திருக்கும் மதிப்பும் நம்பிக்கையும் நன்றியுணர்வும் இவற்றுக்குக் காரணமாகலாம். இதனாற்போலும் இலங்கையின் புலமைசார் அறிஞர்கள் பலர் இலங்கைத் தமிழ் இலக்கியங்களிலும் பார்க்கத் தமிழகத்து இலக்கியங்களையே மிகுந்த ஆர்வத்துடன் கற்றும் ஆய்வுகள் பல செய்தும் வந்துள்ளனர் எனலாம்.

தமிழக இலக்கிய வரலாறு தொடர்பாக இலங்கைத் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்ட காலத்தால் முந்திய ஆய்வு முயற்சிகளுள் சைமன் காசிச்செட்டி அவர்களின் தமிழ் புளூராக் (ஆங்கிலம்) வி.கனகசபைப்பிள்ளையின் 'ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்' (ஆங்கிலம்), ஜே.ஆர்.ஆனல்ட் அவர்களின் 'பாவலர் சரித்திர தீபகம்', சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் 'தமிழ்ப் பாஷையின் கால வருத்தமானம்' (வீரசோழியப் பதிப்புரையில் இடம்பெற்றுள்ளது), ஆர்.ஓ.டி.அன்பரி அவர்களின் 'தமிழ் இலக்கிய வரலாறு' ஆகியவை முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை.

இவற்றுள் வி. கனகசபைப்பிள்ளை அவர்களின் நூல் இலக்கிய வரலாறு அல்லவாயினும் தமிழ் இலக்கியங்கள் பற்றிய விரிவான குறிப்புகள் இடம் பெற்றுள்ளமை அவதானிக்கத்தக்கது. சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் காலப் பாகுபாடு பற்றிய கணிப்பு நுட்பமானது. இன்றைய நிலையில் வைத்து நோக்குமிடத்து மேற்கண்ட நூல்களில் பல குறைபாடுகள் காணப்படினும் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வு முயற்சிகள் இருளடைந்து காணப்பட்ட ஒரு காலப்பகுதியில் இவை வெளிவந்தன என்பதும் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கையிலே பலர் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான அறிவியல் பூர்வமானதும் காத்திரமானதுமான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஏற்ற அடித்தளமாக அமைந்தன என்பதும் நாம் மனங்கொளத்தக்கவை.

தமிழகத்திற்கே முன் மாதிரியாக வெளிவந்த ஒரு நூல் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களின் 'தமிழ் இலக்கிய வரலாறு' (1951) என்பதாகும். இலங்கையிலும் தமிழகத்திலும் ஏறத்தாழ 1950 ஆம் ஆண்டுவரை தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாகப் பல நூல்களும் நூற்றுக் கணக்கான கட்டுரைகளும் வெளிவந்திருந்தன. 1950 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை பல நூல்களும் கட்டுரைகளும் வெளி வந்துள்ளன. எனினும் அவை எவற்றிலும் காணப்படாத பல சிறப்பியல்புகளைக் கொண்டதாக மேற்படி நூல் விளங்குகின்றது. பேராசிரியர் செல்வநாயகத்திற்கு ஒப்பற்ற புகழைத் தேடிக் கொடுத்த இந் நூல் இதுவரை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. இலங்கைத் தமிழ் அறிஞர்களுக்கும் தமிழ் இலக்கிய வரலாற்று மாணவர்களுக்கும் இன்றுவரை ஒரு 'பைபிளாகவும், திருக்குர்ஆனா' கவும் 'நான்மறை' யாகவும் விளங்குகின்றது. பேராசிரியர் செல்வநாயகம் அவர்களுக்கு அழியாப் புகழைத் தேடிக் கொடுத்த இன்னொரு நூல் அவரது 'தமிழ் உரைநடை வரலாறு' என்பதாகும்.

பேராசிரியர் செல்வநாயகம் அவர்களைத் தொடர்ந்து அவரது மாணவ பரம்பரையினர் பலர் தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பான ஆய்வு முயற்சிகளில் தீவிர ஈடுபாடு காட்டி அவரது முயற்சிகளை முன்னெடுத்துச் சென்றனர்; புதிய ஒளியைப் பாய்ச்சினர். அவர்களுள் விதந்து கூறத்தக்க இருவர் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் நன்கு அறிமுகமானவர்கள்; இருபதாம் நூற்றாண்டுப் பிற்பகுதியின் தமிழ்த் திறனாய்வு உலகில் ஓங்கு புகழுடன் திகழ்பவர்கள். அவர்கள் முறையே பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோராவர்.

### தமிழ் மரபிலக்கணமும் மொழியியலும்.

சைமன் காசிச்செட்டி அவர்களின் 'சிலோன் கசற்றியர்', 'தமிழ் புளூராக்' ஆகியவற்றின் சில பகுதிகள் மொழியியல் துறையில் அவர் கொண்டிருந்த ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றன. மொழியியல் ஆய்வில் காத்திரமான பங்களிப்பினைச் செய்த காலத்தால் முற்பட்டவர்களுள் சுவாமி ஞானப்பிரகாசர் முதலில் வைத்து நோக்கத்தக்கவர். பன்மொழிப் புலமை மிக்க அவரது ஆய்வுகள் பெருமளவிற்கு அறிவியல் பூர்வமானவையாகவும் பின்வந்தோருக்கு வழிகாட்டியாகவும் விளங்குகின்றது. அவரது அறிவுத் திறனையும் ஒப்புநோக்கும் பண்பையும் வெளிப்படுத்துவனவாக 'தமிழ் அமைப்புற்ற வரலாறு', 'தமிழ்ச் சொற் பிறப்பாராய்ச்சி', 'தமிழ் ஒப்பியல் அகராதி' முதலிய நூல்கள் அமைந்துள்ளன. ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, அ. குமாரசுவாமிப் புலவர், வித்துவ சிரோமணி கணேசையர், நமசிவாய தேசிகர், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, F.X. C.நடராசா, பண்டிதர் வீரகத்தி, பேராசிரியர்கள் சுவாமி விபுலாநந்தர், சு.வித்தியானந்தன், புலவர் நா.சிவபாதசுந்தரனார் முதலியோர் மரபிலக்கணம் தொடர்பாகப் பயன்மிக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாசனங்களைத் துணைக்கொண்டு தமிழ் மொழி வரலாற்றினை ஆய்வு செய்யும் முயற்சிக்கு அடித்தளமிட்டு முன்னோடியாக விளங்கியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களாவார். அவரால் ஆரம்பிக்கப்பட்ட முயற்சியை அவரது மாணவனான பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை மேலும் முன்னெடுத்துச் சென்று பயன்மிக்க ஆய்வுகள் பலவற்றைச் செய்துள்ளார். மரபிலக்கணத்திலும் நவீன மொழியியலிலும் சாசனத் துறையிலும் பரிச்சயம் மிக்க அவரது ஆய்வுகள் நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளன. அவற்றுள் தமிழ் வரலாற்றிலக்கணம், சாசனமும் தமிழும், Pandya Inscriptions : A Language Study, A Study of the Dialects of inscriptional Tamil முதலியவை குறிப்பிடத்தக்கவை.

பேராசிரியர்கள் சுசீந்திரராசா, சண்முகதாஸ் ஆகியோரும் தமிழ் மரபிலக்கணம், தமிழ் மொழி வரலாறு, மொழியியல் முதலியன தொடர்பாகக் காத்திரமான ஆய்வுகள் பலவற்றைச் செய்துள்ளனர். அவர்களது ஆய்வுகளுள் கணிசமானவை நூல்களாகவும் வெளிவந்துள்ளன. இவ்வகையில் பேராசிரியர் சுசீந்திரராசா அவர்களின் An Introduction to Spoken Tamil (பேராசிரியர் James W.Gair, W.S.Karunathilake ஆகியோரது உதவியுடன் எழுதப்பட்டது), தமிழ் மொழியியற் சிந்தனைகள், பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களின் தமிழ் மொழி இலக்கண இயல்புகள் முதலியன குறிப்பிடத்தக்கவை. பேராசிரியர்கள் வேலுப்பிள்ளை, சுசீந்திரராசா, சண்முகதாஸ் ஆகிய மூவரதும் ஆய்வுகளில் மரபிலக்கணமும் மொழியியலும் சங்கமமாவதையும் மரபிலக்கணமானது மொழியியலாகப் பரிணமித்துக்கொண்டிருப்பதையும் ஒருங்கே தரிசிக்கலாம்.

தமிழ் மரபிலக்கணம், மொழியியல் ஆகியன தொடர்பாகப் பல ஆய்வுகளைச் செய்துள்ள இன்னொருவர் பேராசிரியர் சதாசிவம் அவர்களாவார். சுமேரிய மொழி பற்றிய அவரது ஆய்வுகள் அவருக்குப் புகழைத் தேடிக் கொடுத்தன. பேராசிரியர்கள் தனஞ்செயராயசிங்கம், பூலோகசிங்கம், தில்லைநாதன், கலாநிதிகள் நு.்.மான், பார்வதி கந்தசாமி, சுபதினி, இரத்தினமலர் கயிலைநாதன், முதலியோரும் மரபிலக்கணம், மொழியியல் ஆகியன தொடர்பாக ஆய்வுகள் பலவற்றைச் செய்துள்ளனர்.

**பண்டைய தமிழ் இலக்கியங்களும் இடைக்காலத் தமிழ் இலக்கியங்களும்.**

"...பொதுவாகக் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலந் தொடக்கம் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையுள்ள காலப் பகுதியைத் தமிழக இலக்கிய வரலாற்றிற் பண்டைக்காலம் எனலாம். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பொறுத்தவரை கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதி வரையுள்ள காலப்பகுதியைப் பண்டைக் காலம் எனல் பொருத்தமாகத் தோன்றுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரை கி.பி.பத்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவரை அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையுள்ள காலப்பகுதியை இடைக்காலம் எனலாம். ஈழத்தைப் பொறுத்தவரை கி.பி.பதினான்காம் நூற்றாண்டிலிருந்து கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரையுள்ள காலப்பகுதியை இடைக்காலம் எனலாம்....." [7]

தமிழகத்தின் பண்டைய, இடைக்கால இலக்கியங்கள் பற்றி இலங்கையர்கள் பலர் மிகவும் காத்திரமான ஆய்வுகள் பலவற்றைச் செய்துள்ளனர். சைமன் காசிச்செட்டி, சி. வை. தாமோதரம்பிள்ளை, வி. கனகசபைப்பிள்ளை, முதலியோர் தொடக்கம் பேராசிரியர்கள் சுவாமி விபுலாநந்தர், செல்வநாயகம், வித்தியானந்தன், வேலுப்பிள்ளை, கைலாசபதி, சிவத்தம்பி முதலியோர்வரை அவர்கள் மேற்கொண்ட ஆய்வு முயற்சிகளைக் கூர்ந்து நோக்குமிடத்துத் தமிழியல் ஆய்வில் ஏற்பட்டுவந்த வளர்ச்சி நிலைகளையும் பாரிய முன்னேற்றங்களையும் தமிழகத்திற்கே பல வகையிலும் முன் மாதிரியாக விளங்கியவாற்றையும் கண்டு தெளியலாம்.

பழமை மோகமும் மொழி, இனம், பண்பாடு முதலியன பற்றிய பெருமைகளும் வெறுமனே ஐதீகங்களும் ஆய்வுலகினை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த நிலைமை படிப்படியாக மாற்றமுற்று வரலாற்றுப் பார்வையும் சமூகவியல் அணுகுமுறையும் ஒப்பியல் நோக்கும் உண்மையை நிறுவ முயலும் பாங்கும் ஏறத்தாழ 1960 களிலிருந்து முக்கியத்துவம் பெற்று வந்துள்ளமையை அவதானிக்கலாம். இவ்வகையிலே எடுத்துக்காட்டாக முக்கியமான ஒரு சில ஆய்வு முயற்சிகளை மட்டும் இங்கு குறிப்பிடலாம். பேராசிரியர்கள் சுவாமி விபுலாநந்தர் அவர்களின் கட்டுரைத் தொகுப்புகள், யாழ்நூல், சு.வித்தியானந்தன் அவர்களின் தமிழர் சால்பு, இலக்கியத் தென்றல், தமிழியற் சிந்தனைகள், வண.பிதா.தனிநாயக அடிகளாரின் Landscape and Poetry (Nature poetry in Tamil – the Classical Period), ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் இலக்கியத்திற் காலமும் கருத்தும், தமிழர் சமய வரலாறு, க.கைலாசபதியின் Tamil Heroice Poetry, அடியும் முடியும், பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், ஒப்பியல் இலக்கியம், இலக்கியச் சிந்தனைகள், கா.சிவத்தம்பி அவர்களின் கட்டுரைகள், கட்டுரைத் தொகுப்புகள், சி.தில்லைநாதன் அவர்களின் வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை, இலக்கியமும் சமுதாயமும், இலக்கிய பண்பாட்டுச் சிந்தனைகள் முதலியனவாகும்.

மேற்கண்டவர்கள் தவிரப் பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், சதாசிவம், தனஞ்செயராசசிங்கம், சண்முகதாஸ், பூலோகசிங்கம், அருணாசலம், நா.சுப்பிரமணியம், கலாநிதிகள் ஆ.கந்தையா, துரை.மனோகரன் முதலியோரும் மரபு வழித் தமிழறிஞர்களான பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, புலவர்மணி பெரிய தம்பிப்பிள்ளை, F.X.C.நடராசா, பண்டிதமணி சு.அருளம்பலவனார், கனக செந்திநாதன், தேவதாசன் ஜெயசிங், சி.தனபாலசிங்கம், ந.சி.கந்தையாபிள்ளை, ச.அம்பிகைபாகன், க.மகேசன் முதலியோரும் மேற்கொண்ட முயற்சிகள் மனங்கொளத்தக்கவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் ஈழத்து வாழ்வும் வளமும் என்னும் நூலில் அமைந்துள்ள சில கட்டுரைகள் இடைக்கால ஈழத்து இலக்கியங்கள் பற்றியனவாகும். வரலாற்றுத்துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள் கா. இந்திரபாலா, சி. பத்மநாதன், சி. க. சிற்றம்பலம், கலாநிதி செ. குணசிங்கம் ஆகியோரும் ஈழத்தின் பண்டைய, இடைக்கால இலக்கியங்கள் பற்றிக் காத்திரமான ஆய்வுகள் சிலவற்றைச் செய்துள்ளனர். தமிழியல் ஆய்வு முயற்சிகளுக்கு வரலாற்றுத்துறை சார்ந்த ஆய்வு முயற்சிகள் எத்துணை இன்றியமையாதன என்பதனை இவர்களது ஆய்வு முயற்சிகள் நிரூபித்து நிற்பதை அவதானிக்கலாம்.

## நவீன தமிழ்க் கவிதையும் புதுக் கவிதையும்

தமிழ் மொழியானது மிக நீண்டதொரு கவிதைப் பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகின்றது. நவீன தமிழ்க் கவிதையின் தந்தையாக யுகப் பெருங் கவிஞன் பாரதியார் விளங்குகின்றார். பாரதியார் பற்றிய ஆய்வுகள் இலங்கையைச் சேர்ந்த பலராலும் அதிக அளவில் மேற்கொள்ளப்பட்டமை விதந்து கூறக்கூடியதொன்றாகும். நவீன இலக்கியம் பற்றி அதிக அளவு ஆய்வுகளைச் செய்துள்ள பேராசிரியர் கைலாசபதி அவர்களே தமிழகத்திற்கும் முன்மாதிரியாகப் பாரதியார் பற்றி மிகக் காத்திரமானதும் ஆழமானதும் பன்முகப்பட்டதுமான ஆய்வுகள் பலவற்றைச் செய்துள்ளார்; பாரதியார் பற்றிய ஆய்வு வரலாற்றிலே புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளார்.

இலங்கையிலே காலத்தால் முற்பட்டுப் பாரதியின் புகழ் பரப்புவதில் பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் முக்கிய பங்காற்றினார். பேராசிரியர்கள் செல்வநாயகம், வித்தியானந்தன், சிவத்தம்பி, தில்லைநாதன், சிவசேகரம், பூலோகசிங்கம், அருணாசலம், மௌனகுரு, சித்திரலேகா, சபா.ஜெயராசா, கலாநிதிகள் நு.்.மான், துரை.மனோகரன், க.செ.நடராசா, செ.யோகராசா, திருவாளர்கள் ந.இரவீந்திரன், அகளங்கன், க.நவசோதி, செ.கணேசலிங்கன், F.X.C.நடராசா, இ.முருகையன், கே.செந்திவேல், எஸ்.எம்.ஹனிபா, இளங்கீரன் முதலியோரது ஆய்வு முயற்சிகளும் இவ்வகையில் மனங்கொளத்தக்கவை. மேற்கண்டோரது முயற்சிகள் தவிரப் பல்வேறு மன்றங்கள், கல்லூரிகள், பாடசாலைகள் பாரதி பற்றி வெளியிடப்பட்ட சிறு நூல்களும் சிறப்பு மலர்களும் அலட்சியப்படுத்த முடியாதனவாகும்.

தமிழகத்தின் நவீன கவிதைகள் பற்றிய ஆய்வில் சி.வை.தாமோதரம்பிள்ளை, சைமன் காசிச் செட்டி, கு.வைமன் கதிரவேற்பிள்ளை, சி.வை.சின்னப்பபிள்ளை, தி.த.சரவணமுத்துப்பிள்ளை, முதலியோர் முன்னோடிகளாக விளங்குகின்றனர். இவர்களைத் தொடர்ந்து பல்கலைக்கழக மட்டத்தில் பேராசிரியர்கள் சுவாமி விபுலாநந்தர், செல்வநாயகம், வித்தியானந்தன், வேலுப்பிள்ளை, தில்லைநாதன், அருணாசலம், நா.சுப்பிரமணியம், சிவசேகரம் முதலியோரும் கவிஞர் முருகையன், அகளங்கன், முதலியோரும் கலாநிதிகள் சபா.ஜெயராசா, துரை.மனோகரன், நு.்.மான், செ.யோகராசா முதலியோரும் மேற்கொண்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை.

மேற்கண்டவர்களது ஆய்வுகளில் விவரணத் திறனாய்வும் ரசனைப் பண்பும் கவிஞர்களின் சமூகப் பார்வை, கலைத்துவம் முதலியன பற்றிய நோக்கும் முக்கியத்துவம் பெற்றுள்ளமையை அவதானிக்கலாம்.

ஈழத்து நவீன கவிதைகள் பற்றி இதுகாலவரை ஆய்வுகளை மேற்கொண்டோரை மரபுவழித் தமிழ் அறிஞர்கள், புலமைசார் ஆய்வாளர்கள், நவீன இலக்கியப் பரிச்சயமுடையோர் என மூவகையினராக வகுத்து நோக்கலாம். 1960களின் முற்பகுதி வரை ஈழத்துக் கவிதைகள் பற்றி வெளிவந்த நூல்களும் கட்டுரைகளும் அதிக அளவு தகவல்களைக் கொண்டனவாகவும் கவிஞர்களது வாழ்க்கைச் சுருக்கத்தையும் அவர்களது ஆக்கங்கள் பற்றிய அறிமுகத்தையும் வெளியிடுவனவாகவும் இரசனை முறைத் திறனாய்வாகவும் அமைந்துள்ளன. எனினும் ஏறத்தாழ 1970 களிலிருந்து காத்திரமான ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு அவை தூண்டுகோலாகவும் முன்னோடியாகவும் அமைந்தன எனலாம். இத்தகைய ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டவர்களுள் தென் புலோலியூர் மு.கணபதிப்பிள்ளை, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, கா.பொ.இரத்தினம், கனக செந்திநாதன், F.X.C.நடராசா, ச.அம்பிகைபாகன், முதலியோர் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவர்கள்.

புலமைசார் ஆய்வாளர்கள் என்ற வகையில் பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, செல்வநாயகம், வித்தியானந்தன், சதாசிவம், கைலாசபதி, சிவத்தம்பி, தனஞ்செயராசசிங்கம், வேலுப்பிள்ளை, பூலோகசிங்கம், தில்லைநாதன், சண்முகதாஸ், சிவசேகரம், நா. சுப்பிரமணியம், அருணாசலம், மௌனகுரு, சித்திரலேகா, சபா.ஜெயராசா, கலாநிதிகள் நு.்.மான், துரை.மனோகரன், திருமதி கலையரசி சின்னையா, எஸ்.ஜெபநேசன், மு.தளையசிங்கம் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களது ஆய்வுகள் பலவற்றில் வரலாற்றுப் பார்வையும் சமுதாய நோக்கும் ஒப்பு நோக்கும் பண்பும் முனைப்புப் பெற்றுள்ளதை அவதானிக்கலாம்.

## நாவலும் சிறுகதையும்.

தமிழில் வளர்ந்து வரும் நவீன இலக்கிய வடிவங்களுள் நாவலும் சிறுகதையும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. நாவலையும் சிறுகதையையும் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்கள் அங்கீகரிப்பதற்கு முன்னரே இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை அங்கீகரிக்கலாயிற்று. ஏறத்தாழ 1940களின் பிற்பகுதியிலிருந்து இலங்கையில் பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ் நாவல்கள், சிறுகதைகள் ஆகியன பற்றிய ஆய்வு முயற்சிகள் ஆரம்பமாயின. இலங்கையைச் சேர்ந்த ஆய்வறிஞர்கள் சிலர் தொடக்கத்தில் தமிழக நாவல்கள், சிறுகதைகள் ஆகியன தொடர்பான ஆய்வுகளிலேயே தீவிர கவனம் செலுத்தினர். ஏறத்தாழ 1960களின் பிற் பகுதியிலிருந்தே இலங்கைத் தமிழ் நாவல்கள், சிறுகதைகள் ஆகியன தொடர்பான ஆய்வுகளில் கவனம் செலுத்தத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமியத் தமிழ் இலக்கியம்.

சைவமும் தமிழும், வைணவமும் தமிழும், சமணமும் தமிழும், கிறிஸ்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், இஸ்லாமும் தமிழும் எனக் குறுகிய மனப்பான்மையுடன் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராய்வது பெருந்தவறு என மூர்க்கத் தனமாக வாதிட்டவர்களும் மூர்க்கம் தணிந்த நிலையில் 'அவ்வாறு நோக்குவதும் அவசியம்தான்' என ஒத்துக்கொள்ளலாயினர். 'வேற்றுமைகளில் ஒற்றுமை' என்பதற்கிணங்கவே நீண்டகாலத் தமிழ் இலக்கிய வரலாறு விளங்கி வந்துள்ளமை மனங்கொளத்தக்கது. சமணர்களாகவும் பௌத்தர்களாகவும் கிறிஸ்தவர்களாகவும் மாறிய தமிழ் மக்கள் தம்மைத் தமிழர்களாகவே கருதிச் செயற்பட்டனர். ஆயின் இஸ்லாம் மதத்துக்கு மாறிய தமிழ் மக்கள் தம்மை இஸ்லாமியர்களாகவே கருதிச் செயற்பட்டு வந்துள்ளனர் என்பது வரலாற்றுண்மையாகும். இதன் காரணமாகவே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வு முயற்சிகளைத் தனியாக நோக்க வேண்டியுள்ளது.

அகண்டாகாரமான தமிழ் இலக்கியப் பரப்பில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் குறிப்பிடத்தக்க இடத்தினை வகிக்கின்றது. இஸ்லாம் சமயச் சார்பான தமிழ் இலக்கியங்களையே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் எனலாம். தமிழ் இலக்கிய உலகிற்குப் புதிய சில இலக்கிய வடிவங்களையும் புதிய சில பரிமாணங்களையும் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் நல்கியுள்ளனர். இஸ்லாமியத் தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் பலர் சிறந்த படைப்புகள் பலவற்றைத் தமிழ் உலகிற்களித்து அழியாப் புகழ் பெற்றுள்ளனர்.

ஏறத்தாழ 1950 ஆம் ஆண்டுவரை இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய தீவிர தேடுகையோ காத்திரமான ஆய்வு முயற்சிகளோ இலங்கையில் இடம்பெறவில்லை. 'முஸ்லிம் நேசர்' எனப் போற்றப்படும் சுவாமி விபுலாநந்தரே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வு முயற்சிகளுக்கு முதலில் அடிகோலியவராவர். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விபுலாநந்தர் தமிழ்ப் பேராசிரியராக விளங்கிய காலத்தில் தம்மிடம் பயின்று கொண்டிருந்த மாணவனான உவைஸ் அவர்களை இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வு முயற்சிகளுக்குத் தூண்டினார். அவரைத் தொடர்ந்து பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன் முதலியோர் உவைஸ் அவர்களுக்குத் தூண்டுதல் அளித்ததோடு தாமும் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்விற் கவனம் செலுத்தினர். இவ்வகையில் பேராசிரியர் வித்தியானந்தன் மேற்கொண்ட ஆய்வுகள் நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. [9]

பேராசிரியர் வித்தியானந்தன் அவர்களைத் தொடர்ந்து பேராசிரியர்கள் சிவத்தம்பி, தில்லைநாதன், சண்முகதாஸ், பாலசுந்தரம், கலாநிதிகள் நு்.மான், துரை.மனோகரன், அனஸ் முதலியோர் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் தொடர்பாகக் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவை கட்டுரைகளாகவும் நூல்களாகவும் வெளிவந்துள்ளன.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர்கள்; அவற்றுக்குத் தூண்டுதல் அளித்தவர்கள் என்ற வகையில் எஸ்.ஏ.செய்யிதுஹஸன், மௌலானா, எம்.கே.செய்யிதுஹஸன் அஹமது, எ.எம்.எ.அஸீஸ், ரி.எல்.அப்துல்லத்தீப், எஸ்.எச்.எம்.ஜெமீல், அ.ஸ.அப்துஸ்ஸமது, மருதூர்க்கொத்தன், வீ.எம்.எம்.இஸ்மாயில், எஸ்.முத்துமீரான், மருதூர் எம்.மஜீத், ஏ.பீர்முஹம்மது, ஆ.மு.ஷரீபுத்தீன், எஸ்.எம்.கமால்தீன், முஹம்மதுசமீம், எஸ்.எம்.ஏ.ஹஸன், எம்.ஸி.எம்.ஸீபைர், ஜே.எம்.எம். அப்துல்காதர், ஏ.ஏ.எம்.புவாஜி, எஸ்.எம்.ஹனிபா, பி.எம்.புன்னியாமீன், எஸ்.உபைத்துல்லா, புவாஜி முதலியோரை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

கடந்த பல வருடங்களாக நடைபெற்றுவரும் அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாடுகள் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆய்வு வரலாற்றிற் பெரும் திருப்பத்தையும் தாக்கத்தையும் முன்னோக்கிய திடீர்ப் பாய்ச்சலையும் விழிப்புணர்வினையும் ஏற்படுத்தியுள்ளன. [10]

மேற்கண்டவர்களது ஆய்வு முயற்சிகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போன்று பேராசிரியர் அல்லாமா உவைஸ் அவர்களின் அகண்டாகாரமான ஆய்வு முயற்சிகள் அமைந்துள்ளன. தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் புலமை மிக்க பேராசிரியர் உவைஸ் அவர்களின் ஆய்வு முயற்சிகளுள் முஸ்லிம்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு, இஸ்லாமியத் தமிழ்க் காப்பியங்கள், ஆறு பெரும் பாகங்களைக் கொண்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு ஆகியவை விதந்து கூறத்தக்கவை.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என ஒன்று உண்டா என மிகுந்த அலட்சியத்தோடு பல தசாப்தங்களுக்கு முன்னர் வினாவியவர்கள் பல்லாயிரம் பக்கங்களைக் கொண்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூல் வெளிவந்ததும் வாயடைத்துப் போயினர். பேராசிரியர் உவைஸ் அவர்களது ஆய்வு முயற்சிகளின் கொடுமுடியாக இந் நூல் விளங்குகின்றது. இந் நூலாக்கத்தின்போது அவருக்கு உற்ற துணையாக விளங்கிய பேராசிரியர் பி. மு. அஜ்மல்கான் அவர்களது பங்களிப்பினையும் நாம் மறக்கலாகாது. பேராசிரியர் உவைஸ் அவர்கள் ஆய்வாளராக மட்டும் அமையாது இஸ்லாமிய இலக்கியங்கள் பற்றிய தேடுகையிலும் அளப்பரிய பணிகள் புரிந்துள்ளார். முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு என்னும் விடயம் பற்றிய ஆய்வினை நிறைவேற்றும்போது ஏறத்தாழ இருநூறு இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைக் கண்டறிந்த அவர், மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றியபோது இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்களைக் கண்டுபிடித்தமை சாதாரண சாதனையல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல்களைத் தொகுப்பதிலும் பதிப்பிப்பதிலும் மொழி பெயர்ப்பதிலும் உரைகள் எழுதுவதிலும் தீவிர கவனம் செலுத்தினார். சிறியனவும் பெரியனவுமாக நாற்பத்தைந்து நூல்களைச் சுயமாக எழுதி வெளியிட்டுள்ளார்; பன்னிரண்டு நூல்களை மொழிபெயர்த்துள்ளார்; பதினொரு நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

பேராசிரியர் உவைஸ் அவர்களது ஆய்வு முயற்சிகளுடன் இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் பற்றிய ஆய்வு முயற்சிகள் நிறைவு பெற்று விடவில்லை. அவர் காட்டிய வழியிலேயே மேன்மேலும் காத்திரமானதும் மாறுபட்டதும், நுண் பகுப்பாய்வு, சமூகவியலாய்வு முதலியவற்றினடிப்படையிலானதுமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்; தொடர்ந்து இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் பற்றிய தேடுகை முயற்சி இடம்பெற வேண்டும்.

## மலையகத் தமிழியல்

பல்வேறு காரணங்களால் மலையகத் தமிழியல் தனியாக நோக்கப்பட வேண்டியுள்ளது. கடந்த நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட கால வரலாற்றைக் கொண்டுள்ள மலையகத் தமிழ் மக்களின் புலம் பெயர்வு, அதற்கான காரணங்கள், அரசியல், சமூக, பொருளாதார நிலைமைகள் தொடர்பான அவர்களது பிரத்தியேகப் பிரச்சினைகள் முதலியன பற்றிய ஆய்வு முயற்சிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே இடம்பெறத் தொடங்கி விட்டன.

மலையகத் தமிழியல் தொடர்பான ஆய்வு வரலாற்றினை, ஏறத்தாழ 1960 ஆம் ஆண்டுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள், 1960களின் ஆரம்பத்திலிருந்து ஏறத்தாழ 1980களின் முற்பகுதிவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள், 1980 களின் பிற்பகுதியிலிருந்து இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் என மூன்று முக்கிய கால கட்டங்களாக வகுத்து நோக்குதல் பொருத்தமானதாகும்.

ஏறத்தாழ 1960 ஆம் ஆண்டுவரை மலையகத் தமிழியல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் பல நூல்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளன. அவற்றுள் அதிகமானவை ஆங்கிலத்திலேயே வெளிவந்துள்ளன. அவற்றுட் கணிசமானவை புலமை மிக்கோரால் ஓரளவேனும் நவீன நெறிமுறைகளுக்கேற்ப மேற்கொள்ளப்பட்டனவாயினும் அதிகமான ஆய்வுகள் வெறுமனே உயிரோட்டமற்றதும் யந்திரீக மயப்பட்டதுமான முயற்சிகளாகவே அமைந்துள்ளமையினை அவதானிக்கலாம்.

ஏறத்தாழ 1960 களின் நடுப்பகுதியிலிருந்து மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் முன்னர் ஒருபோதும் காணப்படாத அளவிற்கு விழிப்புணர்வும் எழுச்சியும் ஏற்படலாயின. மலையகத் தொழிலாளரது பல்வேறுபட்ட பிரச்சினைகள், வாழ்க்கைப் போராட்டங்கள், அவலங்கள் முதலியன தொடர்பாகச் சிறுகதைகளும் நாவல்களும் கவிதைகளும் நாடகங்களும் உரைநடைச் சித்திரங்களும் அதிக அளவில் வெளிவரலாயின. அதே சமயம் ஆய்வு முயற்சிகளும் படிப்படியாக அதிகரிக்கலாயின.

1960 களின் முற்பகுதியிலிருந்து மலையகத்திலேயே பிறந்து வளர்ந்தவர்களும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து மலையகத்தில் தற்காலிகமாகவோ நிரந்தரமாகவோ வாழ்ந்தவர்களும் மலையகத்தைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்களும் கலை-இலக்கிய மன்றங்களும் மேற்கொண்ட ஆய்வு முயற்சிகள் மனங்கொளத்தக்கவை. 1983 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற மிகக் கொடூரமான இனக் கலவரம் மலையகத்தையும் வெகுவாகப் பாதித்தது. ஒரு சில ஆண்டுகள் ஆய்வு முயற்சிகள் ஸ்தம்பித்த நிலையை அடைந்தன; ஆயின் அதனைத் தொடர்ந்து மலையகத்தில் புத்தெழுச்சி ஏற்படலாயிற்று; ஆய்வு முயற்சிகளும் அதிகரிக்கலாயின.[11]

ஏறத்தாழ 1950 களிலிருந்து இற்றைவரை மலையகத் தமிழியல் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டோர் என்ற வகையில் எடுத்துக்காட்டாக முக்கியமான ஒரு சிலரை மட்டும் இச் சிறு கட்டுரையிற் குறிப்பிடலாம். பேராசிரியர்கள் சிவத்தம்பி, தில்லைநாதன், பஸ்தியாம்பிள்ளை, சந்திரசேகரன், மூக்கையா, சின்னத்தம்பி, சிவராசா, அருணாசலம், நித்தியானந்தன், திருவாளர்கள் சாரல்நாடன், சி.வி.வேலுப்பிள்ளை, அன்ரனிஜீவா, தெளிவத்தை ஜோசப், சு.முரளிதரன், முத்துலிங்கம், தேவராஜ், நடேசன், கே.வேலாயுதம், ஜெ.சற்குருநாதன், எஸ்.சந்திரபோஸ், கலாநிதிகள் வாமதேவன், வேல்முருகு, திருவாளர்கள் சு.மகாலிங்கம், எஸ்.விஜேசந்திரன், செல்விகள் ஞானாம்பிகை, சர்மளாதேவி, மேனகா, சோபனாதேவி, திருமதி. சோதிமலர், திருமதி. அம்பிகை, மா.கருணாநிதி, எஸ்.இராஜேந்திரன், கலாநிதி. துரை.மனோகரன், திரு. சி.அழகுப்பிள்ளை, மு.நித்தியானந்தன், மாத்தளை வடிவேலன், ஏ.வி.பி.தோமஸ், திருச்செந்தூரன் முதலியோரது முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை.[12]

மலையகத் தமிழியல் தொடர்பாக இதுவரை நடைபெற்ற ஆய்வுகள் குறிப்பிடத்தக்க நம்பிக்கையை அளிக்கின்றனவேனும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய ஆய்வுகள் மிக அதிகம் என்பதனையும் நாம் மனத்திருத்துதல் அவசியமாகும்.

## அலைவக்காற்றுக் கலைகள்

தமிழகத்து நாடகங்கள், நாட்டுக்கூத்து முதலியன தொடர்பாக இலங்கையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் மேற்கொண்ட ஆய்வு முயற்சிகள் குறைந்த அளவினதே. பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் தமது கலாநிதிப் பட்டத்தின் பொருட்டு 'பழந்தமிழர் சமூகத்தில் நாடகம்' என்னும் விடயம் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளார். தமிழகமும் நாடகமும், தமிழகமும் சினிமாவும், முதலியன தொடர்பாகவும் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். தொடர்ந்து ஈழத்து நாடகங்கள் தொடர்பாகவும் பல ஆய்வுகளைச் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்கள் சிறந்த பல நாடகங்களை இயற்றியளித்துள்ளதுடன் நாடகங்கள் தொடர்பான ஆய்வுகளையும் செய்துள்ளார். பேராசிரியர் வித்தியானந்தன் தமிழகத்து நாடகங்கள், ஈழத்து நாடகங்கள் ஆகியன தொடர்பாகப் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளதுடன் ஈழத்தின் நாட்டுக் கூத்துக் கலைக்குப் புத்துயிரளித்தும் பழைய நாடகங்கள் பலவற்றைப் பதிப்பித்தும் அரும்பணிகள் புரிந்துள்ளார். ஈழத்தில் நவீன நாடகங்களின் தோற்றம், வளர்ச்சிப் போக்குகள், அவற்றுக்கான காரணங்கள் ஆகியன பற்றி க. சொக்கலிங்கம் வரலாற்று ரீதியாகவும் விரிவாகவும் ஆராய்ந்துள்ளார். கலையரசு சொர்ணலிங்கம், ஏ.ரி.பொன்னுத்துரை, இ. சிவானந்தன், பேராசிரியர்கள் கைலாசபதி, தில்லைநாதன், கவிஞர் இ. முருகையன், எஸ்.பொன்னுத்துரை, நெல்லை. க.பேரன், அன்ரனிஜீவா, மாத்தளை கார்த்திகேசு, கே.எஸ்.சிவகுமாரன், எச்.எம்.பி.முஹிதீன், சு.சண்முகரத்தினம் முதலியோர் ஈழத்து நாடகங்கள் தொடர்பாக ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளனர்.[13]

ஏறத்தாழ 1970 களின் பிற்பகுதிவரை ஈழத்திலே நாடகம் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் பெரும்பாலும் தமிழ் நாடக நூல்கள் பற்றியனவாகவே காணப்பட்டன. ஆயின் ஏறத்தாழ 1980 களின் முற்பகுதியிலிருந்து பல்வேறு காரணங்களால் அரங்கியல் பற்றிய ஆய்வு முயற்சிகள் பெருகலாயின. அரங்கியல் பற்றிய முன்னணி ஆய்வாளர்களுள் முக்கியம் பெற்று விளங்குபவர் பேராசிரியர் மௌனகுரு ஆவார். சிறுவயதிலிருந்தே நாட்டுக் கூத்துகளில் பங்குபற்றி நடித்தவர் காலப்போக்கில் ஆசிரியராகவும் நெறியாளனாகவும் ஆய்வாளனாகவும் பரிணமித்தார். நாடகம், நாட்டுக்கூத்து ஆகியன பற்றிய அவரது ஆய்வுகளுள் பழையதும் புதியதும், ஈழத்துத் தமிழ் நாடக அரங்கு, மட்டக்களப்பு நாட்டுக்கூத்து ஆகிய நூல்கள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை.

மரபுவழி நாடகம், நவீன நாடகம், அரங்கியல் ஆகிய துறைகள் தொடர்பாகக் காரை. சுந்தரம்பிள்ளை, இளைய பத்மநாதன், சிதம்பரநாதன், பாலசுகுமார் முதலியோர் மேற்கொண்டுவரும் ஆய்வு முயற்சிகளும் குறிப்பிடத்தக்கன. கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் 'நாடகமும் அரங்கியலும்' பயிற்றப்படுகின்றமையும் நாடக மன்றங்கள், நாடக அரங்கக் கல்லூரிகள் ஆகியவற்றின் செயற்பாடுகளும் ஆய்வு முயற்சிகளுக்குத் தூண்டுதல் அளிப்பனவாக உள்ளன.

## இசை, நடனம், சிற்பம், ஓவியம்

வரலாற்றுக் காலத்தின் ஆரம்பத்திலிருந்தே தமிழ் மக்களால் போற்றிப் பேணிப் பாதுகாக்கப்பட்டுவரும் கவின் கலைகள் பற்றிய ஆய்வு முயற்சிகள் தமிழகத்திற் பெருகியுள்ள அளவிற்கு இலங்கையிற் பெருகவில்லை. எனினும் இவை தொடர்பாகக் குறிப்பிடத்தகுந்த சில ஆய்வுகள் வெளி வந்துள்ளமை மனங்கொளத்தக்கது. இவ்வகையில் கலாயோகி ஆனந்த குமாரசுவாமி, கலைப்புலவர் நவரத்தினம், பேராசிரியர்கள் சுவாமி விபுலாநந்தர், வித்தியானந்தன், கைலாசபதி, சிவசாமி, சண்முகதாஸ், கோபாலகிருஷ்ணஐயர், சோ.கிருஷ்ணராசா, கலாநிதி ந.வேல்முருகு, ச.ஸ்ரீகாந்தா, அ.நா.சோமாஸ்கந்தசர்மா, நா.சண்முகலிங்கம், இ.முருகையன், சண்முகம் சிவலிங்கம், எஸ்.பரராசசிங்கம், த.சண்முகசுந்தரம், தி.நித்தியானந்தன், பேராசிரியை ஞானகுலேந்திரன் முதலியோர் இந்தியாவினதும் அதன் ஒரு கூறான தமிழகத்தினதும் இலங்கையினதும் இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலியன தொடர்பாகச் செய்துள்ள ஆய்வுகள் கவனத்திற் கொள்ளத்தக்கவை.[14]

## நாட்டார் வழக்காற்றியல்.

கல்விமான்களால் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டிருந்த இத்துறை கடந்த சில தசாப்தங்களாகவே பல்வேறு காரணங்களால் பல்கலைக்கழக ஆய்வாளர்களையும் பிறரையும் மிகுதியாக ஈர்க்கத் தொடங்கிற்று. தமிழகத்தில் இத்துறை தொடர்பாக அதிக அளவு முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கையில் கடந்த பல வருடங்களாகத் தொடர்ந்து நிலவிவரும் போர்ச் சூழ்நிலை, பல்வேறு வகையான வசதிக் குறைபாடுகள் முதலியன காரணமாகக் காத்திரமான ஆய்வு முயற்சிகள் அதிகம் பெருகவில்லை. நாட்டாரியல் அல்லது நாட்டார் வழக்காற்றியல் என்பது மிகப் பரந்ததுறை; பல்வேறு பிரிவுகளைக் கொண்டது; சமூகத்துக்குச் சமூகம், பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபாடுகளைக் கொண்டது.

நாட்டார் வழக்காற்றியல் தொடர்பாக ஆய்வு முயற்சிகள் மேற்கொண்டவர்கள் என்ற வகையில் முக்கியமான ஒரு சிலரை மட்டுமே இங்கு குறிப்பிடலாம். பேராசிரியர்கள் கணபதிப்பிள்ளை, வித்தியானந்தன், கைலாசபதி, சிவத்தம்பி, தில்லைநாதன், இந்திரபாலா, பாலசுந்தரம், மௌனகுரு, அருணாசலம், கலாநிதிகள் நு.்மான், காரை.சுந்தரம்பிள்ளை, மு.இராமலிங்கம், செ.எதிர்மன்னசிங்கம், முல்லைமணி, மெட்றாஸ்மயில், எஸ். முத்துமீரான், ஆ.மு.ஷரிபுத்தீன், யூ.எஸ்.அலியார், யூ.எல்.ஏ.மஜீத், சி.வி.வேலுப்பிள்ளை, சாரல்நாடன் முதலியோர் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவர்கள்.[15]

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களுக்குரிய நாட்டாரியல் தொடர்பாகக் கணிசமான ஆய்வுகள் இடம்பெற்றுள்ளன. வன்னிப் பிரதேசம், மலையகம், பொலனறுவை மாவட்டம், வடமேல் மாகாணத்தின் சில பகுதிகள் ஆகியவற்றுக்குரிய நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான ஆய்வு முயற்சிகள் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. இஸ்லாமிய நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான ஆய்வு முயற்சிகளும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன.

## சமூகமும் சமயமும் பண்பாடும்

இலங்கையில் சமயம், பண்பாடு ஆகியன தொடர்பாகப் பல்வேறு தரத்தினராலும் அதிக அளவு ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. ஆயின் சமூகம் பற்றிய ஆய்வுகள் குறைவாகவே இடம்பெற்றுள்ளன. அவை பற்றி மிகச் சுருக்கமாகவே இங்கு நோக்கப்படும். இத் துறைகள் தொடர்பான ஆய்வு முயற்சிகளைப் பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அவை மரபு வழித் தமிழ் அறிஞர்கள், சமயப் பெரியோர்கள் முதலியோரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், சமூகவியல் சார்ந்த ஆய்வு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள், பல்வேறு சமய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள், புலமைசார் ஆய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகள் என்பனவாகும்.

பொதுவாக இந்துமதம், அதன் முக்கிய கூறுகள், சைவ சித்தாந்தம், இலங்கையில் இந்துமதம், தமிழர் பண்பாடு முதலியன தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் என்ற வகையில் வி.கனகசபைப்பிள்ளை, கலைப்புலவர் நவரத்தினம், H.W.தம்பையா, C.சீவரத்தினம், C.S.நவரத்தினம், நமசிவாய தேசிகர், பேராசிரியர்கள் சுவாமி விபுலாநந்தர், கணபதிப்பிள்ளை, தனிநாயகம், வித்தியானந்தன், கைலாசநாதக் குருக்கள், கைலாசபதி, சிவத்தம்பி, தில்லைநாதன், வேலுப்பிள்ளை, இராமகிருஷ்ணன், பத்மநாதன், இந்திரபாலா, சிற்றம்பலம், சோ.கிருஷ்ணராசா, சிவசாமி, பூலோகசிங்கம், சுப்பிரமணியம், அருணாசலம், கனகரத்தினம், மௌனகுரு, கலாநிதிகள் செ.குணசிங்கம், ஆ.கந்தையா, திருமதி அருட்செல்வம், துரை.மனோகரன், திருவாளர்கள் மு.தளையசிங்கம், சி.பொன்னம்பலம், இரவீந்திரன், சோமகாந்தன், கு.சோமசுந்தரம், பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, F.X.C.நடராசா, புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.[16]

சமயம், சமூகம், பண்பாடு ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்தனவாகப் பெண் அடிமைத்தனம், பெண் விடுதலை, சாதியாசாரம், சாதீயத்திற்கெதிரான போராட்டம் முதலியன அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. கடந்த சில தசாப்தங்களாகச் சாதீயம், பெண்ணியம் முதலியவை தொடர்பான ஆய்வு முயற்சிகள் இலங்கையில் அதிகரித்து வருதல் விண்டுரைக்கத்தக்க ஒன்றாகும். இவ்வகையில் அன்பேரியா ஹனிபா, யோகா பாலச்சந்திரன், பத்மா. சோமகாந்தன், பேராசிரியை சித்திரலேகா, சாந்தி. சச்சிதானந்தம், சிரோன்மணி இராஜரத்தினம், சுகந்தி, சூரியகுமாரி, கலாநிதி அம்மன்கிளி, கல்யாணி, உதயதேவி, நயீமா சித்தீக், லலிதா நடராசா, செல்வி திருச்சந்திரன் முதலியோரது முயற்சிகள் மனங்கொளத்தக்கவை. இவை ஆரம்ப முயற்சிகளேயாகும். பெண்ணியம் தொடர்பாக எதிர்காலத்தில் காத்திரமான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழர் சமுதாயம் பற்றிய ஆய்வில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும் முக்கியம் பெற்றுள்ளன. சாதீயத்திற்கெதிரான போராட்டங்கள் பலவற்றில் நேரடிப் பங்கு கொண்டவர்களுட் பலர் எழுத்தாளர்களாகவும் ஆய்வாளர்களாகவும் பரிணமித்தனர். மானிட நேயத்தால் உந்தப்பட்டவர்களும் இதிற் கவனம் செலுத்தியுள்ளனர். பேராசிரியர்கள் கைலாசபதி, சிவத்தம்பி, தில்லைநாதன், அருணாசலம், மௌனகுரு, திருவாளர்கள் மு.தளையசிங்கம், செங்கை ஆழியான், இராவணா, வெகுஜனன், அகஸ்தியர், தெணியான், என்.கே.ரகுநாதன், டானியல், டொமினிக் ஜீவா முதலியோரது முயற்சிகள் இவ்வகையில் அவதானிக்கத்தக்கவை.

## சாசனவியலும் தொல்பொருளியலும் வரலாற்றியலும்

இந்தியா, இலங்கை முதலிய நாடுகளின் வரலாற்று ஆய்வுக்குத் தொல்பொருளியல், சாசனவியல் முதலியன பற்றிய ஆய்வுகள் எத்துணை இன்றியமையாதன என்பதை இங்கு வற்புறுத்தத் தேவையில்லை. இதேபோன்று தமிழ் இலக்கியம், இலக்கிய வரலாறு, மொழி வரலாறு முதலியன பற்றிய ஆய்வு முயற்சிகளுக்கும் மேற்கண்ட மூன்று துறைகள் தொடர்பான ஆய்வுகள் மிகமிக இன்றியமையாதனவாகும்.

மேற்கண்ட மூன்று துறைகள் தொடர்பாக இலங்கையரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முயற்சிகளைப் பின்வரும் கால கட்டங்களாக வகுத்து நோக்கலாம்.

1. தொடக்ககாலம் (ஏறத்தாழ 1960 ஆம் ஆண்டு வரை); ஆரம்ப முயற்சிகள்.
2. ஆய்வு முயற்சிகள் தீவிரம் பெற்ற காலம் (1960 ஆம் ஆண்டு முதல் ஏறத்தாழ 1982 ஆம் ஆண்டு வரை).
3. ஆய்வு முயற்சிகளில் தேக்கநிலை ஏற்பட்ட காலம் (1983 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை)

1983 ஆம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற மிகக் கொடூரமான இனக் கலவரமும் இதனைத் தொடர்ந்து நாளுக்கு நாள் உக்கிரம்பெற்றுவரும் போர்க் கெடுபிடிகளும் இத்துறைகள் சார்ந்த ஆய்வு முயற்சிகளை வெகுவாகப் பாதித்துள்ளன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே இலங்கையில் சாசனங்கள் தொடர்பான ஆய்வு முயற்சிகள் ஆரம்பமானபோதும் ஏறத்தாழ 1960 ஆம் ஆண்டுவரை மந்தநிலையே காணப்பட்டது. பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களே ஆரம்ப ஆய்வு முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். அவரைத் தொடர்ந்து அவரது மாணவனான பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் சாசன ஆய்வில் தீவிர கவனம் செலுத்திப் பல ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். ஏறத்தாழ 1960 ஆம் ஆண்டிலிருந்தே அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியில் அறிவியல் பூர்வமாகச் சாசனங்களை ஆராயும் முயற்சிகள் தீவிரமடையலாயின. தமிழகத்தினதும் ஈழத்தினதும் சாசனங்கள் பற்றிக் காத்திரமான ஆய்வுகளை மேற்கொண்டோருள் பேராசிரியர்கள் இந்திரபாலா, பத்மநாதன், சிற்றம்பலம், சிவசாமி, கலாநிதி செ.குணசிங்கம் ஆகியோர் அதிக முக்கியத்துவம் பெறுகின்றனர்.[18]

ஈழத்திலே சாசனவியல் ஆய்வு வளர்ச்சியடைந்துள்ள அளவிற்குத் தொல்பொருளியல் ஆய்வு வளர்ச்சியடையவில்லை. இதற்குப் பல்வேறு (பாதகமான) காரணங்கள் காணப்படுகின்றன. மிகவும் பாதகமான சூழ்நிலையிலும் இத்துறை தொடர்பாகப் பேராசிரியர்கள் இந்திரபாலா, பத்மநாதன், சிவசாமி, சிற்றம்பலம், கலாநிதிகள் கிருஷ்ணராசா, ரகுபதி, புஸ்பரத்தினம் முதலியோர் மேற்கொண்ட ஆய்வுகள் முன்னோடி முயற்சிகளாக அமைந்துள்ளன எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தினதும் ஈழத்தினதும் வரலாறு தொடர்பான ஆரம்ப ஆய்வு முயற்சிகள் பற்றி இக் கட்டுரையின் ஆரம்பத்தில் நோக்கப்பட்டுள்ளது. கனகசபைப்பிள்ளை, சைமன் காசிச்செட்டி, இராசநாயகம், சேனாதிராஜா, சுவாமி ஞானப்பிரகாசர், தம்பிப்பிள்ளை, தம்பையா, தம்பிமுத்து, ராகவன், ந.சி.கந்தையாபிள்ளை, நவரத்தினம் முதலியோரது ஆய்வு முயற்சிகளைத் தொடர்ந்து ஏறத்தாழ 1960 களிலிருந்தே நவீன ஆய்வு நெறிமுறைகளைப் பின்பற்றிய ஆய்வு முயற்சிகள் பெருகலாயின. இவ்வகையிலே பேராசிரியர்கள் அரசரத்தினம், பத்மநாதன், வஸ்தியாம்பிள்ளை, இந்திரபாலா, சிற்றம்பலம், கலாநிதிகள் செ.குணரத்தினம், ரகுபதி, புஸ்பரத்தினம், சத்தியசீலன், கிருஷ்ணராசா, சிவசாமி முதலியோரது முயற்சிகள் குறிப்பிடத்தக்கன.[19]

இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் பரந்து வாழும் தமிழ் மக்களது வரலாறு இதுகாலவரை செவ்வனே ஆராயப்படவில்லை. எனினும் யாழ்ப்பாணக் குடாநாட்டினது வரலாறு தொடர்பாகப் பேராசிரியர்கள் இந்திரபாலா, பத்மநாதன், சிற்றம்பலம், சிவசாமி, கலாநிதி செ.குணசிங்கம், புஸ்பரத்தினம் முதலியோர் மேற்கொண்ட காத்திரமான ஆய்வு முயற்சிகள் பல புத்தகங்களாகவும் கட்டுரைகளாகவும் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வன்னிப் பிரதேச வரலாறு பற்றிப் பேராசிரியர்கள் பத்மநாதன், சிற்றம்பலம், திரு. புஸ்பரத்தினம் முதலியோரது ஆய்வுகளில் சில முன்னோடி முயற்சிகளாக அமைந்துள்ளன. திருகோணமலைப் பிரதேச வரலாறு தொடர்பாக மரபு வழித் தமிழ் அறிஞர்கள் சிலரும் கலாநிதி செ.குணசிங்கம், பேராசிரியர் பத்மநாதன் முதலியோரும் குறிப்பிடத்தகுந்த சில ஆய்வுகளைச் செய்துள்ளனர். மட்டக்களப்புப் பிரதேச வரலாறு தொடர்பாக மரபு வழித் தமிழ் அறிஞர்கள் சிலரும் பேராசிரியர் பத்மநாதன் முதலியோரும் குறிப்பிடத் தகுந்த ஆய்வுகள் சிலவற்றைச் செய்துள்ளனர். நீர்கொழும்பு, சிலாபம், உடப்பு, புத்தளம், மன்னார் முதலிய பகுதிகள் தொடர்பாக இதுவரை காத்திரமான ஆய்வு முயற்சிகள் எவையும் இடம்பெறவில்லை.

தமிழும் அறிவியலும் தொடர்பான ஆய்வுமுயற்சிகள் இலங்கையில் கடந்த ஒரு சில தசாப்தங்களாகவே முக்கியத்துவம் பெற்று வருவதை அவதானிக்கலாம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்தே ஒரு சிலர் இவ்விடயம் தொடர்பாகச் சில செய்திகளை வெளியிட்டுள்ளனரேனும் முதன்முதல் காத்திரமான ஆய்வுகள் சிலவற்றைச் செய்துள்ள பெருமை பேராசிரியர் சுவாமி விபுலாநந்தர் அவர்களையே சாரும். இவ்வகையில் அவரது 'விஞ்ஞான தீபம்' என்னும் நீண்ட கட்டுரை விதந்து கூறத்தக்கதொன்றாகும். இவருக்கடுத்த நிலையிற் கூறத்தக்க ஒருவர் பொறியியற் பேராசிரியர் சிவசேகரம் ஆவார். பேராசிரியர்கள் சிவத்தம்பி, தில்லைநாதன், கவிஞர் முருகையன், வைத்திய கலாநிதி முருகானந்தன், நு·.மான் முதலியோரும் இவ்விடயம் தொடர்பாகக் காத்திரமான ஆய்வுகள் சிலவற்றைச் செய்துள்ளனர்.

திறனாய்வு, பத்திரிகைத்துறை, பலதுறைகள் சார்ந்த மொழிபெயர்ப்பு முயற்சிகள், அரசியல், பொருளாதாரம், கல்வியியல், மருத்துவம் முதலியன தொடர்பான ஆய்வு முயற்சிகள் பெரும்பாலும் ஆரம்ப நிலையிலேயே உள்ளன. எதிர் காலத்தில் இத்துறைகள் தொடர்பான காத்திரம் மிக்க விரிவான ஆய்வு முயற்சிகள் இடம்பெறுவது இன்றியமையாததாகும்.

## சான்றாதாரம்.

1. இக் கட்டுரையாசிரியரால் விரிவாக ஆராய்ந்து எழுதப்பட்ட ***'இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்*** (475பக்) என்னும் நூல் 1997 ஆம் ஆண்டு வெளிவந்தது. அந்நூலில், ஏறத்தாழ 1960 களின் நடுப்பகுதியிலிருந்து 1980 களின் முற்பகுதி வரை இலங்கையில் தமிழியல் தொடர்பாக இடம்பெற்ற ஆய்வு முயற்சிகள் பற்றி விரிவாக நோக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக இக் கட்டுரையில் 1960 களுக்கு முன்னர் இலங்கையில் இடம்பெற்ற தமிழியல் ஆய்வு முயற்சிகள் பற்றி ஓரளவு விரிவாகவும் 1960 களிலிருந்து இடம்பெற்ற ஆய்வு முயற்சிகள் பற்றி மிகச் சுருக்கமாகவும் நோக்கப்பட்டுள்ளது.
2. வேலுப்பிள்ளை, ஆ., ***தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்***, 1986.
3. இவைபற்றி இக் கட்டுரையாசிரியரால் எழுதப்பட்ட ***'இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்*** (1997) என்னும் நூலில் மிக விரிவாக நோக்கப்பட்டுள்ளன.
4. இதற்கான காரணங்கள் மேற்படி நூலில் விரிவாக நோக்கப்பட்டுள்ளன.
5. இவ்வகையில் மேற்படி கருத்துக்களை வலுவான முறையில் நிறுவுவதாக ***'தமிழரின் இலக்கியத் திறனாய்வு முறை - சில அறிமுகக் குறிப்புகள்*** என்னும் கட்டுரை அமைந்துள்ளது. சு. கலா பரமேஸ்வரன் அவர்களால் எழுதப்பட்ட இவ் ஆய்வுக் கட்டுரை, நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு நிகழ்ச்சிகள் (1974) என்னும் கட்டுரைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.
6. பின்வரும் நூல்களில் இவைபற்றி விரிவாகக் காணலாம். (1983) மனோன்மணி சண்முகதாஸ், ***சி.வை. தாமோதரம்பிள்ளை- ஓர் ஆய்வு***, பூலோகசிங்கம், பொ., தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞர் பெரு முயற்சிகள் 1970.
7. இவைபற்றி இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள் என்னும் எனது நூலில் விரிவாக நோக்கப்பட்டுள்ளது.
8. இவ் ஆய்வு விபரங்களையெல்லாம் இச் சிறு கட்டுரையிற் குறிப்பிட முடியாது. இவை பற்றிய விபரங்களை மேற்படி எனது நூலிற் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொன்மையும் மேன்மையும்

சி.சிவசேகரம்

இந்து சமயம் என்று சொல்லப்படுகிற இந்திய மதங்கள் எல்லாவற்றுக்கும் பொதுவான ஒரு தோற்றுவாய் இல்லை. வேதங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்த பிராமண மதம் காலத்துடன் மாறி வந்துள்ளது. ஆகம மரபுகளை உள்வாங்கி அது விருத்தி பெற்றாலும் அதற்குப் புறம்பான பல வேறு வழிபாட்டு முறைகள் அதற்கு முன்பிருந்தே இந்தியாவில் இருந்து வந்துள்ளன. இந்தியாவின் சாதிய வருணாச்சிரமச் சமூக விருத்தியின் போக்கில் பிராமண மதச் சிந்தனை மேலும் ஆதிக்கம் பெற்றது. எனினும் அதற்கு முரணான போக்குகளும் இந்தியாவில் வெவ்வேறு காலங்களில் எழுச்சி பெற்றுப் பரவின. முக்கியமாகச் சமணமும் பவுத்தமும் இந்தியத் துணைக் கண்டத்தின் பெரும் பகுதியில் பல நூற்றாண்டுகளாகச் செல்வாக்குடன் விளங்கின. இன்று நாமறிந்த இந்துசமய மரபுகள் அல்லது இந்து சமயம் என்று கூறப்படுவன பதினைந்து நூற்றாண்டுகட்கு முன்பிருந்து தொடங்குவதாகச் சமூகப் பொறுப்புள்ள இந்திய ஆய்வாளர்கள் பலர் கூறுவர்.

புலாலுண்ணாமை உயிர்களிடத்து அன்பு என்பன சமண, பவுத்தச் சிந்தனைகளிலிருந்துதான் இந்து சமயங்கட்கு வந்தன என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. என்னளவில் புலால் உண்ணாமை தன்னளவிலேயே சிறப்பான ஒரு கொள்ளையாகத் தெரியவில்லை. உயிர்களிடத்தில் அன்பு என்பது நல்லதாயினும் இன்று வரைவிலக்கணந் தேவையான ஒரு கோட்பாடு. எந்த உயிர்களிடத்தில் அன்பு எவ்வகையான அன்பு என்பவற்றுக்குத் தெளிவான விடைகள் இல்லை. எந்த ஒரு சமயமும் இவ்வாறான விடயங்களில் இறுக்கமான திட்டவட்டமான விதிகளை வகுக்கும்போது அது வெகு விரைவிலேயே அக நெருக்கடிகட்குள்ளாகிறது. எனினும் பொதுப்பட மனிதச் சூழலுக்கும் வாழ்நிலைக்கும் அமைய மதங்கள் தமது விதிகளைக் கைவிடவோ நெகிழ்த்தவோ தேவைப்படுகிறது. இவ்வகையில் இந்து மதங்கள், நல்ல பல விடயங்களைப் பிற மதங்களிலிருந்து உள்வாங்கியே வந்துள்ளன என நம்ப நியாயமுண்டு. இந்து மதங்கள் அனைத்திற்கும் பொதுவாக எதுவுமே இல்லை எனலாம். அப்படி ஏதேன் இருந்தால் அது உலகின் பிற மதங்கட்கும் பொருந்தி வருவதாகவே இருக்கும்.

இப்போது இந்து மதங்கட்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி இந்து மதம் என்று தனித்துவமான ஒன்றைப் புனைகிற அரசியல் தேவையின் விளைவானது. ஒரு புறம் இந்தியாவில் இந்துக்களின் எண்ணிக்கையைப் பெருப்பிக்கிற நிர்ப்பந்தம்; மறுபுறம் எல்லோருக்கும் பொதுவான சில பண்புகளைக் கட்டி எழுப்புகிற கட்டாயம். பல வேறு நிறுவனங்கள் இந்தப் பணிக்காக இயங்கி வருகின்றன. எனினும் இவை அனைத்திற்கும் பொதுவாக உள்ளவற்றில் முக்கியமானது, பிற மதங்கள் மீதான பகைமை போலவே தெரிகிறது. இது தொடர்ந்தால் இந்துக்களுக்குப் பொதுவானது இஸ்லாமிய, கிறிஸ்தவ மதங்களின் மீதான குரோதம் என்று சொல்லக்கூடிய நிலைக்கு இந்துமதங்கள் இந்துத்துவக் குடைக்கீழ் வரலாம்.

எல்லா மதங்களும் அன்பையே போதிக்கின்றதாகக் கூறுகின்றனர். ஆனால் எனக்கு எந்த மதமும் மனிதரை அன்புடையோராக்கியதாகத் தெரியாது. இவ் விடயத்தில் பிரதானமான இந்து மதங்களின் சிறப்பு என்னவென்றால் அவை இந்துக்கள் எனப்படுவோரையே, ஒருவரை ஒருவர் வெறுக்கச் செய்யும் ஒரு தனித்துவமான அமைப்பைத் தம்முட் கொண்டிருப்பதுதான்.

தென்னாபிரிக்க வெள்ளையரான அ∴ப்லிகானர் சமூகத்தினர் கடவுள் வெள்ளையர் கறுப்பர் என்று ஏற்றத் தாழ்வாகப் படைத்திருப்பதாகவே பைபிளை விளங்கி வைத்திருந்தனர். அமெரிக்காவின் மோர்மன் கிறிஸ்துவ சமூகத்தினர் தமக்கென்றே ஒரு திறவாத பைபிளை உருவாக்கியுள்ளனர். பொதுவான மதநூல் ஒன்றையும் நிறுவகர் ஒருவரையுங் கொண்ட கிறிஸ்துவமும் இஸ்லாமுமே பல்வேறு வியாக்கியானங்களைக் கொண்டிருக்கலாம் என்றால் பொதுவான ஒரு தொடக்கப் புள்ளியோ பொதுவான ஒரு அற நூலோ பொதுவான ஒரு தெய்வமோகூட இல்லாத இந்து மதங்கள் தமது நீண்ட வரலாற்றில் எவ்வளவு மாற்றங்களைக் கால இடச் சூழல்கட்கமையக் கண்டிருக்க முடியுமென்று சிந்திப்போமா?

எல்லா முக்கிய மதங்களிலும் ஆணாதிக்கம் கோலோச்சுகிறது. ஏனெனில் ஆணாதிக்கம் நிலைபெற்ற பின்புதான் இந்த மதங்கள் யாவும் நிறுவனமயப்பட்டன. எனினும் விஞ்ஞான அறிவும் தொழில்நுட்பமும் நவீன உற்பத்தி முறைகளும் முதலாளியமும் சோஷலிசமும் பல மத நம்பிக்கைகளை நெகிழ்த்தியுள்ளன. பலவற்றை விழுத்தியுள்ளன. இன்று கிறிஸ்துவத்தினுள் கடவுள் பெண்ணாயிருக்கலாம் என்று துணிந்து சொல்லக்கூடியளவுக்குப் பெண்ணுரிமை விருத்தி பெற்றுள்ளது. கத்தோலிக்கத் திருச்சபையிலும் பெண் பாதிரிமாரும் பெண் பாப்பரசரும் வருகிற நாள் கத்தோலிக்கத்தின் உன்னதமான திருநாளாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவீனமான வளர்ச்சிப் பாதையில் வந்துள்ள ஒவ்வொரு இந்து சமயத்தினுள்ளும் எந்தெந்தச் சமூகப் பிரிவுகள் ஆதிக்கத்தில் உள்ளனவோ அவற்றின் நலன்கட்கேற்பவே மதக் கொள்கைகளும் சடங்கு சம்பிரதாயங்களும் அமைந்துள்ளன. எனினும் ஒவ்வொன்றும் மரபின் பேராலும் தொன்மையின் பேராலும் நியாயப்படுத்தப்படுகிறது. இது பொய்மை சார்ந்த நியாயப்படுத்தல். இது நமக்குத் தேவையா?

எனவேதான் இந்து சமயம் எனப்படுகிற ஒவ்வொரு சமயமும் முதலில் தன்னைத் தானே கேள்விக்குட்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று இந்துக்கள் எனப்படுவோரின் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளவை எவை எனப் பார்ப்போம். பொதுப்பட முக்கியமான மூன்று தடைக் கற்கள் உள்ளன.

i. சாதியமும் அதை நியாயப்படுத்துகின்ற வருணாச்சிரமமும்.
ii. பெண்ணடிமைத்தனம்.
iii. மூட நம்பிக்கைகள்.

உலகின் பிற சமூகங்களிலும் ஏற்றத் தாழ்வுகள் இருந்து வந்துள்ளன. எனினும் அவற்றை ஒருவர் உழைப்பாலோ அறிவாற்றலாலோ கடக்க வாய்ப்பு இருந்துள்ளது. இந்து மதங்களில் அது பொதுவாக மறுக்கப்படுகிறது. ஏனெனில் ஒருவரால் தனது சாதியின் இழிநிலையை மாற்ற முடியாது. இன்று இந்தியாவில் பின் தங்கிய நிலையில் அதன் பெரும்பான்மை வாழ்ந்து வருவதற்குச் சாதிமுறை முக்கியமான காரணமாகும். நம்மிற் பலராற் சாதியை நிராகரிக்க இயலாமைக்குக் காரணம், அவர்களது மத நம்பிக்கையல்ல. தமது சாதிய நம்பிக்கைக்கு வசதியாக அவர்கள் மதத்தைப் பாவிக்கின்றனர். பிறப்பால் மனிதரை ஏற்றத்தாழ்வானவர்களாகக் காட்டுகிற ஒரு கொள்கை ஒரு மதத்திற்கு இருந்தால் அந்தக் கொள்கை ஒழிய வேண்டும் அல்லது அந்த மதம் ஒழிய வேண்டும்.

சாதியம் பற்றிச் சொன்னவை பால் வேறுபாட்டிற்கும் அதேயளவு பொருந்தும். எனினும் பெண் கடவுளரை வழிபடுகிற ஒரு மதத்தில் பெண்களை இழிவாகக் கருதுகிற ஒரு கொள்கையும் நடைமுறையும் இருந்தால் அது சிரிப்பிற்குரியது அல்லவா!

புலம் பெயர்ந்த தமிழர் அந்நிய சமூகத்தினருடன் சமமாகப் பழகுகின்றனர். அவர்கள் விடயத்தில் இன வேறுபாடு போகச், சாதி, பால் வேறுபாடு பாராட்ட இயலுவதில்லை. ஆனால், தமருக்குள்ளே, இங்கிருந்ததை விட மோசமான அளவில் சாதியமும் ஆணாதிக்கமும் பேணுகின்றனர். இவை இரண்டையும் உடைத்தெறிய வேண்டுமென்றால் மூன்றாவது தடைக் கல்லையும் தகர்த்தாக வேண்டும்.

பல மூட நம்பிக்கைகள் இன்று நமது சமூகச் சூழலின் விளைவாக இல்லாது போய்விட்டன. ஆயினும் எஞ்சியிருப்பவற்றுடன் புதிய மூட நம்பிக்கைகளும் சேர்ந்துள்ளன. சோதிடம் என்பது மத நிறுவனங்களின் ஆசியுடன் தொடருகிற ஒரு மூட நம்பிக்கை. அதை விஞ்ஞானமாக்குகிற புரட்டு வேலைகள் ஒருபுறம் இருக்கக், கடவுளை உண்மையாக நம்புகிற எவரும் எப்படிச் சோதிடத்தை நம்பலாம் என்று எனக்கு விளங்கவில்லை. எந்தவொரு சோதிடமும் தனது ஆரூடங்களை நீதி விசாரணைக்குட்படுத்தக்கூடியவாறு விஞ்ஞான ரீதியான கேள்விகட்கு உட்படுத்த வேண்டும் என்ற நிபந்தனையை நாம் விதிப்போம் என்றால் சோதிடம் ஒரு தலைமுறைக்குள்ளேயே ஒழிந்துவிடும். இவ்வாறான கட்டுப்பாடுகள் புதிய போலிச் சோதிடங்களான எண் சாத்திரம் உட்பட்ட பல வேறு மோசடி வேலைகட்கும் பகவான்கள் எனப்படும் சகல போலிச் சாமியாரினது ஏமாற்று வேலைகட்கும் விரிவு படுத்தப்படுவது அவசியம்.

மனித சமத்துவம், பகுத்தறிவு சார்ந்த விஞ்ஞான ரீதியான சிந்தனை, உழைப்பிற்கு மதிப்பு, சமூகப் பொறுப்புணர்வு, மனிதாபிமானம் என்பன, நவீன சமுதாயத்தில் இந்துக்கள் என்போரின் உயர்வுக்கு அவசியமான நல்ல விடயங்கள். இந்து மதங்கள் இவற்றின் அடிப்படையில் தம்மைச் சீரமைக்க வேண்டிய காலம் எப்போதோ வந்து விட்டது. இன்னும் நீண்ட காலங் கடத்தினால் இந்து மதங்கள் சமூகப் பயனற்றுச் சிதைய நேரிடும்.

இந்து சமயத்தில் பல கடவுளர் இருப்பது தீதென்று நான் கொள்ளவில்லை. கடவுள் பற்றிய கேள்வி ஒன்றுதான்; உண்டா, இல்லையா? உண்டென்றால் அது ஏன் ஒன்றாக இருக்க வேண்டும்? அவரவர் விரும்பியபடி எத்தனை கடவுளரையும் வைத்துக் கொள்ளட்டுமே. ஆயினும் எந்தக் கடவுளையும் மகிழ்விக்கிற நோக்கில் நாம் வீண் விரயத்திலும் சமூகக்கேடான விடயங்களிலும் இறங்க வேண்டுமா? கடவுள் நம்பிக்கையை மனத்தளவில் வைத்திருக்கப் பழகுவது பண்பானதும் சமூகப் பயனுடையதுமாகும்.

கடவுள் எத்தனை பேரும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் மானுடம் ஒன்று என்ற அறிவு நமக்கு முக்கியமானது. இந்தியச் சிந்தனை மரபினுள் இழக்கப்பட்டுள்ள இதனை மீட்டெடுத்துச் சமூகப்பயனுள்ள ஒரு மதத்தை மீளுருவாக்க இயலுமாயின், அது சிறப்பானது. அவ்வாறு இயலாத எம் மதமும் சம்மதமல்ல என்று நாம் நிராகரிக்கத் துணிய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடியவர் அடிகளில் அடிமை

## -அடிமைச்சமூக வரலாற்று நோக்கில் பக்தி இலக்கியம்-

**செல்லத்துரை சுதர்சன்,**
**உதவி விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை, கலைப்பீடம்.**

அடிமைமுறை மனித சமுதாயத்தில் பண்டுதொட்டு இருந்துவரும் நடைமுறை. சமுதாயத்தின் அடிமைமுறை பக்தி இலக்கியத்தில் எவ்வாறு காணப்படுகிறது என்பதையும், அடிமை மனோபாவத்தின் வெளிப்பாடாகப் பக்தி இலக்கியம் எவ்வாறு மேற்கிளம்புகின்றது என்பதையும் தமிழ் இலக்கியச் சூழலை அடிப்படையாகவைத்து நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம். அந்த வகையில் தமிழில் தோன்றிய சைவ பக்தி இலக்கியங்களை அடிமைச்சமூக வரலாற்றுப் பின்புலத்தில் வைத்து நோக்குவதாக இச்சிறு கட்டுரை அமைகிறது.

### I

உலகின் எல்லாச் சமுதாயங்களிலும் அடிமைமுறை இருந்து வந்துள்ளது. பண்டைச் சமுதாயங்களில் போர் காரணமாகவே அடிமைமுறை தோன்றியது. அரசியல், பொருளாதார ரீதியாக உயர்ந்திருப்பவர்கள் தமது கைதிகளை அல்லது தமது ஆட்சிக்கு உட்பட்டவர்களில் ஒரு பகுதியினரை அடிமைகள்போல நடாத்தினர். கிரேக்கம், உரோம் முதலிய நாடுகளில் அடிமைமுறை இயல்பான ஒரு சமூக அமைப்பாக இருந்துள்ளது. அடிமைகளை Living Killed என்று குறிப்பிடுவர். அடிமைகள் உற்பத்தி நடைமுறையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தாலும், அவர்களுக்கு உற்பத்திப் பொருளின்மீதான உரிமை மறுக்கப்பட்டிருந்தது. அடிமைகள் உற்பத்தியைப் பெருக்குவதற்கான கருவிகளாகவே கருதப்பட்டனர். அவர்களை அடையாளம் காணவும், உரிமை கோரவும், அவர்களது உடலில் அடையாளக்குறி பொறிக்கப்பட்டது. அடிப்படைத் தேவைகளுக்கு அடிமைகள் ஆள்வோரில் தங்கியிருக்கவேண்டி இருந்தது. சாதி, செய்யும் தொழில், அரசியல் ஆதிக்கம், பால்நிலை, பொருளாதாரம், கல்வி ஆகியவற்றால் சமூக அமைப்பில் தாழ்ந்துள்ள மக்கள்கூட்டமாக அடிமை என்ற குழு விளங்குகின்றது. இவ் அடிமைமுறை பரவலான ஒரு சமூக அமைப்பாக மாறத்தொடங்கிய பின்னர் சமூகத்தின் உயர்மட்டங்களில்கூட இந்த அடிமை மனோபாவம் அதிகமாகப் படிந்துள்ளது. இதற்கு அவ்வக் கால சமூக அரசியலும் முக்கிய காரணியாக அமையும். சமுதாய, குடும்ப உறவு முறைகள் அனைத்திலும் இவ் அடிமை மனோபாவம் பொருளாதார அடிப்படையில் வேறுபட்டு அமைந்துள்ளது.

இந்தியாவிலும் இவ் அடிமைமுறை பண்டுதொட்டு இன்றுவரை நிலவிவருகின்றது. தமிழகத்தில் அமிஞ்சி, அடிமை, அடியார், மூப்படியார், படியாள், குடிப்பறையன், கொத்தடிமை எனப் பல்வேறு பெயர்களில் அடிமைகள் குறிப்பிடப்படுகின்றனர்.[1] தமிழகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அடிமைகளை உருவாக்க, பிராமணியம் அவர்களைத் தீண்டத்தகாதவர்களாக நிலைநிறுத்தியது. தமிழ்நாட்டு அரசியல் ஆதிக்கத்தில் வேளாளரும் அடிமைகளே. "அடிமை குறித்த மனுவின் விதி முறைகளைவிட இறுக்கமான முறையாகத் தமிழக அடிமைமுறை இருந்துள்ளது".[2] தீண்டாமையை அடிமை முறையின் இந்திய வடிவமாக அம்பேத்கர் கருதுகிறார்.[3] அடிமைகளுக்கு விலங்கிடுவதைவிடத் தீண்டாமை, குடிஊழிய முறை என்ற கருத்தியல் விலங்கு அவர்களை மீளா அடிமைகளாக்கியது. அடிமையின் உடம்பு, உயிர் முதலிய அனைத்தையும் பராமரிக்கும் பொறுப்பு ஆள்வோருக்குரியதாக இருந்தது. இந்நிலையில் அடிமைகள் தம் அத்தியாவசியத் தேவைகளின் இறுக்கத்திலிருந்து விடுதலை கிடைத்ததாக எண்ணினாலும், தம்மைச்சுற்றிய அடிமைத்தளையின் மாயவலையை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. தமிழகத்தில் சங்க காலத்திலிருந்து இன்றுவரை அடிமைமுறை பெரும் செல்வாக்குச் செலுத்தி நிற்கின்றது. "தமிழகத்தில் அடிமைகள் இருந்ததும், விலங்குகளைப்போல அவர்களுக்குச் சூட்டுக்குறி இடப்பட்டதும், பொருள்களைப்போல விற்கப்பட்டதும், வாங்கப்பட்டதும், தானமளிக்கப்பட்டதும், சீதனமாகக் கொடுக்கப்பட்டதும், ஆள்பவர்களின் துணையுடன் அடக்கி ஒடுக்கப்பட்டதும் வரலாற்று ரீதியில் மறுக்கவோ, மறைக்கவோ முடியாத உண்மைகளாகும்".[4]

### II

மதங்களும் மத நிறுவனங்களான ஆலயங்களும் அடிமைகள் தங்கள் விடுதலைக் கனவுகளைக் கண்டுகொள்ளும் இடங்களாகவும், ஆள்வோர் தமது நிஜ உலக வாழ்வினைச் சுரண்டலின் மூலம் நிறைவேற்றிக்கொள்ளும் களங்களாகவும் அமைகின்றன. பண்டுதொட்டு இன்றுவரை மிகப்பிரபலமான அடிமைபேணும் நிறுவனங்களாக மதங்களே அமைந்திருக்கின்றன. உலக மதங்கள் யாவுமே ஒழுக்கவியல் என்ற போர்வையில் மக்களை அடிமைகளாக்கி ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பேணின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதங்களின் பெயரில்தான் போர்களும், படையெடுப்புக்களும், சுரண்டல்களும் நடைபெற்றன. இன்று நாம் வியக்கும் மாபெரும் சமயங்களும், அவற்றின் வழிபாட்டு நிலையங்களும் அடிமைகளின் உழைப்புச் சமாதியில் உருவாகியவையே. கீழை மதங்கள் அடிமைகளின் நிகழ்கால வாழ்வின் முன்னேற்றத்தைத் தடுக்க ஆறுதல் அளித்தல் என்ற நோக்கில் "கர்ம வினைப்பயன்" என்ற மூலாத்தைப் பூசின. சமுதாயத்தின் ஏற்றத்தாழ்வுகள் எல்லாவற்றையும் ஓரிடத்தில் காட்டும் வெளியாக ஆலயங்கள் விளங்கின. ஆனால் அது மூடுண்ட வெளியாகவே இருந்தது. மனிதனுக்கான திறந்த வெளியாக அமையாது அடிமைமுறை அடிப்படையில் சமுதாயத்தில் மனிதனின் இருப்பு நிலைகளுக்கேற்ப மூடுண்ட வெளிகளை ஆலயங்கள் கொண்டிருந்தன. ஆளும் வர்க்கத்தின் மதமாகவே அடிமைகளது மதமும் அமைந்திருந்தது. மதத்தத்துவங்கள்கூட ஆளும்வர்க்க நலச்சார்பான அறிவின் வெளிப்பாடுகளே.[5] தத்துவவாதிகள்கூட தம் இருப்பைத் தக்கவைப்பதற்காக, மௌனமாக, ஆதிக்கத்திற்கு ஆதரவாக, அறிவு வெளிப்பாட்டில் ஈடுபட்டனர். தத்துவவாதிகள் உலகத்திற்கு விளக்கம் கொடுத்தார்களேயன்றி உலகத்தை மாற்றுவதுபற்றிச் சிந்திக்கவில்லை. எல்லாச்சமயங்களிலும் கடவுள் இரண்டு நிலைகளில் கைக்கொள்ளப்படுகின்றார். ஒன்று அடிமைகளின் கடவுள், அடிமைகளின் கடவுள் அவர்களின் விடுதலைக்கான நல்லொளியாக அமைந்துள்ளார். இரண்டு; ஆளும்வர்க்கத்தின் கடவுள். அடிமைகளை அடக்குவதற்கான கருவியாக, ஆளும்வர்க்கத்தின் கடவுள் இருக்கிறார். அவர் சுரண்டலுக்கான வேண்டுதலை ஏற்கும் பரமபிதா, ஆளும்வர்க்கம் தன்னைத் தெய்வத்தன்மை உடையதாகவும், தெய்வத்தின் உரிமையாளனாகவும் காட்டுவது என்பது வரலாற்று உண்மையாகும்.[6]

தமிழ் இலக்கியத்தில் அடிமைகள் பற்றிய பல்வேறு கருத்தாடல்கள் காலந்தோறும் மாறிப்பயின்று வந்துள்ளன. பட்டினப்பாலையில் 'கொண்டி மகளிர்'[7] பற்றிய குறிப்பொன்று வருகிறது. 'போர் செய்து வெற்றியீட்டிய பின்னர் பகை நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட பெண்கள்' என்பது இதன் பொருள். தொல்காப்பியம்;[8] "அடியோர்", "வினைவலர்" என்போர் ஐந்திணைக் காதல் முறைக்கு உரிமை அற்றவர்கள் எனக்கூறுகிறது. அடியோர் என்பது அடிமைகளையும் வினைவலர் என்பது வேலைக்காரர்களையும் குறித்துநிற்கிறது. திருக்குறளில;[9] "ஒருவன் விற்றுக் கோள் தக்கதுடைத்து", "விற்றற்கு உரியர்" என அடிமைகள் விற்கப்பட்டது பற்றி வெளிப்படையாகப் பேசப்படுகிறது. இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் அடிமைகள் பற்றிய குறிப்புக்கள் விரவிவரக் காணலாம். இதுவரை நோக்கிய அடிமை முறை தொடர்பான சமூகவரலாற்று அம்சங்களின் அடிப்படையில், இவ் அடிமை மனோபாவம் பக்தி இலக்கியத்திற்கு எவ்வாறு அடிப்படையாக அமைகிறது என்பதை ஆராயலாம். இதுவரை பார்த்த விடயங்கள் பக்தி என்ற இலக்கியங்களில் அடிமைமுறை பற்றிய நோக்கிற்கான புறவயக்காரணிகளே ஆகும்.

## III

பக்தி அனுபவம் என்பது ஒவ்வொரு தனி நபரிலும் பொதிந்துள்ள ஓர் அருவம் அல்ல. அது ஒட்டுமொத்தமான சமூக உறவுகள், சமூகக் காரணிகள் போன்றவற்றின் அடிப்படையில் உருவாவது என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். "பக்தி என்பது வடசொல். அது 'பஜ்' எனும் அடியாகப் பிறப்பது என்பர். பிரி, வழங்கு, பகிர்ந்துகொள், சேர்ந்து பெற்றுக்கொள், அனுபவி என்ற கருத்துக்களையுடையது."[10] என்ற அடிப்படையில் நோக்கும்போது வளப்பகிர்வின் அடிப்படையிலான சமூகப்பின்னணி இதற்கு அவசியமானதாகும்.[11] பக்தி இலக்கியத்தினூடான ஆள்நிலைப்பட்ட சுயதேடல்களுள் கவிஞர்கள் அதிகம் கண்டடைவது தமது அடிமைநிலைத் தன்மையையே. அவர்கள் தமது ஆள்நிலைப்பட்ட (personal) தேடலில் நிலச்சுவாந்தாருக்கும் தமக்குமிடையில் இருக்கும் 'அடிமை' என்று கூறப்படும் 'ஆள்' (பல்லவர் காலத்தில் ஆள் என்பது அடிமையைக் குறித்துநின்றது) உறவைக் கண்டடைதல், அடிமைகளுக்குரிய பிரச்சினைகளை விமர்சித்தல், விவாதித்தல், அவற்றிலிருந்து விடுதலைக்கான மார்க்கமான பக்தியின் வழி இறைக்கு அடிமையாதல் என்பவற்றைக் கண்டடைந்தனர்.

நாரத பக்தி சூத்திரம்[12] முதலியவை பக்தர்களுக்கிடையில் எவ்வித பேதமும் இல்லை என்றும் உலக இன்பங்களில் மூழ்காது, அவற்றின் நிலையாமையுணர்ந்து பக்தி செய்ய வேண்டும் என்றும் கூறிப் பக்தியை வலியுறுத்துகின்றன. இவற்றின் பின்னணி அரசியல் அடிமைமுறை பேணலும், வளச்சுரண்டலுமே ஆகும். பக்தி இலக்கியங்களில் வரும் பாவனைமுறைகள் பலவற்றிலும் பொருளாதார, கல்வி ரீதியிலான ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன என்பதை மறுக்கமுடியாது. எனவே சமூகத்தில் ஆண்டானை வழிபடும் வழிபாட்டு மனோபாவத்தின் ஒரு விளைச்சல்தான் பக்திஇலக்கியம் அனைத்துக்குமே அடிப்படையான மனோபாவம் எனக் கருதமுடியும். இந்த அடிமைமுறை மனோபாவத்தின் அடிப்படையிலேயே இறைவனைக் குரு, தந்தை, காதலன் முதலிய பல முறைகளிலும் தம்மைச் சீடன், மகன், காதலி முதலிய பல முறைகளிலும் பக்தி இலக்கியக் கவிஞர்கள் வெளிப்படுத்தினர். பக்தி மனோபாவத்தின் அடிப்படையில் உள்ள கவிஞர்கள் தம்மைப் "பக்தி செய் அடியார்"[13] என்று குறிப்பிடுகின்றனர். அவர்கள் தமது மனம்கூட அடிமையானது என்பதைக் கடிமனம் அடிமையாக[14] என வெளிப்படுத்தியுள்ளனர். இலக்கியத்தில் மட்டுமல்லாது தத்துவ நூல்களிலும் இந்த மனோபாவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகிறது. இதற்கு உதாரணமாக பகவத்கீதையில் பக்தியோகம் என்ற ஒரு தனிப்பிரிவு அமைந்துள்ளமையைக் குறிப்பிடலாம்.

இவை பக்தி இலக்கியத் தோற்றுவாய்க்கான அகவயக் காரணிகள். முன்னர் நோக்கிய புறவயத்தன்மைகளும் இந்த அகவயத் தன்மைகளும் சேர்ந்து பக்தி இலக்கியங்களாக உருக்கொள்கின்றன. அதாவது, நாம் நோக்கிய புறக்காரணிகளால் அகக்காரணிகளின் உருவாக்கமும், அதன் மொழிவழி வெளிப்பாடுகளுமே பக்திஇலக்கியங்கள் எனலாம். இதுவரை நோக்கிய அம்சங்களைப் பல்லவர்பாண்டியர்காலப் பக்தி இலக்கியங்களைக் குறிப்பாகச் சைவ பக்தி இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயலாம்.

## IV

பல்லவர்பாண்டியர்காலப் பக்தி இலக்கியங்களில் அடிமைகளைக் குறிக்கும் சொற்களாக அடியவர், அடியார், அடைந்தவர், அன்பர், உற்றவர், கலந்தவர், மீளாஅடிமை, ஆள், சார்ந்தவர், தொண்டர், தொழுவார், நாயர், நம்பினார், நண்ணினார், தொடர்ந்தவர், பக்தர், பணிவார், பாதம் தொழுவார், வந்திப்பார் முதலியன அமைந்துள்ளன. பக்திஇலக்கியங்களில் உள்ள அடியார் பற்றிய குறிப்புக்களும், சித்திரிப்புக்களும் அடிமைமுறையினை நினைவூட்டுவனவாக, அதனைப் பிரதிபலிப்பனவாக உள்ளன. நாயனார் என்பது நாய் + அனார் என்பதன் சேர்க்கையே. 'நாய் போன்றவர்கள்' என்பது இதன் பொருள். இச்சொல் பக்தி இலக்கியங்களில் பரக்கக் காணலாம். சைவ பக்திக் கவிஞர்கள் நாயைவிடவும் தம்மைக் குறைத்து இறை பெருமையை உயர்த்திப்பேசும் மனோபாவம் உடையவர்கள். "நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற்சிறந்த தயாஆன தத்துவனே"[15] என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. அடிமையின் உயிர், உடல், உடைமை எல்லாம் ஆள்பவருக்கே என்பது நாம் முன்னர் நோக்கியது. மாணிக்கவாசகர்

*"அன்றே என்றன் ஆவியும் உடலும்*
*உடைமை எல்லாமும்*
*குன்றே அனையாய் என்னை ஆட்*
*கொண்ட போதே கொண்டிலையோ"[16]*

என்று பாடுகின்றார். சைவத்தில் அடிமைமுறையில் இறைவனைக்காணும் மார்க்கத்தை 'தாசமார்க்கம்' என்று சைவ சித்தாந்த நூல்கள் குறிப்பிடும். 'தாஸ்' என்பது அடிமையைக் குறிக்கும். வேதகால இலக்கியங்களில் தாஸ், தாஸ்கள், தஸ்யுக்கள் என்றெல்லாம் அடிமைகள் குறிப்பிடப்படுகின்றனர். சரியை என்பது, தனியே செயல்களை மட்டும் செய்வதைக் குறிக்கும் சைவ நாற்பாதங்களில் ஒரு நெறியாகும். சரியை நெறியில் நிற்பவர்களைத் 'தாசமார்க்கத்தினர்' எனச் சைவசித்தாந்திகள் கூறுகின்றனர். இருப்பினும், பொதுவாக பக்திக் கவிஞர்கள் எல்லோரிடத்தும் இந்த தாஸமார்க்க மனோபாவம் நிறையவே உண்டு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. "தொழும்படியோம்" "வழியடியோம்" என்றெல்லாம் சைவ பக்திஇலக்கியங்களில் வரும் குறிப்புகள் சமுதாயத்தில் தொடர்ச்சியாகவே பரம்பரை பரம்பரையாக வரும் அடிமைமுறையின் மனப்பாங்குசார் குறிப்புக்களே. இதன் வெளிப்பாடாகவே திருக்கைலாய ஞானபரம்பரை, மூலர் பரம்பரை என்பவற்றை நோக்கமுடிகிறது. திருமூலர் இவ் அடிமைமுறையைப் பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

*"அடியார் அடியார் அடியார் அடிமைக்கு*
*அடியானாய் நல்கிட்டு அடிமையும் பூண்டேன்*
*அடியார் அருளாய் அவனடி கூட*
*அடியான் இவன் என்று அடிமை கொண்டானே"[17]*

இந்த அடிமைமுறையே 'தில்லைவாழ்அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று திருத்தொண்டர் தொகையில் சுந்தரர் தொடரநேர்ந்து, நம்பியாண்டார் நம்பியின்மூலம் திருத்தொண்டர் திருவந்தாதிஆகி சேக்கிழாரின் பெரியபுராணமாக உருவெடுத்தது. பெரியபுராணம் என்பது பக்திசெய் அடிமைகளுக்கான பேரிலக்கிய வடிவமே. குலம், சாதி, பொருள் என்ற ஏற்றத்தாழ்வில் உள்ள தனிமனிதர்களை விடுதலை செய்வது 'பக்தி' என்று கூறி 'பக்தி அடிமைகளாக' அவர்களைச் சித்திரித்துப் பக்திசெய் அடிமைகளின் பரகாவியமாக திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம் விளங்கியது.

பக்திஇலக்கியங்களில் இறைவனை உடையானாகவும், இறைவியை உடையாளாகவும் சித்திரிக்கும் போக்கினைக் காணமுடிகிறது. ஆள்வோருக்குக் கீழுள்ள தொண்டர்களின் மூலமே அடிமைகள் வழிநடத்தப்படுவார்கள். இதனைப் பக்திஇலக்கியம் அப்படியே ஏற்றுக்கொண்டது.

*"உடையான் உன்தன் நடுவிருக்கும்*
*உடையாள் நடுவில் நீயிருத்தி*
*அடியேன் நடுவில் இருவீரும்*
*இருப்பதனால் அடியேன் உன்*
*அடியார் நடுவில் இருக்கு மரு*
*ளைப்புரியாய்...."[18]*

என்று மாணிக்கவாசகர் கூறுவதை இங்கே உதாரணமாகக் கூறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆள்வோர் தம்வளத்தைப் பெருக்கவும் உற்பத்தி செய்யவும் வேளாண் அடிமைகளை வைத்திருந்தமை தமிழக அடிமை வரலாற்றிலிருந்து தெரியவருகிறது. இதன் வெளிப்பாட்டினைப் பக்தி இலக்கியத்தில் காணமுடிகிறது. இதற்கு ஆதாரங்களாக

*" அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத்*
*தொண்ட உழவர் ஆரத்தந்த*
*அண்டத்து அரும்பெறல் மேகன் வாழ்க"*[19] என்றும்

*"மெய்மையாம் உழவைச் செய்து விருப்பெனும் வித்தை வித்திப்*
*பொய்மையாம் களையை வாங்கிப் பொறையெனும் நீரைப்பாய்ச்சித்*
*தம்மையும் நோக்கிக்கண்டு தகவெனும் வேலியிட்டுச்*
*செம்மையுள் நிற்பாராகில் சிவகதி விளையுமன்றே"*[20]

என்றும் வரும் பாடல்களைக் குறிப்பிடலாம். நாவுக்கரசரின் 'உழவாரப்படை' என்பது பக்தி இலக்கியக் கவிஞர்களுள் அல்லது பக்திசெய் அடிமைகளுள் 'வேளாண் அடிமைகளின்' குறியீடாகக் கருதத்தக்கது. வேளாண் அடிமைகள், ஆள்வோர் தங்களுக்கான வசதிகளைச் செய்து தங்களைப் பாதுகாக்க, வாழ்நாள் முழுதும் தாம் ஆள்வோருக்குப் பணிசெய்வதையே நோக்கமாகக் கொண்டிருந்தார்கள். இதனையே

*"தன்கடன் அடியேனையும் தாங்குதல்*
*என்கடன் பணி செய்து கிடப்பதே"*[21]

என்று திருநாவுக்கரசர் பதிவு செய்கிறார். 'பணி செய்து கிடத்தல்' என்பது 'அடிமையாகியே இருத்தல்' என்ற அழுத்தத்தைப் பெற்றுள்ளது.

பக்திக் கவிஞர்கள் ஆளும்வர்க்கத்திற்கு எதிரான குரலை எழுப்பினாலும், அவர்களின் குரல் பக்தி என்ற எல்லையைத் தாண்டவில்லை. மீளா ஆளாய்க் குறுகிய நிலையில் உள்ள பக்தி அடிமைகளின் குரலாகவே அக்குரல் அமைந்திருந்தது.

*"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்*
*நரகத்திலிடர்ப்படோம் நடலையில்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோமல்லோம்*
*இன்பமே யெந்நாளும் துன்பமில்லை*
*தாமார்க்கும் குடியல்லாத்தன்மையான*
*சங்கரன் நற்சங்க வெண் குழையோர் காதிற்*
***கோமாற்கே யாம் என்றும் மீளா ஆளாய்க்***
***கோய்ம்மலர்ச் சேவடியினையே குறுகினோமே'***[22]

என்று குறிப்பிடுவது நோக்கத்தக்கது. இதில் இறைவனின் சேவடியில் மீளா ஆளாய்க் குறுகிய விடுதலைக் குரலையும், இக்குறுகல் தனிமனிதக் குறுகலாக இல்லாமல், 'குறுகினோமே' என்று அடிமைசார் தனது சமூகத்தையும் இணைத்து ஒலிக்கும் குரலையும் அமைந்ததும் அவதானிக்க வேண்டும். இன்னும் அதனை எந்நாளும் துன்பமில்லாத இன்பநிலையாகக் கருதுவதும் குறிப்பிடத்தக்கது.

அடிமைகளுக்குப் பேச்சுரிமை மறுக்கப்பட்டிருந்தது. அவர்களுடைய பேசும் உரிமையைக் கூட ஆளும் வர்க்கம் தனதாக்கிக்கொண்டது. சமயத்தைப் பொறுத்தவரையில் பேச்சும், பேச்சுக்குரிய கருவியாகிய நாக்கும் இறைவனுக்கு அடிமையாகி இருந்தன. "சிவனே எனும் நாவுடையார் நமையுடையார்"[23] என்பதை இங்கு குறிப்பிடலாம். 'நாவுக்கரசு' என்ற பெயர் விளக்கத்தை அமைத்துக் கொண்ட வகையில் நா நமக்கு அரசு என நிறுத்தும் பணியில் ஈடுபடுதல் மறுமாற்றத் திருத்தாண்டகம் வகுத்தமைத்து ஏற்கப்பெற்ற கொள்கையாயிற்று"[24] என்று குறிப்பிடுவது நா பேசும்விடயங்கள் இறை பொருளும், புகழுமே என்பதை வலியுறுத்துவதாக அமைகின்றது. அடிமைகளின் பேச்சு உரிமை சமய வட்டத்திற்குள் எவ்வாறு அடங்கிப்போயிற்று என்பதற்கு நமச்சிவாயத் திருப்பதிகம் நல்ல எடுத்துக்காட்டாகும்.

அடிமைகள் உடலில், ஆள்வோர் தமது அடையாளக் குறிகளைப் பொறிப்பதென்பது சமூகத்தில் நிலவிய ஒரு நடைமுறை. இதனைப் பக்தி இலக்கியத்திலும் காணமுடியும். "மூவிலைச் சூலம் என் மேல் பொறி"[25] என்று சிவனின் அடையாளமாகிய திரிசூலம் தம்மேல் பொறிக்கப்படவேண்டும் என்று திருநாவுக்கரசர் வேண்டுகிறார். சின்னம் பொறித்து அடிமையை உடைமையாக்கும் மரபைச் சைவம் 'தொடக்கு நீக்கித் துய்மை பெறுதல்' என்ற அடிப்படையில் ஏற்றுக்கொண்டது.

வறுமை வந்தபோது "வாசி தீரவே காசு நல்குவீர்"[26] என்று குறிப்பிடுவதும், "பண்டாரத்தே எனக்குப் பணித்தருளவேண்டும் அணியாரூர் புகப்பெய்த அருநிதியமதனில் தோற்றமிகு முக்கூறில் ஒரு கூறு வேண்டும்"[27] என்று குறிப்பிடுவதும் கூர்ந்து நோக்கத்தக்கவை. அடிமைக்கு உணவும் பணக்கூலியும் கொடுக்கும் நிலையை இது காட்டுவதோடமையாது, கோயிலின் வருமானத்தில் பங்குகேட்கும் நிலையையும் காட்டிநிற்கின்றது. சுந்தரர் முன்வைக்கின்ற பொருள்சார் கோரிக்கை தொடர்பான பாடல்களில் குண்டையூரில் கிடைத்த நெல்லைப் பரவையாரின் இல்லத்திற்குக் கொண்டுசேர்க்க தூக்கடிமைகளைத் தருமாறு இறைவனிடம் வேண்டுவதைக்காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேத காலத்தில் ப்ருஸ்த்ர என்பவர் இந்திரனிடம் "எனக்கு நூறு கழுதைகளும், நூறு செம்மறியாடுகளும், நூறு அடிமைகளும் தாருங்கள்" என்று வேண்டுகின்றார்.[28] அடிமைகளை வேண்டிப்பெற்றுக்கொள்வது பண்டைச்சமூகத்தில் இயல்பாக இருந்தது. சுந்தரரும் "ஆளில்லை எம்பெருமான் அவை அட்டித்தரப்பணியேல்"[29] என்று வேண்டுகிறார்.

பக்திக்கு முன் குலம், சாதி வேறுபாடுகளில்லை. இறைவனைப் பக்தி செய்யும் அடியவர்கள் வேறுபாடற்று ஒன்றிணைபவர்கள் என்ற தன்மையும் பக்தி இலக்கியத்தில் காணப்படுகின்றது.

*"அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழு நோயராய்*
*ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்*
*கங்கைவார் சடைக் கரந்தார்க் கன்பராகில்*
*அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"[30]*

இதில் பக்தி நெறியில் ஒன்றுபடாதவர்களுக்கு, குலஅடையாளப் பேணுகையிருப்பது தெளிவாகின்றது.

அடிமைகள் நிஜவுலகில் ஆளும் உரிமை அற்றவர்கள் என்பது ஆள்வோர்கள் விதித்த விதி. எனவேதான் பக்தி இலக்கியங்கள் பேசும் பக்திசெய் அடிமைகள் தேவலோகத்தில் அரசாள்பராக விளங்குகின்றனர். "சொல்மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே"[31] என்பதை இங்கு குறிப்பிடலாம். அடிமைகளின் பிறப்பு என்பது இறைவனுடைய திருவுருவத்தைக்கண்டு ஆனந்தமடைவதற்கான பிறப்பாகவே அடிமைச்சமூகத்தில் கருதப்பட்டது. இதனையே "மனிதப்பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"[32] என்பது குறித்துநிற்கின்றது.

அடிமைகளுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனைகள்பற்றி மனுதர்ம சாத்திரமும் அர்த்த சாத்திரமும் குறிப்பிடுகின்றன. "மனைவி, மகன், அடிமை, பணியாள், தம்பி ஆகியோர் குற்றம் புரிந்தால் கயிற்றாலோ பிரம்பாலோ அடிக்கவேண்டும். உடம்பின் பின்புறத்தில்தான் அடிக்கலாம். தலையில் அடிக்கக் கூடாது"[33] என்று மனு நூல் கூறுகிறது. வைகையாறு பெருக்கெடுத்தபோது செம்மனச்செல்விக்காகக் கூலியாளாக வந்து, அணைகட்டுவதற்காக மண் சுமந்து, கூலியாகப் பிட்டையுண்டு உறங்கிய சிவனின் முதுகில், அரசன் பிரம்பால் அடிக்க அவ்அடி எல்லோர் முதுகிலும் பட்டது, என்ற தொன்மக்கதை மனு கூறிய, அடிமைகளுக்குத் தண்டனை வழங்கும் விதியாகிய முதுகில் அடித்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டு கட்டுடைத்துப் பார்க்கப்பட வேண்டியது. இத் தொன்மத்தில் இறைவனைவிட அரசனின் அடக்குமுறை சார்ந்த அதிகாரமே அதிகம் வெளிப்படுகின்றது. இத் தொன்மம் அரச வம்சத்திற்குச் சார்பானதாக அமைந்திருப்பதால், இத்தொன்ம உருவாக்கத்தில் அரச வம்சத்தின் செல்வாக்கு அதிகம் இருந்திருக்கும் எனக் கருத இடமுண்டு. இந்த அடிப்படையிலேயே இவ் அம்சம் தொடர்பான பக்திக்கவிதைகளையும் நோக்குதல் வேண்டும்.

*"மண்சுமந்து கூலி கொண்டு*
*அக்கோவால் மொத்துண்டு*
*புண்சுமந்த பொன்மேனி*
*பாடுதுங்காண் அம்மானாய்"[34]*

என்று மாணிக்கவாசகர் பாடுவது, மேற்குறிப்பிட்ட விடயத்தின் அடிப்படையிலேயே நோக்கத்தக்கது.

அடிமைப் பெண்கள் பாலியல் ரீதியாகவும் சுரண்டப்பட்டார்கள் என்பதை அடிமை வரலாறு எமக்கு எடுத்துரைக்கின்றது. பக்தி என்பதற்குள் இன்னொரு பக்கமாகப் பெண்களின் மறுதலிப்பும் இடம்பெற்றிருந்தது. ஆண்டாள் "ஊனுடை ஆழி சங்கு உத்தமர்க்கு என்று உன்னித்து எழுந்த என் தடமுலைகள் மானிடர்க்கு என்று பேச்சுப்படின் வாழ்கிலேன்"[35] என்றும், மாணிக்கவாசகர் "அன்னவரே எம்கணவராவார் அவருகந்து சொன்னபரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்"[36] என்றும் குறிப்பிடுவதெல்லாம் சமூகத்தில் அடிமைப் பெண்கள் மீதான ஆள்வோரின் பாலியல் சுரண்டல்களின் சமயம்சார் வெளிப்பாடுகளே. இவ்விடத்தில் முக்கியமான ஒரு வினாவை எழுப்புதல் அவசியமானதாகும். தொல்காப்பியத்தில் அடிமைகளுக்கு அன்பினைந்திணைக் காதல் மறுக்கப்பட்டது. அவர்களுக்குக் கைக்கிளையும், பெருந்திணையுமே உரியனவாகக் கற்பிக்கப்பட்டன. மானிடக்காதலைவிடத் தெய்வீகக்காதலை மகத்தானதாக மதித்த பக்தியும், பக்தி இலக்கியமும் மானிடக்காதலினுள்கூட உயர்வாக வைத்துப் பேசமுடியாத அடிமைகளை எவ்வாறு புனிதமாகிய தெய்வீகக்காதல் என்ற அடிப்படையில் அதற்குள் ஏற்றுக்கொண்டன? இதுவே அவ்வினாவாகும். இதற்குத் தெய்வீகக்காதல் என்ற போர்வையிலும் அடிமைமுறையே அமுலப்படுத்தப்பட்டது என்பதை நாம் மனங்கொள்ளல் வேண்டும். தமிழ் நாட்டில் அடிமைகளைத் தமக்கு உடைமைகளாக வைத்திருப்பதற்காக ஆள்ஓலை எழுதும் வழக்கம் இருந்தது. சுந்தரரின் வரலாற்றில் வரும் அடிமை ஓலை தொடர்பான பிரச்சினையை இந்த அடிப்படையிலேதான் நாம் அணுக வேண்டும். மனுதர்ம சாஸ்திரம் அந்தணர்களுக்கு அந்தணர்கள் அடிமையாவதில்லை என்று கூறுகின்றது. ஆனால் தமிழகத்தில் அந்தணர்களுக்கு இடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அவர்களை வெவ்வேறு குழுக்களாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் அவர்களுக்கிடையிலும் பொருளாதார அடிப்படையில் அடிமை பேணும் முறை காணப்பட்டதைத் தமிழகச் சமூகவரலாற்றில் காணமுடிகிறது. அந்தணர்கள் அந்தணர்களுக்கு அடிமையாதல் தகுமா? தகாததா? என்ற விவாதத்தைச் சேக்கிழார் திருத்தொண்டர் புராணத்தில் நிகழ்த்திக்காட்டுகின்றார்.

*"ஆசில் அந்தணர்கள் வேறோர் அந்தணர்க்கு அடிமையாதல்*
*பேச இன்று உன்னைக் கேட்டோம் பித்தனோ மறையோன்"*[37]

என்றுகூறி அடிமை ஓலையைக் காட்டு என்று சுந்தரர் கூற, கிழவேதியர் ஓலையைக்காட்ட, சுந்தரர் அதைவாங்கிப் படித்தார், கிழித்தார், எறிந்தார். பின்னர் கிழவேதியர்

*"மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை*
*மாட்சியில் காட்ட வைத்தேன்"*[38] என்று கூறுகின்றார்.

இதிலிருந்து அடிமை ஓலை அல்லது ஆள்ஓலை எழுதும் சமூகச்செயற்பாடும் அது தொடர்பான பிரச்சினைகளும் பக்தி இலக்கியத்தில் எவ்வாறு பதிவாகி உள்ளன என்பதை அறியமுடிகின்றது. சுந்தரர் தேவாரத்திலும் *"வெண்ணெய் நல்லூரில் அற்புதப் பழ ஆவணங்காட்டி அடியனாவெனை ஆளது கொண்ட நற்பதத்தை"*[39] என வருவது குறிப்பிடத்தக்கது.

பழந்தமிழ்ப் பக்தி இலக்கியத்தில் மட்டுமல்லாது, நவீன பக்தி இலக்கியத்திலும் அடிமைமுறையின் அம்சங்களையும், மனப்பாங்குகளையும் காணமுடிகின்றது. மானுடம் தழுவிய விடுதலையை அவாவிநின்ற யுகக்கவிஞன் பாரதியின் தோத்திரப் பாடல்களிலும், ஞானப் பாடல்களிலும்கூட இவ் அடிமை மனோபாவம் வெளிப்பட்டு நிற்பதைக் காணமுடிகின்றது. பாரதியின் கவிதைகள் மட்டுமல்லாது ஈழத்துத் தமிழ் விடுதலைக்கவியாகிய புதுவை இரத்தினதுரையின் பக்திப் பாடல்களும்கூட இத்தன்மைக்கு விதிவிலக்கல்ல.

அடிமை முறைசார் இலக்கியமாகப் பக்தி இலக்கியம் அமையினும், அதுதரும் அழகியல் அனுபவம் அனந்தம். மீளா அடிமையாகிய அடியவர்களின் மூளாத்தீபோல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடிய அனுபவத்தையும், கரமலர் மொட்டித்து இருதயம் மலர்ந்த அவர்களின் நிலையையும் பக்தி இலக்கியம் எங்கும் பரக்கக் காணலாம்.

## அடிக்குறிப்புகள்

01. விரிவுக்குப் பார்க்க
Chanana, D.R.(1960)
Slavery in ancient as depicted in Pali and Sanskrit texts
Deveraj Chanana (1990)
Slavery in ancient india
Manickam, S (1982)
Slavery in the tamil country
Wickramasinghe,Chandima
Sri Lankan slavery from known to unknown
சிவசுப்பிரமணியன், ஆ, (2005) தமிழகத்தில் அடிமை முறை
02. சிவசுப்பிரமணியன்,ஆ.,மேலது.ப .87
03. அம்பேத்கர் (1999)
எது மிகவும் கொடுமையானது. அடிமைத்தனமா? தீண்டாமையா?
அம்பேத்கர் நூல் தொகுப்பு, தொகுப்பு. 9. ப.27
"...தீண்டத்தகாதவர் என்றால் எப்போதுமே தீண்டாதவர்தான். மற்றொரு வேறுபாடு என்னவென்றால் தீண்டாமை மறைமுகமான அடிமை முறையாகும். எனவே அது மிக மோசமான அடிமை முறையாகும். ஒரு மனிதனின் சுதந்திரத்தை நேரடியாகப் பறித்துக் கொள்வது அதைவிட மேலானது..."
04. சிவசுப்பிரமணியன், ஆ.,மேலது. ப. 96
05. விரிவுக்குப் பார்க்க
கோசாம்பி, டி.டி, (2005)
மாயையும்எதார்த்தமும்.(மொ.பெ)
கைலாசபதி.க.(1999)
பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்,
பேரரசும்பெருந்தத்துவமும்(கட்டுரை)
06. விரிவுக்கு: தாம்சன், ஜார்ஜ், (2005) மனித சாரம் (மொ.பெ)
தாம்சன், ஜார்ஜ், (2005) சமயம் பற்றி (மொ.பெ)
பரமசிவன், தொ. (2005)
சமயங்களின் அரசியல்.
07. பட்டினப்பாலை-246
08. தொல். அகத்திணையியல். 23
09. திருக்குறள் 220, 1080
10. சிவத்தம்பி, கா.(2000)
மதமும்கவிதையும்-தமிழ்அனுபவம், கொழும்பு: தமிழ்ச் சங்கம். ப.14
11. விரிவுக்குப் பார்க்க
கைலாசபதி.க.(1999)
பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்-
நாடும் நாயன்மாரும் (கட்டுரை)
12. எடுத்துக்காட்டு:-
நாரத பக்தி சூத்திரம் -72
"பக்தர்களுக்கிடையில் ஜாதி கல்வி, உடல் அமைப்பு, குலம், செல்வம்,தொழில் தலியவைகளை முன்னிட்டும் பேதமில்லை"
நாரத பக்தி சூத்திரம்- 77
"உலக சம்பந்தமான சுகம் துக்கம், இச்சை, லாபம் முதலியன ஒழிந்துபோம் காலமொன்று வருமென்று எதிர்பார்த்துக்கொண்டு அரை வினாடியையும்கூட வீண்போக்காது பக்தி பேணவேண்டும்"
13. திருவாசகம்-கீர்த்தித் திருவகவல்,-119
14. திருமுறை 4:76:4
15. திருவாசகம்-சிவபுராணம்-60.
16. திருவாசகம்- குழைத்த பத்து- 7
17. திருமந்திரம்-2578
18. திருவாசகம்
19. திருவாசகம்-திருவண்டப்பகுதி -93-95.
20. திருமுறை- 4:76:2
21. திருமுறை- 4
22. திருமுறை- 6:98:1.
23. திருமுறை 4-
மறுமாற்றுத் திருத்தாண்டகப் பதிகம்.
24. இரத்தினசபாபதி வை.(1988)
திருநாவுக்கரசர்-ஓர் ஆய்வு, இரண்டாம் பகுதி, சென்னை: சென்னைப்பல்கலைக்கழகம். ப.157.
25. திருமுறை- 4:109-1.
26. சம்பந்தர் 92-1
27. சுந்தரர் 7:46:2.
28. ராகுலசாங்கிருத்தியாயன் (2004)
ரிக் வேதகால ஆரியர்கள்.
29. திருமுறை- 7
30. திருமுறை 6:95:11.
31. திருமுறை 2:85:11
32. திருமுறை 4:81:4
33. மனுதர்ம சாஸ்த்திரம் (2003)
திருலோக சீதாராம் (மொ.பெ)
34. திருவாசகம்- திருஎம்பாவை- 8
35. நாச்சியார் திருமொழி.
36. திருவாசகம்-திருஎம்பாவை 9.
37. திருத்தொண்டர்புராணம்-
தடுத்தாட்கொண்ட புராணம் 40.
38. திருத்தொண்டர் புராணம்
தடுத்தாட்கொண்ட புராணம் 56
39. திருமுறை 7:6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயத்தின் சமூகவியல் - Sociology of Religion

**சிறிஸ்கந்தராசா சிவகாந்தன்,**
**உதவி விரிவுரையாளர்,**
**சமூகவியல்துறை,**
**கலைப்பீடம்.**

சமூகவியலாளர்களைப் பொறுத்தவரையில், சமயமானது சமூகத்தில் எத்தகைய நடிபங்கினை வகிக்கின்றது என்பதிலேயே கவனஞ் செலுத்துகின்றனர். ஒழுங்குபடுத்தப்பட்ட மதத்தின் சமய நம்பிக்கைகள், பழக்கங்கள், மற்றும் சமய நிறுவனங்களானவை ஏழுவகையான சமூகத் தொழிற்பாடுகளை ஆற்றுகின்றன. சமூகவியல் விவாதங்களிற்கு மத்தியில், சமயத்தின் முக்கிய நடிபங்கினைக் கீழ்வருமாறு காட்டமுடியும்:

1. சமயமானது சமூகத்தின் அங்கத்தவர்களை ஒன்றிணைப்பதில் தனது தொழிற்பாட்டினை மேற்கொள்கின்றது. அதாவது சமூக ஐக்கியப்பாட்டினை (Social Solidarity) ஏற்படுத்துவதில் சமயத்தின் நடிபங்கு மிகவும் இன்றியமையாதது. உதாரணமாக தைப்பொங்கல், தீபாவளி, சித்திரை வருடப்பிறப்பு, நவராத்திரி மற்றும் சமயச்சடங்குகள் இடம்பெறும் காலங்களில் இந்துக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டாட்டங்களில் ஈடுபடுகின்றதனைக் காணமுடிகின்றது.
2. சமயமானது மக்களுடைய அடையாளத்தைப் (Identity) பாதுகாப்பதற்கு உதவுகின்றது. உதாரணமாக சமூகமானது, இந்து, பௌத்தன் மற்றும் கிறிஸ்தவன் போன்ற சமய அடையாளத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக இனங்காணலுக்கு உதவுகின்றது. மேலும், ஒருவரது இன அடையாளத்தைத் (Ethnic Identity) தீர்மானிப்பதில் சமயம் முக்கிய பங்கு வகிக்கின்றது.
3. தனிநபர்களைச் சமயமானது, அதனது ஒழுக்க விதிகள், அறக்கோட்பாடுகள் மற்றும் நீதி பற்றிய கருத்துக்கள் மூலமாக சமூகக்கட்டுப்பாடு (Social Control) எனும் தொழிற்பாட்டினூடாகக் கட்டுப்படுத்துகின்றது.
4. சனநாயக முறையில் (Democracy) சமயமானது மக்களின் பங்கேற்பு மற்றும் அரசியல் தலைவர்களின் முறையான நடத்தை என்பனவற்றை வலியுறுத்துகின்றது.
5. சமயமானது, சமூகம் மற்றும் மானிட வாழ்வு தொடர்பில் எழுகின்ற பிரதான வினாக்களுக்கு விடையளிக்கின்றது. உதாரணமாக, மனிதனின் கடமைகள் எவை, மனித வாழ்வின் அர்த்தம் என்ன, மற்றும் மனித வாழ்வின் நிச்சயமற்ற தன்மை போன்ற வினாக்களுக்கு விடைபகர்வதுடன் சமூக வாழ்வுக்குச் சிறந்த ஒரு பொருள் அர்த்தத்தைக் கொடுக்கின்றது.
6. சமயமானது கருத்தியல் வாதம் சார்ந்த (Ideological) தொழிற்பாட்டை ஆற்றுகின்றது. அதாவது, சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு சமூக வகைப்பாடுகளைப் (Social Patterns) பேணுவதற்கு உதவுகின்றது.
7. சமயமானது மக்கள் அனைவரையும் ஒன்றுதிரட்டி சமூக மாற்றங்களை ஏற்படுத்தவும் சவால்களை எதிர்கொள்ளவும் மற்றும் கடுமையான பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கும் தேவையான ஆற்றல்களைச் சமூகத்திற்கு அளிக்கின்றது.

சமயமானது சமூக நிறுவனங்களில் ஒன்றாகக் காணப்படுகின்றது. சமூகவியலாளர்கள், கடவுள் இருக்கின்றாரா, அல்லது இல்லையா, என்பதற்கு அதிகளவு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. மாறாக அதிகளவில், மக்கள் மத்தியில் காணப்படுகின்ற சமய நம்பிக்கைகளாலும் சமயம்சார்ந்த பழக்கவழக்கங்களாலும் சமூகத்தில் ஏற்படுகின்ற சமூக விளைவுகள் (Social Effects) பற்றியும் சமூக முடிவுகள் அல்லது பலாபலன்கள் (Social Consequences) பற்றியுமே அதிகளவில் கவனஞ்செலுத்துகின்றனர். சமயம் தொடர்பான கற்கைநெறிகள் சமூகவியலுக்கு புதிதான ஒரு விடயமல்ல என்பதுடன் முற்றுமுழுதாக ஆரம்பகால சமூகவியல், மானிடவியல் கற்கை நெறிகளில் சமயத்திற்கு அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. ஆரம்பகால சமூகவியலானது நம்பிக்கை பற்றிய சமூகவியலாகவே (Sociology Of Beliefs) காணப்பட்டிருந்தது. சமூக வரலாற்றை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, பிற்பட்ட காலத்திலேயே விஞ்ஞான விருத்தி மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றம் காரணமாக சமயத்தின்மீதான மக்களின் நம்பிக்கைகள் குறைவடையத் தொடங்கின ஆனாலும்கூட சமூகத்தில் சமயம் பல்வேறு வழிமுறைகளின் ஊடாகத் தனது செல்வாக்கினைச் செலுத்தி வருகின்றது. சமூகத்தின் நிலைத்திருக்கும் தன்மையினைப் பேணுவதற்கு சமயம் சார்ந்த பொதுவான ஒழுக்க விதிகள் மிகவும் அவசியமானவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியலின் தந்தையான 'ஒகஸ்ட் கொம்ற்' (Auguste Comte) இனுடைய இறையியல் நிலை பற்றிய (The Theological stage) விளக்கத்தில், இறையியல் நிலையில் சமூகம் மற்றும் சமூக நிகழ்வுகளானவை, மாயாஜாலம் (Magic), சமயநிகழ்வுகள் மற்றும் மூட நம்பிக்கைகள் ஆகியவற்றின் மூலமாகவே அறிந்துகொள்ளப்பட்டிருந்தது. 'கொம்ற்' மனிதாபிமானத்தின் சமயத்தை (The Religion Of Humanity) நிலைநாட்ட விரும்பினார்.

சமயம் என்றால் என்ன, கடவுள் என்பவர் யார், மற்றும் சமூகத்தில் சமயத்தின் நடிபங்கு என்ன, ஆகிய விவாதத்துக்குரிய வினாக்களுக்கு விடைகாண்பது மிகவும் கடினமான விடயமாகும். சமயம் தொடர்பான நம்பிக்கைகளும், சடங்கு சம்பிரதாய முறைகளும் சமூகத்திற்குச் சமூகம் வேறுபட்டுக் காணப்படுகின்றமையும், வேறுபட்ட மதங்களின் தனித்துவமான சமயக் கோட்பாடுகள் அடிப்படையில் ஒரு பொதுமையைக் கொண்டிராமையே இதற்குரிய பிரதான காரணமாகும். பொதுவாகப் பல்வேறு மதங்களும் அடிப்படையில் அற மார்க்கங்களையும், ஒழுக்க விதிகளையுமே போதிக்கின்றன. சமூகமானது ஒப்பீட்டளவில் விலகல் நடத்தையினையும் (Deviant Behaviour) குற்றங்களினையும் (Crimes) குறைப்பதில் சமயத்தின் நடிபங்கு (The Role of Religion) மிகவும் இன்றியமையாதது. உதாரணமாக இந்துமதத்தில் வலியுறுத்திச் சொல்லப்படுகின்ற 'பஞ்சமாபாதகம்' தவிர்க்கப்படல் வேண்டும் என்பதும் இதன்பாற்பட்டதாகும். இதைவிட இந்துமதத்தில் வலியுறுத்தப்படுகின்ற கன்மம் - மறுபிறப்புக் கோட்பாடுகள், சொர்க்கம் (Heaven), மற்றும் நரகம் (Hell) பற்றிய நம்பிக்கைகள் நல்ல நடத்தைகள், தீய செயற்பாடுகள் என்பவற்றினுடைய விளைவுகளைச் சுட்டிக் காட்டுகின்றன.

சமயமானது, ஒரு தனிமனிதனுடையதும் அவன் சார்ந்த சமூகத்தினதும் அடையாளத்தைக் (Identity) கொடுக்கின்றது. சமய அடையாளமானது (Religious Identity) சமூக இனங்காணலிற்கு (Social Recognition) மிகவும் அவசியமானது. உதாரணமாக, பொது நோக்கில் தமிழன் என்றால் 'இந்து' என்றும், சிங்களவன் என்றால் 'பௌத்தன்' என்றும் அடையாளப்படுத்துகின்ற பழக்கத்தை இலங்கை மக்களிடையே காணக்கூடியதாகவுள்ளது. கைத்தொழில்மயமாதல் (Industrialization), புலனறிவாதம் (Positivism), பகுத்தறிவுக் கொள்கை (Rational Principle), நவீனத்துவம் (Modernism), உலகமயமாதல் (Globalization) மற்றும் நவீன தொழில்நுட்பம் (Modern Technology) போன்ற பிரதான காரணிகள் சமயத்தினுடைய செல்வாக்கு மற்றும் சமயத்தின்மீதான நம்பகத் தன்மையினை (Reliability of Religion) வீழ்ச்சியடையச் செய்துள்ளன. சமயம் தொடர்பான தனித்த ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணம் இல்லையாதலினால் சமயம் தொடர்பான காரசாரமான விவாதங்கள் சமூகவியலில் அதிகரித்துச் செல்வதனைக் காணக்கூடியதாக உள்ளது. சமயத்தின் காரணமாக வன்முறைகளும் இடம்பெற்று வருகின்றது. எடுத்துக்காட்டாக இந்தியாவில் இடம்பெற்ற 'இராமர் ஆலயம் - பாபர் மசூதி' தொடர்பிலான வன்முறையையும் ஏனைய வன்முறைகளையும் குறிப்பிட்டுக் கூறலாம்.

சமயம் பற்றி நன்கு விளங்கிக் கொள்வதற்குச் சமயத்திற்கும் ஏனைய சமூக நிறுவனங்களான குடும்பம், கல்வி நிறுவனங்கள், பொருளாதாரம் மற்றும் அரசியல் என்பனவற்றிற்கு இடையிலான இடைவினை (Interaction) பற்றி அறிந்து கொள்வது மிகவும் அவசியமானதாகும். சமூகமயமாதல் (Socialization) செயல்முறையில் சமயத்தின் பங்களிப்பு இருப்பதனை நாம் மறந்து விடமுடியாது.

பிரேசரின் (Bracer) கருத்துப்படி, 'சமயம் என்பது மனித வாழ்வு மற்றும் அதன் இயல்பின் தன்மையினைக் கட்டுப்படுத்துவதாகவும் உள்ள அதேவேளை மனிதனை நெறிப்படுத்துவதாக மக்களால் நம்பப்படுகின்ற மனிதனிற்கு அப்பாற்பட்ட சக்திகளின் மீதான நம்பிக்கையேயாகும்' என்று விளக்குகின்றார்.

பெரும்பாலான உலக மதங்கள் தங்களிற்கே உரித்தான புனித நூல்களையும் (Sacred Texts), சமயச் சின்னங்களையும் மற்றும் குறியீடுகளையும் கொண்டுள்ளன. இந்த வகையில் வேதம், உபநிடதங்கள், ஆகமங்கள் மற்றும் பகவத் கீதை ஆகியவை இந்துமதத்தின் புனித நூல்களாகவும் கிறிஸ்தவத்தின் புனித நூலாக பைபிளும் (Bible), இஸ்லாத்தின் புனித நூலாக குர்ஆனும் (Qu'ran) விளங்குகின்றன.

செயற்பாட்டுவாதக் கோட்பாட்டாளர்கள் (Functionalist Theorists) குறிப்பாக எமில் டுர்க்கைம் (Emile Durkheim) மற்றும் மலினொஸ்கி (Malinowski) போன்றோர்களின் கருத்துப்படி சமயமானது சமூகக் குழுக்களை ஒழுக்கம் நிறைந்த சமூகத்தில் (Moral Community) இணைக்கின்றது. ரால்கொட் பார்சன்ஸ் (Tatcott Parsons) என்ற சமூகவியலாளரின் கருத்துப்படி சமயமானது சமூகமயமாதல் செயல்முறையின் ஒரு முகவராகத் (Agent of Socialization) தொழிற்படுகின்றது. அதாவது சமூகத்தினுடைய அங்கத்தவர்கள் பகிரப்பட்ட நியமங்களையும் (Norms), விழுமியங்களையும் (Values) உள்வாங்குவதற்குச் சமயம் பங்களிப்புச் செய்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியலாளர்களினைப் பொறுத்தவரையில் சமயமானது எப்பொழுதும் சமூகத்தின் பிரதான பகுதியாக விளங்குகின்றது. சமூகவியலாளர்கள் எப்பொழுதும் குறிப்பிட்ட சமய நம்பிக்கைகள் சரி என்றோ அல்லது பிழை என்றோ வலியுறுத்துவதில்லை, மாறாக இது சமயத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளவர்களையும் சமய நம்பிக்கை இல்லாதவர்களையும் பொறுத்ததாகும் என்பதே இவர்களது கருத்தாகும். கடவுளை நம்புதல் என்பது சமயத்தினை வரையறை செய்வதன் ஆரம்ப நிலையாகக் காணப்படுகின்றது.

சமயத்தினைப்பற்றி முறையான விதத்தில் ஆய்வு செய்த முதலாவது சமூகவியலாளராக 'எமில் டுர்க்கைம்' விளங்குகின்றார். இவரது கருத்துப்படி சமயமானது 'புனிதமானது எனும் அடிப்படையில் தவிர்க்கப்பட்டவையாகக் கருதப்படுகின்ற புனிதமான பொருட்களுடன் தொடர்புடைய பழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளின் ஒழுங்குபடுத்தப்பட்ட அமைப்பு முறைமை ஆகும்'. (Durkheim, 1945). மேலும் சமயமானது வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைக் கொடுக்கின்ற அதேவேளை மனிதனின் புலன்களிற்கு அப்பாற்பட்டதாகக் காணப்படுகின்றது. 'புனிதம்' என்பது மனிதர்களால் தங்களது சமூக வாழ்விற்காகத் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றாக விளங்குகின்றது. எப்பொழுது ஒரு கடவுள் ஒரு சமுதாயத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றாரோ அங்கே கடவுளை வழிபடுவது என்பது சமுதாயத்தை வழிபாடு செய்வதற்கு ஒப்பானது. சமயமானது வாழ்க்கையின் நோக்கத்தை விளக்குவதற்கு உதவிசெய்கின்றது.

மற்றொரு சமூகவியலாளரான மக்ஸ் வெபர் (Max Weber) சமயத்தினுடைய சமூக அம்சங்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது 'சமயமானது பண்பாட்டு நோக்கில் பார்க்கும்பொழுது ஒரு அறம் (Ethic) சார்ந்தது' எனக் குறிப்பிடுகின்றார். மேலும், சமயமானது மக்கள் தங்களுடைய வாழ்வில் என்ன செய்யவேண்டும் என்பதனைத் தீர்மானிக்கின்ற முக்கியமான சக்தியாக் காணப்படுகின்றது. **மக்ஸ் வெபர்**, இந்துமதம், பௌத்தம், புரட்டஸ்தாந்து மற்றும் புராதன யூதம் தொடர்பான சமயங்களின் தொடர்பில் விரிவான கற்கைகளை மேற்கொண்டுள்ளார். மேலும் பொருளாதார அபிவிருத்தியானது சமய நம்பிக்கைகளிலும் மற்றும் சமயப் பழக்கவழக்கங்களிலும் தங்கியிருப்பதாக இவர் கருதினார்.

இன்று பெருமளவிலான மக்கள் 'ஒழுங்குபடுத்தப்பட்ட மதத்தின்' (Organized Religion) பகுதியாகக் காணப்படுகின்றனர். சமூக உறுதிப்பாட்டைப் (Social Solidarity) பேணுவது என்பது சமயத்தின் முதன்மைச் சமூகத்தொழிற்பாடாகக் காணப்படுகின்றது.

மறுபுறத்தில் சமயமானது சில எதிர்மறையான அம்சங்களையும் கொண்டுள்ளது. கார்ல் மார்க்ஸ் (Karl Marx), சமயத்தில் எதிர்மறையான அம்சங்கள் காணப்படுவதனை வலியுறுத்திக் கூறியுள்ளார். இவர் சமயத்தின்மீதான தனது விமர்சனத்தைத் தனது மொழியில் 'மதமானது மக்களின் ஒருவகைப் போதைப் பொருள்' (Opium of the People) எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றினைவிட மதமானது சிந்தனை, பேச்சு மற்றும் செயல்கள் என்பனவற்றின் சுதந்திரத்தை மட்டுப்படுத்துவதாக விமர்சிக்கப்படுகின்றது. மற்றும் இன்றைய நவீன சமூகத்தில் தீவிரப் போக்குடைய அடிப்படை மதவாத சிந்தனைகள் பல்வேறு முரண்பாடுகளையும் சமூகத்தில் தோற்றுவித்துள்ளன என்பதனையும் நாம் மறந்துவிட முடியாது.

**உசாத்துணை நூற் பட்டியல்.**

Aldridge, Alan (2000). *Religion in the contemporary world*: A Sociological Introduction. Malden, MA: Blackwell.
Bainbridge, William Sims (1997), *The Sociology of Religious Movements*, New York: Routledge.
Durkheim, Emile (1915). *The Elementary Forms of Religious Life*. 1954 ed. Trans. Joseph Swain. New York: Free Press.
Joel M. Charon (2004), *Ten Questions: A Socioligical Perspective*. United States: Thomson Wadsworth.
Ward, Keith (2000). *Religion and Community*. New York: Oxford University Press.

ஒரு விஷயம் முடியும்வரை முடிந்ததாக ஆகாது.
- யோகி பெர்ரா -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதகால மரபு : ஒரு மெய்யியல் நோக்கு

**முபிஸால் அபூபக்கர்,**
**விரிவுரையாளர்,**
**மெய்யியல், உளவியல் துறை,**
**கலைப்பீடம்.**

## 1. வேதங்கள் ஒரு நோக்கு

ஆன்மீக தத்துவ சாத்திரங்களில் முதலாவதும், மிகப் பழைமையானதும் வேதங்களாகும். வேதங்களைப் புறக்கணித்து எந்த ஆன்மீக சக்தியினாலும் நிலைத்திருக்க முடியாது. ஆன்மீக வழிக்கான எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும்; அவை வேதங்களை அடிப்படையாகக் கொண்டுதான் அமைந்திருக்கின்றன. இதுவரை தோன்றிய எத்தனையோ ஆன்மீகப் பெரியார்கள் செய்த நல்லுபதேசங்களின் அடிப்படை ஆதார சுருதியும் வேதங்களாகவே இருந்திருக்கின்றன.

'வித்' என்ற வடமொழிச் சொல்லில் இருந்துதான் 'வேதம்' என்ற சொல் தோன்றியது. 'வித்' என்பதற்கு வடமொழியில் 'அறிதல்' என்பது பொருளாகும். இந்த வகையில் வேதமும், அதன் இலக்கியமும் மிக அகன்ற பரப்பினை உடையது. இதனாலேயே வேதங்கள் எனப்படுபவை அறிவு நூல்கள் என அர்த்தப்படுகின்றன. அவ்வாறாயின்; வேதங்கள் எத்தகைய அறிவைத் தருகின்றன, என்பது இங்கு கேள்வியாகும்; ஏனெனில் மெய்யியல் (Philosophy) என்பது விசாரணை செய்து உண்மை அறிவினைப் பெற முயற்சி செய்தல் என்ற பொருளை உடையது. எனவேதான் வேதங்கள் வழங்கும் அறிவின் அடிப்படை தொடர்பாக மெய்யியல் முக்கிய கவனம் செலுத்துகிறது. மனிதன் அறிவை அடிப்படையாகக் கொண்டு வாழ்க்கை நடத்த முடியும், நடத்த வேண்டும் என்றால்; அது மனித வாழ்வில் எந்த வகையான பயன்பாடுடையது என்பதுவும் முக்கியம் பெறுகின்றது. இந்தவகையில் அறிவைப் பொதுவாக இரண்டு வகையாக நோக்க முடியும்.

1. உலகத்தையும், அதன் பொருட்களையும், மனிதன் தனக்கு வாய்ப்பாக மாற்றிக்கொள்ள உதவும் அறிவு.
2. உலகத் தோற்றம், அதன் செயற்பாடுகள், மனிதப் பிரபஞ்சத் தொடர்புகள் போன்றன பற்றி அறிய உதவும் முயற்சி.

இதில் முதலாவது அறிவு உலகப் பொருட்களை வாழ்க்கைக்கு வசப்படுத்தவும், இரண்டாவது அறிவு மிகவும் பரந்த விசாலமான சிந்தனையை (Thought) அடிப்படையாகக் கொண்டிருக்கின்றது. இந்த வகையில் நாம் வாழும் இந்த உலகம் (World) எதிலிருந்து எவ்வாறு உற்பத்தியாயிற்று, இந்த உலகத்தை உற்பத்தி செய்தவர் யார், என்பது பற்றிய ஆராய்ச்சி மெய்யியலின் பிரதான பகுதியாகும். ஏனெனில் ஆதி கிரேக்கத்தில் வாழ்ந்த தேலீஸ் (Thales) இது பற்றிக் கேள்வி எழுப்பிய விஞ்ஞானியாவார். இவரைத் தொடர்ந்த அனக்சிமாந்தர் (கி.மு. 610-546), அனெக்சிமினிஸ் (கி.மு. 585-528) போன்றோரும் பிரபஞ்சம் (Cosmology) பற்றிய கேள்விகளை எழுப்பினர். இக் கேள்விகட்கான அறிவை வேதங்கள் மிக நீண்ட காலத்திற்கு முன்னரே வழங்கியுள்ளமையை அவதானிக்க முடியும். ஆனாலும், மிகப் பழமையான வேதங்கள் எனக் கருதப்படுபவை மனிதன் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை உண்மைகள் (Basic Truth) அனைத்தையும் கூறிவிட்டன என்பதை ஏற்பதற்குமில்லை. ஆனாலும் பிற்காலத்தில் எழுந்த அறிவு வளர்ச்சியின் அடிப்படையும், அதன் பின்னரான ஆன்மீகத் தத்துவங்கள் அனைத்துமே வேதங்களின் அடிப்படையில் இருந்து புரிந்து கொள்ளப்பட்ட அறிவின் விரிவாக்கமே என்பதை மறுப்பதற்கில்லை.

வேதகாலம் பற்றிச் சற்று ஆழமாக நோக்கின்; அக்காலத்திற்கு முன்னால் சமய அறிவு பற்றிச் சிந்தித்த நூல்கள் எதுவும் இருந்ததாகத் தெரியவில்லை. ஆகவே வேதங்கள்தான் மனிதகுலம் அனைத்திற்கும் சமய அறிவைப் புகட்ட வந்த முதற்தொகுதி எனக் கொள்ளலாம். உலகம் (World), ஆன்மா (Spirit), இறைவன் (God) ஆகியன பற்றியெல்லாம் முதன் முதலில் சிந்தித்த மனிதன் - மனிதர்களின் - சிந்தனைக் கருவூலமே வேதங்களாக உருவெடுத்தது. வேதங்கள் உருவான காலம் பற்றித் தெளிவாக அறிய முடியாமல் இருக்கும் அளவிற்கு அது புராதனமானது என்பதே வேதங்களின் சிறப்பையும், பெருமையையும் உணர்த்துகின்றது.

## 2. வேதகாலமும், அதனை உருவாக்கியோரும்

வேதங்களின் தொன்மையைப் புரிந்துகொள்ள நேரடியான ஆதாரங்கள் இல்லை எனலாம். இந்த வகையில் இன்னொரு புறமாக நோக்கின்; கௌதம புத்தர் பௌத்தத்தை வேதங்களின் கருத்துகட்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரான ஒரு சமயமாகவே உருவாக்கினார். ஆகவே புத்தர் வாழ்ந்த காலத்திற்கு முன்பிருந்தே வேதங்கள் வழக்கில் இருந்திருக்கின்றன என்ற உண்மை புலப்படுகின்றது. எனவேதான், ஏறத்தாழ 2500 ஆண்டுகட்கு முற்பட்டனவாக வேதங்கள் இருந்திருக்க வேண்டும் என்ற கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

கிறிஸ்துவுக்கு முன்னால் வேதங்கள் எவ்வளவு பழமை வாய்ந்தவை என்பதைத் துல்லியமாக அறிய முடியவில்லை. கிறிஸ்துவுக்கு ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்பே வேதங்கள் உருவாகி இருக்க வேண்டும் என்ற கருத்தும் உண்டு. இம்மாதிரியான ஆண்டுக் கணக்குகள் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை என்போரும் உள்ளனர். இந்த வகையில் வேதங்களின் தொன்மைக்காலம் குறித்து ஓரளவு உணர முடிந்தாலும், அதனை ஆக்கியோர் யார், என்பதில் திட்டவட்டமான முடிவு இல்லை என்பர். வேதங்களை 'அபௌர்ஷேயம்' எனச் சிறப்பாகக் கூறுவர். இதற்கு 'மனிதர்களால் உருவாக்கப்படாத சமய சாஸ்திரங்கள்' என்று பொருள். 'புருஷன்' என்பது மனிதனைக் குறிக்கும். அபௌர்ஷேயம் என்பது 'புருஷனால் ஆக்கப்படாதது' என்ற பொருளை உள்ளடக்கியதாகும். மனிதனால் ஆக்கப்படாதது எனும்போது; அது கடவுளாலாக்கப்பட்டது என்று கருதுவோரும் உண்டு. இந்த வகையில் ஒரேயொரு மனிதனாலாக்கப்படாமல் பல்வேறு காலங்களில், பல்வேறு சூழ்நிலைகளில் அறிஞர்களாகிய பலர் கொஞ்சம், கொஞ்சமாக உருவாக்கிய சாத்திரம் என்ற கருத்துக்களில் அழகும், அழுத்தமும் அதிகமாகவே உள்ளது. அதாவது குறிப்பிட்ட ஒருவரால் குறிப்பிட்ட ஒரு காலத்தில் வேதங்கள் உருவாக்கப்படவில்லை என்ற கருத்து சரி என நம்பக் கூடியதாகவுள்ளதோடு, அது தொடக்க காலத்திலிருந்து வழிவழியாக சமய அறிஞர்கள் கற்றனர் என்பதையும் ஏற்கமுடியாது என்கின்றனர்.

இதுபற்றி சமயவாணர்களின் கூற்று பின்வருமாறு அமைகின்றது; வேதங்கள் மனித அறிவின் தொகுப்பல்ல; வேதஞானம் ஆன்மீக உலகிலிருந்து அதாவது கிருஷ்ண பரமாத்மாவிடமிருந்து வருவதாகும். வேதத்தின் மற்றொரு பெயர் 'ஸ்ருதி' அதாவது கேள்வியிலிருந்து வரும் அறிவாகும். அது ஆராய்ந்தறியும் அறிவல்ல. 'ஸ்ருதி' தாயைப் போன்றது. நாம் தாயிடமிருந்து எவ்வளவு அறிவைப் பெறுகின்றோம். தந்தையை அடையாளம் காட்டுவதே தாயாகும். அது போலவே உங்கள் அனுபவ அறிவிற்கு, ஆராய்ச்சி அறிவிற்கு; புலனறிவிற்கு அப்பாற்பட்ட ஒன்றைப்பற்றி நாம் அறிய வேண்டுமானால்; வேதத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இதில் ஆராய்வதற்கிடமில்லை. இது ஏற்கனவே ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட முடிவு; எனவேதான் அதனை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டுமேதவிர வேறு வழியில்லை.

வேதங்கள் தாயெனக் கருதப்படுகின்றன. பிரம்மா, பிதாமகனாகின்றார். ஏனெனில் வேதஞானத்தில் முதன் முதலாகப் பயிற்சி பெற்றவர் அவரே! ஆரம்ப காலத்தில் முதல் உயிர் வழி பிரம்மாவே! அவர் வேதஞானத்தைப் பெற்று; அதை நாரத முனிவருக்கும், மற்ற சீடர்கட்கும் வழங்கினார். இதன்படியே வேதஞானம் சிஷ்ய பரம்பரையாக வந்துகொண்டிருக்கின்றது. இதனைக் கீதையும் உறுதி செய்கின்றது. இத்தகைய போக்கு அறிவியல் வளர்ச்சித் துறையில் ஒரு முக்கிய கட்டமாக அமைந்தது. ஏனெனில், விஞ்ஞான அறிவியல் தெளிவற்ற ஒரு காலத்தில் சகல விடயங்களும் உள்ளடங்கிய ஓர் அறிவுக் கருவூலமானது பரம்பரை, பரம்பரையாகப் புதிய தலைமுறையினருக்கு வழங்கப்பட்டுவந்தமை ஒரு திருப்புமுனையாகும்.

## 3. வேதங்களின் பிரிவுகள்

ஆரம்ப காலத்தில் ஒரேயொரு வேதம் மட்டுமே இருந்தது. அதைப் படிக்க வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஒருமுறை குருவிடம் கேட்ட மாத்திரமே புரியக்கூடிய புத்திக்கூர்மை மக்களுக்கு இருந்தது. ஆனால் ஐயாயிரம் ஆண்டுகட்கு முன்பு கலியுக மக்களின் வசதிக்காக 'வியாசதேவர்' வேதங்களை எழுத்தில் வடித்தார். நாளடைவில் மக்களின் வாழ்நாள் குன்றி, நினைவாற்றல் குறைந்து, புத்தி மழுங்கிப் போய்விடும் என்பதை அறிந்த வியாசர் வேத ஞானத்தை எழுத்தில் வடித்துவிடுவது நல்லது என்று எண்ணினார். அவர் வேதங்களை நான்காகப் பிரித்தார். அவை இருக்கு, சாம, அதர்வ, யசூர். இவ்வேதங்களைத் தனது பல்வேறு சீடர்களிடம் ஒப்படைத்தார். அதன்பின்னர் அனைவருக்கும் பயன்படும் வகையில் மகாபாரதத்தையும், பதினெட்டுப் புராணங்களையும் தொகுத்தார். இவையெல்லாம் வேத இலக்கியங்கள் (Vedic Literature) எனப்படும். புராணங்கள், மகாபாரதம், நான்கு வேதங்கள், உபநிஷதங்கள் எனவும், தத்துவஞானிகட்கான வேதாந்த சூத்திரம் என்ற வடிவிலும் வழங்கினார். வேதங்களைப் பிரதானமாக இரண்டு பகுதிகளாகப் பிரிக்க முடியும்.

1. மந்திரப் பகுதி
2. பிராமணப் பகுதி

பிராமணப் பகுதியில் அதன் தொடர்ச்சியாக 'உபநிடதம்' என்ற பகுதியும் உண்டு. மந்திரம், பிராமணம், உபநிடதம், ஆகிய மூன்றையும் சேர்த்தே வேதம் என்பர். மந்திரப்பகுதி தெய்வங்களைப் பிரார்த்திக்கும் துதிப் பாடல்களாகவே அமைந்திருக்கின்றன. 'உச்சரித்து வழிபடுவோரைக் காப்பாற்றும் சொல்' என்பதே மந்திரத்தின் அடிப்படைப் பொருளாகும். யார் மந்திரங்களைச் சொல்லி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வங்களைப் பிரார்த்திக்கின்றார்களோ அவர்களை எல்லா மந்திரங்களும் காப்பாற்றும் என்று கருதப்படுகிறது.

மந்திரங்கள், பிராமணங்கள் ஆகிய இரண்டையும் ஒட்டி எழும் தத்துவ ஆராய்ச்சியாக உபநிடதங்கள் அமைந்திருக்கின்றன. எனவே மந்திரம், பிராமணம், உபநிடதம் ஆகியவை தனித்தனியாகக் கூறப்பட்டாலும் அவை ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பது உண்மை.

## 4. வேதகாலத்தில் தெய்வக்கொள்கை

வேதகாலத்தில் நீர், நெருப்பு, காற்று, மின்னல், இடி, மேகம், மழை போன்ற இயக்கங்கட்கு ஒவ்வொரு தெய்வமும் அடிப்படைப் பொறுப்பாக இருக்கிறது. நெருப்புக்கு – அக்கினி, மழைக்கு – வருணன், மின்னல், இடி, மற்றும் முழக்கத்திற்கு இந்திரன் ஆகிய கடவுளர்கள் பொறுப்பாக இருக்கின்றனர் என வேதங்கள் கூறுகின்றன. இயற்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் ஒருவித ஒழுங்கு நிலையுடன் அமைந்திருப்பதைக் கண்ட மக்கள் மேற்கண்ட நிகழ்ச்சிகட்குக் காரணமாக இருக்கும் தெய்வங்கள் ஒழுக்கநெறி தவறாமல் இயங்குவதாக எண்ணினார்கள்.

வேதங்களில் பல தெய்வங்களைப் பற்றிக் குறிப்பிட்டிருப்பதனால் வேதகாலத்திலிருந்து பல தெய்வ வழிபாடு தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றதா, என்ற வினா எழக்கூடும். தொடக்க காலத்தில் தெய்வங்களைப் பற்றி மக்களுக்குத் தெளிவான கண்ணோட்டம் இல்லை என்பது உண்மை. புரிந்து கொள்ள முடியாத இயற்கைத் தோற்றங்களையும், இயற்கைக் காட்சிகளையும் மக்கள் தெய்வங்களின் பிரதிபலிப்பு என்று நம்பினாலும் நாளடைவில் அப் பலதெய்வ நம்பிக்கை ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகு கொஞ்சம், கொஞ்சமாக மாறிக்கொண்டு வந்திருப்பதாகத் தெரிகின்றது. வேதகால மக்கள் சிந்தனைப்போக்கில் கொஞ்சம், கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருந்தார்கள். பின்னாளில் தெய்வத்தை விஸ்வகர்மன், பிரஜாபதி என்ற பெயர்களால் அழைத்தார்கள். விஸ்வகர்மன் என்பதற்கு எல்லாவற்றையும் செய்ய வல்லவன் என்பது பொருளாகும்.

பல தெய்வங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு வந்த வேதங்கள் தெய்வத்தை ஒட்டு மொத்தமாக விஸ்வகர்மன் என்று அழைத்ததன் மூலம் கடவுள் ஒருவரே என்ற கொள்கையினை மேற்கொண்டு பழைய கொள்கைகளிலிருந்து சற்று மாறுபட்டிருக்கின்றன. இப் 'பிரஜாபதி' என்பதற்கு; விஸ்வகர்மன் என்பது மாற்றுப் பெயரேயாகும். இவ்வாறு கடவுள் கொள்கையில் வேதகாலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டாலும் பழைய நிலையை ஒரேயடியாகக் கைவிட்டுவிடவில்லை. அக்னி, வருணன், சூரியன் போன்ற தெய்வங்களின் பெயரெல்லாம் ஒரே தெய்வத்தின் பல அம்சங்களைக் குறிப்பதாகவும் சில வேதச்சான்றுகள் கூறுகின்றன.

வேதங்களின் ஒரு சுலோகம் தெய்வக் கொள்கை பற்றி 'ஒன்றுதான் உள்ளது. அதனையே அறிஞர்கள் அக்னி என்றும், எமன் என்றும் வெவ்வேறு பெயர்களால் குறிக்கின்றனர்.' இதுதான் அச் சுலோகத்தின் கருத்தாகும். வேதங்கள் பற்றி விமர்சிக்கும் சிலர் பல்லாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட வேதங்கள் தற்கால வாழ்க்கைக்குப் பொருந்துமா, என்கின்றனர். ஆனால் வேதங்கள் காலத்தால் முற்பட்டாலும் ஒரே தேக்க நிலையில் அப்படியே நின்றிருக்கவில்லை. வேதத்தின் கருத்துக்கள் கால ஓட்டத்திற்கு ஏற்ப ஆழ்ந்த சிந்தனைகளின் விளைவாக ஆரோக்கியமான மாறுதல்களை ஏற்று என்றும் பயன்படக்கூடியதாக இருப்பதே அதன் இன்னுமொரு மெய்யியல் சிறப்பாகும்.

## 5. வேதங்களில் கடவுள், ஆன்மா, உலகம்

வேதங்களின் முக்கிய சாரம் கடவுள், ஆன்மா, உலகம் என்பனவாகும். வேத ஆய்வின் முதற்பகுதி கடவுளைப் பற்றியும், இரண்டாவது பகுதி ஆன்மா பற்றியும், மூன்றாவது பகுதி உலகம் பற்றிய உண்மைகளையும் தெளிவாக்குகின்றது.

ஒவ்வொரு உடலுக்கும் ஆன்மா என்ற அம்சம் இருக்கின்றது. அது கண்கட்குப் புலப்படுவதில்லை. வேறு நேரடிக் காட்சிகள் மூலமும் ஆத்மாவைக் காண முடிவதில்லை. ஆனால் அது ஒவ்வோர் உடலிலும் குடிகொண்டுள்ளது என்பது உண்மை. மனித உடல் அழியக்கூடிய ஒன்றாகும். ஆனால் உடலுக்குள் குடிகொண்டிருக்கும் ஆத்மா அழிவதில்லை. அது நிம்மதியான ஒன்றாகும். இக்கருத்தினையே சமயங்களும், சான்றோரும் கூறுகின்றனர். இவையெல்லாம் வேதங்களில் கூறப்பட்டவைதான். ஆனால் உடல் அழிந்தபின் ஆத்மாவின் நிலை என்ன, என்ற விடயத்தில்மட்டும் வேதக் கொள்கைக்கும், இந்துமதக் கொள்கைக்கும் இடையே வேறுபாடுண்டு. மனித உடலில் ஆத்மா என்ற ஒன்று அமைந்திருக்கின்றது. உடல் அழியும்போது; அவ்ஆத்மா அழியாமல் அது குடிகொண்டிருந்த மனித உடல் செய்த நல்வினை, தீவினைக்கேற்றவாறு நரகலோகத்திற்கோ, சுவர்க்கலோகத்திற்கோ செல்லும் என்ற கருத்து வேதங்களில் உண்டு. அக்கருத்துத்தான் பிற்காலத்தில் சற்று மாறியுள்ளது எனலாம். அதாவது ஆத்மாக்கட்கு மறுபிறவியுண்டு. எந்த உடலில் ஆத்மா குடிகொண்டிருந்ததோ, அந்த உடலுக்குரியவன் செய்த நல்வினை, தீவினைகட்கேற்ப மறுபிறவி உருவெடுக்கும் எனக் கூறப்படும் கருத்து வேதங்களில் இடம்பெற்றிருக்கவில்லை என்ற கருத்தும் உண்டு. இவ்வுலகம் உண்மையா, பொய்யா என்பதுபற்றித் தத்துவ ஞானிகளிடம் கருத்து வேறுபாடுகள் உண்டு. இந்திய மரபில் சங்கரரும், அவரது பரிவாரமும் (பின்பற்றுவோர்) உலகம்,

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கயிறு பாம்பாகத் தோன்றுவது போல, தோற்றமேயன்றி உண்மையில்லை என்கின்றனர். இக்கருத்திற்கு மாற்றமாக வேறுசிலர் சிறப்பாக சைவ சித்தாந்திகள் உலகம் பொய்யன்று; அது இல்லாத பொருளன்று; அது உள்ள பொருளே என்கின்றனர். மாறுபட்ட இவ்விரு கருத்துக்களுள் எதை வேதங்கள் ஆதரிக்கின்றன என்பதைப் பலரும் நோக்கலாம். உலகம் உண்மை என்பதுதான் வேதங்களினது நிலைப்பாடாகும். உலகம் பொய் என வேதத்தின் எந்த இடத்திலும் கூறப்படவில்லை. இது மிகவும் முக்கியமானது.

உலகத் தோற்றம் பற்றிய வேதக் கருத்துக்களை நோக்கின்; தண்ணீர்தான் மூலப்பொருள் அதிலிருந்துதான் ஒன்றிலிருந்து ஒன்றாக ஏனைய பஞ்ச பூதங்களும் அவற்றாலாகிய இவ்வுலகமும் உற்பத்தியாயின என்று கூறப்படுகின்றது. இந்த வகையிலேயே உலகத் தோற்றம் பற்றிய மேலைத்தேயக் கொள்கையும் கூறுகின்றது. அதாவது தேலிஸின் நீர்த்தத்துவம் உலகத் தோற்றம் பற்றி இதே கொள்கையைக் குறிப்பிடமுடியும். இன்னும் அறிவுடைய ஒருவனே இவ்வுலகத்தின் தோற்றத்திற்குக் காரணமானவன் என்பது வேதங்களில் காணப்படுகின்ற அதேவேளை அவ் அறிவுடைய அவன் அறிவற்ற சடப்பொருளாகிய இவ்வுலகை எதிலிருந்து படைத்தான்? தன்னிடத்தே உற்பத்தி செய்தானா? அல்லது சடமாகிய இவ்வுலகத்தைச் சடமான ஒரு மூலப்பொருளில் இருந்து உற்பத்தி செய்தானா? என்ற வினாவுக்குத் தன்னிடத்திலே இருந்தே உற்பத்தி செய்தான், புறம்பான பொருளில் இருந்து உற்பத்தி செய்யவில்லை என்ற விடையை வேதங்களில் காணமுடியும்.

## 6. வேத நம்பிக்கையும், மனித ஒழுக்கமும்

தெய்வத்தை நம்புபவன் ஒழுக்கத்தையும் பேணிக் காக்கவேண்டியது மனிதனது கடமை என்றும், இறைவனும் அவனோடு தொடர்புடையனவும் ஓர் ஒழுங்கின் அடிப்படையிலேயே இயங்குகின்றன என்பதனை வேதங்கள் கூறுகின்றன. சூரிய சந்திரன்கள் ஒரு வரையறுக்கப்பட்ட ஒழுங்கில் உள்ளன. அதைப்போலவே பருவகாலங்கள் திட்டவட்டமான சுழற்சியுடன் அமைகின்றன. கோடைகாலம், குளிர்காலம், மழைக்காலம் என்பன ஒரு முறையான நிலையில் மாறி, மாறி அமைகின்றன. மரம், கொடி, செடிகள் வளர்வதிலும் ஒழுங்குமுறை இருக்கின்றது. இவற்றையெல்லாம் கண்ட வேதகால அறிஞர்கள் கடவுள் தொடர்புடைய எல்லாமே ஒழுங்குடன் இயங்குவதனால் இவற்றிற்கெல்லாம் காரணகர்த்தாவான இறைவனும் ஒழுக்கத்தில் உயர்ந்தவன் என ஊகித்தனர். உயிரினங்களை எல்லாம் தோற்றுவித்து பராமரிக்கும் இறைவன் ஒழுக்கத்திலே சிறந்தவன் என்பதனால் மனிதனிடமும் அறநெறியை வேதங்கள் எதிர்பார்க்கின்றன.

உயிர்களின் ஒழுக்கத்தை, பாதுகாப்பை ஏற்று இருக்கும் தெய்வம் வருணன் எனப்படும். தனக்கென விதிக்கப்பட்ட கடமைகளைச் சரியாக நிறைவேற்றுவதுதான் மனிதனின் இயக்கநெறி. ஆகவே, வேதங்கள் மனிதன் கடைப்பிடிக்கவேண்டிய கடமைகளை 5 பிரிவாகப் பிரித்துள்ளன. மனிதனானவன் தெய்வம், ஞானிகள், பிதிர், உடன் வாழும் ஏனைய மனிதர்கள் என்பவர்களோடு தன்னைச் சூழ்ந்து வாழும் பிராணிகட்கும் தன்னாலான உதவியைச் செய்யக் கடமைப்பட்டுள்ளான் என்பது வேதக் கட்டளை. இதன்படியே மனிதன் தன் கடமைகளைச் செய்ய வேண்டும்.

## 7. வேதப்பிரிவுகளும், காரணமும்

வேதங்கள் நான்கு வகைப்படும். இருக்குவேதம், யசூர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம். இவை ஒன்றாக இல்லாமல் பிரிக்கப்பட்டமைக்கான காரணம், அல்லது மெய்யியல் பின்புலம் என்ன, என்ற கேள்விக்கு; வேதங்கள் நான்காயினும், அவை ஒன்றாகக் கருதப்படுவதே வழக்கம். ஆனாலும் ஒவ்வொரு வேதமும் ஒவ்வொரு பொறுப்பினை ஏற்று வழிகாட்டுகின்றன. 'ருக்' என்பதற்கு 'துதித்தல்' என்பது பொருள். தெய்வங்களைப் பாடல்களால் துதி செய்யும் சுலோகங்களை இருக்கு வேதத்தில் அதிகளவில் காணமுடியும். அதுபோலவே 'யசூர்' என்றால் 'யாகம்' என்பது பொருள். பெரும்பாலும் யாகம் செய்வது பற்றிய வழிமுறைகளை விளக்கும் சுலோகங்களை யசூர் வேதத்தில் காணமுடியும். 'சாமம்' என்பதற்கு 'இசை' என்பது பொருள். சாமவேதத்தில் உள்ள சுலோகங்கள் இசையுடன் கூடிய துதிப்பாடல்களாகும். அதுபோல 'அதர்வணம்' என்பது மந்திரிகத்தைக் குறிக்கும் சொல்லாகும். அதாவது இறைவனின் அருளைப் பெறுவதற்கான நுணுக்கமான செயல்முறையாகும்.

இதில் இருக்கு வேதத்தின் பிற்பகுதியான பத்தாம் மண்டலப் பாடல்களில் தத்துவக் கருத்துக்கள் நிரம்பியுள்ள பாடல்களைக் காணமுடியும். இவை தொடக்கநிலையிலேயே காணப்படுகின்றன. இவற்றின் விரிவே பிற்கால இந்தியத் தத்துவமாகும் (Indian Philosophy). அதுபோலவே சாம, யசூர், அதர்வ வேதங்களுமாகும்.

## 8. வேதங்களும், உபநிடதங்களும்

வேதங்களின் ஒரு பகுதியாகவோ அல்லது வேதங்கட்குத் தரப்படும் விளக்கங்களாகவோ உபநிடதங்கள் மதிக்கப்பெறுகின்றன. உபநிடதங்கட்கு வேதாந்தம் என்ற பெயரும் உண்டு. வேதங்களின் கடைசிப் பகுதி என்று இதற்குப் பொருள் கூறுவோருமுண்டு. ஆனால் வேதங்களின் சாரம் என்ற நோக்கில்தான் வேதாந்தம் என்ற சொல்லுக்குப் பொருள் கொள்ள வேண்டும்.

வேதங்களை முழுமையாகத் தெரிந்து கொள்ளாதவர்கள் அல்லது தெரிய வாய்ப்பற்றவர்கள் உபநிடதங்களை மட்டும் கற்றாலே வேதங்களின் உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். உபநிடதம் என்ற வடமொழிச் சொல்லுக்கு 'சிரத்தையோடு அருகில் இருத்தல்' எனப்பொருள். வேதங்களை விளங்கிக்கொள்ள ஒரு குருவின்மூலம் உபதேசம் பெறுவது ஒன்றுதான் வழியாக இருந்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வந்திருக்கின்றது. வேதங்கள் தொகுத்து வைக்கப்பட்ட நூலாக இல்லாமல் வாய்வழியாகக் கற்றுணர வேண்டிய நிலையில் இருந்ததால் 'சுருதி' என்ற பெயரும் வேதங்கட்குண்டு. வேதங்களை நேரடியாக விளங்கிக் கொள்வதைவிட இன்னும் அதிக கவனமும், அக்கறையும் காண்பித்து உபநிடதங்களைப் பயிலவேண்டி இருப்பதால்தான் 'உபநிடதம்' என்று அதற்குப் பெயர் அமைந்திருக்கின்றது. அதாவது சீடர் குருவிடம் மிகவும் நெருக்கமாக இருந்து அதிக கவனத்துடன் கற்கவேண்டியிருந்ததால் இப்பெயர் வந்தது என்பர்.

உபநிடதங்கள் பெரும்பாலும் வினாக்கட்கு அளிக்கப்படும் விடைகளாகவே அமைந்துள்ளன. ஒரு குரு சீடனிடம் வேதங்கள் தொடர்பான ஐயங்களைத் தமது விடையின் மூலம் விளங்கவைக்கும் பாணியிலேயே உபநிடதங்கள் அமைந்திருக்கின்றன. உபநிடதங்கள் மனிதனைப் பற்றியும், அவனிடம் அமைந்திருக்கும் ஆத்மா குறித்தும், உடலுக்குள் அவ் ஆத்மாவின் இயக்கம் குறித்தும், உடல் அழிந்த பிறகு ஆத்மாவின் நிலை என்ன, என்பதைப் பற்றியும், உலகத்தின் தோற்றம் குறித்தும், இறைவனின் இயல்பு, உருவம், மனிதனுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு ஆகிய விஷயங்களைப் பற்றியெல்லாம் நுணுகி ஆராய்கின்றன.

உபநிடதங்கள் எண்ணிக்கையில் பலவாறாகக் கூறப்படுகின்றன. ஏறத்தாழ இருநூறு உபநிடதங்கள் உள்ளதாகக் கூறப்படுகின்றது. அவற்றுள் சிறப்பானவை நூற்றிஎட்டு, ஆனாலும் முக்கியமாகப் பயிலப்பட வேண்டியவை பத்துத்தான். இப் பத்து உபநிடதங்கட்கு பிற்காலத்தில் வந்த சமயச் சான்றோர்கள் பல விளக்கங்களை எழுதி உள்ளார்கள். சமயச் சான்றோர் ஒவ்வொருவரும் உபநிடதங்களைத் தாங்கள் விளங்கிக்கொண்ட வகையில் விளக்கம் எழுதியுள்ளதால் ஒவ்வொரு விளக்கமும் வெவ்வேறானவை. ஆனால் அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவையல்ல.

வேதங்கள் சுலோகங்களால் ஆக்கப்பட்டவை. ஆனால் உபநிடதங்கள் உரைநடையிலேயே அமைந்திருப்பது ஒரு சிறப்பாகும். இதன் முக்கிய காரணம் உபநிடதங்களின் சாரம் வினா விடைகளின் உருவில் அமைந்திருப்பதுதான். மேலும் அக்காலத்திலேயே உபநிடதங்கள் ஆன்மீகப் பிரச்சினையுட்படத் தீர்க்கமுடியாத பல பிரச்சினைகள் குறித்துத் தீர்க்கமாக ஆராய்ந்துள்ளமை அவற்றின் சிறப்பாகும். என்றாலும் அப் பிரச்சினைகள் குறித்துத் தீர்க்கமான – திட்டவட்டமான – முடிவு எதனையும் உபநிடதங்கள் தீர்மானிக்கவில்லை. ஆனாலும் அவற்றுக்கான விளக்கவுரைகள் அவற்றைத் தீர்மானித்துள்ளன.

இன்றும் உலகில் பல நாடுகளில் உள்ள தத்துவஞானிகள் உலகத்தின் தோற்றம், அமைப்பு குறித்தும் மனிதனுக்கும், இறைவனுக்கும் இடையே உள்ள - இருக்க வேண்டிய – தொடர்பு குறித்தும் பல்வேறாக ஆராய்ச்சி செய்து வருகின்றார்கள். அவ்வாறான ஆராய்ச்சிகட்கு ஆதாரங்களாக வேதங்களையும், உபநிடதங்களையுமே கொண்டுள்ளார்கள். இது வேதங்களின் சிறப்பையும், பெருமையையும் எமக்கு விளக்குகின்றது. வேதங்களையும், உபநிடதங்களையும் பற்றிக் கீழைத்தேயவர்கட்கு இல்லாத ஆர்வமும், அக்கறையும் மேலைத்தேயத் தத்துவஞானிகட்கு இருந்திருக்கின்றது. இதற்கு 'ஷோப்பனவர்' மிகவும் சிறந்த உதாரணமாகும். இந்த வகையில் வேதங்கள் இன்னும் சிறப்புப் பெறுகின்றன.

இவ்வாறு மெய்யியலின் பிரதான கருப்பொருட்களான கடவுள், ஆன்மா, உலகம் மற்றும் மனித ஒழுக்கம் போன்றவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள வேதங்கள் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னர் எவ்வாறு எழுந்தனவோ, அவ்வாறே இன்றுவரை மாற்றமின்றிக் காணப்படுகின்றன. முன்னோர் இவற்றினைப் பரம்பரை பரம்பரையாக வாய்வழியாக ஓதி வந்ததனால் இதனை 'எழுதாமறை' எனவும் அழைக்கின்றனர். கிட்டத்தட்ட 4000 ஆண்டுகட்கு மேற்பட்ட நீண்டகால வரலாற்றைக் கொண்ட வேதங்கள் எவ்வித இடைச்சொருகல்களையும் கொண்டிராமல் இருப்பதோடு பதம், கிரமம், ஜடை, கனம் என்ற நான்கு முறைகளிலே அத்தியாயனம் செய்யப்பட்டுள்ளன. மந்திரங்கள் காணப்படும் நிலை 'சங்கிதை நிலை' எனவும், சங்கிதையில் சந்தி சேர்ந்து அமையப்பெற்ற சொற்கள் எல்லாம் தனித்தனியாகப் பிரிக்கப்படும்பொழுது இதற்கு 'பதபாடம்' எனவும் அழைப்பர். இவ்வாறு பல சிறப்புக்களைக் கொண்ட வேதங்களும், அக்கால மரபுகளும் கீழைத்தேய மெய்யியல் வரலாற்றில் மிகச் சிறப்பான இடத்தினைக் கொண்டுள்ளன என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. Bernstein Richard, J. (1907) *Outlines of Indian Philosophy*, Berlin.
2. Devaraja, N.K. (1975) *Hinduism and Modern Age*, Bombay, Current Book House.
3. கைலாசநாதக் குருக்கள், கா. (1962) *வடமொழி இலக்கிய வரலாறு-I*, கலா நிலையம், கொழும்பு.
4. சுவாமி பிரபுபாதா, அ. ச. (1996) *வேதம் வழங்கும் அறிவு*, பக்தி வேதாந்தா நிறுவனம், சென்னை.
5. ஷண்முகானந்தா, (1997) *வழிகாட்டும் வேதங்கள்*, அனுராகம் வெளியீடு, சென்னை.
6. யாக்ஞவல்கியப் பிரியா, (1993) *இந்துமத உபநிடதங்களின் பெருமை-I*, வானதி பதிப்பகம், சென்னை.
7. ருத்ர துளசிதாஸ், (2000) *தத்துவமஸி*, சாகித்ய அகடமி வெளியீடு, புதுடில்லி.
8. அனஸ், எம். எஸ். எம், (2006) *மெய்யியல்*, குமரன் புத்தக இல்லம், கொழும்பு-சென்னை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவனின் பாம்பும் காரைக்காலம்மையாரின் பாடல்களும்

**மார்க்கண்டன் ரூபவதனன்,**
**விரிவுரையாளர்,**
**ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழகம்.**

சைவசமய எழுச்சிக்குக் காரைக்காலம்மையாரின் பங்களிப்பானது ஒரு மைல்கல். ஒருவகையில், வாழ்வாலும் வாக்காலும் சைவத்துக்கு உருவும் உயிரும் கொடுத்தவர். அவரது இலக்கியப்பணி தமிழ்மொழி, தமிழ்ச்சமயம் என்பவற்றின் வாழ்வுக்குப் புதுப்பொலிவு கொடுத்தது; பின்வந்த சைவசமயவாதிகளின் பல்வேறு இயங்க தளங்களுக்கு அடி எடுத்துக் கொடுத்தது.

காரைக்காலம்மையார் வாழ்ந்த காலத்துக்குச் சில ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்தே 'சிவன்' வழிபாடு இருந்து வந்திருக்கிறது. சிந்துவெளி நாகரீக அகழ்வாய்வுகளில் கிடைக்கப்பெற்ற தடயங்கள் அதற்குச் சிறந்த அத்தாட்சிகள். சிவன் பற்றிய படிமம் அக்காலத்திலிருந்தே ஆரம்பித்துவிடுகிறது.

சமயங்களின் இருத்தல் 'இறைவன்/கடவுள்' என்ற கருத்து நிலையிலேயே தங்கியுள்ளது. இந்தக் கருத்துநிலை காலங்கடந்து உருவம் பெற ஆரம்பித்துவிடுகிறது (இஸ்லாத்தில் கடவுளுக்கு உருவம் கொடுக்கப்படவில்லை). இக்காலகட்டம் (உருவம் கொடுக்கும் காலம்) மிக முக்கியமானது. ஏனெனில், கடவுளுக்குக் கொடுக்கும் உருவம் சமய வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்பதுடன் சமயம்சார் இனத்தினது பல்வேறு தள இயங்குநிலைகளுக்கும் காலாக அமைந்துவிடுகின்றது.

கடவுளின் உருவம் ஒரே ஒரு வடிவாய் இருப்பதில்லை; இருக்கவேண்டிய அவசியமும் இல்லை. சில சிறப்பம்சங்கள் முக்கியமடையலாம். ஏனெனில், கடவுளுக்கு உருவம் கொடுப்பவர்கள் அவரின் அடியார்கள் - பக்தர்கள், விசுவாசிகள். பக்தரின் கடவுள் பற்றிய அறிகை நிலைக்கு ஏற்பக் கடவுளின் உருவம் அமைந்துவிடுகிறது.

கடவுளுக்கு உருவம் கொடுப்பதில் கடவுள் மீதான அடியாருக்கு இருக்கும் பக்தியுடன் சமயம்சார் கடந்தகாலச் செய்திகள் - இலக்கியம், சமயநூல்கள், பழைய மரபுக்கதைகள், தொல்லியல் ஆய்வுச் செய்திகள் மூலங் கிடைக்கும் செய்திகளும் சேர்ந்தே பங்களிக்கின்றன. இந்து சமயக் கடவுளர்களது திருவுருவங்கள் இவற்றுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. சிவனது திருவுருவங்கள் பற்றிப் பேசும்போது அவரது மூன்று நிலைகள் ஞாபகத்துக்கு வரும். அவை அருவம், உருவம், அருவுருவம் எனும் நிலைகளாகும். இந்த மூன்று நிலைகள் பற்றியும் சைவ பக்தி இலக்கியங்களினதும், தத்துவ நூல்களினதும் பாடல்களில் காணமுடியும்.

காரைக்காலம்மையார் தமது பாடல்களினூடாகச் சிவனுக்கு உருவம் கொடுப்பதில் பாரிய பங்களிப்புச் செய்தவர் என்பது ஆய்வாளர் முடிவு. அவரது இலக்கியங்களை 'வாசிக்கும்' போது விரவிக் காணப்படும் விடயம் அதுவென்பதே புலப்படும். பக்தி இயக்கத்துக்கான 'தலைவர்' பற்றிய மொழிக்கட்டமைப்புகள் அவை.
காரைக்காலம்மையாரின் பாடல்களைப் படிப்பவர்களுக்கு அவரது இரண்டு நிலைப்பட்ட பாடல்கள் உணரப்படும்.

1) இறைத்தன்மையுடையவர் பாடிய பாடல்கள்
2) சாதாரண பக்தை பாடிய பாடல்கள்

*அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்*
*இன்றுந் திருவுருவங் காண்கிலேன் - என்றுந்தான்*
*எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட் கென்னுரைக்கேன்*
*எவ்வுருவோ நின்னுருவம் ஏது*[1]

எனும் ஏக்கம் நிறைந்த பாடல் சாதாரண பக்தையின் பாடலுக்கு ஓரெடுத்துக்காட்டு.

*அருளே யுலகெலா மாள்விப்ப தீச*
*னருளே பிறப்பறுப்ப தானால் - அருளாலே*
*மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே(ன்*
*எஞ்ஞான்றும் எப்பொருளு மாவ தெனக்கு*[2]

என்ற உறுதிப்பாடு உடைய பாடல் இறைத்தன்மை கொண்ட பாடலுக்கு ஓரெடுத்துக்காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு இரு நிலைகளிலும் இயங்கிய காரைக்காலம்மையாரிடம் பிரதானமாகக் காணப்பட்டவை சிவனது உருவம் தொடர்பானவையே; எனினும், சிவனுடைய திருமேனியில் பாம்பு அங்கம் வகிப்பது தொடர்பான அவரது சிந்தனைகள் சிறிது வித்தியாசப்பட்டனவாகவே காணப்படுகின்றன.

*******

பாம்பு இந்து சமயத்தில் முக்கிய இடத்தில் வைக்கப்படும் ஒரு பிராணி. வைணவத்தில் விஷ்ணுவின் வாகனமாகப் போற்றப்படுவது. சைவத்தில் சிவனின் தோளில் தங்கும் பாக்கியம் பெற்றது. நாகபூசணி அம்மனின் பிரதிநிதியாகச் செயற்படுவது. பஞ்சாங்கப்படி 'நாகம்' ஒரு தோஷமாகவும் அதற்குப் பரிகாரம் செய்யும்படியும் அறிவுறுத்தப்படுகிறது. சிலர் பாம்பைத் தெய்வமாகவும் (பால் வைத்து) வணங்குகின்றனர். நாகபாம்பு, கோயில் பாம்பு, நல்லபாம்பு என்ற உயர் நிலைகளும் அதற்குக் கொடுக்கப்படுகின்றன.

மேலைத்தேசச் சமயங்களில், குறிப்பாகக் கிறிஸ்தவ, யூத மதங்களில் பாம்பு இறைவனுக்கு எதிரான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. சாத்தானின் மறுவடிவம் என்று சபிக்கப்பட்டது. அச்சமயங்கள் தமிழ் பண்பாட்டுள் கலந்தபோது அச்சமயங்கள் சார் தமிழரும் பாம்பைப் பாவத்தின் மூலகாரணியாகக் கொண்டனர்.

அறிவியல் ரீதியில் பாம்பு, மனிதனுக்கோ ஏனைய சில உயிரினங்களுக்கோ பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய பிராணி என்று கூறப்படுகிறது. இத்தகைய பாம்பு பலவகைப்பட்டது. உலக நிலையில் பல நூற்றுக்கணக்கான பாம்பு வகைகள் கண்டறியப்பட்டுள்ளன. இலங்கையில் 97 வகைப் பாம்பு வகைகள் உள்ளன என்று கூறப்படுகிறது.[3] இவற்றுள் பல நச்சுத்தன்மை வாய்ந்தவை, மனிதர்களைத் தீண்டக்கூடியவை என்பனவும் யாவரும் அறிந்தவை. தமிழர் மரபிலும் பாம்பு குறித்த சிந்தனைகள் 'பயப்படவேண்டிய பிராணி' என்பதேயாகும். காரைக்காலம்மையாரும் இதே சிந்தனையுடையவர்தான். 'பாம்பைக்கண்டால் படையும் நடுங்கும்' என்ற பழமொழியும் இதனையே எடுத்துக்காட்டுகின்றது.

ஆயினும், அறிவெலாம் கடந்த இறைவன் முன் அறிவியல்கள் அஸ்தமித்துவிடுகின்றன. அடியாரின் அனுஷ்டானங்களால் இறைவனுடன் ஒன்றாக இருக்கும் 'பாம்பு' இறைத்தன்மை பெற்றுவிடுகிறது.

*******

காரைக்காலம்மையார் சாதாரண பக்தையாகவும் இறைவல்லமை பெற்றவராகவும் பாடிய பாடல்களில் சிவனின் கழுத்தில் காணப்படும் 'பாம்பு' பற்றிப் பாடிய பாடல்களில் இருந்து பாம்பு பற்றிக் காரைக்காலம்மையார் கொண்டிருந்த பல்வகைச் சிந்தனைகள் எழும்புகின்றன. சாதாரண பக்தையாக நின்று சிவனது கழுத்தில் இருக்கும் பாம்பு குறித்துக் காரைக்காலம்மையார் சிந்திக்கும் விதம் முக்கியமானது.

*தகவுடையார் தாமுளரேற் றாரதலஞ் சாரப்*
*புகவிடுதல் பொல்லாது கண்டீர் - மிகவடர*
*வூர்ந்திடுமா நாக மொருநாண் மலைமகளைச்*
*சார்ந்திடுமோ லேபாவந் தான்*[4]

-சகலவல்லமையும் உடையவனே எனின் தமது கழுத்தில் உள்ள பாம்பைப் பாதாள உலகத்துக்குச் சென்றுவிடும்படி செய்தல் கூடாதா? கொலைத் தொழிலைச் செய்யும் பாம்பு உமாதேவியைக் கடித்துவிடாதவாறு சென்றுவிடச் செய்தால் என்ன! எப்போதும் பாம்பு அவருடனே ஒட்டியிருக்கும்படி அவர்செய்த பாவந்தான் என்ன - என்று கேட்கிறார்.

பெண்கள் பாம்புக்குப் பயந்தவர்கள். நீயோ உலகெலாம் பிச்சைக்காக அலைந்து திரிகின்றவன். அவ்வாறு போகும்போது விஷமுடைய பாம்பை விட்டுச்செல். இல்லாவிட்டால் பெண்கள் பாம்புக்குப் பயத்தில் அருகில் வந்து பிச்சையிடார் என்று பொதுமைப்பட பெண்களுக்காகக் குரல்கொடுக்கிறார்.

*நீயுலக மெல்லா மிரப்பினும் நின்னுடைய*
*தீய வரவொழியச் செல்கண்டாய் - தூய*
*மடவரல்லார் வந்து பலியிடா ரஞ்சி*
*விடவர மேலாட மிக்கு*[5]

அத்துடன், இறைவா! ஆடும் பாம்பு உன் கழுத்தில் இருக்கும்போது உனதடியார்கள் எவ்வாறு உன்னண்டை வந்து வணங்குவார்கள்?

*அன்பால் அடைவதெவ் வாறுகொல் மேலதோ டாடரவந்*
*தன்பால் ஒருவரைச் சாரவொட் டாதது வேயுமன்றி*
*முன்பா யினதலை யோடுகள் கோத்தவை யார்த்துவெள்ளை*
*என்பா யினவும் அணிந்தங்கோர் ஏறுகந் தேறுவதே*[6]

என்று சைவ அடியார்களுக்காகப் பரிந்து பேசுகிறார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுப்படையாக, அக்காலத்தில் பாம்பு குறித்தான மக்கள் நிலைப்பாட்டை நன்குணர்ந்தவராகக் காரைக்காலம்மையார் தென்படுகிறார். பக்தர் சார்பாகப் பாம்பைக் குறித்து இறைவனுடன் வாதாடுகிறார். பாம்பை இறக்கி விடும்படியும் வேண்டுகிறார். சமூகத்தோடு ஒட்டிய சமயச் செல்நெறியை வளர்க்க அம்மையார் முயன்றிருக்கிறார். இவை ஒருபுறம்.

மறுபுறத்தில், பாம்புடன் விளங்கும் இறைவனது கோலத்தைப் படிமத்துள் அடக்கிக் கண்ணாரக் கண்டு ஆனந்தமடைகிறார். மற்றவரையும் ஆனந்தத் திருக்கோலங்களைக் கண்டு இன்புற்றுப் பேரின்ப வாழ்வைப் பெறும்படியும் ஆற்றுப்படுத்துகின்றார்.

ஒளிபொருந்திய மின்னும் பாம்பு (அ.தி. 36)
அழகிய படம்பிடிக்கும் பாம்பு (அ.தி. 35)
என்றெல்லாம் பாம்பை வர்ணிக்கும் அம்மையார்,

*சங்கரனைத் தாழ்ந்த சடையானை அச்சடைமேற்*
*பொங்கரவம் வைத்துகந்த புண்ணியனை – அங்கொருநாள்*
*ஆவாவென் றாழாமைக் காப்பானை எப்பொழுதும்*
*ஓவாது நெஞ்சே உரை* [7]

-மனமே! சிவனை, நீண்ட சடாமுடியுடையோனை, பாம்பை அணிந்திருக்கும் புண்ணியனை, உயிரானது உடம்பை விட்டு நீங்கும்போது மீண்டும் பிறக்காது காக்கின்றவனை எப்போதும் மறக்காமல் துதிப்பாயாக - என்று முத்திப்பேறிற்கான பாதையையும் காட்டுகின்றார்.

பாம்பைக்கண்டு பயந்து வாழ்ந்த மக்களைப் பயந்தெளிவித்துப் பக்திநெறிகாட்டிப் பாம்பை அணிந்திருக்கும் மெய்ப்பொருளான சிவபெருமானிடம் அணிதிரள அடி எடுத்துக் கொடுத்த காரைக்காலம்மையாரின் பாடல்கள் சைவசமய வளர்ச்சிக்குப் பாரிய பங்களிப்புச் செய்திருக்கின்றன. அத்துடன், தொடர்ந்து வந்த காலங்களில் 'பாம்பு' குறித்தான புதிய பார்வைகள், வழிபாடுகள், தத்துவங்கள் முதலியவை செம்மையாக உருப்பெறுவதற்கும் வழிகாட்டியுள்ளன எனவும் கூறவேண்டும்.

### அடிக்குறிப்புக்கள்

1. அற்புதத் திருவந்தாதி பாடல் இல. 61
2. அற்புதத் திருவந்தாதி பாடல் இல. 9
3. Bambaradeniya N.B. Channa (ed) *The Fauna of Sri Lanka – Status of Taxonomy, Research and Conservation* p.134 (2006)
4. அற்புதத் திருவந்தாதி பாடல் இல. 13
5. அற்புதத் திருவந்தாதி பாடல் இல. 57
6. திருவிரட்டை மணிமாலை பாடல் இல. 17
7. திருவிரட்டை மணிமாலை பாடல் இல. 6

### *பொட்டு வைப்பது ஏன்....?*



***முக்கண் பெருமானான சிவனுக்கு மட்டுமன்றி, மனிதருக்குங்கூட ஞானக்கண் உள்ள இடம் புருவத்தின் மத்தியாகும். அதனால்தான் இந்த இடத்தில் பொட்டுவைத்து ஞான உணர்வைத் தூண்டுகிறோம். இதனால் மனதில் அமைதியும் பரவசமும் ஏற்படுகிறது.***

***நெற்றியில் பொட்டு இட்டுக்கொள்ளும் போதெல்லாம் ஊனக் கண்ணால் உலகைப் பார்க்கும் நாம், ஞானம் என்னும் மூன்றாவது கண்ணால் உலகை தெய்வ மயமாகப் பார்க்க வேண்டும் என்ற உணர்வு எழுகிறது. அதனால்தான், பொட்டு வைத்த முகம் தெய்வீகக் களையோடு, அமைதியாகத் திகழ்கிறது. அப்படிப்பட்ட ஞானம் திகழ்கின்ற முகத்தை உடையவரை வேறு எந்தத் தீய சக்தியும் அண்டாது.***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுருகாற்றுப்படை காட்டும் முருகனின் திருக்கோலப் பண்பாடு

**விஜிதா சிவபாலன்,**
**உதவி விரிவுரையாளர்,**
**தமிழ்த்துறை.**

மிகப்பழைய காலத்திலிருந்தே முருகவழிபாடு தமிழ்மக்களிடையே நிலவி வந்தமையை இலக்கியச் சான்றுகள், தொல்பொருள் சான்றுகள், வழிபாட்டு நெறிமுறைகள், என்பவற்றின் மூலம் அறிந்து கொள்ளலாம். அவ்வகையில் தமிழிலக்கியங்களிலே முருகவழிபாடு, முருகனின் தோற்றம், அருள் திறன் முதலியன போற்றப்பட்டுள்ளன. 'முருகு பொருநராறு பாணிரண்டு முல்லை...' என்ற தொடரினூடாகக் குறிப்பிடப்படும் பத்துப்பாட்டு நூல்களில் ஒன்றான திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் காட்டும் முருகனின் கோலங்கள் ஓர் இனம் சார்ந்த பண்பாட்டை உணர்த்துகின்றன.

முருகு எனும் சொல் மணம், இளமை, கடவுள் தன்மை, அழகு எனப் பல பொருள் குறிக்கும் ஒரு சொல்லாகும். இத்தகைய பொருளடங்கிய ஒரு சொல்லால் பண்டைத் தமிழர் தமது முழுமுதற் பொருளைக் குறிப்பிட்டுள்ளனர். பண்டைத் தமிழர் இயற்கைநெறி வழிப்பட்ட வாழ்க்கையில் ஈடுபட்டதனால் இயற்கையழகை இறைவனாகப் போற்றினர். உயர்வாக மதிக்கத்தக்க அழியாப் பொருளுக்கு இறைநிலை கற்பிக்கும் வழக்கம் பண்டைய மக்களிடம் இருந்தது. இதனால் இயல்பாக உருவான, அழியாத தன்மையுடைய இயற்கை அழகில்தான் தெய்வீகம் கலந்து நிற்கிறது என நம்பினர். மலைக் குன்றுகளிலும் சாரல்களிலும் ஆரம்பிக்கப்பட்ட பழந்தமிழர் வாழ்வு இயற்கையூடாகப் பரம்பொருளைக் கண்டது. அப்பரம்பொருளை அழகுப் பொருளாகக் கண்டது. அழகு எல்லோராலும் விரும்பப்படுவது என்பதால் அது பேசப்பட வேண்டியது; பெருமைக்குரியது; உயர்ந்தது. இதனால் அழகு போற்றப்பட வேண்டியது. தூய்மையும் நேர்த்தியும் உள்ள இடத்தில் அழகு தோன்றும் என்பதனால் அழகுக்குத் தெய்வ வடிவம் அமைக்கப்பட்டது. அவ் அழகுக் கடவுள் தத்துவம்தான் முருக தத்துவம். முருகையுடையவன் முருகனாகப் போற்றப்பட்டான்.

மலைமீது வாழும் இம்மக்கள் காலையிலும் மாலையிலும் ஞாயிற்றின் ஒளியால் கவரப்பட்டு அவ்வழகினைச் செம்மைக் கோலத்தில் கண்டனர். செம்மை சான்ற அவ் அழகு 'சேய்' எனப்பட்டது. இதனால் முருகு, சேய் எனும் அழகுகளே முருகன், சேயோன் எனும் நாமங்களாக முருகனுக்கு அமைந்துள்ளன. தொல்காப்பியத்திலும் 'சேயோன் மேய மைவரை உலகமும்' எனும் தொடர் செந்நிறக் கடவுளான முருகன் மலைநிலக் கடவுள் என்பதையும் உணர்த்துகின்றது.

நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் முருகன் உறையும் இடங்கள், முருகனின் தோற்றங்கள், அருள் திறன் என்பவற்றை அவன் வீற்றிருக்கும் ஆறுபடை வீடுகளினூடாகக் காட்டுகின்றார். அவ்வகையில் இந்நூலானது ஆறுபடை வீடுகளைப் பாராட்டும் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. திருப்பரங்குன்று எனும் முதற்பகுதியில் முருகனின் திருவுருவச் சிறப்பு, சூரர மகளிர் செயல்கள், சூரசங்காரம், திருப்பரங்குன்றத்து இயற்கை வளம் என்பன விளக்கப்படுகின்றன. இரண்டாவது பகுதியான திருச்செந்தூரிலே முருகனின் வாகனச் சிறப்பு, ஆறுமுகக்கோலம், பன்னிரு கைகளின் செயல்கள், திருச்சீரலைவாய்க்கு எழுந்தருளுதல் ஆகியவை உள்ளன. திருவாவினன்குடி எனும் பழனியில் முருகனை வழிபட வரும் முனிவர்கள் இயல்பு, தேவர்களின் நிலை என்பனவும் திருவேரகம் எனும் தலத்தில் அந்தணர் இயல்பும் முருகனை அவர்கள் வழிபடும் முறையும் குன்றுதோறாடலில் குரவைக்கூத்து, ஆடுமகளிர், பாடுமகளிர் சிறப்புகளும் பழமுதிர்சோலையில் முருகன் எழுந்தருளும் இடங்கள், குறமகள் பூசை, முருகனிடம் சென்று வழிபடும் முறை, அருள் புரியும் விதம், பழமுதிர்ச்சோலையின் வளம் என்பன விவரிக்கப்படுகின்றன.

இவ் ஆறுபடைவீடு எனும் அமைப்பு பழமையானது. அது முருக வழிபாட்டின் முதன்மையை உணர்த்துகின்றது. மலைகளில், கடலோரங்களில், காடுகளில் கடவுள் வழிபாடு செய்வது தமிழர் மரபு. முருக வழிபாடு தமிழ் நிலத்தின் எல்லாப் பகுதியிலும் பரவிய தன்மையை இதன்மூலம் அறியலாம். குறிஞ்சி நிலங்களில் வாழ்ந்த மக்கள் ஏனைய நிலங்களில் குடியேறி வாழத் தலைப்பட்டனர். இதனால் கடவுள் நிலையிலும் மாற்றங்கள் உருவானது. குறிஞ்சிநிலக் கோயிலாகத் திருவாவினன்குடியையும் முல்லைசார்நிலக் கோயிலாகத் திருப்பரங்குன்றமும் நெய்தல்நிலக் கோயிலாகத் திருச்செந்தூரும் மருதநிலக் கோயிலாகத் திருவேரகமும் புகழப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருக வழிபாடு தமிழ்ச் சமுதாய வளர்ச்சியுடன் தொடர்புடையது. தமிழர் வாழ்வு விரிவடையக் கடவுள் வழிபாட்டு முறையும் விரிவடைந்தது. நாகரிகமே தெரியாத குறவர் முதல் மும்மூர்த்திகள் உட்பட தேவ சாதியினரும் அவனை வழிபடுகின்ற தன்மையை ஆறு படை வீடுகளின் வைப்புமுறை மூலம் நக்கீரர் காட்டியதுடன் முருக வழிபாட்டின் வளர்ச்சியையும் முருக வழிபாட்டில் ஏற்பட்ட ஆரியக் கலப்பையும் விளக்குகின்றார். மலையிலே பூசாரி வேலன் வெறியாடுதல், குறவர் தொண்டகப் பறை முழங்கி குரவைக் கூத்தாடல், குறமகளாகிய தேவராட்டி குறிஞ்சிப் பண்ணைப் பாடிப் பூசித்தல், அந்தணர்கள் சடாட்சர மந்திரத்தால் பூசித்தல், முனிவர்கள் விரதமிருந்து பூசித்தல், பேய் மகளிர் துணங்கைக் கூத்தாடல், தேவர்கள் முருகனை வழிபடல் முதலிய விடயங்களை எடுத்துக் காட்டுகிறார். இது காலந்தோறும் முருக வழிபாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் ஆரியர் வருகையினால் ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்புகளையும் உணர்த்துவதுடன் அதற்கேற்ப முருகனின் கோலங்களிலும் மாற்றங்களை உண்டுபண்ணுவதனையும் காணலாம்.

சமூக விரிவாக்கல் இடம்பெறும்போது பண்பாடு வளர்ச்சியடைகின்றது. இதனால் சமய நிலையிலும் கடவுள் பற்றிய கோட்பாடு, வழிபாட்டு முறைகள், கடவுளர்களின் கோலங்கள், இருப்பிடங்கள் என்பனவற்றிலும் மாற்றம் ஏற்படுவது இயல்பானது. ஆதிகால மனிதர் குன்றுகளில் வாழ்ந்தபோது அக் குழுவின் தலைவனாக முருகன் படைக்கப்பட்டிருக்கலாம். இனக்குழு வொன்றின் தலைவனாக இருந்த ஒருவன் தெய்வீகத் தன்மைக்கு உயர்த்தப்பட்டு ஒரு தெய்வமாக வழிபடப்பட்டிருக்கலாம் எனக் கருத இடமுண்டு. அழகு, வலிமை, கம்பீரம் என்பன 'முருகன்' என்ற பாத்திரத்திற்கு இருந்திருக்கக்கூடிய தன்மையால் அந்நில மக்கள் அவனைத் தலைவனாகக் கொண்டு குறிஞ்சிக்கிழான், மலைக்கிழவோன் என அழைத்து அந்நிலப் பிரதேசத்திலுள்ள அனைத்தையும் அவனுக்குத் தொடர்புபடுத்தினர். வேலினை அவனுக்கு ஆயுதமாகவும் குறிஞ்சி நிலத்திலுள்ள மிகப்பெரிய விலங்கான யானையையும் அழகான பறவையாகிய மயிலையும் ஊர்தியாகக் கொடுத்து குறவர் மகளான வள்ளியை மணம் செய்வித்தனர். குறிஞ்சி நிலத்தில் உள்ள காந்தள், வெட்சி, கடம்பு முதலிய மலர்களைத் தூவியும் தேன், தினை முதலியவற்றைப் படைத்தும் வழிபட்டனர். ஆதிக்குடிகளின் வழிபாட்டம்சமான வேலன் வெறியாடல் ஆகியவற்றை உள்ளடக்கிய முருகனை நக்கீரர் சமூக அடிப்படையில் மலைவாழ் கடவுளாகவும் காலப்போக்கில் ஏனையோரும் வழிபடும் பொதுவான கடவுளாகவும் மாற்றுகின்றார்.

மலையில் இனக்குழுமம் ஒன்றின் தலைவனாக விளங்கிய முருகன் ஒளிப் பிழம்பாகவும் அழகுக் குழந்தையாகவும் அறுமுகப் பெருமானாகவும் பற்றற்ற யோகியாகவும் நின்று காட்சி தருகின்றான். இங்கு மனிதன் அல்லாத மனித ஆற்றல் அனைத்தும் கடந்த நிலை – பல்துறை ஆற்றல் கொண்ட தன்மையை வெளிப்படுத்த நக்கீரர் முனைகிறார். அவர் ஒளிப்பிழம்பாக முதலில் முருகனைக் காட்டுகிறார்.

*"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு*
*பலர்புகழ் ஞாயிறு கடற் கண்டாங்கு*
*ஓவற இமைக்கும் சேண் விளங் கவிரொளி"*

உலக உயிர் உவகை கொள்ள இளைய ஞாயிற்றின் ஒளியும் முருகனின் அன்பு ஒளியும் இங்கு ஒப்பிடப்படுகின்றது. அத்துடன் இப்பாடல் வரிகளினூடாகப் பழந்தமிழர்களின் பரந்துபட்ட தன்மையைக் காணலாம். உலகம் தழுவிய பார்வை என்ற அடிப்படையில் இந்நூலின் முதலாவது செய்யுள் 'உலகம் உவப்ப...' என அமைகின்றது. இதனை அடியொற்றியே பிற்காலத்தில் கம்பராமாயணமும் பெரியபுராணமும் ஆரம்பிக்கப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படையில் ஆரிய மரபும் தமிழ் மரபும் இணைந்திருக்கும் பண்பாட்டுக் கலப்பினைக் காணலாம். முருகனது பிறப்புப் பற்றிக் கூறும்போது "அறுவர் பயந்த ஆறமர் செல்வன்", "ஆல்கெழு கடவுள் புதல்வ", "மால்வரை மலைமகள் மகனே" என வடமொழி மரபைப் பின்பற்றும் அதேவேளை, "வெல்போர்க் கொற்றவை சிறுவ", "இழையணி சிறப்பின் பழையோள் குழவி" என்ற தமிழ் மரபையும் காட்டுகின்றது. மேலும், வடமொழி மரபைப் பின்பற்றி முருகனைச் சிவனோடு தொடர்புபடுத்தும் தன்மையை " ஆல் கெழு கடவுள் புதல்வ" எனும் வரி உணர்த்துகின்றது. இதனூடாக முருகனுக்கு உறவுநிலை கற்பிக்கப்படுகின்றது. திருமுருகாற்றுப்படை வெண்பாவில்,

*"முருகனே! செந்தில் முதல்வனே!*
*மாயோன் மருகனே! ஈசன் மகனே! – ஒரு கை முன் தம்பியே!..."*

என்று விளக்கப்படுகின்றது. முருகன் சைவப் பரம்பொருளான சிவனின் மைந்தனாகவும் திருமாலின் மருமகனாகவும் கணபதியின் சகோதரனாகவும் காட்டப்படுகின்றான். முருகனுக்குத் தாய் - தந்தை, சகோதரன், தாய்மாமன் என உறவுநிலை கற்பிக்கப்படுவதனூடாக வெவ்வேறு சமயங்களுடன் முருக வழிபாட்டைத் தொடர்புபடுத்தும் தன்மையைக் காணலாம். அத்துடன் சமுதாயக் கட்டுப்பாடுகள், குடும்ப அமைப்புக்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழந்தமிழரின் வாழ்வியல் கூறுகளை கடவுள் வழிபாட்டிலும் கோலங்களிலும் காணலாம். காதலுக்கும் போருக்கும் முதன்மை கொடுத்த பழந்தமிழ் மரபு முருகனைக் காதல் தெய்வமாகவும் போர்த் தெய்வமாகவும் காட்டுகின்றது.

தமது வாழ்வியற் பொருளை அகம் - புறம் எனப் பாகுபடுத்தி நோக்கிய பண்டைத் தமிழ்ச் சமூகம் தாம் வழிபடும் கடவுளுக்கும் அத்தகைய அம்சங்களை வழங்கினர். திருமுருகாற்றுப்படையில் முருகன், "செறுநர் தேய்த்த செல் உறழ் தடக்கை", "சூர் முதல் தடிந்த சுடர் இலை நெடுவேல்", "வண்புகழ் நிறைந்து வசித்து வாங்கு நிமிர்தோள்", "வானோர் வணங்குவில் தானைத் தலைவ", "செருவில் ஒருவ பொருவிறல் மள்ள!", "சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி! போர்மிகு பொருந!" என்று தமிழரின் போர்க் கடவுளாக வழிபட்டுள்ளதனைக் காணலாம்.

இவ்வாறு புறத்திணை மரபில் போர் செய்யவல்ல வெற்றியுடைய வீரனாகவும் அருட்கொடை வள்ளலாகவும் காட்டப்படும் முருகன் அகத்திணை மரபில் அழகும் இளமையும் கொண்ட குறிஞ்சி நிலத் தலைவனாகவும் வள்ளியின் காதலனாகவும் உருவாக்கப்பட்டுள்ளான். பழந்தமிழரின் அகத்திணை மரபானது களவியல், கற்பியல் எனப் பாகுபடுத்தப்படுவதனால் இவ்விரண்டின் அம்சமாக முருகனின் வள்ளி திருமணம் களவியலையும் தெய்வயானை திருமணம் கற்பியலையும் உணர்த்துகின்றது. 'மறுவில் கற்பின் வாணுதல்' என்ற திருமுருகாற்றுப்படைத் தொடர் தேவயானையைக் கற்பு மணப்பிராட்டி என்று கூறுவதனூடாக வள்ளியைக் களவு மணப்பிராட்டி எனச் சுட்டாமல் சுட்டுகின்றது. இங்கு ஒருவனுக்கு ஒருத்தி என்ற கற்பும் தாமே தலைப்பட்டுக் காதல் புரியும் களவும் உடையவனாக முருகன் காட்டப்படுகின்றான். அகம் புறம் என்பதற்கு உதாரண புருஷராக, 'மங்கையர் கணவ, மைந்தர் ஏறே' என்ற திருமுருகாற்றுப்படை வரி எடுத்துக்காட்டாகும்.

மேலும், ஆரிய – திராவிட மரபின் பண்பாட்டுக் கலப்பின் குறியீடாகவும் தெய்வயானை, வள்ளி திருமணம் அமைகின்றது. ஆரிய மரபில் காதலுக்கு முக்கியத்துவமில்லை. சமயச் சார்பான திருமணச் சடங்கு முறை முதன்மை பெறுகின்றது. தமிழ் மரபில் அகவுணர்வு சார்ந்த வாழ்க்கை முறைக்கு முதன்மை கொடுக்கப்பட்டதனால் காதல் தெய்வீகமாகக் கருதப்பட்டது. இவ்விரண்டின் கலாசார அம்சமாகவே வள்ளி தெய்வயானை சமேதராகச் சித்திரிக்கப்படுகின்றான். தெய்வயானையைத் திருமணம் செய்து வானுலகத்திலே தேவர்கள் இன்பத்தைப் பெறுவதற்கு வழி செய்ததுடன் வள்ளியை மணந்து மண்ணுலகத்திலே மக்கள் இன்பமடைய வழி செய்யப்பட்டது. முருகனின் இத்தகைய கோலம் விண்ணவருக்கும் மன்னவருக்கும் அவன் முதன்மைத் தெய்வமாக விளங்குவதனைக் காட்டுகின்றது.

முருக வழிபாட்டில் வடஇந்திய மரபு கலக்கப்பெற்றபோது முருகன் ஆறுமுகனாகக் காட்சியளிக்கின்றான். திருமுருகாற்றுப்படை திரச்சீரலைவாய்ப் பகுதியில் முருகனின் ஆறுமுகத் தோற்றம் விபரிக்கப்படுகின்றது. ஆற்றல் மிகுதி காரணமாக முருகனுக்கு ஆறு முகங்களைக் கற்பித்தனர். முருகனின் ஆறுமுகங்களின் செயற்பாடுகளை நக்கீரர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். ஒரு முகம் இருள் சூழ்ந்த உலகில் கதிரவன்போல ஒளியைப் பரப்பும். ஒரு முகம் வேண்டியவர்களுக்கு வேண்டியதை மகிழ்ந்து கொடுக்கும். ஒரு முகம் அந்தணர் வேள்வியை இடையூறின்றிக் காக்கும். ஒரு முகம் மெய்ப்பொருள் உணர்த்த திங்கள்போல திசை விளங்கும். ஒரு முகம் அசுரரை அழித்து மறக்கள வேள்வியை விரும்பி நிற்கும். ஒரு முகம் உலகிற்கு இன்பவாழ்வை உணர்த்த குறவர் மகள் வள்ளியுடன் மகிழ்ந்திருக்கும். இவ்வாறு சாதாரண வேலனாக இருந்த முருகனுக்கு பல்துறை ஆற்றல் கொண்ட தன்மையை வெளிப்படுத்துவதாகவே 'ஆறுமுகம்' என்ற வடிவம் உள்ளது.

இயற்கையின் கடவுள், மறக் கடவுள், காதல் கடவுள், திராவிடக் கடவுள் என்றெல்லாம் சிறப்பிக்கப்படும் முருகன் வடஇந்தியச் செல்வாக்கினாலும் தமிழகத்தில் ஏற்பட்ட வைதிகசமய வளர்ச்சியினாலும் தல வழிபாட்டின் மூலம் முதன்மை பெறுகின்றான். குன்றுகளில் உறைந்த கடவுள் அலைவாய்களிலும் ஊர்களிலும் கோயில் கொண்டுள்ளான். திருமுருகாற்றுப்படையில் சிறப்பிக்கப்படும் முருகனின் ஆறு திருத்தலங்களில் திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்) தவிர ஏனையவை குன்றில் உள்ள தலங்களாகும். இங்கு குறிப்பிடப்படும் ஆறு திருத்தலங்ளும்தான் பிற்காலத்தில் ஆறுபடை வீடுகளாக உள்ளன.

பழந்தமிழர் காலத்தில் முருகவழிபாடு வேலன் வெறியாடல், குன்றக் குரவை முதலிய அம்சங்களோடு தொடர்புபட்டிருந்தன. வட இந்தியச் செல்வாக்கினால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் சமய வழிபாட்டில் தாக்கம் செலுத்தின. மலைவாழ் மக்களால் வழிபடப்பட்ட முருகன் வைதிக நம்பிக்கைகளோடு இணைந்து மேல்நிலை பெறுவதனைத் திருமுருகாற்றுப்படையில் காணலாம். குன்றுதோறாடல், வேலன் வெறியாடல், அந்தணர் பூசித்தல், முனிவர்களும் தேவர்களும் வணங்குதல் என்பவற்றை எடுத்துக்காட்டி நக்கீரர் ஆகமம் சாராத வழிபாட்டு மரபில் இருந்த முருகனை ஆகமம் சாரும் வழிபாட்டு நெறிக்குக் கொண்டு வருகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்ககாலப் பகுதியில் ஆரியச் செல்வாக்கு நிலவியமையினாலும் இந்நூல் இக்காலப் பகுதியிலே தோற்றம் பெற்றதாகக் கருதப்படுவதனாலும் நக்கீரர் இருமரபும் கலந்த முருகனின் கோலத்தைக் காட்டுகின்றார்.

திருவேரகம் எனும் சுவாமிமலையில் சிவனின் மகனாகத் தமிழரால் வணங்கப்படும் முருகன் சிவனுக்கு ஞானோபதேசம் கற்பிக்கும் குருவாகத் தூக்கிவைக்கப்படுகின்றான். திருவாவினன்குடி எனும் பழனியில் வீற்றிருக்கும் முருகனை வழிபடுவதற்காக முனிவர்கள், தெய்வ மங்கையர்கள், திருமால், சிவன், இந்திரன் முதலியோர் தமது குறையை நீக்கச் செல்வதாகக் கூறுகின்றார். இங்கு முருகன் 'ஞான ஒளி' படைத்த கடவுளாக உள்ளான். அழகின் கடவுளாக இருந்த முருகனின் கோலம் அறிவியலின் வடிவமாக மாறுகின்றது. அழகியல், அறிவியல் இரண்டோடும் தொடர்புபட்ட அவனின் கோலத்தை நக்கீரர் அழகாகக் காட்டுவது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு இயற்கை அழகு, அறிவு எனும் விடயங்களுடன் முருகன் தொடர்புபடுகின்றான். ஆறு தலங்களின் அமைவினூடாக முருக வழிபாட்டின் ஆரம்ப நிலையும் பிற்கால வளர்ச்சிப் போக்கும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் தமிழ்மரபு – ஆரிய மரபு எனும் பண்பாட்டுக் கலப்புக் காரணமாக முருக வழிபாட்டிலும் அவனின் கோலங்களிலும் ஏற்பட்ட மாற்றங்களையும் விளக்குகின்றார். இயற்கை, அழகு, இளமை, அறிவு, தமிழினம் என்பவற்றுடன் ஒன்றிணைந்த முருகன் குன்றுகளில் மட்டுமல்ல, கடற்கரைகளிலும், ஊர்கள் தோறும் உறையும் தன்மையைக் காட்டுவதன் மூலம் முருக வழிபாட்டின் வளர்ச்சி நிலையைச் சூட்சுமமாக உணர்த்துகின்றார். பழந் தமிழர்களின் வாழ்வியல் அம்சங்களான அகம் - புறம் என்பவற்றை முருகனோடு தொடர்புபடுத்தி இவ்விரு திணை மரபுகளின் தலைமகனாக அவன் போற்றப்படுகின்றான். களவு, கற்பு எனும் தமிழ் மரபானது ஆரியக் கலப்பினால் சடங்குகளோடுகூடிய திருமணமுறைக்குட்படுவதை வள்ளி, தெய்வயானை பாத்திரக் குறியீடு உணர்த்துகின்றது. இது ஆரியர் வருகைக்குப் பின்னர் தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட மாறுதலைக் குறிக்கின்றது. எனவே திருமுருகாற்றுப்படை ஆறுபடை வீடுகளினூடாக முருகன் எனும் இறைமைப் பாத்திரம் சமூக மாற்றங்களுக்குட்பட்டு அடையும் மாற்றங்களைத் துல்லியமாகக் காட்டுகின்றது.

## உசாவியவை


1. அம்பிகை, ஆ., (2003), *தமிழகத்தில் முருக வழிபாடு*, வர்தா பதிப்பகம்.
2. இராஜேஸ்வரி, பா., (2003), *தமிழ்க் கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும்*, கோயம்புத்தூர் : நிகழ் பதிப்பகம்.
3. கந்தையா, ஆ., (1985), *செவ்வேள்*, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.
4. கலியாணசுந்தரனார், வி. க., (1994), *முருகன் அல்லது அழகு*, சென்னை : பாரி நிலையம்.
5. சோமசுந்தரம், கு., (1993), *சைவ மரபும் தமிழர் வாழ்வும்*, கொழும்பு : ரஜி வெளியீடு.
6. தனபாலசிங்கம், செ., (1968), *படை வீடுடைய பரமன்*, யாழ்ப்பாணம், ஸ்ரீ சண்முகநாத அச்சகம்.
7. பாலசுப்பிரமணியம், சி., (1966), *முருகன் காட்சி*, சென்னை.
8. வேலுப்பிள்ளை, ஆ., (1985), *தமிழர் சமய வரலாறு*, சென்னை : பாரி புத்தகப் பண்ணை.
9. சங்க இலக்கியப் பத்துப் பாட்டு.


### வடக்குத் திசையில் தலை வைத்து ஏன் படுக்கக்கூடாது...?

**காந்தமுள் வடக்கு நோக்கியே இருக்கும். வடக்குத் திசையில் மின்னணு காந்தக் கதிர்கள் இருப்பதால், தலையை அந்தத் திசையில் வைத்துப் படுத்தால், அந்தக் கதிர்கள் மூளையைப் பாதிக்கும். எனவேதான் வடக்குத் திசையில் தலைவைத்துப் படுக்கக்கூடாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்புப் பிரதேச மக்களின் சமய, சமூக வாழ்க்கையில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சாதி அல்லது குடியமைப்பு முறையும், பாரம்பரிய அடையாளச் சின்னங்களும்

## –கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய நிருவாகச் செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூகவியல் ஆய்வு


**அ.குககுமாரன்,**
**இறுதிவருடம்,**
**முகாமைக் கற்கைகள் துறை,**
**கலைப்பீடம்.**


### அறிமுகம்

மட்டக்களப்புப் பிரதேச மக்களின் சாதியமைப்பு முறையைப் புரிந்து கொள்வதென்பது மிகவும் சிக்கலானதொரு விடயமாகும். ஏனெனில் இங்கு யாழ்ப்பாணச் சாதியமைப்பு முறை போன்று இறுக்கமானதும், கட்டுக்கோப்புடையதுமான சாதியமைப்பு முறையொன்றைக் காணமுடியாதிருப்பதாகும். இருந்தபோதிலும் இப் பிரதேச மக்கள் தமது சமய, சமூக வாழ்வில் கடைப்பிடித்து வருகின்ற 'குடி' என்று சொல்லப்படுகின்ற 'குலமரபு' முறையினை அடிப்படையாகக் கொண்டு இவர்களது சாதியமைப்பு முறையினை ஓரளவு புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

### மட்டக்களப்பு மாவட்ட பிரதேசப் பின்னணி

நீராருங் கடலுடுத்த நிலமடைந்தயெம்மீழமாதா, சீராரும் வதனமெனத் திகழ்வது வடயாழ்புலம், பாராண்ட வன்னியர் வாழ்ந்தது வன்னி, திருநிறைந்த திரிகோணம், மாண்புறுமட்டு நன்னாடு. இவையனைத்துமே வடக்கு கிழக்கு என வர்ணிக்கப்படுகின்றது. தொன்று தொட்டுச் சைவமும் தமிழும் வளர்த்த புண்ணிய பூமி இவை. இவற்றில் நெல், பால், தேன், பாடும் மீன் என்பவற்றில் புகழ்பெற்றது மட்டக்களப்புத் தமிழகம். இது கிழக்கு மாகாணத்தின் மத்தியில் தெற்கே அம்பாறை மாவட்டத்தினையும், வடக்கே திருகோணமலை மாவட்டத்தினையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலையும், வடமேற்கும் மேற்கினொரு பகுதியும் பொலனறுவை மாவட்டத்தினையும் எல்லைகளாகக் கொண்டமைந்துள்ளது. இம்மாவட்டமானது முன்னொரு காலத்தில் தனித் தமிழ்த் தாயகமாகத் திகழ்ந்திருக்கிறது என்றும் பிற்காலத்திலேயே ஏனைய இனமக்கள் குடியேற்றப்பட்டனர் என்றும் மட்டக்களப்பின் பண்டைய வரலாற்று நூலான மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடுகிறது. இதனை மட்டக்களப்பு மான்மியத்தை அடிப்படையாகக்கொண்டு இயற்றப்பட்ட 'தான்தோன்றீஸ்வரர் அந்தாதியில்' திமிலைத் துமிலன் என்பவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"விற்கலை தெரிந்த விறலார் திமிலர்கள் ஒன்னார் தமக்கென உடன்போர்க் கெழுந்தனர்*
*பன்னாள் நடந்த படைப்பல மோதலில் திமிலரை வெல்லும் திறனற்றவராய்*
*தமிழர் - முற்குகர் தம்போர்க் குதவியாய் வணிகத்துக்கு வந்தமுஸ் லிம்களை*
*பேணி அழைத்துப் பெரும்படை வகுத்து திமிலரை அழித்துத் திசைகெட ஓட்டினர்*
*திமிலத் தீவிலும் சென்றமர்ந் திட்டனர் கைம்மாறாகக் காத்தான் குடியையும்*
*பைங்கூழ் விளையும் பதிஏர் ஊரையும் சோனகர்க் கீந்து சுந்தரத் தமிழ் இளம்*
*மானனை யாரையும் வதுவையாய்க் கொடுத்து நன்றிக் கடனதை நனிநிறை வேற்றினர்*
*என்றிவ் வாறு இயம்பிடும் மான்மியம்"*

அதாவது தமிழர்கள் வியாபார நோக்கத்திற்காக மட்டக்களப்புக்கு வந்திருந்த முஸ்லிம்களை தம்பக்கமிணைத்து திமிலர் என்றழைக்கப்பட்ட இனத்தவர்களோடு போர் செய்து வெற்றி பெற்றமையினால் நன்றிக் கடனுக்காகத் தமிழ்ப் பெண்கள் சிலரை அவர்கட்குத் திருமணம் செய்து கொடுத்து மட்டக்களப்பின் சில பிரதேசங்களில் குடியமர்த்தினர் என்றும் இதன் பின்னரே இப்பிரதேசத்தில் முஸ்லிம்களின் சமூகம் உருவாகத் தொடங்கியதாகவும் கூறப்படுகின்றது. இவற்றைவிட அண்மைக்காலமாக மட்டக்களப்பின் எல்லைப் பிரதேசங்களூடாகக் குறிப்பாக பொலனறுவை, மணலாறு போன்ற பிதேசங்களூடாக சிங்கள மக்கள் திட்டமிட்டவகையில் குடியேற்றப் படுகின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இந் நிகழ்வுகளானவை எதிர்காலத்தில் தனித்தமிழ் இருப்பினைக் கேள்விக்குள்ளாக்கும் என்பது எனது எண்ணமாகும். இருந்தபோதிலும் இன்றும் விவசாயத்தை அடிப்படைப் பொருளாதாரமாகக் கொண்டு திகழ்கின்ற இம்மாநிலத்தின் சிறப்பையுஞ் செழிப்பையும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளைப் பண்டிதர் அவர்கள்;

*"பால் பெருகுந் தேன் பெருகும் பண்புடைய மன்னவர் செங்*
*கோல் பெருகும் படிவயற் பைங்கூழ் பெருகும் புனல் பரந்து*
*கால் பெருகுங் கல்லார்க்குஞ் சொல்லாட்சி மிகப் பெருகும்*
*நூல் பெருகும் இடையர்க்கு நுவலறங்கள் பெருகுமால்."* என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மோட்டெருமை வெண்டயிரும் முப்பழமுங் கற்கண்டும்
போட்டினிய சீனிதேன் பொருந்து செந்நெல் வெண்சோற்றைக்
கூட்டி யொன்றாய்க் குழைத்ததனைக் குலக்குமரர் தமைக்கூவிக்
கூட்டுணுவார் அமிர்த மெனக்குறைவில் செல்வமவர்க்கம்மா." என்றும் பாடி நயந்துள்ளார்.

## கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வரலாற்றுப் பின்னணி

செழிப்பும் வனப்பும் மிக்க மருதநிலச் சார்புடைய மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் மிகப் பிரசித்தி பெற்ற மிகப்பழைமை வாய்ந்த மூன்று பெருந் தேவஸ்தானங்கள் உள்ளன. அவை, பண்டாரியாவெளி நாகதம்பிரான் கோயில், தாந்தாமலை ஸ்ரீ முருகப் பெருமான் ஆலயம், கொக்கட்டிச் சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயம் என்பனவாகும். இம்மூன்று பெரிய ஆலயங்களும் ஆங்காங்கே உரிய இடங்களில் அமையப்பெற்றிருப்பதால் மண்முனை தென்மேற்குப் பிரதேசம் சிறந்ததொரு புண்ணிய பூமியென்று கூறலாம். இப்பிரதேசத்தின் நடுவணமைந்தது கொக்கட்டிச்சோலைக் கிராமம். இது மட்டு நகரிலிருந்து தெற்கே மண்முனைத் துறையினூடாகச் சுமார் பதின்மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. கொக்கட்டி மரங்கள் நிறைந்த சோலையாக இருந்தமை இப்பெயருக்குக் காரணமாகலாம். அத்தோடு கொக்கட்டி மரத்தில் எமதிறைவன் சுயம்புலிங்கமாக எழுந்தருளியிருந்தமையும் இதனை உறுதிப்படுத்துவதாயிற்று. இவ்வாலய வரலாற்றினைப் பல செவிவழிக் கர்ண பரம்பரைக் கதைகளும் மற்றும் 'மகாவம்சம்' என்ற புராதன வரலாற்று நூலிலும் கூறப்பட்டவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆராய்வோம். ஸ்ரீ மேகவர்ணன் அனுராதபுரியை ஆண்டகாலத்தில், மட்டக்களப்பை அமரசேனனது மகன் குணசிங்கன் ஆட்சி செய்திருந்தான். இலங்கையின் இக்காலப் பகுதி 'சுலுவம்ச காலம்' எனப்படும். ஸ்ரீ மேகவர்ணன் ஆட்சிக்காலத்தில் (கி. பி. 311) கலிங்க ஒரிசா நாட்டையாண்ட குகசேனன் என்னும் அரசனின் புத்திரி புத்த தசனத்தை இலங்கைக்குக் கொண்டு வந்தாள். அதனை அரசன் மகிழ்ச்சியோடேற்று விலை பெற்ற சிமிழொன்றிலடைத்து இராசாங்க நந்தவனத்தில் அதற்கென எழுப்பிய ஒரு மனையிற் சேமித்து வைத்தான். அது சேமிக்கப்பட்ட மனை அன்று முதல் 'தலதாமாளிகை' என்றழைக்கப்படும். இது இலங்கைப் புராதன வரலாற்று நூலான மகாவம்சத்திற் குறிப்பிடப்பட்டுள்ளது. இதையொத்தபடி பெரிய கல்வெட்டெனும் வரலாற்றேட்டிலும் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. அதாவது;

குணசிங்கன் மட்டக்களப்பைப் பரிபாலித்து வருங்காலம் கலிங்க ஒரிசா தேசத்தரசன் குகசேனனுடைய புத்திரி உலகநாச்சி என்பவள் கௌதம புத்தனுடைய தசனத்தையும் கைலயங்கிரியில் குக வம்சத்தார் முற்காலத்திலெடுத்துக்கொண்டு வைத்த சிவலிங்கத்தையும் எடுத்துக்கொண்டு தனது சகோதரன் உலகநாதனுடன் விசயதுவீபத்துக்கு வந்து மேகவர்ணனைக் கண்டு புத்தருடைய தசனத்தைக் கொடுத்தாள். மேகவர்ணனும் இலங்கை முற்றும் புத்த மதத்துக்கு இனி அபாயமில்லையென்று மிகச் சந்தோசங்கொண்டு, உலக நாச்சியிடம் 'உனக்கு வேண்டியதைக்கேள்' என்றதும், உலக நாச்சியும், 'அரசனே! இலங்கையிற் காடு செறிந்து குடி வாழ்வில்லாத கிராம மொன்றீயும்" என்று வேண்டினாள். அதைக்கேட்ட மேகவர்ணன் மட்டக்களப்பை அரசாளும் குணசிங்கன் தன் சிநேகிதனாதலால் ஒரு திருமுகம் வரைந்து, மட்டக்களப்பு, உன்னரசுகிரி இவைகளிற் காடு செறிந்து குடிவாழ்வில்லாத பகுதியொன்று இந்த உலக நாச்சிக்குக் கைலஞ்சமாகக் கொடுக்கும்படியும், இரத்தின மாலையொன்றுங் கொடுத்து மந்திரியுடன் மட்டக்களப்புக்கு அனுப்பிவிட்டான். குணசிங்கனும் திருமுகத்தை வாசித்துச் சந்ததி உரிமை கொண்டாடி மட்டக்களப்புக்கு வடபால் மண்ணேறி முனை வளர்ந்து காடு செறிந்து குடிவாழ்வற்ற பகுதியை நிந்தமாயீந்து, குடிகளையனுப்பிக் காடுகளை வெட்டித் தூர்த்து, மாளிகையுமுண்டாக்கி உலக நாச்சிக்குக் கொடுத்தான். உலகநாச்சியும் தன் தம்பியைத் தந்தையிடத்தனுப்பிக் 'குகக் குடும்பம்' நூற்றாறும் 'சிறைக் குடும்பம்' முப்பதும் எடுப்பித்து அருகிருத்தி ஆலயமியற்றிச் சிவலிங்கத்தையும் ஸ்தாபித்து வணங்கி வந்தனள். அன்றிலிருந்து இவ்வாலயம் உலகறிந்த சிவத்தலங்களுள் ஒன்றாக வளரத்தொடங்கிற்று. இவ்வாறு தலச் சிறப்புமிக்க இவ்வாலயம் மட்டக்களப்பு மக்களின் வழிபாட்டிடமாகவும், அவர்களது வாழ்க்கையை நெறிப்படுத்தி வழிநடத்துகின்ற ஒரு நீதிமன்றமாகவும் திகழத்தொடங்கியது. இதனால் இப்பிரதேச மக்களது சாதியமைப்பு முறையானது இவ்வாலய நிருவாகச் செயற்பாட்டோடு பின்னிப் பிணைந்ததாகக் காணப்படுகின்றது. அதாவது மட்டக்களப்பில் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டுவருகின்ற முக்குகர் சட்டத்தின் அடிப்படையில் கோயில் நிருவாகச் செயற்பாட்டில் யார் யார் எந்தக் கடமையைச் செய்ய வேண்டும் என்பதோடு தொடர்புபட்ட வகையில் இப்பிரதேச மக்களின் சாதியமைப்பு முறைமை கட்டமைக்கப்பட்டு வந்துள்ளது.

## முக்குகர் சட்ட முறைமை

இலங்கைவாழ் தமிழர்களிடையே தேசவழமைகள் அவர்கட்கான பொதுவான சட்ட முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை யாழ்ப்பாணத்துத் தேசவழமை, வன்னித் தேசவழமை, மட்டக்களப்புத் தேசவழமை எனத் தனித்தனியே காணப்படுகின்றபோதிலும் பொதுவான பல பண்புகளையும் கொண்டுள்ளது. ஆனால், ஒரு சாதியின் பெயரால் வழங்கும் முறையாகவுள்ள சிறப்பும், பெருமையும் மட்டக்களப்பில் நிலவிவரும் முக்குகச் சட்டத்திற்கே உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தொடர்பாகக் குறிப்பிடும் மட்டக்களப்பு மான்மியம் "முக்குகச் சட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் சாதியமைப்பையும், முக்குக மேலாதிக்கத்தையும் காட்டுகிறது. மாவட்டத்திலுள்ள திருப்படைக் கோயில்கள் அனைத்தினதும் பராமரிப்பு உரிமை முக்குகர்களிடமே காணப்பட்டது" என்று குறிப்பிடுகின்றது.

ஆரம்பத்தில் முக்குகச் சட்டம் பொருளாதார, சமூக, கலாசார, பண்பாட்டு வழமைகள் பற்றி வலியுறுத்தியபோதும் காலப்போக்கில் அது சொத்துடமை, நில உடமை, சொத்துமாற்றம் என்பவற்றையே அதிகம் வலியுறுத்துவதாகவுள்ளது. குறிப்பாகச் சீதனம் கொடுக்கிற வகைகள், காணி, பூமி என்பன ஆட்சிப்படும் விதங்கள், நன்கொடைவகை, காணி ஒற்றிப் பிடிக்கும் வகை, வட்டிக்குப் பணம் கொடுக்கும் வகை, கொள்வனவு விற்பனை வகை போன்றன தெளிவாகவும், விரிவாகவும் கூறப்படுகின்றன. இதேபோன்று இப்பிரதேச மக்களின் சாதியமைப்பு முறையும் இச்சட்டத்தினூடாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன,

## சாதியும் குடியும்

மட்டக்களப்பின் சாதிமுறை பெரும்பாலும் முக்குக சாதியைப் பின்பற்றியதாகவே காணப்படுகின்றது. இதனால் மட்டக்களப்பின் மக்கள் வாழ்வில் அவ்வப்போது குடியும், சாதியும் குறிப்பிடத்தக்க பங்குபற்றியிருப்பதைக் காணமுடிகின்றது. பொதுவாக இலங்கையில் உள்ள தமிழர்களிடையே சாதிமுறையும் அது தொடர்பான வழமைகளும் அவர்களது சமூகக் கட்டமைப்பையும் பொருளாதாரக் கட்டமைப்பையும் தீர்மானிப்பவையாக இருந்தன. இந்த அடிப்படையில் மட்டக்களப்பில் பெரும்பாலானதாகவும் பொதுவானதுமாக முக்குக வழமைகள் பின்பற்றப்படுகின்றன.

மட்டக்களப்பில் முக்குகர் சாதியமைப்பையும் குடியமைப்பையும் நிலைநிறுத்துவதற்கு முன் குழுக்களாகவும் பின்னர் குலமரபின் அடிப்படையிலும் தமது சமூக, பொருளாதாரக் கட்டமைப்பை வகுத்து இருந்தனர். பின்னர் இக் குலமரபைப் பின்பற்றியே சாதிகளும் குடிகளும் வகுக்கப்பட்டன. இலங்கையில் முக்குகக் குடிகள் புத்தளத்திலும், மட்டக்களப்பிலும் அதிகம் காணப்படுவதாகவுள்ளது. மலையாளத்திலும், இலங்கையின் தமிழ்ப் பகுதிகளிலும் முக்குகர் நீண்ட காலமாக வாழ்ந்து வந்தமையை வரலாற்று ஆதாரங்கள் காட்டுகின்றன. ஆயினும் மரபுகள், வழமைகள், சாதியின் முதன்மை நிலை என்பவற்றைப் பொறுத்தவரை முக்குகச் சாதியமைப்பு மட்டக்களப்பு வாழ் தமிழர்களிடையே தனித்துவம் பெற்றிருந்ததைக் காணமுடிகின்றது. இக்காலப்பகுதியில் மட்டக்களப்பில் முக்குகர், வெள்ளாளர் ஆகியோரிடையே பல்வேறுபட்ட குடிமரபுகள் வழங்கி வந்தன. அவற்றில் முக்குகர்களிடையே நிலவிய காலிங்ககுடி, படையாட்சிகுடி, உலகிப்போடிகுடி ஆகிய மூன்று குடிகளுமே மிகவுயர்ந்த சாதியினராகவும், சிறந்த குடிகளாகவும் கருதப்பட்டன. இதுபற்றி மகேஸ்வரலிங்கமவர்கள் தனது கட்டுரையொன்றில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"கலிங்க மன்னருக்கு மிக நெருங்கியோராய் பணிபுரிந்த சந்ததியார் கலிங்ககுடி முக்குகர் எனவும், படைத்தலைவர் போன்று பணிபுரிந்த சந்ததியார் படையாட்சிகுடி முக்குகர் எனவும், மண்முனை என்ற சிற்றரசினை அமைத்து ஆண்ட உலகநாச்சி என்பவரால் ஒரிசாவிலிருந்து கொண்டுவரப்பட்டோர் பிற்காலத்தில் உலகநாச்சிகுடி அல்லது உலகிப்போடிகுடி முக்குகர் எனவும் அழைக்கப்பட்டனர். இக் குடிப்பிரிவின் மூவருக்கும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் கோயிற் பரிபாலனம் சொந்தமாய் இருந்து வருகின்றது. இவர்களின் பொறுப்புக்கள்; கலிங்ககுடி தலைமைப் பொறுப்புக்கும், உலகிப்போடி குடி பொருளாதார அலுவல்களுக்கும், படையாண்ட குடி நிருவாக அலுவல்களுக்கும் பொறுப்பாக இருந்து வருகின்றன". இன்றுவரை இம்முறைகள் சிறிதும் பிறழாது இம்மரபுகள் பின்பற்றப்படுவதுடன் இம்மக்களது சமூகக் கட்டமைப்பில் இம்மூன்று முக்குகக் குடிகளுமே முதநிலை பெறுவதனைக் காண முடிகின்றது.

முக்குகர் தம்மை முதன்மைச் சாதியினராக மூன்று பண்புகளின் அடிப்படையில் முதன்மைப் படுத்துகின்றனர்.

01. முக்குகர்க்கென தனிமரபும் சட்டமும் காணப்படுவது.
02. நிலவுடமையில் பரவலாக முக்குகரே ஆதிக்கம் கொண்டுள்ளமை.
03. தேசத்துக் கோயில் என அழைக்கப்படும் கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோயில், சித்திர வேலாயுத சுவாமி கோயில் இவர்களால் பராமரிக்கப்படுவது.

இதுதொடர்பாகப் பண்டைய ஏடு ஒன்றில் உள்ள குறிப்பானது பின்வருமாறு காட்டுகிறது. "பழுகாமம் போன்ற பிரதேசங்களில் அத்தியா குடியில் வந்த வேளாளர்கள் குடியேறியுள்ளனர். இவர்களிடையே 'போடி' மரபு இல்லை. அத்துடன் இவ் வேளாளர்கள் நீண்டகாலமாகக் கொக்கட்டிச்சோலைக் கோவிலில் சுவாமியைத் தூக்கி ஊர்சுற்றும் உரிமையைக் கொண்டிருந்தனர். இவர்களது சேவைக்காக அன்றைய கலிங்க குடியினைச் சேர்ந்த கதிர்காமப்போடி என்ற தலைமை வண்ணக்கரினால் 60 ஏக்கர் பூமி வழங்கப்பட்டது" என்று அத்தகவல் தெரிவிக்கின்றது. இதன் வழியான வாய் மொழித்தகவல் ஒன்று முக்குகர் எந்த ஒரு சாதியிலும் ஊழியம் செய்வதாக இல்லை என்றும், பெரும்பாலான சாதியினரின் பராமரிப்பும், அவர்கட்கான ஊதியமும் முக்குகர்களினாலேயே வழங்கப்பட்டன எனவும் குறிப்பிடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'குடி' என்ற ஒரு குறியீட்டுச் சொல்லே இப்பிரதேச மக்களின் 'சாதியமைப்பு' முறையில் பிரபலமுடைய ஒரு விடயமாகக் காணப்படுகின்றது. அதாவது 'சாதி' என்ற நிலையிலன்றி 'குடி' என்ற கட்டுக்கோப்புக்குள்ளேயே இப்பிரதேச மக்களின் சாதித்துவக் கருத்துக்களும், நடவடிக்கைகளும் பேணப்பட்டு வருகின்றன எனலாம். இந்தக் குடி என்பது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தோடு தொடர்புபட்ட ஒவ்வொரு வர்க்க மக்களைக் குறிக்கின்றது. குடிபற்றிக்கூறும் பின்வரும் கல்வெட்டுப் பாடல் முக்குகர் இனத்தில் ஏழு குடிகள் இருப்பதாகக் குறிப்பிடுகின்றது.

*"சீர்தங்கு வில்லவரும் பணிக்கனாரும் சிறந்த சட்டி கச்சிலான் தனஞ்சயன்றான்*
*கார்தங்கு மாளவன் சங்கு பத்தன் கண்டகுடி முக்குகரிலேளே காணேன்"*

இந்தப் பாடலில் ஏழுகுடிகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளபோதிலும், தற்போது இதில் சில குடிகள் இல்லாது போயுள்ளதோடு இப்பாடலில் குறிப்பிடப்படாத இம்மக்கள் மத்தியில் செல்வாக்குடைய கோப்பிகுடி, பெத்தான்குடி என்ற இரண்டு குடிகளும் நடைமுறையில் உள்ளமையையும் காணலாம்.

இவ்வாறாக மேற்கூறப்பட்ட முக்குகர் சாதியைச் சேர்ந்த குடியினர் சமூகத்தில் எந்தெந்த நிலையில் அந்தஸ்துடையவர்களாக இருந்தார்கள் என்பதனை "நன்மைக்கும் தீமைக்குமான கும்பவரிசை பற்றிக்கூறும் கல்வெட்டுப் பாடல்" விளக்குகின்றது. அத்தோடு இப்பாடலில் இப்பிரதேசத்தில் மிகவுயர்ந்த அந்தஸ்திலுடையவை என்று சொல்லப்படுகின்ற கலிங்க குடி, உலகிப்போடி குடி, படையாட்சி குடி என்பன குறிப்பிடப்படவில்லை இவை முக்குகர் சாதியிலே உயர்ந்த சாதிகளாகவும், உயர்ந்த குடிகளாகவும் கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான குடிகளின் சமூக அந்தஸ்த்தினை வெளிப்படுத்தும் "கும்பமுடிக் கல்வெட்டு" எனும் கல்வெட்டுப் பாடல் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

*"பார்பெற்ற பரிதிகுல கலிங்க மரபினோர் பதின்மூன்று கும்பமும்*
*தேங்கினுயர் பாளைதனிப்பாவாடை மேற்கட்டி தாரை தவில் குழல் வீணை*
*பவனிபெறு பந்தலுள்ளிரண்டு நிறைகுடமுயரவும் பஞ்சமலர் தூவவும் குஞ்சமலர் மேவவும்*
*பாவாணர் பாடி வரவும்*
*பட்டாடை பதின்மூன்று கொய்து மனைமேலெறிதல் பலகிரண தீபமிடுதல்*
*ஏர்பெற்றிலங்கு நவதானியங் கொட்டுதல் பதினெட்டு வரிசையெழுதல்*

.................................................................

*ஏர்சாலி கொடுவந்த படையாட்சி குலமுடையினர் இடுகும்ப மொன்பதுவும்*

.................................................................

*பொதுவாக வுலகினுயர் போடி குலஞ் செய்வரிசை பூப்பந்தர் பறைமேளம்*
*வெடிகுரவை ஆலாத்தி புலவர் கவி பாவாடையும் புவிதேங்குமலர் மேவு கூரைமுடி பதினொன்று*
*புதிய துயிலொன்பது கொய்தெறிதல்*

.................................................................

*ஆனதிரு மரபிலுயர் வணிகர் வேளாளர் அவரவர்களுயர் வரிசை கேள்*
*ஆடலொடு பாடலும் சாக தொனி தாரை தவில் அழகெறி பந்தலெழவே*
*அட்ட திக்கோர் புகழ வரு கூரை முடியேழு ஆடையேழ் கொய்து வளைதல்*

.................................................................

*நகரிலுயர் வெள்ளாளர் தங்கள் சிறை பதினெட்டும் மூன்று முடி நன்பூகமலரிடுதலும்*
*நற்றுயில் மூன்றெறிதல் மேற்கட்டி ஒன்றியது முன்னவில் வரிசையில்லை யெனவே*
*நன்கு முறையாகவே வருவரென நாடியயென்று நவில*
*நாகநரர் தாகமெழ யேககுரு வாதினொடு நடுவரென வைத்தெழுதினர்*
*வானவர்களொப்பிடுதல் செய்முறைகள் குன்றாத வணிகர் வெள்ளாளர் மறையோர்*
*மகிழ்வுதரப் பரிதிகுல மன்னவன் நல்தீய வரிசை தீர்த்திட்டமுறையே*
*மானிலந்தன்னிலே வேரொடு மரபு மாற்றினும் வருநரகு எய்வரெனவே*
*மன்னுலகில் முற்குகரென்னுகத் துயர்வரென வைத்தெழுதிவிட்ட முறையே."*

இப் பாடலடிகளை நோக்கும்போது இப்பிரதேச மக்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம், மரணம், பூப்புனித நீராட்டு விழாக்கள் போன்ற நிகழ்வுகளின்போது தங்கள் தங்கள் குலப் பெருமைக்கேற்ப எத்தனை கும்பங்களை வைக்க முடியும், யார் யார் இவர்களுக்குக் கடமை செய்ய முடியும் என்பவை மிகத் தெட்டத்தெளிவாகக் காட்டப்படுகின்றது. கலிங்க குல மக்களுக்கு பதின்மூன்று கும்ப முடிகளும், உலகிப்போடி குடி மக்களுக்கு பதினொரு கும்ப முடிகளும், படையாட்சி குல மக்களுக்கு ஒன்பது கும்ப முடிகளும் வேளாளருக்கு ஏழு கும்ப முடிகளும், ஏனைய சிறைக்குடிகளுக்கு தலா மூன்று கும்ப முடிகளும் வைக்கப்பட வேண்டும் என்று இந்த நன்மைக்கும் தீமைக்குமான கும்பமுடிக் கல்வெட்டு குறிப்பிடுகிறது.

இதேபோன்று கலிங்ககுல மக்களின் நன்மை, தீமை நடைபெறும் வீட்டிற்கு பதினெட்டுச் சிறைக்குடிகளையும் வேளாளர் கொண்டுபோய்விட்டு ஊழியம் செய்விக்க வேண்டும் என்றும், உலகிப்போடி குல மக்களுக்கு பன்னிரெண்டு சிறைக்குடிகளும், படையாட்சிகுல மக்களுக்கு ஒன்பது சிறைக்குடிகளும், ஊழியம் செய்ய வேண்டும் என்று இக்கல்வெட்டுக் குறிப்பிடுவதாக மட்டக்களப்பு மான்மிய ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

தற்போது இந்த முறைகள் பொரும்பாலும் அருகிவிட்ட போதிலும் கும்பமுடி வைக்கின்ற மரபும், ஓரிரு குலமக்கள் வந்து கடமை செய்கின்ற முறையும் காணப்படுகின்றது எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தவகையில் வண்ணார் (கட்டாடி), அம்பட்டர் ஆகியோர் ஊழியம் செய்வதனையும் ஏனைய குடியினர் மரணவீட்டில் இறந்தவருக்கு மரியாதை செய்யும் வகையில் கடமை செய்வதனையும் குறிப்பிட முடியும்.

இங்கு கும்பமுடி அல்லது கூரைமுடி என்பது இப்பிரதேச மக்கள் தங்கள் வீட்டில் நன்மை, தீமை நடைபெறுகின்ற வேளையில் தங்கள் குடி வளமையின் அடிப்படையில் சிறிய பெட்டிகளில் நெல் பரவி அதனுள் நிறைகுடத்தினை வைத்து அதனை தங்களது வீட்டின் முன்கூரையில் குடையின் கீழ் வைப்பதாகும்.

## குடிகளும் அவற்றுக்கான குறியடையாளங்களும்

குடியடையாளம் கூட ஒவ்வொரு குடி மக்களுக்கும் ஒவ்வொரு அடையாளம் என்ற அடிப்படையில் பின்பற்றப்பட்டு வருவதனைக் காணலாம். அதாவது இப்பிரதேச மக்கள் பொதுவாக விவசாயத்தையும், கால்நடை வளர்ப்பினையும் தமது ஜீவனோபாயத் தொழில்களாகச் செய்து வருவதனால் தங்களது சொத்துக்களைக் குறிப்பாக கால்நடைகளை அடையாளப்படுத்திக் கொள்ளும் பொருட்டும், அவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டும் இவ்வடையாளங்களைப் பேணுகின்றனர். அதாவது தமது கால்நடைகளுக்குக் குறி சுடுகின்றபோது தங்களது பெயரின் முதலெழுத்தையும் தமது குடியின் அடையாளச் சின்னத்தையும் இட்டுக் கொள்வார்கள். இதன்மூலம் ஒரு மாட்டைக் கண்டவுடனேயே இது இன்ன குடியைச் சேர்ந்த மாடென்று அடையாளம் காணமுடியும். இப்பிரதேசத்தில் இன்னுமிந்த நடைமுறை இருந்து வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.

இவ்வாறாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற குடிகளும் அவற்றுக்கான குறியடையாளச்சின்னங்களும் பின்வருமாறு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடையாளச் சின்னங்கள் பொதுவாகச் சாதியமைப்பு முறைகள் பின்பற்றப்படுகின்ற இந்தியா மற்றும் இலங்கையின் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் ஒவ்வொரு சாதிக்கான குறியீட்டுச் சின்னங்களாகவிருக்க, மட்டக்களப்பு மாவட்டத்தில் 'சாதி' என்ற கட்டுக்கோப்பினுள் 'குடி' என்ற 'குலமரபு முறை' முதன்மை பெறுவதனாலும், இம்மக்களால் குடிவழக்கு முறைகள் அதிகம் பின்பற்றப்பட்டு வருவதனாலும் இங்கு இவ்வடையாளங்கள் ஒவ்வொரு குடிக்குமான அடையாளச் சின்னங்களாகப் பேணப்பட்டு வருகின்றன. மேற்படி விடயங்களைத் தொகுத்து நோக்கும்போது மட்டக்களப்புப் பிரதேசச் சாதியமைப்பு முறையானது சிக்கல் நிறைந்த ஒன்றாகவும் அது முக்குகர் சட்டத்தை அடிப்படையாகக்கொண்டு பின்பற்றப்பட்டு வருவதனையும் இச்சாதித்துவக் கருத்துக்கள் பெரும்பாலும் கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலய நிருவாகச் செயற்பாட்டினூடாக தொடர்ந்து இப்பிரதேச மக்கள் மத்தியில் பேணப்பட்டு வருவதனையும் காணக்கூடியதாகவுள்ளது.

### இக்கட்டுரையாக்கத்திற்கு உதவியவை


1. F. X. C. நடராசா, *மட்டக்களப்பு மான்மியம்.*
2. திருநாவுக்கரசு.க, மட்டக்களப்பு- *கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்-1998.*
3. சிவசண்முகம், ஞா., *மட்டக்களப்பு மாவட்ட குகன்குல முக்குகர் வரலாறு* - ஆய்வு நூல்.
4. கனகநாயகம், அ., மட்டக்களப்பு- *கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்-1998.*
5. திமிலைத்துமிலன், *தான்தோன்றீஸ்வரர் அந்தாதி.*
6. குமாரவேல் தம்பையா, மட்டக்களப்பு, *கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக சிறப்பு மலர்-1998.*


### கோலம் ஏன் போடுகிறோம்.........?



*பசுஞ்சாணி கிருமிநாசினி. அது, கரைத்து வாசலில் தெளிக்கப்படும்போது, கிருமிகள் வீட்டுக்குள் நுழையாமல் இருக்க வழி செய்கிறது. காலை வேளையில் சூரியனின் கதிர்கள் சாணம் தெளிக்கப்பட்ட வாசலில் பட்டு வீட்டுக்குள் வரும்போது நல்ல ஆரோக்கியத்தைத் தருவதாக அமைகிறது.*

*சாணம் தெளித்து அரிசி மாவில் கோலம்போட்டு பளிச்சென்று இருக்கும் வாசலில் லக்ஷ்மிதேவி அடியெடுத்து வைக்கிறாள் என்பது நம்பிக்கை. கோலம்போட உபயோகிக்கப்படும் அரிசிமாவு சிற்றுயிர்க்கு உணவாகும்.*

*கோலத்தில் வைக்கப்படும் புள்ளிகளும் அதில் உள்ள நெளிவு சுழிவுகளும் அதைப்போடும் பெண்ணின் மனநிலையை அடையாளம் காட்டும்.*

*குனிந்து கோலம் போடும்போது நம் அவயவங்களுக்கு வேலை கொடுக்கிறோம். இடுப்பு, பாதம், கால், கைகளுக்கும் பயிற்சி கொடுக்கிறோம். பெண்களுக்கு மணமானபின் குழந்தைப் பேற்றுக்கு இது மிகவும் உதவும். வயதான காலத்தில் மூட்டு வலியைத் தவிர்க்கவும் உதவும்.*

*இப்படித் தீய சக்திகள் அண்டாமல் காப்பது, உடலுக்கு ஆரோக்கியம் அளிப்பது, சிற்றுயிர்களுக்கு உணவளித்து இரட்சிப்பது, இறை சக்திகளை அருள்பாலிக்க அழைப்பது, வீட்டிற்கு அழகு சேர்ப்பது என கோலம் போடுவதனால் பல நன்மைகள் உண்டு. அதனாலேயே நம் முன்னோர்கள் இதனைப் பழக்கமாகக் கொண்டுள்ளனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருத்தாக்கவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதம் காட்டும் வாழ்க்கைநெறி

**வே.சுபாஸ்காந்தன்,**
**விடுகைவருடம்,**
**பொருளியற்துறை.**

**"கைம்பெண்களின் கண்ணீரைத் துடைக்கவும், தாய், தந்தையற்ற குழந்தைகளின் வயிற்றுக்குச் சோறிடவும், வழிகாட்டாத தெய்வத்தையேனும் மதத்தையேனும் நான் நம்பமாட்டேன்"** என்றார் சுவாமி விவேகானந்தர்.

ஆயிரம் தெய்வங்கள் இருந்தபோதும் அவையனைத்திலும் ஓர் இறைவனைக் காண்பதே இந்துமதம். இவ்வுலகில் இறைவனை அடைந்துகொள்ளப் பல்வேறு பாதைகளைக் காட்டுகின்ற சுதந்திரமான மதமும் இந்துசமயமே. மனிதர்களின் அறிவிற்கும், அவர்களின் நிலைகளுக்கேற்பவும் உருவத்திலும், அருவத்திலும், அருவுருவத்திலும் இறைவனைக் காண்பது இந்துமதமே. பெண் சமத்துவத்தினை முதலில் எடுத்துக் கூறியதும் எமது சமயமல்லவா! இத்தகைய பல்வேறு சிறப்புக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இந்துமதம் காட்டும் வாழ்க்கை நெறியினை நோக்குவோம்.

உலகிலுள்ள மதங்கள் யாவற்றிலும் இந்துமதமே தொன்மையானது. இது தனக்குள்ளே பல பிரிவுகளைக் கொண்டிருப்பினும் முழுமுதற் கடவுளாக சிவனையே கொள்கின்றது. இருந்தாலும் ஆரம்பகாலங்களில் மனிதன் தான் வாழ்ந்த சூழலுக்கும், அறிவிற்கும் ஏற்ப பல தெய்வங்களை உருவாக்கினான். ஆனால், அவையனைத்தும் வழிபாட்டு முறையில் வேறுபட்டுக் காணப்படினும் நோக்கம் இறைவனை அடைவதாகவே உள்ளது. ஆயினும் நாம் எல்லா வழிகளிலும் சென்று இறைவனை அடைவதென்பது சாத்தியமான விடயமல்ல. எனவே, ஒரு சமயத்தின் வழியே நின்று முத்தியினைப் பெற முயற்சிப்பதே சிறந்ததாகும். அந்தவகையில் இறைவனை அடைவதற்கான இலகுவான வழிமுறையினைக் காட்டிநிற்பதே இந்துமதமாகும்.

இந்துமதத்தின் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களை இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாது. ஆகையால் சாதாரண மக்களும் இலகுவாக விளங்கும் வகையில் புராண, இதிகாசக் கதைகளின் ஊடாக அத் தத்துவக் கருத்துக்களை விளக்குகின்றது. அந்தவகையில் இந்துமத நெறியானது மனிதனின் மிருகத் தன்மையினை ஒழித்து, மனிதத் தன்மையினை ஏற்படுத்தி முத்தியடையச் செய்வதாகும். ஏனெனில், எமது சமயத்தின் அடிப்படைத் தத்துவமே அன்புநெறியாகும். இதனைத் திருமூலர்,

*"அன்பும் சிவமும் இரண் டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாரு மறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்*
*அன்பே சிவமா யமர்ந்திருந்தாரே"*

இந்துமதத்தைத் "தர்மம்" என சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதாவது வாழ்க்கையில் நாம் முழுமை அடைவதற்கான வழிமுறையாகத் தர்மம் காணப்படுகின்றது. எமது சமய வரலாற்றில் பல மகான்கள் தோன்றி நாம் முத்தியடைவதற்கான வழியினைக் கூறியுள்ளனர். இவர்கள் காட்டிய வழியின் அடிப்படை, அன்பின் வழியாக இறைவனை அடைவதாகும். இதனால் சாதாரண மனிதத் தன்மையிலிருந்து ஒவ்வொரு மனிதனையும் இறைத்தன்மைக்கு மாற்றுமுகமாக இறைவன் மனிதவடிவில் தோன்றி பேரின்பமான முத்திக்கு வழிகாட்டுகின்றான். இதற்காக அவன் எடுக்கும் அவதாரங்களே இன்று காணும் உருவ வழிபாடாகும். 'அவதாரம்' என்பது ஓர் உருவம் ஒரு நாமம் இல்லாத பரம்பொருள் மண்ணுயிருக்கு அருள்பாலிக்கும் முகமாகப் பல்வேறு பெயரில் மண்ணுலகில் தோன்றுவதையே குறிக்கும். அதனால், 'அவதாரம்' என்பதை 'இறங்கிவருதல்' எனக் கூறமுடியும்.

இந்துமதம் ஆலய வழிபாட்டினைக் கட்டாயமானது என வற்புறுத்திக் கூறவில்லை. எனினும் இறைவன் எங்கும் நிறைந்தவன் என்பது உண்மை. ஆனால், அவனை எதிலும் கண்டு வழிபடும் பக்குவம் மனிதனுக்கு இல்லை என்பதும் உண்மை. எனவே, மனிதன் மனதினை ஒருநிலைப்படுத்தி வழிபடுவதற்குரிய இடமாகவும், மக்கள் ஒன்றுகூடி தமது ஒற்றுமையைக் காட்டி நிற்கும் இடமாகவும் திகழ்வது ஆலயமாகும். ஆலயப் பிரவேசத்துக்குரிய ஒழுக்க விதிகளை இந்துமதம் வகுத்துள்ளது. எனவே ஆலயத்திற்குச் செல்லும்பொருட்டு மனிதன் பல தீயபழக்கங்களை விடுக்கின்றான். இதனால் அவனிடம் பிற உயிர்களிடம் அன்பு காட்டும் உத்தம குணம் இயல்பாகவே வந்துவிடுகின்றது. இத்தகைய காரணங்களினாலேயே இறைவனை அடைவதற்கான சிறந்த வழியாக ஆலயவழிபாட்டினை இந்துமதம் கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் யார், என்பதை உணருவோமாயின் இறைவனையே துணையாக நினைப்போமே தவிர வேறு எதையும் அவனிடம் வேண்டிநிற்கமாட்டோம். நாம் இதை மறந்து லௌகீக வாழ்க்கையின் இன்பத்திற்கு அடிமையாகி விட்டதனால்தான் எம்மைப்போலவே இறைவனையும் காண்கின்றோம். இதன் பயனே இறைவனுக்கு நாம் வழங்கும் உருவத்திருமேனியும் அவனுக்குரிய சக்தியும் ஆகும். இங்கு சக்தி என்பது மனைவி என்று பொருள் படாது. ஆனால் சக்தி அனைத்திற்கும் பெண்ணுருவம் கொடுத்து வழிபடுகின்றோம். ஆகவே இறைவன் என்பவன் ஒருவன் தான். அவனின் சக்தியே அனைத்து வடிவங்களையும் எடுக்கின்றது.

மனிதன் "மாயை" எனும் இருளுக்குள் அமிழ்ந்து காணப்படும்வரை அவனால் பரம்பொருள் எனும் பேரொளியினை அடைய முடியாது. ஆகவே இந்த மாயையான இருளுக்குள் இருந்து விடுபட வழிகாட்டுகின்ற கோல் வடிவமே குரு. அந்தக் குருதான் இறைவன். குருவானவர் ஒவ்வொரு ஆன்மாவும் பரிபூரணமான நிலையினை அடைந்து கொள்வதற்கான வழியினைக் காட்டுபவராவார். அத்தகைய வழிகாட்டலை நாம் புத்தகங்களில் இருந்து பெற்றுவிட முடியாது. இதனையே சுவாமி விவேகானந்தர் *"ஓர் ஆன்மாவை மற்றொரு ஆன்மாவினால்தான் ஊக்கப்படுத்த முடியும்"* என்றார்.

உலகில் காணப்படும் இன்ப துன்பங்களுக்குக் காரணம் மாயை எனும் இருளாகும். இந்த மாயையின் காரணத்தினாலேயே உலகமும் ஏனைய பொருட்களும் எமக்கு இன்பமயமாகத் தோன்றுகின்றன. இன்பத்தினைப் பெறுவதற்காக நாம் முயற்சிக்கும்போது நல்வினை, தீவினை நிர்ணயிக்கப்படுகின்றது. ஒருவன் செய்யும் நல்வினை, தீவினைக்கமைய மறுபிறப்பு நிர்ணயிக்கப்படுகிறது. இதனால் தீவினை நம்மைத் தொடரும்வரை பிறப்பு எனும் சக்கரத்தில் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்துக் கொண்டே இருப்போம். இதிலிருந்து விடுதலை பெறுவதற்கான வாழ்க்கைநெறியினைக் காட்டுவதாகவே இந்துசமயம் விளங்குகின்றது. இதனை மணிவாசகர் திருவாசகத்தில் மிகஅழகாக எடுத்துரைக்கின்றார்.

*"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்*
*பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி...."*

முத்தியினை அடைய வேண்டுமாயின் அனைத்தையும் துறந்து சன்னியாச வாழ்க்கையினைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்ற தவறான கருத்து எமது மக்களிடையே பரவிவருகின்றது. இது பொய்யான ஒரு வாதமாகும். ஏனெனில், முத்திநிலை அடைவதற்குச் சன்னியாசமும் ஒரு வழியே தவிர அது மட்டுந்தான் வழியென்று இந்துமதம் கூறவில்லை. லௌகீக வாழ்க்கையில் நின்று அனைத்துக் கடமைகளையும் ஆற்றுவதன் ஊடாக இறைவனை அடைய முடியும் என்றும் கூறுகிறது.

நமது சமயம் பிறப்பெனும் சக்கரத்திலிருந்து விடுபடுவதற்கு பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என நான்கு படிநிலைகளைக் கூறி அவை ஒவ்வொன்றிலும் கடைப்பிடிக்கவேண்டிய அறநெறிகளை வகுத்துக்கூறி மக்களின் வாழ்க்கையினை நெறிப் படுத்துகின்றது. எனவே, நாம் இவ்வுலகில் பிறரிடம் அன்பு காட்டி நமது கடமைகளை ஒழுங்காக மேற்கொள்வோமானால் முத்திநிலை என்பது இயல்பாகவே கிடைத்துவிடும். இதனையே எமது திருவள்ளுவர் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்றாக வகுத்து அதன் நெறிமுறைகளையும் கூறியுள்ளாரேயொழிய வீடுபேறுபற்றிக் கூறவில்லை. ஏனெனில் இம்மூன்றினையும் ஒழுக்கத்துடன் கடைப்பிடித்து வாழ்ந்தால் முத்திநிலை தானாகவே கிட்டிவிடும் என்னும் இந்துமதத்தின் தத்துவத்தின் அடிப்படையிலேயே ஆகும்.

எமது நாயன்மார்களை எடுத்துக் கொண்டோமாயின் நாயன்மார்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை நெறியில் நின்றும் இறைவனை அடையலாம் என வாழ்ந்து காட்டியுள்ளார்கள். இதனையே சேக்கிழார் பெரியபுராணத்தில் அறுபத்திமூன்று நாயன்மார்களுடைய பல்வேறுபட்ட வாழ்க்கை முறையினையும் வழிபாட்டு முறைகளையும் அழகாக எடுத்துக்கூறி முத்தியடைவதற்குரிய வழியினைக் காட்டுகின்றார். ஆகவே முத்தியடைவதற்குப் பல்வேறு வழிகளைக் காட்டுகின்றபோதும் அதில் காணப்படும் அடிப்படைத் தத்துவமே அன்புநெறியாகும்.

ஆகவே, *"வெற்றுப்பேச்சுக்கள் மட்டும் பரமதேவனை அடைந்துவிட அமைந்த சாதனமாகா. அறிவின் சக்தியும் இறைவனுக்கிறைவனை அடைய வழிவகுக்காது. வெற்றி வலிமையும் அதற்கு நெறி காட்டாது. எவனொருவன் அனைத்திற்கும் மூலமான பொருளை அறிந்தவனாகின்றானோ, மற்ற எல்லாம் நிலையற்றன என்று அறிகின்றானோ அவனையே இறைவன் வந்தடைகின்றான்"* என்றார் சுவாமி விவேகானந்தர். ஆகவே, உண்மையாக இந்துமதம் காட்டும் வாழ்க்கை நெறியினைத் தெளிவாக விளங்கிக்கொள்வோமாயின் இப் பிறப்பிலேயே நாம் பேரின்பமுத்தியினை அடைந்து விடலாம். எனவே மனிதன் தன் வாழ்வியலை இயற்கையுடன் இயைபுபடுத்தும்போது இந்துமதம் காட்டிய கடவுட்கோலம் கண்ணில் தெரியும். அதைக்காணும் பக்குவத்தை மனிதன் அடைகையில் உலகம் அமைதியாய் இயங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹோற்சவத்தின் மகிமை

மகிபினி பாலச்சந்திரன்,
விருகை வருடம்,
மெய்யியல், உளவியல் விசேடதுறை.

மனித மன உணர்வுகளை, உடல் இச்சைகளைக் கட்டுப்படுத்தி மனிதனுக்கு சாந்தியையும் அமைதியையும் அளித்து அவனை ஆனந்தப் பெருவாழ்விற்கு அழைத்துச் செல்வனவே மதங்கள். எல்லா மதங்களும் இந்த மகத்தான உண்மையை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் நதிகள்தாம்; ஆனால் இவற்றிலே சிறப்பு வாய்ந்தது இந்துமதமே! எல்லா மதங்களும் நதிகள்தாம்; எல்லா நதிகளிலும் வெள்ளம் ஓடுகிறதுதான்; ஆனால், இவற்றிலே இந்துமதம் ஒரு சமுத்திரம். ஒரு கொள்கை அல்லது ஒரு நீதிநெறி. அது எந்த மதத்திலிருந்து உதித்திருந்தாலும் எந்த மதத்திற்குச் சொந்தமாக இருந்தாலும் எந்த மதத்திலே தீவிரமாகக் கடைப்பிடிக்கப்பட்டாலும் அது இந்துமதத்திலும் உண்டு என்று உறுதியாகக் கூறும் வண்ணம் சகல கோட்பாடுகளையும் தன்னிலே கொண்டு பரந்து, விரிந்து, ஊடுருவி, எங்கும் வியாபித்து ஆழம், அகலம், நீளம் என்ற அளவுகளைக் கடந்து வளர்ந்துள்ள உலக மகா சமுத்திரம் அது என்பர் நம் பெரியோர்.

எங்கும் பரந்து விரிந்து பரவியிருக்கும் இறைவனின் திருவருளைக் குவித்துத் தரும் இடமாக ஆலயங்கள் மிளிர்கின்றன. சூரியனுடைய கதிர் எங்கும் பரவியிருந்தாலும் ஒரு வில்லையைப் பயன்படுத்தித்தான் நாம் நெருப்பைப் பெற முடியும். சூரியக் கதிர்களை ஓர் இடத்தில் குவியச் செய்வதற்கு அக் குவிவுவில்லை பயன்படுவதுபோல இறைவனுடைய திருவருளைப் பெற ஆலயங்களும் சிவாச்சாரியார்களும் அங்கு நடைபெறும் கிரியைகளும் அவசியமாகின்றன. ஒரு சூரியனிடம் இருந்து ஒரே நேரத்தில் எத்தனையோ இடங்களில் வில்லையைப் பயன்படுத்தி நெருப்பைப் பெற முடிவதுபோல் ஓர் இறைவன் அருளை ஒரே சமயத்தில் பல ஆலயங்களில் பெறமுடியும். அவ் இறைவனின் திருவருள் ஞானாக்கினியாக மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடராக எம்மை வந்தடைகிறது. ஆலயம் இறை ஒளி பரப்புகின்ற இடம் என்ற காரணத்தால் தேவஸ்தானம் என்ற சிறப்புப் பெயரைப் பெறுகின்றது.

ஆன்மா, இறைவனது அருள் ஒளியில் தன்னை லயப்படுத்திக் கொள்ளும் இடம் ஆலயம் எனப்படுகிறது. மீண்டும் மீண்டும் பிறவிப் பிணியில் பிறந்து இறந்து உழலும் ஆன்மாக்கள் தொடர்ந்தும் பிறவாமல் நிலைபெற்ற பேரின்பத்தைப் பெறவேண்டுமானால் ஆரம்பத்தில் செய்யப்படவேண்டிய அடிப்படை சரியை நெறிகளையும் அப்பர் சுவாமிகள் 'நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீ வா' என்ற பாடலில் எடுத்துக் காட்டுகிறார். தினமும் செய்ய முடியாவிடினும் பெருவிழாக்கள் விரத தினங்கள் வெள்ளிக்கிழமைகள் போன்ற நாட்களிலாவது தவறாமல் மேற் சொன்னவற்றை மேற்கொள்ள வேண்டும். இதனையே திருமூலரும்...

*'நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்*
*தேடித் திரிந்து சிவனென்று பாடுமின்'*

என கோயில்கள் பலவற்றிற்குச் சென்று வழிபாடாற்றி ஞானத்தைப் பெறவேண்டிய அவசியத்தைக் கூறியுள்ளார். எனவே ஆலயங்கள் பல இருந்தாலும் எமது ஆன்ம சுத்திக்கு அவை வேண்டியனவே ஆகும். ஆலயத்தையும் அங்கிருக்கும் இறைவனையும் பிரகாசப்படுத்துவது சிவாச்சாரியாரும் அங்கு நடைபெறும் கிரியைகளும் ஆகும்.

*'கிரியை என மருவும் அவை யாவும்*
*ஞானம் கிடைத்தற்கு நிமித்தம்...'*

என சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த நூல் செப்புகிறது. நெருப்பைப் பெறவேண்டும் என்றால் அவ் வில்லை பயன்படுவதுபோல் இறைவன் எங்கு இருந்தாலும் அவனது ஞானத்தைப் பெறுவதற்கு ஆலயம், கிரியை, சிவாச்சாரியார்கள் எனப் பல உப உதவிகள் தேவை என்பதை உறுதிப்படுத்துவதாகும். எனவே கும்பாபிஷேகம், மஹோற்சவம் போன்ற பல விழாக்களைச் செய்வதற்கு அவசியமான இடமான ஆலயத்தின் தேவையையும் இங்கு பிரதானமாக இடம்பெறும் கிரியை பற்றியும் அவற்றை நடாத்துவிக்கும் சிவாச்சாரியாரின் தொடர்பு பற்றியும் முதலில் கூறப்படவேண்டியதாயிற்று. இம் முப்பெரும் தொடர்பால் நாம் இடையறாத ஞானத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதை உணரவேண்டும்.

ஆன்மீக ஞானத்தை நாம் உயர்வாகப் பெறக்கூடிய விழாக்களுள் மஹோற்சவம் சிறப்பிடத்தைப் பெறுகிறது. தினமும் செய்யப்படும் பூஜைகள், நித்தியம் எனவும் ஒவ்வொரு மாதத்தில் அல்லது வருடத்தில் ஒரு தினத்தை முன்னிட்டு செய்யும் விஷேஷ வழிபாடுகள் நைமித்தியம் எனவும் ஒருவர் தாம் விரும்பும் சித்தியைப் பெற அபிஷேகம், வழிபாடு முதலியன செய்வித்தல் காமியம் எனவும் அழைக்கப்படும். நைமித்திய வழிபாட்டில் கும்பாபிஷேகம், மஹோற்சவம், சங்காபிஷேகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபகலசஸ்நபனம் இன்னும் பிறவும் உள்ளன. இவற்றுள் மஹோற்சவம் பற்றிய சில விபரங்களை இங்கு நோக்குவோம்.

'மஹோற்சவம்' என்னும் சொல் மஹா+உத்+ஸவம் எனப் பிரிவுபட்டு மூன்று பதங்களால் ஆகியது. 'மஹா' என்பதற்கு பெரிய, மேன்மையான, உயர்ந்த, மகிமை என்ற பல கருத்துக்கள் உண்டு. 'உத்' என்ற சொல் சிறப்பான என்ற கருத்தில் ஸவம் என்ற சொல்லை அணி செய்கிறது. வேகம் என்ற சொல் உத்வேகம் என்பதுபோல் உற்ஸவம் என்ற சொல் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. ஸவம் என்ற சொல்லுக்குத் தோற்றம் என்ற கருத்துண்டு. இதற்கு 'ஸவ இத்தியுச்சதே சிருஷ்டி' என காரண ஆகமம் கூறுகிறது. எனவே படைப்பு என்ற கருத்தையும் கூறலாம். எனவே மஹோற்சவம் என்பது மேன்மையான சிறந்த விழா எனவும் உள்ளிருக்கும் மூல மூர்த்தியின் திருவருளை வெளியில் கொண்டுவரும் விழா எனவும், இறைவனது படைத்தல் முதலாய பஞ்ச கிருத்தியங்களும் ஆன்மாக்களுக்குத் தொழிற்படுத்தும் முறைமை எனவும் பெரு வேள்வியை உள்ளடக்கியதெனவும் பலவாறு பொருள் கொள்ள முடியும்.

சாகல்யம், பாவனம், சாந்திகம், மாங்கல்யம் என நான்கு விதமாக உற்சவங்கள் ஆகமங்களில் கூறப்பட்டுள்ளன. சாகல்யம் என்பதுதான் துவஜாரோகணம் (கொடியேற்றம்) நடைபெற்று பலி, யாக பூசை, தீர்த்தம்வரை செய்யப்படும் உற்சவம் என ஸ்ரீலஸ்ரீ. தா. மகாதேவக்குருக்கள் குறிப்பிடுகிறார்.

மஹோற்சவ காலங்களில் பிரதான இடத்தைப் பெறுவது 'ஸ்தம்பம்' எனப்படும் கொடிமரமாகும். இது ஆலயங்களில் மிக உயரமானதாக நந்தி பலிபீடத்திற்குப் பின்னால் 'பூபஸ்தம்பம்' என்ற பெருந்தூண் காட்சியளிப்பதுபோல் ஆகம வழிபாட்டில் மஹோற்சவ காலங்களில் இத்தம்பம் சிறப்புப் பெறுகிறது. மஹோற்சவமும் ஒரு பெரு வேள்வி என்பதை நாம் உணரலாம். எப்படி அரசனுக்கு அவனது நாட்டின் கொடி உயர்ந்த இடத்தைக் கொடுக்கிறதோ அதேபோன்றே அந்த ஆலயத்தின் மூல மூர்த்தியின் உயர்ந்த அருளை அத்தம்பத்தில் கட்டப்படும் கொடி குறித்துக் காட்டுகிறது.

ஆன்மாவிற்கு அருளைச் சேர்ப்பதே நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால், நாம் சஞ்சித வினையால் கட்டப்பட்டு மும்மல வாசனையால் பீடிக்கப்பட்டு இருப்பதால் எமக்குத் திருவருள் கைகூடுவது அரிதாயினும் காந்த மண்டலத்திற்குள் இரும்பு வைக்கப்பட்டால் காந்தம் தானாகவே இரும்பை இழுப்பதுபோல் எமது உடல் உள்ளம் என்பவற்றை அருள் ஒளி பரவும் ஆலயம், தம்பம், யாகம், கும்பம் என்பவற்றிற்கு அண்மையில் கொண்டு செல்லும்போது தாமாகவே அவ்வருள் பற்றி இழுக்கும் தன்மையை நாம் உணரலாம். தம்பம் உயரமாக இருப்பதும் இறை அருளை பல இடங்களிற்கும் பரப்புவதற்கே ஆகும். அடிப்பாகம் 'பிரம்மபாகம்' எனவும் நடுப்பாகம் 'விஷ்ணுபாகம்' எனவும், மேற்பாகம் 'உருத்திரபாகம்' எனவும் கூறப்படும். தம்பமானது 'பதி' என்ற தத்துவத்தைப் புலப்படுத்துகிறது. கொடிச்சீலை ஆன்மாவாகவும் தர்ப்பைக்கயிறு பாசமாகவும் கூறப்படுகிறது. தம்பத்திலிருந்து கீழ் நோக்கி வரும் மஞ்சட்கயிறு திருவருள் சக்திக்குச் சமமாக ஒப்பிடப்படுகிறது. மலபரிபாகம் அடைந்த ஆன்மா சத்திநிபாதம் அடையப்பெற்று இறைவனோடு இரண்டறக் கலக்கும் தத்துவத்தை வெளிப்படுத்துவதே கொடியேற்றமாகும்.

ஆன்மாவிற்குப் பதிலாக விநாயகர் கோயிலில் எலியும் முருகன் கோயிலில் மயிலும் சிவன் கோயிலில் இடபமும் கொடிச்சீலையில் வரையப்பட்டிருப்பதை நாம் அவதானிக்கலாம். அத்துடன் பிரத்யசஷ தெய்வங்களாகிய சூரியன், சந்திரன் ஆகிய தெய்வங்களும் இரு மருங்கிலும் வரையப்பட்டிருக்கும். மேலும் கொடிச்சீலையில் கண்ணாடி, பூரண கும்பம், சாமரை, ஸ்ரீவத்ஸம், சுவஸ்திகம், சங்கு, தீபம், மேளம் முதலான மங்களப் பொருட்களும் வரையப்பட்டிருக்க வேண்டும். மங்களப் பொருட்களைத் தரிசிப்பதன்மூலம் எதிர்காலத்தில் வரும் துன்பங்கள் குறையும். இவ்வாறு கொடிச்சீலையில் வரையப்படும் ஆன்மா மந்திரங்களாலும் கிரியைகளாலும் பாவனையாலும் சுத்தமாக்கப்பட்டு கொடிமரத்திலிருக்கும் நூற் கயிற்றில் கட்டப்படுகிறது. அங்கே வரையப்பட்டிருக்கும் மூர்த்திகளின் வாகனமே ஆன்மாவாகவும் அவ் வாகனத்தின் மீதுள்ள அஸ்திரம் சத்திநிபாதம் கிடைத்தல் என்ற வகையிலும் உவமிக்கப்படுகிறது. கொடிச்சீலையாகிய ஆன்மா வேறு! இறைவனாகிய தம்பம் வேறு! என்ற வேறுபாடின்றி இரண்டும் இரண்டறக் கலந்த நிலையை நாம் உணரலாம்.

'*அஞ்ஞானத்தாணு வினோடத்து விதமானபடி*
*மெஞ்ஞானத் தாணுவினோடு அத்துவிதமாகும் நாள் எந்நாளோ...?* 'என்கின்றார் தாயுமானவர்.

எப்படியாயினும் இவ்வுலக வாழ்க்கைக்கு நல்ல போகங்களையும் மறுவுலக வாழ்வில் மோட்ஷத்தையும் தருவது மஹோற்சவம். கொடிச்சீலையில் 36 தத்துவங்கள் பூசிக்கப்படுகின்றன. இம்முப்பத்தாறு தத்துவங்களில் ஆன்ம தத்துவங்கள் 24, வித்தியா தத்துவம் ஏழு, சிவ தத்துவம் ஐந்தும் ஆகும். இதனைத் தத்துவ பூஜை எனச் சொல்லுவார்கள். உலகத்தையும், உடம்பையும் தத்துவங்கள் மூலமாகவே இறைவன் நின்று நடத்துகின்றான். இதனை உணர்த்துவதே தத்துவ பூஜை ஆகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'கொடியேற்றம்' இறைவனது 'படைத்தல்' என்ற தொழிலைக் குறிக்கிறது, 'வாகனத் திருவிழா' 'காத்தல்' என்ற தத்துவத்தையும் 'வேட்டைத் திருவிழா', 'தேர்த் திருவிழா' என்பன 'அழித்தல்' தத்துவத்தையும் 'சூர்னோத்ஸவம்' 'மறைத்தலை'யும் தீர்த்தமாடுதல், மௌனோற்ஸவம், சண்டேஸ்வர உற்ஸவம், ஆச்சாரியோற்ஸவம் என்பன 'அருளலைக்' குறிக்கும். அத்துடன் பலவித உப உற்ஸவங்களும் நடைபெறுகின்றன. வசந்தோற்ஸவம், பக்த முக்தி பாவனோஸ்வரம், ரதோற்ஸவம், சூர்னோற்ஸவம், தீர்த்தோற்ஸவம், டோலோற்ஸவம் (திருவூஞ்சல்) என்பனவும் குறிப்பிடத்தக்கவை. இவற்றைவிடத் தெப்பத் திருவிழாவும் சில இடங்களில் நடைபெறுகிறது.

மஹோற்ஸவ நாள்களில் கைலாச வாகனம், மஞ்சம், சப்பறம், தேர் என்ற பல்வேறுவிதமான வடிவமைப்புக்கள் கொண்ட ஊர்திகளில் இறைவன் வீதி வலம் வருவார். இந்திராதி தேவர்கள் மஹோற்ஸவ காலங்களில் ஆலயச் சூழலில் உலவுவார்கள். அவர்களிற்கு உணவளிக்கும் பாவனையில் எட்டுத் திக்குகளிலும் இறைவனின் பிரதிநிதியாக ஞானரூபமாக விளங்கும் அஸ்திரதேவரும் வெளிவந்து பலி இடப்படுகிறது. இந்நிகழ்ச்சி சுவாமி உலா வருமுன் நடைபெறும். வாகனம் ஒவ்வொன்றின்மீதும் சுவாமி வீதிவலம் வருவது பக்குவமான ஆன்மா இறைவனிடம் மீளா அடிமையாக இருக்க வேண்டும் என்பதற்கேயாகும். சுவாமி வீதிவலம் வரும்போது அடியார்கள் யாவரும் ஒருவித சுத்தியைப் பெறுவர். அத்தீட்சை சாம்பவ தீட்சை எனப்படுகிறது. இறைவனது ஞானக்கண் பார்வை எமக்குக் கிடைக்கின்றதென்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

கைலாசவாகனம் எமது ஆணவத் தன்மையைக் குறைப்பதாகவும், மஞ்சத் திருவிழா ஆன்ம சுகத்தினையும், சப்பறத் திருவிழா எமக்கு உயர்ந்த நல்லெண்ணத்தையும் தருவதாகக் கூறலாம். வேட்டைத் திருவிழா எமது மிருகக் குணங்களை இல்லாது செய்வதற்காகவும் அதாவது இங்கு மிருகக் குணம் என்பது கோபம், அடங்காப்பசி, கொலைத்தன்மை போன்ற தீய குணங்களை நீக்குவதாகும். தேர்த்திருவிழா மும்மலங்களையும், கன்ம வினையையும் அழித்தலாகும். அக்கினி ஜுவாலை போன்ற தேரின் மத்தியில் இறைவன் வீற்றிருந்து வருவது ஞானாக்கினியால் எமது பாவ வினைகளைச் சுட்டெரிக்கவே ஆகும். தேரில் சுவாமி வரும்போது வெளிவரும் ஞானக்கதிரை நாம் நேரடியாக அனுபவித்துத்தான் உணரமுடியும். இதனால் தேர்த்திருவிழா எனில் மக்கள் கூட்டம் படையெடுப்பதை அவதானிக்கலாம்.

அடுத்தது 'தீர்த்தம் ஆடுதல்' என்பது எமது பிறவியின் முழுமையான பலனை நாம் அடைவதாகும். புண்ணிய தீர்த்தங்கள் பலவற்றால் எமது உடம்பை நீராட்டும்போது ஆன்மாவிற்கும் குளிர்ச்சி ஏற்படுகிறது. கங்கை, யமுனை முதலான புண்ணிய நதிகளின் பெயர்களால் ஆலயச்சூழலில் உள்ள நதி, கடல் அல்லது கேணி, கிணறு என்பவற்றில் தீர்த்தோற்ஸவம் நடைபெறுகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றும் எம் வழிபாட்டில் முக்கிய இடத்தைப் பெறுகிறது. உற்ஸவ நாள்களில் பலவித சுத்திபெறும் எமது ஆன்மா, தீர்த்த தினத்தில் ஆன்மீகக் குளிர்ச்சியை அடைகிறது.

மஹோற்ஸவ பூர்த்தியாக நடைபெறும் மூன்று உற்சவங்கள் இறைவனது பரிபூரண அனுக்கிரகத்தை எமக்குத் தருகின்றன. மௌனோற்ஸவம் எனப்படும் அமைதி வருகை, சண்டேஸ்வர உற்ஸவம், ஆச்சார்ய உற்ஸவம் என்பன அருளுடன் மிகத் தொடர்புடையன.

உலகில் உள்ள அசையும், அசையாப் பொருட்களின் தோற்றத்திற்கும் உலக அமைதியின் பொருட்டும் லோக காரியங்கள் ஷேமமாக நடைபெறுவதற்கும் ஆலயங்களில் திருக்கல்யாணம் நடைபெறுகிறது. ஆன்மாவாகிய சக்திக்கும் பதியாகிய இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். இது வருடாவருடம் நடைபெறுவதன் காரணம் புதிய பிறப்பெடுக்கும் ஆன்மாக்களுக்கும் நன்மை அளிப்பதற்கேயாகும்.

*இருட்டறை மூலையில் இருந்த குமரி*
*குருட்டுக் கிழவனை கூடல் நினைந்து*
*குருட்டினை நீக்கிக் குணம் பல காட்டி*
*மருட்டியவனை மணம் புரிந்தாளே!*

எனத் திருமந்திரத்தில் திருமூலர் பாச வினையில் பட்டுழலும் ஆன்மாவை அருட் சக்தியால் சிவத்தை அடையச்செய்யும் முறையை விளக்குகிறார். ஆண்டவனுக்குச் செய்யும் திருமணம் ஆன்மாவையும் ஆண்டவனையும் பிணைக்கும் தன்மைக்கே ஆகும்.

இவ்வாறு மஹோற்ஸவ மகிமையானது இறைவனது மகிமையை எமக்கு எடுத்துத் தருவதுடன் எமது ஆன்மாவையும் புனிதப்படுத்தும் பல கிரியைகளையும் உள்ளடக்கி உள்ளது. சரியை, கிரியைகளினால் குருவின் துணை மூலம் ஞானம் கைவரப்பெற்று சித்தம் சிவமாகும். எனவே மஹோற்ஸவ காலங்களில் இறைவனானவன், சித்தமலம் அறுவித்து சிவமாக்கி எமையாளும் தன்மையை நாம் உணரலாம். ஆகவே மஹோற்ஸவமானது வருடாவருடம் ஒவ்வொரு ஆலயத்திலும் தவறாமல் செய்யவேண்டிய பெரும் புண்ணிய நிகழ்ச்சியாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமதத்தில் பெண்மை

**கௌசல்ஜா, செ.**
**விடுகைவருடம்,**
**தமிழ்த்துறை.**

**"பெண்களைப் பெருமிதம் கொள்ளச் செய்வது அழகு. அவர்களை மிகவும் பாராட்டும்படி செய்வது பண்பு. அவர்களைத் தெய்வீகமாகத் தோன்றச் செய்வது அடக்கம். உலகை உய்விப்பது அவர்களது கற்பு."**

**-ஷேக்ஸ்பியர்-**

ஆரம்ப காலத்தில் மதக்கோட்பாடுகளில் பெண்களின் நிலை மிக மோசமானதாக இருக்கவில்லை. வேதகாலத்தில் பெண்கள் கல்வி கற்றவர்களாக, சிறந்த பேச்சாளர்களாக, வேத சூத்திரங்களை இயற்றியவர்களாக, தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டவர்களாக இருந்தனர். கார்க்கி என்னும் பெண் ஞானியக்னவல்கீயர் என்னும் தத்துவ ஞானியை வாதத்திற்கு வரும்படி அழைப்பு விடுத்தாள். ஏறக்குறைய 27 பெண் ரிஷிகள் பிரம்மவாதினி என்னும் பெயர் பெற்று இருக்வேத சூத்திரங்களை இயற்றி உள்ளார்கள். பெண்கள் பூநூல் அணிந்திருந்தார்கள், சமய வழிபாடுகளை, பூஜைகளை முன்னின்று நடத்தியிருக்கிறார்கள். அக்காலத்தில் ஏன் இந்த மாதவிலக்குப் பிரச்சினைகூட முக்கிய காரணமாகக் கொள்ளப்படவில்லை. இது பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட ஒரு மூடக்கொள்கையே ஆகும். இதற்கு வேதமே சான்று.

இந்துமதம் நலிவுற்று ஏனைய மதங்கள் தலைதூக்கியிருந்த காலத்திலே இந்து மதத்திற்கு வித்திட்டவர் ஒரு பெண்ணரசியே. அவரே புனிதவதியார், இவர் ஒரு சிவநேசர். இவர் மணம்முடித்த மணவாளன் பரமதத்தன். புனிதவதியாரின் திருவருட் செயற்பாடுகள் கண்டு அதிசயித்து இவள் மானிடப் பெண்ணல்ல, இவள் தெய்வம் எனக் கருதி இவளை விட்டு நீங்கினான் பரமதத்தன். பின்னர் புனிதவதியார் இறைவனிடம் பேயுருவைக்கேட்டுப் பெற்றார். பேயுருவாக உருமாறிய பெருமாட்டிதான் நமது காரைக்காலம்மையார். இவர் அன்று நம் மதத்திற்குத் தொண்டாற்றியிராவிடின் இன்று இந்துமதமே அழிந்து போயிருக்கும். இவரைப் பின்பற்றியே பிற்காலத்தில் நாயன்மார்களும் ஆழ்வார்களும் இந்துமதத்தை எழிச்சியுறச் செய்தனர்.

இவரைத் தொடர்ந்து சமயப் புரட்சிக்கு வித்தூன்றியவர்கள் திலகவதியாரும், மங்கையற்கரசியாரும் ஆவர். புத்த சமயத்தையும், சமணத்தையும் வேரோடு பிடுங்கி சுவடே தெரியாது ஆக்கிய பெருமை இவ்விரு மங்கையர்களையே சாரும். பல்லவ மன்னன் மகேந்திரனை சைவத்திற்குக் கொண்டு வந்ததும், தம் சமயம் விட்டுப் புறசமயம் சார்ந்திருந்த தருமசேனரை சைவத்திற்கு அழைத்து வந்ததும் திலகவதியாரைச் சாரும். இந்தத் தருமசீலர்தான் பின்னாளில் திருநாவுக்கரசர் என்ற பெயர் பெற்ற தேவார முதலியார்.

பாண்டி நாட்டின் மன்னன் நெடுமாறன் சமணம் தழைக்க அருந் தொண்டாற்றியவன். அவ்வேளையிலே மங்கையற்கரசியார் திருஞானசம்பந்தப் பெருமானை வரவழைத்து மன்னனை இந்துமதத்திற்கு மாற்றிய செயல் பெண்ணின் தனித்தன்மையையும், சுதந்திரத்தையும் காட்டுகிறது.

நமது ஔவைப்பிராட்டி விநாயகரிற்கு தினந்தோறும் பூஜை செய்து வழிபட்டார். இதனால் இறைவனின் துதிக்கையினாலேயே கைலாயம் சென்ற பெருந்தகையானார். இப்பேறு வேறு எந்த ஆணுக்கும் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. *"அம்மையே அப்பா ஒப்பிலா மணியே"* என்று பெண்மைக்கு முதலிடம் கொடுத்து வாழத்துகிறது இந்துமதம். ஆணை ஒரு பாதியாகவும் பெண்ணை மற்றொரு பாதியாகவும் வைத்து ஒன்றாக்கி **"அர்த்த நாரீஸ்வரர்"** என்று வழிபடும் பெருமை இந்துமதத்திற்கே சொந்தம். அதுமட்டுமல்லாமல் அருவுருவத் திருமேனியாகிய சிவலிங்கத்தில், லிங்கத்தை சிவனாகவும் ஆவுடையாரை சக்தியாகவும் குறித்து வழிபடுவது இம்மதமாகும். பெருந்தெய்வ வழிபாட்டில் முக்கியத்துவம் பெறும் தெய்வமான சக்தியை முழுமுதற்கடவுளாகக் கொண்ட சமயம் **"சாக்தம்"**. பெண் தெய்வத்திற்கு ஆலயம் அமைத்து, ஆகம விதிப்படி பூஜை வழிபாடியற்றுவது இந்துமதமாகும். "சிவனுக்குகந்தது சிவராத்திரி தேவிக்குகந்தது நவராத்திரி" என்பதற்கேற்ப ஆண் தெய்வத்திற்கு ஓர் இரவும், பெண் தெய்வத்திற்கு ஒன்பது இரவுகளும் விழா எடுத்து வழிபாடு இயற்றுவது இச் சமயமாகும்.

மனித வாழ்வின் முக்கிய விடயங்களாக் கொள்ளப்படும் கல்வி, செல்வம், வீரம் என்பவற்றினை வழங்கும் கடவுளர்களாக முறையே சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை எனும் பெண் தெய்வங்களே குறிப்பிடப்படுகின்றனர். ஏனைய மதங்களைப் போன்று இந்து மதம் பெண்களை ஒதுக்கவில்லை. இல்லறம் எனும் நிலையினை வலியுறுத்தி அதிலே பெண்களுடன் கூடி வாழ்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல இன்பங்களையும் அனுபவித்து அதன்பின் முத்தி பெறுவதே உண்மையான பேரின்ப முத்தி எனக் கூறுகின்றது.

*"வலம் வந்த மடவார்கள் நடமாட*
*முழவதிர மழை என்றஞ்சிச்*
*சிலமந்தி அமைந்து மரமேறி*
*முகில் பார்க்கும் திருவையாறே"*

என்றெல்லாம் தேவாரங்களில் பெண்கள் பாராட்டுதலைப் பெற்றிருக்கின்றார்கள்.

இதிகாச, புராணங்களில்கூட பெண்கள் பெருமைக்குரியவர்களாகவே போற்றப்பட்டுள்ளனர். ஆண்டாள் தான் அணிந்து அழகு பார்த்துவிட்டுத் தன் தந்தையிடம் கொடுத்தனுப்பும் பூமாலையினையே கிருஷ்ணபரமாத்மா தான் அணிய விரும்புவதாகக் கூறும் கருத்தானது வைணவ சமயம் பெண்களுக்கு வழங்கியுள்ள சிறப்பினையே காட்டுகின்றது.

பெண் ஒருத்தி மனைவியாய் இருக்கும்போது மற்றொரு பெண்ணை மணத்தலாகாது, மணந்தால் துயர் பெருகும் என்பதைத்தானே சுந்தரரின் இரண்டாம் மணமும், பின் நடந்த நிகழ்வுகளும் காட்டுகின்றன. கட்டிய மனைவிக்குக் கொடுத்த வாக்குறுதி தவறின் அவர் கடவுளுக்கே தோழனாயினும் தக்க தண்டனை பெற்றுத்தான் ஆகவேண்டும் என்பதைத்தானே சுந்தரர் கண் இழந்த செயல் குறிக்கிறது. அந்த சுந்தரர் கண் இழந்தபின் கதறும்நிலை, அவர் பெண்களுடைய சொல்லுக்கு எவ்வளவு அஞ்சுகிறார் என்பதைக் காட்டுகிறது.

*"அகத்தில் பெண்டுகள் நான் ஒன்று சொன்னால், அழையேல், போகுருடா! எனத் தனியேன்"*

என அவர் அழுதும் தொழுதும் பாடும் திருப்பாட்டு மங்கையரது மாண்பினையல்லவா போற்றுகிறது.

இந்துமதத்தை உலகுக்கே எடுத்து இயம்பிய சுவாமி விவேகானந்தர் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்பதை வலியுறுத்த, ஆண், பெண் என்ற வேறுபாடு உடலால் ஏற்பட்டதே அல்லாமல் உயிரால் ஏற்பட்டது அல்ல என்கிறார். அதனால் பெண்களுக்கு மடங்களும் கல்விச்சாலைகளும் அமைக்க வேண்டும் என்று கூறியபோது அவருடைய சீடர்கள் மறுத்தனர். அப்போது விவேகானந்தர் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானம் என்பதை நிறுவினார். "வேதாந்த மார்க்கமானது, ஒரே ஆன்மா எல்லா ஜீவன்களிடத்தும் வியாபித்து இருக்கிறான் என்று முறையிடுகிறது. அப்படியிருந்தும் இவ்வுலகம் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் வேறுபாடு காட்டுவது எதனால் என்பதை அறிய முடியாதுள்ளது. நீங்கள் பெண்கள் பால் எப்பொழுதும் குற்றம் சுமத்துகிறீர்கள் ஆனால் அவர்களுடைய உயர்வுக்காக என்ன செய்திருக்கிறீர்கள்.

கடினவழிகளினால் கட்டுப்படுத்துவதற்கு ஸ்மிருதி முதலியவற்றை எழுதி ஆடவர் பெண்களை இயந்திரங்களாக்கி விட்டார்கள். உலக அன்னையின் தோற்றமாய் விளங்குகின்ற பெண்களை உயர்வடையச் செய்வதற்கு முயற்சி செய்வது மூலம் நீங்களும் உயர்வு அடையலாம் என்றார்" *(ஞானதீபம்-சுடர்-5)*

*"தாய்க்கு மேல் இங்கு ஓர் தெய்வம் உண்டோ"*

என்று பேசுவார் பாரதியார். தெய்வ நம்பிக்கை கொண்ட அவர் உலகனைத்தினையும் பராசக்தியின் தோற்றமாகவே காண்கின்றார்.

*"கோலமிட்டு விளக்கினையேற்றிக்*
*கூடி நின்று பராசக்தி முன்னே*
*ஓலமிட்டுப புகழ்ச்சிகள் சொல்வார்*
*உண்மை கண்டிலர் வையத்து மாக்கள்......"*

"ஈஸ்வரனுக்கே தேவிதான் சக்தி என்று மதவாதிகள் சொல்லும் உண்மைப் பொருளை மறந்து விடக்கூடாது. சக்தியாகிய தேவி இல்லாத விஷயத்தில் புருஷன் ஒன்றும் செய்ய முடியாதென்பது மத விவகாரங்களில் மாத்திரமல்லாது எல்லா விவகாரங்களிலும் உண்மையே ஆகும்" எனக் கூறுகிறார் பாரதியார்.

*"தசையினைத் தீசுடினும் -சிவ*
*சக்தியைப் பாடும் நல் அகங்கேட்டேன்"*

எனும் வரிகள் பராசக்தி மீது அவர் கொண்ட பக்தியினைப் புலப்படுத்தி நிற்கின்றன.

பெண்ணினத்திற்குப் பாதுகாப்பாகவும், அவர்களிற்குத் தீங்கு நேர்ந்த பொழுதெல்லாம் எடுத்துரைத்தும், எச்சரித்தும் பெண்கள் நலனைப் பேணிக் காப்பது இம்மதமாகும். எனவே சமயப் பெருவெளியில் இந்துமதம் அன்றுதொட்டு இன்றுவரை பெண் தெய்வங்களுக்கு மட்டுமல்லாமல் அதனைப்பின்பற்றி அதன்வழி நடந்த பெண்களுக்கும் முக்கியத்துவம் அளித்துள்ளமையைக் காணமுடிகின்றது.

*"ஒரு ஆலயமாகும் மங்கையின் மனது."*

*-கண்ணதாசன்-*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வணிகத் தளமாகவும் வன்முறைக்களமாகவும் மாறிவரும் வணக்க ஸ்தலங்கள்

கா. கார்த்தீபன்,
விடுகை வருடம்,
விலங்கு மருத்துவ பீடம்.

இன்று மானிடம் மரணப்படுக்கையிலே கிடக்கின்றது; மனிதாபிமானம் குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது; மனிதநேயம் மார்புப்புற்றுநோயால் அவதியுற்றுக்கொண்டிருக்கின்றது; தாம் எல்லோரும் மனித இனம் என்ற மகத்துவத்தை மறந்து இனவாத ஜந்துக்கள் இன்னுமொரு இனத்தைப் பிடித்து விழுங்கிக் கொண்டிருக்கின்றன. உலகிலே ஒரு பகுதி சதா 'இடர்பாட்டுக் கடலில்' மூழ்கி மூச்சுத்திணறிய வண்ணமும், மூச்சை நிறுத்திய வண்ணமும் இருக்கின்றது. இன்னுமொரு பகுதி இயந்திர வாழ்விற்குள் இன்பப் புதையல் தோண்டிக்கொண்டிருக்கின்றது. நாலாபுறமும் நாகரிகம் நசுக்கப்பட்டு தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கின்றது. தினமும் எத்தனை எத்தனையோ மாற்றங்களால் பூமி உருண்டை புரட்டப்பட்டு பந்தாடப்படுகின்றபோதிலும் ஒரே ஒரு விடயம்தான் ஓரளவிற்காவது அப்படியே அந்தப்பொலிவோடு இருக்கின்றது. அதுதான் அவரவர் மதங்களுக்குரிய வழிபாட்டு முறையாகும்.

'மதம்' என்பது 'மார்க்கம்' அல்லது 'பாதை' என்று கொள்ளப்படுகின்றது. அதாவது இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையிலுள்ள வெளியில் பயணிக்கின்ற வாகனத்தின் சாரதியாகக் கருதப்படுகின்றது. சடங்கு மற்றும் சம்பிரதாய முறைகளிலே மதங்களுக்கிடையில் வேறுபாடு காணப்பட்டாலும் நிறைவேற்றப்படுகின்ற நோக்கத்தின் அடிப்படையில் ஒன்றுபட்டவையாகவே இருக்கின்றன. அதனால்தான் எம்மதமும் சம்மதம் என்ற கருத்துக்கூட பரவலாகப் பேசப்படுவதோடு குறிப்பிட்ட ஒரு மதத்தவரின் வழிபாட்டு நிகழ்வுகளில் பிற மதத்தவர்களும் கலந்துகொண்டு வழிபாடுகளிலே ஈடுபடுவதைக் கண்கூடாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனாலும் அண்மைக்காலமாக புனித வழிபாட்டுத் தலங்களாகப் போற்றப்படுகின்ற இந்துக்கோயில், இஸ்லாமிய பள்ளிவாசல், கிறிஸ்தவத் தேவாலயம், பௌத்த விகாரை போன்ற வழிபாட்டுத் தலங்களிலே மேற்கொள்ளப்படுகின்ற அநாகரிக செயற்பாடுகளால் அந்தந்த மதங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களின் மதச் சுதந்திரம் வேரோடு பிடுங்கி எறியப்படுவதோடு வணக்கத் தலங்கள் வியாபார நிறுவனங்களாகவும் வன்முறைக் களங்களாகவும் மாற்றப்படுகின்ற அபாயகரமான சூழல் தோன்றி இருக்கின்றது.

குறிப்பிட்ட சில இந்துக் கோயில்களிலே அர்ச்சனை செய்வதற்காகச் செல்கின்ற பக்தர்களிடம் அர்ச்சனைத் தட்டை நீட்டுகின்ற அர்ச்சகர் நூறு ரூபாய் பணம் வையுங்கள் என்று நா கூசாமல் கேட்கின்ற நிலையும் குறிப்பிட்ட தொகைப் பணத்தைவிடக் குறைவாக வைக்கின்றபோது, தான் குறிப்பிட்ட பணத்திற்கு மேலாக வைத்தால்தான் பூசையைத் தொடங்குவேன் என்று பேரம் பேசுகின்ற இழிவான போக்கும் இறைவன் சந்நிதானத்திலே இன்னும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. இவ்வாறான சூழ்நிலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டுதான் செல்கின்றதேதவிர குறைந்தபாடில்லை. இத்தனைக்கும் அங்கே கடமை புரிகின்ற அர்ச்சகர்களுக்குக் குறிப்பிட்ட ஆலய பரிபாலன சபையினரால் ஊதியம் வழங்கப்படுவதோடு, அர்ச்சனை செய்வதற்காக ஆலயங்களுக்குச் செல்கின்ற அடியார்களும் ஆலய பரிபாலன சபையினரிடம் பணம் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொண்டதன் பின்னர்தான் இவ்வாறான கீழ்த்தரமான செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

இன்னும் அநேகமான அர்ச்சகர்களைக் கொண்டு வழிபாடுகள் நடாத்தப்படுகின்ற பெரிய ஆலயங்களிலே ஒவ்வொரு அர்ச்சகர்களும், ஏனைய அர்ச்சகர்மீது புறம்கூறி அங்கே இறை தரிசனத்திற்காக வருகின்ற பக்த அடியார்களைத் தங்களுக்குரிய வாடிக்கையாளர்களாக மாற்றிக் கொள்கின்ற போக்கும், குறிப்பிட்ட ஓர் அர்ச்சனையை இரு வேறுபட்ட அர்ச்சகர்கள் இரண்டாகப் பிரித்துச் செய்வதன் மூலம் இருவரும் பணம் கறந்துகொள்கின்ற பங்குச்சந்தை வியாபார உத்திகளும் நடைபெறுகின்ற வணிகத் தளங்களாக வழிபாட்டுத் தலங்கள் மாற்றப்பட்டு வருவது அங்கே வழிபாடுகளுக்காக வருகின்ற பக்தர்களுக்கு வேதனை அளிக்கின்ற விடயங்களாக இருப்பதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற உள்நாட்டு யுத்தத்தினால் அப்பாவி மக்களின் உயிர், உடைமைகள் பறிக்கப்படுவது வேதனைக்குரிய விடயமாகும். இன்னும் அவரவர் பிரதேசங்களில் இருந்து அவர்கள் விரட்டியடிக்கப்பட்டு அவர்களுடைய தாயகப் பிரதேசங்கள், தலங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் முடக்கப்படுகின்றன. அவற்றைச் சுற்றி முட்கம்பிகளும் மண்மூட்டைகளும் அடுக்கப்பட்டு போர்க்களத்தின் வாயிலுக்குள் அவை புகுத்தப்படுகின்றன. அங்கே இருக்கின்ற கடவுளின் உருவச்சிலையை இனிமேல் யாரும் பார்த்துத் தரிசிக்க முடியாதளவிற்கு அந்தக் கடவுளுக்கு உயர்பாதுகாப்பு வழங்கப்பட்டு அவர் ஆயுள்கைதியாக்கப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிருஷ்டித்தவனுக்கே இந்த நிலைமை என்றால், சிருஷ்டிக்கப்பட்டவனின் நிலைமையை என்னவென்று கூறிக்கொள்வது?

யுத்த மேகத்தால் வானம் சூழப்பட்டிருந்தபோது தங்கள் உயிர்களை மட்டும் காவிக்கொண்டு இறைவனின் சந்நிதானமானது யுத்தப்பொறிக்குள் சிக்கிக்கொள்ளமாட்டாது என நினைத்து கிறிஸ்தவக் கோயில் ஒன்றுக்குள் சென்று தஞ்சமடைந்த அப்பாவி உயிர்கள்கூடக் காவு கொள்ளப்பட்ட வரலாறுகளை கண நேரம் நினைத்துப் பார்க்கின்றபோது கண்ணில் எல்லோருக்கும் ஈரம் கசிகின்றதல்லவா! தீவிரவாதம் என்பது மனிதனின் சுதந்திரமான வாழ்விற்கு வேட்டு வைத்து அவர்களின் இருப்பைக்கூட கேள்விக்குறியாக்குகின்ற நிலை என்று, பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் அவ்வாறான தீவிரவாதத்தில் ஈடுபடுகின்றவர்கள் மதத்தினை ஆயுதமாகப் பயன்படுத்துவதை நாம் அண்மைக்காலங்களிலே காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தியாவிலே அவர்கள் இந்துத் தீவிரவாதிகள், இஸ்லாமியத் தீவிரவாதிகள் என்று அழைக்கப்படுகின்றார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் மற்றைய மதத்தவர்களின் வழிபாட்டுத் தலங்களைக் குண்டு வைத்துத் தகர்ப்பதையும், அங்கே வழிபாடுகளுக்காக வருகின்ற பக்தர்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்துத் துன்புறுத்துவதையும் சில வேளைகளில் அவர்களின் உயிர்களுக்கு உலை வைக்கின்ற சம்பவங்களும் இன்னும் இடம்பெற்றுக்கொண்டுதான் இருக்கின்றன.

பழங்காலத்திலே இருந்து வந்த மூட்டுவாத மூடநம்பிக்கை ஒன்று அண்மையில் இந்தியாவின் இந்து ஆலயம் ஒன்றில் நிறைவேற்றப்பட்டது. அது அபச்சாரமான விபச்சாரத்தை அனுமதியோடு ஆலயத்தில் அரங்கேற்றுகின்ற தேவதாசி முறையாகும். எட்டாம் தரத்தில் கல்வி கற்று வந்த சிறுமி ஒருத்தி மூடநம்பிக்கையின்பால் கவர்ந்து ஈர்க்கப்பட்ட பெற்றோரால் "பொட்டுக்கட்டல்" என்ற நடைமுறைக்கு உட்படுத்தப்பட்டு வியாபார விபச்சாரத்திற்காக இறைவன் திருத்தலத்திலேயே தயார்ப்படுத்தப்பட்டபோது, பொலிசார் தலையிட்டு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முனைந்ததை செய்திகள் சுட்டிக்காட்டியிருந்தன. குறிப்பிட்ட சமூகத்தவரின் சீரிய சமூக, கலாசார விழுமியங்களைப் பேணிப்பாதுகாத்து அடுத்த சந்ததிக்கும் அவற்றைக் கடத்துகின்ற புனித ஸ்தலங்களே சமூக சீர்கேட்டுக் களங்களாகப் பரிணமிக்கின்றநிலையை இச்சம்பவம் தோற்றுவித்திருப்பது மிக வேதனைக்குரிய விடயமாகும்.

மதங்கள் மனிதர்களால் உருவாக்கப்பட்டவை. குறிப்பிட்ட சமூகக் குழுவினரிடையே தனித்துவமான, சிறப்பான கொள்கைகளை விதைத்து, மதங்களை உருவாக்கிய ஸ்தாபகர்கள் புனிதர்களாகப் போற்றப்பட்டு அந்தந்த மதங்களைச் சார்ந்த பக்தர்களால் அவர்கள் வழிபடப்படுகின்றார்கள். இருந்தபோதிலும் இன்று அவ்வாறான புனிதர்களின் உருவச்சிலைகளை முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் விதத்தில் பயன்படுத்துகின்றமை அந்தக் குறிப்பிட்ட மத ஸ்தாபகர்களின் கொள்கைகளின்பால் ஈடுபாடுள்ள மற்றைய மதத்தவர்களின் மனத்தைப் புண்படுத்தும் விதமாக இருக்கின்றது.

அத்தோடு, அண்மைக்காலங்களிலே ஈராக், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் இடம்பெற்று வருகின்ற, அரசியல் ஸ்திரமின்மை, யுத்தக்குளறுபடிகள் போன்ற காரணிகள் நாளுக்கு நாள் அங்கே இருக்கின்ற இஸ்லாமியர்களின் வழிபாட்டுத் தலங்களான ஒவ்வொரு பள்ளிவாசல்களின் இருப்பையும் கேள்விக்குறியாக்குகின்ற நிலைமை தோன்றியிருக்கின்றது. ஐந்து வேளைகளிலும் தொழுகையில் ஈடுபடுவதற்காக இங்கே மக்கள் திரண்டவண்ணம் இருப்பர். அந்தச் சந்தர்ப்பங்களிலே தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டு மனித உயிர்கள் மிலேச்சத்தனமான முறையிலே பறிக்கப்படுவதோடு, அந்த வழிபாட்டுத் தலங்கள் யுத்தக்களரியாக மாற்றப்பட்டு இரத்த ஆறு பெருக்கெடுத்தோடுகின்றது. இன்னும் பாகிஸ்தான் போன்ற நாடுகளிலே இவ்வாறான வணக்கஸ்தலங்கள் தீவிரவாதிகளால் சுற்றிவளைக்கப்பட்ட பின்னர் அவர்களால் கைப்பற்றப்படுவதோடு, அவர்களின் நாசகார வேலைகளுக்குரிய களங்களாக அப்பள்ளிவாசல்களை பயன்படுத்த முனைகின்றார்கள். இந்தியாவில் இந்துமத ஆலயங்களில் திருவிழாக் காலங்களிலே ஆலயங்கள்மீது ஆயுதத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதோடு எதிர்வரும் காலங்களில் ஏனைய வழிபாட்டுத் தலங்கள் மீதும் இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்படும் என்னும் அச்சுறுத்தல்களும் விடுக்கப்படுகின்றன.

இவ்வாறு கண்மூடித்தனமாகவும், காட்டுமிராண்டித்தனமாகவும் சர்வதேச மற்றும் உள்நாட்டளவில் மேற்கொள்ளப்படுகின்ற ஆயுத மோதல்கள் நிறுத்தப்பட வேண்டுமானால் யுத்தத்தில் ஈடுபடுகின்ற தரப்புகள் இதய சுத்தியுடனான பேச்சுக்களில் ஈடுபடுவதன்மூலம் நியாயமான, நிலையான சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும். அத்தோடு வணக்கத் தலங்களிலே வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற அர்ச்சகர்களையும், அவர்களோடு இணைந்து செயற்படுகின்ற துணை ஊழியர்களையும் சிறப்பாகக் கண்காணித்து அவர்கள் தவறு விடுகின்ற சந்தர்ப்பத்தில் அக் குறிப்பிட்ட ஆலயத்திற்குரிய பரிபாலன சபையினர் அவற்றைத் தடுத்து நிறுத்துவதோடு அவர்களுக்குரிய தண்டனை நடவடிக்கைகளையும் மேற்கொள்வதன்மூலமே அன்று புனிதத் தன்மையோடு விளங்கிய வணக்கத் தலங்களை இன்றும் அந்த நிலையிலாவது புனிதத் தன்மையோடு பேணுவதற்கு வழிவகை செய்யும் என்பதை கவனத்தில் கொள்வோமாக.

"ஆத்மார்த்தமு(ம)தம் பருகி ஆலய வழிபாடு செய்வோம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியக் கலையும் ஆனந்தகுமாரசுவாமியும்

**திரவியநாதன் திலீபன்,**
**விடுகை வருடம்,**
**மெய்யியல், உளவியல் துறை.**

கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி பல்வேறு துறைகளில் உழைத்த போதிலும் இந்தியக் கலைக்காற்றிய சேவையே அழியாப் புகழைத் தேடிக் கொடுத்தன. அவருடைய கலைப் பணியானது கலை வரலாறு, கலை மெய்யியல், கலை விமர்சனம் என்ற அடிப்படையில் வளர்ந்து சென்றன. இந்தியத் தத்துவத்தின் சாரத்தினைக் கலைகளினூடாக வெளிப்படுத்தினார். இந்தியக் கலாசார மறுமலர்ச்சிக்குக் கலைத்துவ விழிப்புணர்ச்சிக்கு மட்டுமல்ல உலக கலாசாரத்திலேயே, உலகக் கலை வரலாற்றிலேயே ஒரு புதிய மறுமலர்ச்சிக்கு உதவியவர் கலாயோகி ஆவார்.

ஒரு செயலைத் திறம்படச் செய்பவரை 'யோகி' என்கிறது கீதை. அதேபோல் குமாரசுவாமி திறம்படவும், உள்ளுணர்வோடும் இந்தியக் கலைகளை விளக்கியுள்ளார் என்பதனால் இவருக்கு "கலாயோகி" என்ற பெயர் ஏற்படலாயிற்று. இவர் கலை தொடர்பாகப் பல நூல்களையும் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

தெற்காசியாவின் கலாசாரத்தைப் புரிந்துகொள்ள முயலும் ஐரோப்பியர்களுக்கும் - வட அமெரிக்கர்களுக்கும் குமாரசுவாமியின் எழுத்துக்கள் மிகவும் உறுதுணையாக இருந்தன. அவரது பங்களிப்பு பற்றிய ஆய்வில் மேற்கில் அவர் ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரியது. கீழைத்தேயக் கலைகளை கீழைத்தேசத்திற்கு அறிமுகப்படுத்தியது மட்டுமல்லாமல் மேலைத்தேசத்தோடும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இன்னும் இவருடைய ஒப்பியல் நோக்கும் ஒருமைப்பாட்டு உணர்வும் அவரை சர்வதேச வாதியாகப் பரிணமிக்கச் செய்தது.

கலாயோகியின் கருத்துப்படி இயற்கையை வர்ணிப்பது இந்தியக் கலைகளின் நோக்கமல்ல. ஓர் இந்தியச் சிற்பமானது ஒருவரை மாதிரிக்கு வைத்துச் செய்யப்பட்டதாகக் கூற முடியாது. இந்தியக் கலைஞன் இயற்கைக்குப் பின்னால் இருக்கும் நிலையான பொருளையே உருவாக்க முயன்றான். இந்தியக் கலைகள் தெய்வாம்சம் பொருந்தியவை. யோக நிலை கைவரப்பெற்ற கலைஞர்களால் படைக்கப்பட்டவை. அதனை விளக்கிப் பல நூல்களையும் எழுதினார். இன்னும் ஒரு சிற்பத்தினைச் செதுக்குபவர் இறைபக்தி, நம்பிக்கை உடையவராகக் காணப்படல் வேண்டும். அத்தோடு சிற்பத்தினைச் செதுக்கும்போது சிற்பம் தொடர்பான புராணக்கதையைத் தெரிந்திருத்தல் வேண்டும். அப்போதுதான் அதன் உண்மைத் தன்மையைப் புலப்படுத்த முடியும்.

மேலும் கலையையும், கலையின் அர்த்தத்தையும் பற்றிய தன் அடிப்படைக் கொள்கைகளை நிரூபிப்பதற்குத் தெற்காசிய கலாசாரத்தைவிடச் சிறந்தது எதுவுமில்லை என உணர்ந்து கொண்டவர் கலாயோகி. மேலைநாட்டுக் கலைக்கு அந் நாட்டுச் சிற்பிகள் சிறந்த மனிதத் தன்மையை அளித்துள்ளனர். ஆனால் இந்தியக் கலைஞர்கள் அவர்களின் கலைப் படைப்புகளுக்குக் கருத்தைக் கவரும் தெய்வீகத் தன்மையைக் கொடுத்துள்ளார்கள். இதனால்தான் ராஜாஜி பின்வருமாறு கூறுகிறார்.

"Amoung few who saw beauty and the from of God in beauty Ananda Coomaraswamy ranks high. He was a great man and saw many thinks which did not see".

குமாரசுவாமி இந்தியச் சிற்பங்களை மேனாட்டுச் சிற்பங்களுடனும் ஒப்பிட்டு ஆராய்ந்துள்ளார். இந்த வகையில் மேனாட்டுச் சிற்பங்களைப்போல் இந்தியச் சிற்பங்கள் உடலுறுப்பு, சாஸ்திர அமைப்புக்கேற்ப அங்க அமைப்புக்களையும், உறுதியான நரம்புகளையும், மனித அழகையும் முகபாவத்தையும் கொண்டிருக்கவில்லை. சாதாரண பொம்மைகளாகவே இவை இருக்கின்றன என மேற்கு நாட்டினர் கருதி வந்தனர்.

மேலும், மேலைத்தேசக் கலைப் படைப்புக்கள் மனிதனின் சாதாரண உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய முப்பரிமாணமுள்ள படைப்புக்களே! அவற்றில் உயிர்த் துடிப்பையோ, உள்ளத்தின் உணர்ச்சிகளைக் காட்டும் முக பாவங்களையோ காண முடிவதில்லை.

கீழைத்தேசக் கலைகள் குறியீட்டு நோக்கிலும், அரூபத் தன்மையும், அலங்காரச் சிறப்பும், ஆத்ம உணர்ச்சி வெளிப்பாடும் கொண்ட இலட்சியக் கலைப் படைப்புக்களாகும்.
இவைகளிற் காணப்படும் அங்க அமைப்பும், சாயலும், கால்களின் நிலையும், கைகளின் முத்திரைகளும் மனிதத் தன்மைக்கு அப்பாற்பட்ட அரும்பெரும் தத்துவங்களை விளக்குவனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலே ஓர் இனத்தின் அனுபவத்தை வெளிப்படுத்தும் பொருளாகவே கலை அமைகின்றது. அதனால், முழுச் சமூகத்திற்குரியதாக, சமூகத்தின் வெளிப்பாடாகக் கலையுள்ளது. இன்னும் கலாயோகி, கிரேக்கத் தெய்வங்களின் உருவங்கள் சிறந்த இலட்சணங்கள் பொருந்திய மனித உருவத்தைப்போல் செய்யப்பட்டவை. அவ்வுருவங்களின் தசை, நரம்பு, விலா முதலிய உறுப்புக்கள் பார்ப்பவர் மனதைக் கவரத்தக்க முறையில் அமைக்கப் பெற்றவை. ஆனால் இந்திய உருவங்கள் அப்படி அமைக்கப்பெறவில்லை. அவை கை, கால்களின் நரம்புகள் பொருத்துக்கள் தோன்றப்பெறாமல் அமைக்கப்பட்டவை. இந்திய உருவங்கள் சடத்தன்மையை உணர்த்தாமல் தெய்வத் தன்மையை வெளிப்படுத்துவன என்பதோடு, அவை தெய்வாம்சம் பொருந்திய கலைஞர்களால் படைக்கப்பட்டவையாகும் போன்ற கருத்துக்களைத் தனது ஒப்பியல் ஆய்வின் மூலம் வெளிக்கொணர்ந்தார்.

குமாரசுவாமி எழுதிய நூல்களில் மிக முக்கியமானதொன்று சிவானந்த நடனமாகும். இந்நூலில் அவர் சிவ நடனத்திற்கு எழுதிய குறிப்பு மிகவும் அற்புதமானதாகும். இறைவனின் பஞ்ச கிருத்தியத்தை வெளிக்காட்டும் சிவ நடனத்தை விளக்கி கலாயோகி எழுதிய கட்டுரைகள் இந்தியக் கலைகளின் சிறப்பை உலகிற்கு முதன்முதலில் அறிமுகப்படுத்தினார். சிவபெருமானின் ஆடல்கள் எல்லாவற்றிற்கும் பொதிந்துள்ள ஆழமான கருத்து ஒன்றேயாகும். அதுவே இறைவனின் பேராற்றலை வெளிப்படுத்துகின்றன.

மேலும், நடராஜர் உருவ அமைப்பு விஞ்ஞானம், சமயம், கலை என்பவற்றோடு பின்னிப் பிணைந்த ஒன்று. ஒரு குழுவிற்கோ, இனத்திற்கோ மட்டும் அமைதி தராமல் உலகனைத்துமுள்ள தத்துவஞானி, நுகர்வோன், கலைஞன் ஆகியோருக்கு எக்காலத்திற்கும், எந்த நாட்டுக்கும் ஏற்புடைத்தான கருத்தை நடராஜர் உருவம் வழங்குகிறது என்பதாகும். நடராஜத் தத்துவத்தில் புதைந்துகிடக்கும் விஞ்ஞான உண்மைகளையும், ஆனந்த இரகசியங்களையும் திருமூலர் முதலிய மெய்ஞானிகளுடைய பாடல்கள்மூலம் உலகத்திற்கே காட்டியவர் குமாரசுவாமி ஆவார். அவர் எழுதிய "Dance of Siva" என்ற நூல் கலை உலகத்திலே ஒரு பேரிலக்கியமாக எல்லோராலும் கருதப்பட்டு பாராட்டப்பட்டு வருகிறது எனலாம். கலாயோகிக்கு எதிராக சில விமர்சனங்களும் உள்ளன. அதாவது இவருடைய கலைப் பாணியில் பிளேட்டோவின் செல்வாக்கு காணப்படுகிறது எனக் கூறுவோரும் உள். எது எவ்வாறாக இருந்தாலும் கீழைத்தேயக் கலை வளர்ச்சியில் கலாயோகி ஆனந்த குமாரசுவாமியின் பங்கு விதந்து குறிப்பிடத்தக்கதாகும்.

"வாழ்வின் அணியாகவும் தாழ்வின் உறுதுணையாகவும் விளங்குவது கல்வி"
-அரிஸ்ரோட்டில்-

**உசாத்துணை நூல்கள்**


1. ஆனந்த குமாரசுவாமி, (2000), 'சிவானந்த நடனம்', தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம், சென்னை.
2. அம்பிகைபாகன், (2006), 'கலாயோகி ஆனந்த குமாரசுவாமி' குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
3. இந்து தருமம் - 1995/1996.
4. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி – 02.


***'வெகுமதிகள் ஆயிரம் செய்வதில் அரைக்காசு***
***வேளை கண் டுதவல் நன்று'***
*- குமரேசர் சதகம் -*
என்னதான் பெரிய தான தருமங்கள் செய்தாலும், ஒருவருக்குத் தேவையானபோது செய்கின்ற உதவியே நன்மை பயப்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானமும் வாழ்வும் (Meditation & life)

ச.செல்வநாயகம்,
விடுகை வருடம்,
பொருளியல் துறை.

அன்றையகால மனிதன் தனது தேவையைமட்டும் நிறைவு செய்தால் போதுமென வாழ்ந்து வந்தான். ஆனால், இன்றைய மனிதனோ தனது தேவைகளுக்கு அப்பால் பொன், பொருள், புகழ் போன்றவற்றைச் சேர்க்கும் பணியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கின்றான். என்ன செய்வது? இது அவனது சதியல்ல. அவ்வாறு பொன் பொருளோடு வாழும் மனிதர்களைத்தானே சமூகம் சற்றேனும் திரும்பிப்பார்க்கும் நிலையில் உலகம் கெட்டுக் கிடக்கின்றது. இதனால், மனிதனது ஆசைகள் அதிகரித்துக்கொண்டு போவது மட்டுமன்றி அவனது எண்ணங்களும் நிமிடத்திற்கு நிமிடம் எங்கெங்கோ அலைபாய்கின்றது. இவ்வாறான எண்ணங்களின் அலைமோதலின் மத்தியில் மனங்கள் பல்வேறு கஷ்டங்களையும், பாவங்களையும் சுமக்கின்ற தொட்டியாக மாறிவருவதனைக் காணலாம். இந்த இயந்திரமயமான யுகத்தில் யாரும் தமது மனதினைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதாயில்லை. இதனால்தான், "அவனுக்கு மனசே இல்லையா, இப்படிக் கொடுமை செய்கின்றான்" என்னும் அறைகூவல்கள் காதுகளைத் தாக்குகின்றன. நவமனிதன் தனது மனம் பற்றியும், தனது செயற்பாடுகளால் தன்னைச் சூழவுள்ளவர்களது மனங்களுக்கு ஏற்படுகின்ற தீங்குகள் பற்றியும் சிந்தித்துச் செயற்படுபவனாக இருந்தால் உலகம் சுதந்திரம் பெறுவது சுலபம்.

மனங்களை மாசுபடச் செய்யாது, ஏனையோரை மகிழ்விப்பனவாக மாற்றுவதே தியானமாகும். தியானம் என்பது உண்மையைக் கண்டுகொள்வதனைக் குறிக்கும். அதாவது, நமது மூளை, மனம், இதயம் என்பன எவ்வாறு செயற்படுகின்றன, எமது எண்ணங்கள் எம்மை எங்கே அழைத்துச் செல்கின்றன, போன்றவற்றில் உண்மைத்தன்மையைக் கண்டுகொள்வோமாயின் அனைத்து விடயங்களிலும் உண்மையினை உணரலாம். இதனால் தேவையில்லாத குழப்பங்கள் நீங்கி மனம் அமைதி பெறும். இவ்வாறு மனம் அமைதியடையும் நிலையினையே தியானம் தருகின்றது.

தியானங்களில் பல வகையுண்டு. இவற்றுள் 'ஆழ்நிலைத் தியானம்' மிகவும் பயனுறுதி வாய்ந்தது. அதாவது, "புறப்பொருளின் மேல் அலைகின்ற மேல்மனதினை ஓர் ஒலியின் வாயிலாக ஆழ்நிலைக்குக் கொண்டு சென்று மெய்யுணர்வு பெறச்செய்வதே ஆழ்நிலைத் தியானம்" என கு. கிருஷ்ணன் அவர்கள் குறிப்பிடுகின்றார். மேல்மனம் கடலின் மேற்பரப்பு அலைகளைப் போன்று அலைமோதிக்கொண்டே இருக்கும். ஆழ்மனமோ அவ்வாறன்றி கடலின் அடிப்பகுதியில் நிலவும் அமைதிபோல் சாந்தமாயிருக்கும். இதனால், தியானத்தின் மூலமாக மேல்மனதில் எழும் எண்ணங்களை ஆழ்மனதிற்குக் கொண்டுசென்று பகுத்துணரும்போது மனித மனங்கள் அமைதி பெறுகின்றனவென விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

பிற தியானங்கள் இரண்டு வகைப்படும்.

1. மனதைக் கட்டுப்படுத்திச் செய்கின்ற பயிற்சி முறை
2. ஒன்றைப்பற்றி விரிவாகச் சிந்திக்கின்ற பயிற்சி முறை

இவையிரண்டுமே மேல்மனதில் இடம்பெறுபவை. அதாவது ஒரு பொருளின்மீதோ அல்லது கருத்தின்மீதோ மனதை வலுவாக ஈடுபடச்செய்து அதன்மேல் கருத்தூன்றி நிற்கின்ற பயிற்சி முறை இதுவாகும். இவ்வாறு ஒரு பொருளின்மீது எண்ணத்தைச் செலுத்துகின்ற தியானம் எதுவித பயனுமற்றது. பந்தினை நீரினுள் அமிழ்த்திவைத்திருக்கும்வரையே அது நீரினுள் இருக்கும். சற்றேனும் கையினை எடுத்துவிட்டால் மறுகணமே வெளிவந்துவிடும். எனவேதான் மனதைக் கட்டுப்படுத்திச் செய்கின்ற தியானம் நீண்டகாலம் நிலைத்திருக்க மாட்டாது என்கின்றனர். இவ்வாறான பலாத்காரமான முயற்சியானது உடலையும், மனதையும் சோர்வுறச் செய்வதுடன் சக்தியும் வீண்விரயமாகும். ஆனால், ஆழ்நிலைத் தியானம் எதுவித முயற்சியும் இன்றித் தானாகவே இடம்பெறும் என்று மகரிஷி கூறுகின்றார். அதாவது எமது செயல்களில் உண்மையினைக் கண்டறியும்போது மனம் தீங்கு செய்யாது ஓய்வுபெறும்.

தியானம் செய்வதற்கு எந்தத் தகுதிவிதிகளும் (Criteria) தேவையில்லை. ஆனால் தியானம் செய்வதற்குமுன் ஒருவன் தன்னகத்தே நற் பண்புகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். இதனூடாக உண்மைகளைப் பகுத்துணரும்போது காண்பவனுக்கும், காணுகின்ற பொருளுக்கும் இடையிலான இடைவெளி நீங்கி இரண்டும் ஒன்றாகின்றது. இவ்வாறன்றி இரண்டும் வேறுவேறாகக் காணப்படும்போதுதான் பிணக்குகள் தோன்றுகின்றன. எனவே, மனம் ஒரு நிலைப்பட்டு சாந்தமடைவதனையே தியானம் என்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழ்நிலைத் தியானம் ஒரு சிகிச்சை முறையாகவும் காணப்படுகின்றது. நோய்களால் துன்புறும் வேளைகளில் விஞ்ஞான மருந்துகளின் தாக்கம் உடலில் தங்குவதனால் அது மேலும் சில பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். ஆனால், ஆழ்நிலைத் தியானத்துடன் யோகாசனப் பயிற்சிகளைச் செய்துவந்தால் எதுவித பின்விளைவுகளும் இன்றி உடலும் மனமும் ஓய்வுபெறும். தியானத்தின் மூலம் கிடைக்கின்ற ஓய்வின் மூலமாக களைப்பு, உறக்கமின்மை, கவலை என்பன நீங்குதல், தோலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்தல், இரத்த அழுத்தம், மன அழுத்தம், ஆஸ்துமா என்பன குறைவடைதல் போன்ற நன்மைகள் கிட்டுமென Dr. Robert Keith Wallace என்பவர் குறிப்பிடுகின்றார். இவ்வாறான நோய்களைத் தீர்ப்பதனூடாக மனவுறுதி பெற்று வாழலாம்.

தியானமானது ஆண்கள், பெண்கள் இருவருக்கும் கட்டாயம் தேவையான ஒன்றாகும். இருந்தபோதிலும், பெண்களைப் பொறுத்தவரையில், அவர்கள் பல்வேறு வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுப்பவர்களாக இருப்பதனால் தியானப் பயிற்சி இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. பெண்கள், வீட்டு நிர்வாகம், கணவன் மற்றும் குழந்தைகளைக் கவனித்தல் போன்ற கடமைகளை ஆற்றுகின்றபோது பல்வேறு மன அழுத்தங்களுக்கும் உட்படும் சூழ்நிலையில் அவர்களுக்கு மேலதிகமான மனவலிமை தேவைப்படுகின்றது. ஆதலால் பெண்கள் தியானம் செய்வதனூடாக இம் மனவலிமையினைப் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு கர்ப்பமுற்றிருக்கும் போதிலும் அதிக ஓய்வும் சக்தியும் தேவைப்படுவதனால், அவர்களுக்குத் தேவையான ஓய்வினைத் தியானத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்கள் தியானம் செய்வது குறைவு. அத்தோடு சில பெண்கள் தனது கணவன் தியானத்தில் ஈடுபடுவதனையும் விரும்புவதில்லை. இதற்குக் காரணம் கணவன் தியானம் செய்தால் அவர் இல்லறத்தில் பற்றின்றி தன்னையும் குடும்பத்தையும் விட்டு விலகிவிடுவார் என்ற அச்சமே! ஆனால், இவ் அச்சம் அர்த்தமில்லாத ஒன்றாகும். ஆண், பெண் இருபாலாரும் தியானம் செய்து பயன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இதனைப்போலவே மாணவர்களைப் பொறுத்தவரையிலும் ஆழ்நிலைத் தியானம் செய்வது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஏனெனில் இன்றைய நிலையில் மாணவர்களுள் சிலர் தகாத நடத்தைகள், தீய பழக்கவழக்கங்கள் என்பவற்றால் கட்டுண்டு கிடக்கின்றார்கள். அத்தோடு, மாணவர்களுக்குப் பெறுமதிமிக்க வளமாக விளங்கும் ஞாபக சக்தியினை விருத்தி செய்து தீய செயல்களில் இருந்து விடுபட இத் தியானம் அவசியமானதாக விளங்குகின்றது. குறிப்பாக குறிப்பெடுப்பதில் ஒரு மாணவனுக்கு 40 வீதமாக இருக்கும் நினைவாற்றலை, 28 மாத தொடர்ச்சியான தியானத்தின் பின்னர் 60 வீதமாக உயர்த்த முடியும் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன (K.Krishnan, 2004). எனவே, பாடசாலைக் காலங்களில் மாணவர்களுக்கு தியானப் பயிற்சியினை ஊக்குவிப்பதன்மூலம் சிறந்த கல்விமான்களையும் ஒழுக்கசீலர்களையும் ஒருங்கே பெறமுடியும் என்பது திண்ணம்.

தியானத்தின் மூலம் அதிக நன்மைகள் கிட்டினாலும், தியானத்தை நன்மை கருதி மாத்திரம் செய்யாமல், வாழ்வின் அன்றாட கடமைகளுள் ஒன்றாகக் கருதிச் செய்யவேண்டும். தியானத்தினால் விளைந்த நன்மைகளை விஞ்ஞானிகள் பல்வேறு ஆதாரங்கள் மூலம் நிரூபித்துள்ளனர். ஆறுமணி நேரம் நாம் உறங்கும் போது 8% $O_2$ குறைவடைவதாகவும், 10 நிமிடம் தியானம் செய்யும்போது 16% $O_2$ உடலுக்குக் கிடைப்பதாகவும், அது ஓய்வினை அளிப்பதாகவும் டாக்டர் Robert keith Wallace குறிப்பிடுகிறார். அதேபோல் டாக்டர் Herbert Benson அவர்கள் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 22 நபர்களை அடிப்படையாகக் கொண்டு செய்த ஆய்வின்மூலம் 63 வார தொடர்ச்சியான தியானத்தினால் உயர் அழுத்தம், குறை அழுத்தம் (Low Presure) என்பன சமப்படுவதாகக் குறிப்பிடுகின்றார். அத்தோடு தொடர்ந்து தியானம் செய்யும்போது இதயத்துடிப்பு குறைவடைவதால் இதயத்தின் வேலைப்பழு குறைந்து இதயம் ஓய்வினைப் பெறும் எனவும் குறிப்பிடுகின்றார். இது மட்டுமன்றி, 'ஆஸ்த்துமா'வால் பாதிக்கப்பட்டவர்களுள் 100 க்கு 74 பேர் தியானத்தின்மூலம் நன்மை பெறுவதாக புள்ளிவிபரங்கள் குறிப்பிடுகின்றன. இதேபோல், தீய பழக்கத்திற்கு அடிமையானவர்களையும் முறையான தியானப் பயிற்சிமூலம் மீட்டெடுக்கலாம் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. அதற்கு உதாரணமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். தியானத்தின் முன் சிகரட் பழக்கத்திற்கு அடிமையாய் இருந்த 88/100 பேரில் 22 பேர் 21 மாதகால தியானப் பயிற்சியின் பின் அப் பழக்கத்தினைக் கைவிட்டனர். அதேபோல குடிப்பழக்கத்திற்கு அடிமையான 18/100 பேரில் 16 பேர் 21 மாத தியானப் பயிற்சியின் பின் அதனைக் கைவிட்டனர். போதை மாத்திரை பயன்படுத்திய 76 பேரில் 70 பேர் 9 மாதங்கள் காலையும் மாலையும் தியானப் பயிற்சி செய்ததில் அதனைக் கைவிட்டனர்.

இவ்வாறிருக்க, தியானம் நிம்மதியான தூக்கத்திற்கும் வழிவகுக்கின்றது. ஓயாது சுழலுமிந்த இயந்திரவுலகில் பலருக்குத் தூக்கம் ஒரு பிரச்சினையாக உள்ளது. அதாவது நிம்மதியான தூக்கத்திற்காகப் பல மணி நேரம் போராடவேண்டியிருக்கின்றது. குறைவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறக்கத்தினால் முழுநாள் வேலையும் அலங்கோலமாகிவிடுகின்றது. அக் குறையினைத் தீர்ப்பதற்காகச் சிலர் தூக்க மாத்திரையைத் தொடர்ந்து பயன்படுத்தி வருகின்றனர். இது உடல் நலத்திற்கு மிகவும் கேடானது. அவர்கள் தியானம் செய்வதனூடாக நிம்மதியான தூக்கத்தினை அடையலாம் என டாக்டர் Ronald Er. Miskiman என்பவர் கூறுகின்றார். அதாவது 1மணி 15 நிமிடங்கள் கழித்துத் தூங்குபவர்கள் தொடர்ந்து 30 நாட்கள் தியானம் செய்வதனூடாக 15 நிமிடங்களிலேயே தூங்கிவிடுவதாக ஆய்வின்மூலம் கண்டுள்ளனர். இதுபோல தியானத்தின் மூலம் ஆளுமை விருத்தி, நினைவாற்றல் அதிகரித்தல், தோலின் நோயெதிர்ப்புச் சக்தி அதிகரித்தல், தீயபழக்கங்கள் நீங்குதல், சமுதாய மாற்றங்கள் போன்றவற்றில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளமை (அமெரிக்கா உட்பட உலகம் முழுவதும்) ஆதாரபூர்வமாக நிரூபிக்கத்தக்கதாகும்.

எனவே, ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது தியானத்தின்மூலமான நன்மைகளின் பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது. தியானத்தை அனைவரும் வயது வேறுபாடின்றிக் கடைப்பிடிக்கலாம். ஆழ்நிலைத் தியானம்மூலம் அனைத்து விடயங்களிலும் உண்மையினைக் கண்டுகொள்வோமாயின் எம் மனங்கள் அலைபாயாது அடிக்கடல்போல் அமைதி பெறும். அந்நிலையை எய்திவிட்டால் உலகம் அனைத்தும் எமக்கு பசுமையும் மகிழ்ச்சியும் கொடுப்பதாய் மாறும். வாழ்வில் கவலை, கஷ்டம், மன அழுத்தம், தொல்லைகள் நீங்கி சகலரும் சந்தோசமாக ஒருவருக்கொருவர் உதவி வாழலாம். தியானத்தின் உதவியுடன் இயந்திர உலகிலும், இரைகின்ற வெடிகளிலும் மொட்டு மலர்வதுபோல் சத்தமின்றி மனம் மலருமென்பதில் ஐயமில்லை.

**பதினாறு பேறுகளும் அருள்வாய்.......**



**கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்**
**கவடு வாராத நட்பும்**
**கன்றாத வளமையும் குன்றாத இளமையும்**
**கழுபிணி இலாத உடலும்**
**சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்**
**தவறாத சந்தானமும்**
**தாளாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்**
**தடைகள் வாராத கொடையும்**
**தொலையாத நிதியமும் கோணாத கோலும்**
**ஒரு துன்பமில்லாத வாழ்வும்**
**துய்யநின் பாதத்தில் அன்பு முதலிப் பெரிய**
**தொண்டரொடு கூட்டு கண்டாய்**
**அலையாழி அறி துயில்கொள் மாயனது தங்கையே**
**ஆதி கடவூரின் வாழ்வே**
**அமுதீசர் ஒரு பாகர் அகலாத சுபவாணி**
**அருள்வாய் நீ அபிராமியே!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் சைவம்

**சிவராணி சதாசிவம்,**
**பல் மருத்துவ விஞ்ஞானபீடம்.**

"மனிதனில் மறைந்து கிடக்கும் தெய்வீகத்தையும், அதன் தன்மையையும் வெளிப்படுத்துவது சமயம்" என சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். சைவசமயம் ஒரு வாழ்க்கை நெறியாகும். மனிதர்களை வையத்தில் வாழ்வாங்குவாழ வழி சமைத்துத் தருவது தொன்று தொட்டுப் பேணிவரும் எமது வாழ்க்கைச் சமயமாகும். சமயம் என்றால் வழி, பாதை, நெறி, மார்க்கம் என்று பொருள்படும்.

வாழ்க்கையில் சைவம் எனும்போது சிவத்தைச் சார்ந்து நின்று தெய்வீகப் பண்புகளையும், அதன் இயல்தகுகளையும் வாழ்க்கையோடு இணைத்து வாழ்தலாகும். உண்மை, அன்பு, நீதி, நேர்மை, தர்மம், சாந்தம், அழகு, நன்மை, இன்னா செய்யாமை முதலியன சிவம் சார்ந்த பண்புகள். மனிதன் மனிதப் பிறவியை எடுத்ததனால்மட்டும் மனிதனாகி விட முடியாது. சிவம் சார்ந்த மனிதப் பண்புகளை வாழ்க்கையில் பேணி நடந்து கொள்ளும் போதே மனிதனாகின்றான்.

சடங்குகள், கிரியைகள், வேள்விகள், விரதங்கள், விழாக்கள் பண்டிகைகள், சம்பிரதாயப் பழக்க வழக்கங்கள், பூசை வழிபாடுகள் முதலியன நமது சமய வாழ்க்கையில் பெரிதும் இடம் பெறுகின்றன. அவை சமய வாழ்விற்கு வழிகோல உதவும் சாதனங்களாகும். அவை மனிதத் தன்மைகளைப் பெற்று மனிதராக வாழ்வதற்கு உதவுகின்றன.

தனியாள் நல்லொழுக்கமுடையவராக மாற்றம்பெறும் அளவுக்குச் சமூகம் ஒழுக்க நிலையில் உயரும். சமயம் காட்டும் நெறியில் செல்பவர்களே நல்லொழுக்கம் உடையோராகத் திகழ்கின்றனர்.

ஒழுக்கமான வாழ்க்கையை வாழ்பவர்களே இறைவனை அடைய முடியும் எனச் சைவம் வலியுறுத்துகிறது. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் வாழ்க்கைப் பயன்கள். அவற்றை அடைவதற்குச் சைவநெறி காட்டும் பாதையில் நாம் வாழவேண்டியது அவசியமாகும். சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன. அவை பற்றிய நூலறிவு மட்டும் போதாது. அந்த மார்க்கங்களில் நின்று நாம் ஒழுகுதல் வேண்டும். கல்விப் பயன் கற்றபடி ஒழுகுதலாலேயே அடையப்படுகிறது. 'கற்றாங்கு அழகு' என்பது ஆன்றோர் கூற்று. அறநெறியில் நின்று தத்தம் கடமைகளை ஒழுங்காகச் செய்தல் ஆன்ம விடுதலைக்கு வழி எனச் சமயம் காட்டுகிறது. பொறுப்புக்களை அலட்சியம் செய்யாது அகமும் புறமும் தூய்மையாக விளங்கும் போதே வாழ்வு சிறக்கும். அதனால் மனத்தூய்மை, மொழித்தூய்மை, மெய்த்தூய்மையுடையவராய் வாழ முயல வேண்டும்.

பொறாமை, ஆசை, கோபம், செருக்கு, பகைமை உணர்வு என்பவற்றை மனதிலிருந்து அகற்றி விடுவதன்மூலம் மனம் தூய்மை பெறுகின்றது. தூய்மையான மனதில் தோன்றுவன நல்ல எண்ணங்கள் நல்லுணர்வுகளாகவே அமையும். அவை எல்லோரையும் வாழ்விக்கும் தன்மையுடையவனாகும்.

பண்பாகவும், பணிவாகவும் இனிய சொற்களைப் பேசுவதால் கேட்போர் மகிழ்ச்சியடைவர். நல்லுறவு ஏற்படவும் வழியேற்படும். அப் பேச்சு பிறர்க்கும், தமக்கும் நல்ல பயனைத் தரும்.

*"பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணி அல்ல மற்றுப்பிற"* – என்பது வள்ளுவர் வாக்கு.

நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் பிறர்க்கு நன்மைபயப்பதாய் விளங்க வேண்டும். ஒரு சிறு செயல்கூடப் பிறர்க்குத் தீங்கு விளைவிக்கக் கூடாது. எந்த ஒரு பணியிலும் சுயநலம் புகுந்துவிடல் ஆகாது. கடமைகளைச் செய்வதில் அசிரத்தையும் பலனைப் பெறுவதில் சிரத்தையும் கொள்ளல் சமய வாழ்விற்குப் புறம்பானது. சைவம், செயல்களில் தூய்மை மிளிரவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.

மனித வாழ்க்கையில் உலகியல் தேவைகளுடன் ஆன்மீகத் தேவைகளும் உண்டு. சைவசமய வாழ்வில் இந்த இரண்டு வகைத் தேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன. வாழ்க்கையில் ஆன்மீகம் இல்லையேல் முழுமைவாழ்வு ஆகாது. ஆன்மீகமானது இறை சிந்தனையுடன் நேர்மையான மானுடப் பண்புகள் உள்ள வாழ்க்கையில் மிளிர்கிறது.

இறை வழிபாடு, சமய அனுட்டானம், தியானம், இறை தொண்டுகள், சமய நூல்களைக் கற்றல், பெரியோரைக் கனம் பண்ணுதல் என்பவற்றில் ஈடுபாடு கொள்வதால் வீண் செயல்களிலும், விவகாரங்களிலும் எம் மனங்களையோ புலன்களையோ செலுத்தாது தவிர்த்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கருமத்தையும் செய்யத் தொடங்குமுன்னரும், செய்யும்போதும் எங்கும் நிறைந்த இறைவன் அவற்றைக் கண்காணித்துக்கொண்டிருக்கிறான், எதையும் மறைக்க முடியாது எனும் உண்மையைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதனால் தீவினைகள் நம்மைச் சேராமல் தடுத்துக் கொள்ளலாம். பாவச் செயல்கள்தான் தீவினைகள், தீவினைகள் பிறவிகள்தோறும் நம்மைத் தொடர்கின்றது. அவற்றைச் செய்தவர்கள் அனுபவித்தே தீர்க்க முடியும். தீவினைகளால் துன்பங்களே எமக்கு நேரிடுகின்றன. அதனால் பாவச் செயல்களைச் செய்யாது தவிர்க்கும்படி சைவம் கூறுகிறது. எனவே நற்குண நற்செய்கைகளிலேயே ஈடுபடுதல் வேண்டும்.

சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல. சமயமே வாழ்க்கை. வாழ்க்கையை சைவம் என்பது சைவத்தின் நிலைப்பாடு. மனிதர்கள் சமூகமாக வாழ வேண்டியவர்கள். பிறரில் தங்கியும், பிறரைத் தாங்கியும் வாழ்பவர்களாக மனிதர்கள் உள்ளனர். சமூகத்தவருடன் இசைந்தும், இணங்கியும் முரண்படாமலும் நல்லுறவு பேணியும் வாழ்தல் அவசியமாகும். அந்த நிலையில் பண்பாடு தேவைப்படுகிறது. மனம்தான் பண்பாடு உருவாவதற்கு முக்கியமான இடம். மனத்தைப் பண்படுத்துவதற்கும், பக்குவப்படுத்துவதற்கும் உறுதுணையாக வருவது சமயம்.

சேக்கிழார் சுவாமிகள் அருளிய பெரியபுராணம் என்னும் நூல் சைவசமயப் பண்பாட்டினைப் பேணிவாழ்ந்த நாயன்மார்களின் உண்மைச் சரித்திரங்களையும் அவர்களின் தன்னலமற்ற தொண்டுகளையும் எடுத்துக்கூறும் ஒரு சமய வாழ்வியல் நூல் ஆகும். அந்நூலில் சேக்கிழார் பல்வேறு நற் பண்புகளை எடுத்துக்காட்டியுள்ளார். அதில் தொண்டுள்ளங் கொண்டு, தொண்டு செய்து வாழ்ந்த சிவனடியார்களின் வரலாறுகள் கலங்கரை விளக்கங்களாக நின்று நம்மை நன்நெறிப்படுத்துகின்றன.

எல்லாம் வல்ல எம்பெருமானின் நினைப்பு எம்மிடம் நீங்காது நிலைபெற வேண்டும். நின்றும், இருந்தும், நடந்தும், கிடந்தும் என்றும் இறைவனின் திருத்தாள்களை எண்ணிக்கொண்டிருந்தால் நாம் நல்லவற்றையே சிந்தித்து, பேசி நற் செயல்களையே செய்ய வழியேற்படும்.

## இந்து மதத்தில் பசுவிற்கு இத்தகைய முக்கியத்துவம் ஏன்?

**பசு தியாகத்தின் சின்னம். நமக்குப் பயன்படாத புல்லையும் வைக்கோலையும் உமியையும் சாப்பிட்டுவிட்டு நமக்குப் பயனுள்ள பாலைத் தருகிறது. பால், குழந்தைகள் முதல் பெரியவர்கள்வரை அனைவரும் அருந்தக்கூடிய எளிய பூரணமான உணவு.**

**பிறருக்குப் பயன்படும் வகையில் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும். அமைதியான அடக்கமான வாழ்வு வாழ வேண்டும். சமூகத்திடம் நாம் கேட்பது குறைவாகவும், கொடுப்பது நிறைவானதாகவும் இருக்க வேண்டும் என்பதைப் பசுவின் வாழ்க்கை நமக்கு உணர்த்துகிறது. அதனால்தான் பசுவை 'கோமாதா' என இந்து மதத்தினர் வணங்குகின்றனர்.**

**அன்பாய் இருப்பதைக் காட்டிலும் உயர்ந்த அறிவு வேறென்ன இருக்கிறது? நீ வருவதை விரும்பாமல் ஒருவர் கதவையடைத்தால் சாவியின் துளை வழியே எட்டிப் பார்க்காதே துணிவிருந்தால் கதவை உடைத்து எறி! அல்லது போய்விடு.**

**- இந்து தருமசாஸ்திரம் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுர்வேதமும் இந்து சமயமும்

அ. சிவஷாந்தன்,
3ம் வருடம்,
பொறியியற் பீடம்.

இந்து சமயத்தில் 'ஆயுர்வேதம்' என்பது மனிதனுடைய ஆயுளை நீடித்து நிலைத்து வைக்கக்கூறும் மருத்துவசாஸ்திரமாகும். இந்துசமய நூல்களான வேதம், சிவாகமம் ஆகியவற்றில் ஓர் இந்துமகனின் வாழ்க்கை ஒழுங்குகளையும் வாழும் நெறிமுறைகளையும் கூறும் விதிகள் உள்ளன. இறைவனால் அருளிச்செய்யப்பட்ட வேதநூல்களில் மருத்துவ விளக்கமாக ஆயுர்வேதம் கூறப்பட்டுள்ளது.

ஆரியர் இந்தியாவுக்கு வருமுன் வாழ்ந்த சிந்துவெளி நாகரிககால மக்களின் மருத்துவ வரலாறு எவ்வளவு தொன்மையானது என்பதை நாம் எண்ணிப்பார்த்துவிட முடியும். புராண, இதிகாசங்களில் ஒன்றான இராமாயணத்தில் ஆரியரல்லாத இராவணன் என்ற இலங்கை நாட்டு வேந்தன், சிவபெருமானின் பெரும் பக்தன் மருத்துவகலை உட்பட, பல்கலைகளில் வித்தகனாக இருந்துள்ளான். இங்கே இந்து சமயத்தோடு ஆயுர்வேத மருத்துவக் கலை பின்னிக்கொண்டது.

இதனையே தொடராக நோக்கிக்கொண்டு போவோமானால் ஆயுர்வேத மருத்துவம் சித்தர்களாலும், முனிவர்களாலும் பேணிக்காக்கப்பட்டு வந்த மருத்துவமுறை ஆகும். தமிழ் நாட்டில் இமயமலையை அண்மித்து வாழ்ந்த சித்தர்கள் இக்கலையை வளர்த்த காரணத்தால், இக்கலை சிறந்தமருத்துவக் கலையானது. சித்து நிலையைப் பெற்றவர்கள் சித்தர்கள். 'சித்து' என்ற பெயருக்கு அறிவு, மாயாவித்தை, ஆன்மா, ஞானம், எல்லோரையும் உருவாக்கும் சக்தி என்று பொருள்கொள்வர். இவ்வாறு ஆன்ம ஞானம் பெற்ற சித்தர்கள் சித்தத்தில் சிந்தித்தபடியே உடலும் உண்பனவும் அடைந்து அனுபவிப்பர் ஆவார்கள். தமது உடலை தகுந்தபடி பலப்படுத்திக்கொண்டால் மறுபிறப்பில்லாப் பெருமையை அடையலாம் என்பதைக் கண்டுபிடித்தவர்கள், யோகப்பயிற்சியின்மூலம் உட்கார்ந்த இடத்திலேயே பல திசைகளிலும் செய்திகளைத்தெரிந்து கொள்ளக்கூடிய ஆற்றல் படைத்தவர்கள் இந்துசமய இறை வழிபாட்டில் கூறப்படும் தியானம், யோகம், மூச்சைப் பேணிப் பாதுகாத்தல் என்ற வழிமுறைகளை சரியாகக் கடைப்பிடித்து அதன்படி வாழ்ந்து காட்டி நோயில்லா வாழ்வையும், நீண்ட ஆயுளையும் உலகிற்கு எடுத்துக் காட்டியவர்கள் இவர்களாவர்.

அவ்வாறான வாழ்க்கையில் பிறப்பையும் வெல்லலாம் என்று உறுதிப்படுத்தினார்கள். இந்து சமயத்தில் கூறப்பட்ட ஞான மார்க்கமும் உயிர்களின் ஈடேற்றமும் சித்தர் வாழ்க்கை வழிமுறையால் நன்கு புலனாகிறது. தமிழ் நாட்டில் வாழ்ந்த சித்தர்களின் பெயர்கள் சிலவற்றைப் பார்ப்போம். அகத்தியர், பாம்பாட்டிச்சித்தர், போகர், சமய நூல்களில் திருமந்திரம் அருளிச்செய்த திருமூலர், தேரையர், திருவள்ளுவர், விசுவாமித்திரர், வான்மீகர், தன்வந்திரி என்பவர்களாவர். இவ்வாறான சித்தர்களினால் அனுபவரீதியாகக் கண்டறிந்த மருத்துவமே சித்த மருத்துவமாகும்.

இவ்வாறு இந்துசமய, புராண, இதிகாச வரலாற்றோடு பின்னிப் பிணைந்து வளர்ந்த இந்த ஆயுர்வேத சித்த மருத்துவம் இந்து சமயத்திற்குப் பெருமை ஊட்டுகிறது. எனவே இந்து சமயம் ஒரு மதக் கோட்பாடாக இறை வழிபாட்டை மட்டும் வலியுறுத்துவதாக இருக்கவில்லை. இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் மனு நீதிப்படி எப்படி வாழ வேண்டும் எனவும், ஆத்மார்த்த நீதி வாழ்க்கையை மண்ணில் எப்படி உயிர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் மதபோதனை செய்ததுடன் ஆத்மாவைக் கொண்ட உடலை அதாவது ஐம்பூதங்களால் படைக்கப்பட்ட உடம்பை எவ்வாறு நோயின்றி ஆரோக்கியமாகப் பேணிப்பாதுகாத்து நல்வழியில் வாழ்ந்து இறை அருள் பெற்று ஞான நிலையை அடையலாம் என்பதையும் கூறுகிறது.

இறைவனால் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் நோயின்றி வாழ அழிவில்லா சீரிய ஆயுர்வேத சித்த மருத்துவத்தை தந்த அரிய மதம் நமது இந்து மதம். இதற்கு சான்றாக பண்டைய ஆயுர்வேத நூல்களான சாரகசம்ஹிதை, சாஸ்ருதசம்ஹிதை, அஷ்டாங்கஹிருதயம், அஷ்டாங்க சங்கிரகம், மாதவநிதானம் போன்ற நூல்களை ஆதாரமாகக் காட்டலாம். இந் நூல்களைவிட திருக்குறள், அகஸ்த்தியர், போகர், புலிப்பாணி போன்றோர்களின் வைத்திய நூல்கள் மற்றும் செகராசசேகரம், பரராசசேகரம், சொக்கநாதர் தன்வந்திரியும் போன்ற ஈழத்து நூல்களையும் உதாரணமாக விளக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கை வைத்தியம், மூலிகை வைத்தியம் என்று போற்றப்படும் அதாவது மருந்துகளாகப் பயன்படும் அனைத்தும் தாவர வர்க்கத்தைச் சேர்ந்தவைகள். இவைகளைக்கொண்டு நோய்களைக் குணப்படுத்தும் இந்த மருத்துவம், மருத்துவ உலகிற்குப் பெரும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

நம் சைவ சமயத்தில் ஆலய வழிபாடுகள், சடங்குகள், பூசைகள், கிரியைகள், யாகங்கள் அனைத்திலும் ஆயுர்வேத சித்த மருத்துவத்தில் கூறப்பட்ட இயற்கை மூலிகை மருந்துகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. பூசைக்கும் கிரியைகளுக்கும் முக்கியமான உகந்த அர்ச்சனைப் பொருட்கள் என்று சொல்லப்படும் மங்கலப் பொருட்கள் அதாவது வெற்றிலை, பழம், பாக்கு, தேங்காய், கற்பூரம், ஊதுபத்தி யாவும் மனிதனின் சுகாதாரத்தை முன்னிறுத்தி நோயின்றி வாழ்வதற்குத் தக்கவையான பொருட்களாக இருக்கின்றன.

முதற்கண் வெற்றிலையைப் பார்ப்போம். சைவ சமய மக்கள் எந்த நல்ல காரியத்திற்கும் வெற்றிலையை உபயோகிப்பார்கள். நிறைய மருத்துவ குணமுள்ள அந்தப் பொருளையே முதலில் தொடுகிறார்கள். இறைவனை நினைத்து எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் வெற்றிலை, பழம், பாக்கு வைத்து அதாவது நைவேத்தியம் வைத்து ஆரம்பிப்பர். திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, புதுமனைபுகுவிழா, ஏடு தொடங்குதல், திருமண நிச்சயதார்த்தம், பிறந்த பிள்ளையைத் தொட்டிலிடுதல் ஆகிய அத்தனை மங்கலகரமான நல்வாழ்வு வாழ முன்னெடுக்கும் முழு நிகழ்ச்சிகளுக்கும், வெற்றிலை முதலிடம் வகிக்கிறது.

இந்த வெற்றிலையின் மருத்துவ குணத்தைச் சிறிது நோக்குவோம். நெஞ்சில் கட்டி இருக்கும் சளிக்கு இவ் இலைச்சாறைப் பிழிந்து குடித்தால் சளி இளகி வெளியேறும். பசியைத்தூண்டும். மலமிளக்கும். வாய்மணம் தீரும். இன்னும் பல நோய்களைத்தீர்க்கும்.

இதனைத்தொடர்ந்து முக்கனிகளில் சிறந்த வாழைப்பழம், இதன் மருத்துவ குணத்தைப் பார்ப்போம். முழுமையான உயிர்ச் சத்துக்கள் நிறைந்த ஒரு நிறையுணவு. பாலும் பழமும் உண்டே உயிர் வாழலாம். மலமிளக்கி, வெப்பகற்றி முத்தோடங்களுக்கும் நிவர்த்தியான கனி. இத்துடன் இன்னுமொரு பழத்தையும் அவசியம் கூற வேண்டும். எலுமிச்சம்பழம் இதுவும் நிறைந்த உயிர்ச்சத்து (C) உள்ள பழம். முத்தோடங்களும் சமனப்படுத்தும் நோய் நிவாரணி. எலுமிச்சை வாந்தியைக் குணப்படுத்தும். பசியைத் தூண்டும். களைப்போர்க்கு உன்னதமான பழம். பாக்கு துவர்ப்புச் சுவையுடையது, பல்லுக்குறுதியைத் தருகிறது, வாயின் துர்நாற்றத்தைப் போக்குகிறது. மஞ்சள் ஒரு தொற்று நீக்கி, சருமத்தில் ஏற்படும் தொற்றுகளில் இருந்து எம்மைப் பாதுகாக்கின்றது. இதுவும் ஒரு துவர்ப்புச் சுவையுடையது. தோலுக்கு அழகு தருகிறது. தோலில் ஏற்படும் விரணங்களைக் குணப்படுத்துகிறது. அருமையான மருத்துவகுணமுள்ள பொருள். இந்துசமயிகளின் வாழ்க்கையில் அன்றாடம் பாவிக்கப்பட்டு வருகின்றது. மங்களகாரியங்கள் யாவற்றிலும் மஞ்சள் முக்கிய இடம் வகிக்கின்றது.

எம் சமயத்தைக் கடைப்பிடிப்பவர்கள் எக் காரியத்தைத் தொடங்கினாலும் அதாவது சுப காரியங்கள், சமயச் சடங்குகள் யாவற்றிலும் பிள்ளையார் பிடித்து வைப்பார்கள். அல்லது மஞ்சள் அரைத்து அதனைப்பிடியாகப் பிடித்து அறுகம்புல் குத்தி வைப்பார்கள். இந்த இரண்டிலும் அறுகம்புல் ஒருவகை மூலிகை முதல்இடம் பிடிக்கிறது. இதன் மருத்துவ குணத்தைப் பார்ப்போம். அதன் மருத்துவ இயல்பு இமயத்திற்குச் சமமானது. இந்த அறுகம் புல்லின் பச்சைச்சாறு பருகினால் உயர் குருதி அமுக்கம், நீரிழிவு நோய், குடற்புண் ஆகிய தீராத வியாதிகள் தீரும். சயரோகம் முதலிய ரோகங்களுக்கு அதி உன்னதமான சிறப்பியல்புகளைக்கொண்ட தாவர மூலிகையாகும். இந்து சமயத்தில் அமங்கல காரியமாகிலும் சரி, சுபமங்கள காரியமாகிலும் சரி மேற்கூறப்பட்ட இயற்கைத் தாவரப்பண்டங்கள், மூலிகைகளையே முன்னிறுத்தி பரிமாற்றம்செய்து வாழ்வின் சுபமும் மங்களமும் ஆரோக்கியத்திலேயே அடங்கிறது என்பதனை வலியுறுத்தி நிற்கின்றன. ஆயுள் குறையாமல் வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டவே இந்து சமயச் சடங்குகளில் தாவரப் பொருட்களை முதன்மைப்படுத்துகிறார்கள். ஆரோக்கிய வாழ்வுதான் நல்வாழ்க்கையாக இருக்கும். நல்வாழ்க்கை வாழ்வுதான் மகிழ்ச்சியாக இருக்கும். அப்போதுதான் இல்லத்தில் மங்களம் உண்டாகும். மங்களம் நிலைக்க சித்த ஆயுர்வேதத்தில் மருத்துவகுணத்தில் சிறந்த இத் தாவரப் பொருட்கள் அல்லது இயற்கை மூலிகைகள் உதவுகின்றன. இதனால் இவற்றை மங்களப் பொருட்கள் என்று கொண்டாடுகின்றனர்.

மேற்கண்ட பந்திகளில் இந்து சமயமும் ஆயுர்வேத மருத்துவமும் எவ்வாறு நெருக்கமாக ஆன்மாக்களுக்குப் பயனளிக்கின்றன, அதன் வரலாறு எவ்வாறு இணைந்து பரிணமிக்கிறது என்பதனை விளக்கினோம். இன்னும் நூல்களாக ஆராய்ந்து கூறப்போனால் துல்லியமாக இந்துசமயிகளின் மருத்துவ மகிமையும் சமயப் பெருமையும் உலகம் அறிவது வெள்ளிடைமலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திருப்புகழியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிஞ்சிக் குமரன் திருப்புகழ் ஆரம்.

பூ . சோதிநாதன்,
விரிவுரையாளர்,
முகாமைக் கல்வித் துறை,
கலைப்பீடம்.

01.

அறிவதை நாடி அறிவினைத் தேடும்
அறிபவர் கூடும் — இடமான
அதியுயர் பேரா தனையினைச் சேரும்
அழகொளிர் சோலை — மலைமீதே
நெறியினை ஓதும் பிரணவ நாதம்
நெடுகிலும் நீவிர் — செவிமீதே
நெறியது தாரினென் றுணருவ தோரின்
நெடியவன் மாலின் — மருகோனைக்
குறியது வாக அறிவினிற் காண
குதிகொளும் மாய — மனந்தானும்
குவிதரு மாயின் புவியினிற் கோடி
குறைகளும் ஓடி — மறையாதோ
வறியவர் யாரும் அறிவினில் ஏனும்
வரஇய லாதென் — றுரைகூறும்
வனிதைய ரோடும் குறிஞ்சியில் வாழும்
வளமிகு ஞானப் — பெருமானே.

02.

கரையினை வென்று கடுகென வந்து
கலகல என்று — கடல்நாடிக்
கதியினைச் சென்று கதுமென முந்தும்
கனமணி சிந்தும் — நதிபோலே
உரையினை இன்றி உளமதில் ஒன்றி
உறுபொருள் ஒன்றை — உணர்வார்க்கே
உளகலை எங்கள் வளர்தமிழ் தன்னில்
உறைவதை நன்றே — உரைத்தாயே
குரைகடல் தன்னைக் குடியனை யந்தக்
குடமுனிக் கன்று — குழைவாக
குகமறை சொன்ன குறிஞ்சியின் மன்ன
குறமகள் தந்தி — மணவாள
வரையினில் நின்று வழிபடும் அன்பர்
வரைவதை ஒன்றும் — குறையாமல்
வரையறை இன்றி வருபவர்க் கென்றும்
வரம்அருள் கந்தப் — பெருமானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03.

அலைமனம் தன்னை அறுமுகன் சொன்ன
அகவழி தன்னில் அடைத்தோனே
அருவிகள் கொஞ்சி அழகினில் விஞ்சும்
அளவில திந்த வரைமீதே
கலைமகள் அன்று கலைதரும் என்று
களிநடம் சிந்தக் களித்தோனே
கடவுளைக் கண்டு கடுவினை வென்ற
கருணையின் மைந்த யொகஸ்வாமி
மலைகளில் நின்று மகவலி என்றும்
மணிகளைத் தந்து மலராலே
வலமுற வந்து வழிபட இங்கு
வருமொரு விந்தை எனஓத
கலைபயி லிந்தக் கழகமும் வந்து
கனவது மெய்க்கப் புவிமீதே
கருதிய சிந்தை தருகுறிஞ் சிக்கு
கலைதரு கந்தப் பெருமாளே.

04.

திருப்புகழ் ஓதும் விருப்பினர் கூடும்
திருத்தல மீதில் உறைவோனே
திகழ்குறிஞ் சீயில் புகழ்தனைச் சேர்க்கும்
திருவளர் பேர தனையோனே
பொருப்புகள் தோறும் இருபுறம் மாதர்
புடைதரக் காட்சி தருவோனே
பொருதிய சூரின் ஒருதனிக் கூறில்
புகுமொரு கோல மயிலோனே
உருப்படச் சேவல் ஒருகையில் ஏந்தி
உலகவர் வானில் உறைவோரும்
ஒருதனி வேல பொருதினில் வீர
அரஹர ஓமோம் எனவோத
விருதினை நாட்டி விறலினைக் காட்டி
விதியினை ஓட்டி மதியூட்டி
வினைதனை வீட்டி அனைவதும் கூட்டும்
மிகுசிவ யோகப் பெருமாளே.

05.

அறவரின் மனதில் அருளதைத் தருவ
அழகியன் எனவெ யனைவோரும்
அழகிய மயிலில் பழகிய முருக
அனைவதும் தருக எனவோத
உறவரு மௌன உமைதரு குழக
உடலுறை பெரும உயர்வான
உறுபொருள் உளதை உணர்பவர் உணர
உதவுதல் செயவெ வருவோனே
நிறமிகு மலர்கள் நறவினில் முழுகி
ஞிமிறுகள் இசைகள் தமிழ்பாட
நிகருற அதனை அபிநய முறவெ
நிருதனம் செயவெ நதிபாய
குறமகள் கணவ மறவரின் தலைவ
கொலுவினில் அமர்வ புவிஏழின்
குறைகளும் களைவ குவலய புரவ
குறிஞ்சியிற் குமரப் பெருமாளே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06.

உமையாளின் மைந்த எமையாள்வை கந்த
உலகேழுன் சொந்த இசைபாட
உயர்வான சந்த கவிநாலு மெந்தன்
ஒருநாவில் வந்து விருந்தாகி
இமையாத அந்த இமையோரும் இந்த
இசையேழும் தந்தம் சபைமீதே
இளையோர்கள் சொந்த வளையோசை சிந்த
இனிதா யிருந்து கனிவாகித்
தமையேம றந்து தனதான தந்த
தனதான தந்த எனவோத
தமியேனுக் குந்தன் தனியோகம் வந்து
தனிஞான அந்தம் தரவேணும்
சுமையா யிருந்து வினையா லழிந்து
துயரா யிழிந்து முடியாமல்
துரியாதி தந்தா பெரதானை வந்த
சுரர்பார்பு கழ்ந்த பெருமானே.

07.

நெறியென வாகி அறிவது மாகி
நினைவது மாகி நிறைவாகி
நிகரில தான பகரரி தான
நிலையென மோனம் அருள்வாயே
பொறியிய லாகி மருத்துவ மாகி
புதியவிஞ் ஞானம் கலையாகி
புவிவிவ சாயம் விலங்கியல் ஆகி
பொலியும் பல்பீடம் எனவாகி
அறிவியல் ஆரோக் கியவடி வான
அதிசய மான உருவோனே
அதியுயர் வான பதியது வான
அழகிய பேரா தனையோனே
குறிகளும் ஏக அறிவதும் போக
குறைகளும் மாள முழுதான
குறைவற மோன மறையது வாகி
குறிஞ்சியில் வாழும் பெருமானே.

08.

இருந்து கலைகள் விரிந்து பெருக
இயைந்து புதிய பொருள்தேடி
இளைஞர் குழுமி அறிந்து மகிழும்
இடத்தின் உருவெ கலையாளி
மருந்து கொளவும் வலிந்த பலினை
மறைந்து புகவும் வியன்ஞானம்
மலிந்த கலைகள் நலிந்த மிருகம்
இயந்த்ர பொறியின் இயல்யாவும்
விருந்தும் தருவை விருஞ்சி மகிழ
விரைந்து வருவை அபிராம
விதம் பல்கலைக் கழகமுன் வடிவு
வெறெதுன் வடிவு சொலலாகும்
குருந்த நிழலில் இருந்த குரவர்
குழைந்து மகிழ செவிமீதே
குறித்த பொருளை விரித்த குரவ
குறிஞ்சிக் குமரப் பெருமானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09.

எண்ணெண் கலையவை வண்ணம் பிரணவம்
எண்ணின் குணமவை எழிலாயே
எண்ணிப் பணுவதை கண்ணுற் றுறைபவ
எண்ணும் நவவித உமைதாயே
தண்ணென் றொருகலை உண்ணின் றெழுவது
தன்னில் அகரமும் அதுவாயே
தந்தம் புருவந டந்தக் கலையினைச்
சந்தித் தறிவதும் அருளாலே
நண்ணி யதனையும் விண்ணை யுறவென
நம்பி யமர்கையில் உயர்வாலே
மன்னு வெணிலவு சொன்ன நிறமென
வந்து ஒளிதர வரம்தாராய்
பண்ணின் இசையென கண்ணின் ஒளியென
பன்னு கலைதனில் வருவோனே
பக்தி வலையினில் பக்தர் மனதினில்
பற்றும் ஒருதனிப் பெருமானே.

10.

அதுவோ இதுவோ எதுவோ எனநான்
அறியா நிலையே அறிவாய்நீ
அதுநான் எனவே அதையோர் மொழியால்
அறவே மறைதான் புகன்றோதும்
இதுவோ பெரிதாய் புதுமா திரியாய்
எளியேன் அறிவால் அறிவேனோ
எதுதான் முடிவாய் அதையே பதியாய்
இனிநான் உளமீ துணர்மாறே
மதுமா மலர்மேல் புதுதேன் பருகீ
மழைபோல் இனிதாய் இசைபாடி
வருமோர் ஞிமிறோ பலவே திரியா
வளமார் குறிஞ்சீ மலைமீது
பதுமா மலரே அதுதான் சரணாய்
படிவார் வினையே உளயாவும்
பறந்தே புகவே உறைவாய் குமரா
பவநோய் களைவாய் பெருமானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மொழிபெயர்ப்பியலும், கவிதையியலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# GITANJALI

**- Rabindranath Tagore**

Thou hast made me endless, such is thy
pleasure. This trail vassel Thou emptiest
again and again, and fillest it ever with fresh life.

This little flute of a read thou hast carried
over hills and deals, and hast breathed
through it melodies eternally new.

At the immortal touch of thy hands my
little heart loses its limits in joy and gives
birth to utterance ineffable.

Thy infinite gifts come to me only on these
very small hands of mine. Ages pass, and
still thou pourest, and still there is room to fill.

# மேலும் நான் இரக்கின்றேனே...

தமிழில் - புருஷோத்தமஞானி

ஆண்டவா! நீயோ என்னை
ஆக்கினாய் அழிவே இன்றி.
ஈண்டுநின் விருப்பும் அஃதே
இந்தமட் பாண்டம் தன்னை
மீண்டுமே வெறுமை யாக
மிகவுமே காலி செய்து
பூண்டுகொள் என்றே என்னைப்
புத்துயிர் நிறைக்கின் றாயே.

உனதுகை சிறிய தான
இச்சிறு குழலை ஏந்தி
வனப்புறு காடும் காவும்
மலையெலாம் கடக்கின் றாயே
நினதுபோம் பாதை எல்லாம்
நெகிழஇக் குழலை ஊதி
அனவர தமுமே கீதம்
அமுதமாய்ச் சொரிகின் றாயே.

வரதமே அளிக்கும் வள்ளல்
மாயநின் கரமே தீண்டில்
சரணமாய் எந்தன் உள்ளம்
சகலமும் தாண்டி அன்பால்
பரமநின் வண்மை தன்னைப்
பாடிடப் போகும் போதே
வரமெனப் பலவும் தந்து
வழங்குவாய் வழங்கு வாயே.

அகமகிழ்ந் திடுவேன் என்றே
ஆண்டுகள் பலவாய் எந்தன்
மிகச்சிறு கையும் கொள்ள
விரும்பிய வாறு தந்தும்
யுகயுக மாக இந்த
அடியவன் ஆசை மீறி
மிகமிக இன்னும் வேண்டி
மேலும்நான் இரக்கின் றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரம் கொடு தாயே !

என்னைப் பெற்றெடுக்க என்று – நீ
உற்ற வேதனையைப் பற்றி
இந்த பாழாய்ப்போன இதயத்திற்கு
இன்றல்லவா புரிகிறது...

என் பிறப்பிற்காக உன் பொன்னுடல் வேதனையுறும்,
அதுவும் ஆயிரம் தேள்கொட்டிய வேதனையுறும்
என்று அன்றே தெரிந்திருந்தால்
கடினப் பாதை தாண்டி வெளிவராமல்,
உனக்கு வேதனை இழைத்திடாமல்,
கருவுக்குள்ளேயே கரைந்து போயிருப்பேனே அம்மா!

கடவுளைக் காணாத குறையைக்
கடவுள் எனக்குத் தந்ததேயில்லை.
அதற்காகத்தான் உனைத் தந்திருக்கிறானே!

உலகிற்கு வரும் முன்பே உன் கருவறைக் கூட்டில்
தொட்டுக் கொள்ளக் கிடைத்ததால்
என் பாதங்களுக்குப் புனிதத்துவம் கிட்டியதம்மா!

பிறப்பின் பின்னே உன் கால்களைத் தொட்டுக்
கண்களில் ஒற்றிக் கொண்டதால்
பிறந்ததன் பாதிப் பயனைப் பெற்றேனம்மா!

பற்கள் கூட முளைத்திராத அந்தப் பிஞ்சு வயதினிலே – உன்
உதிரத்தை நிறம்மாற்றி
நீ உணவாகத் தந்த – அந்த
உத்தம தீர்த்தத்தைப் பருகியதால்தான் இத்தனைக்
காலம் என்னால் உயிர்வாழ முடிகிறது உத்தமியே!

இறுதியாக ஒரு வேண்டுகோள்!
இன்னொரு பிறப்பிலே உனை நான் மகளாகச்
சுமந்திட ஒரு வரம் கொடு தாயே!

தேவப்பிரியா, பெ,
இறுதியாண்டு,
விவசாயபீடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயர் துடைப்பாய் வேலவா...!

இந்திரன் செம்மல் சிறையினில் வாட வருந்தியே
அமரர் வாட்டமுற்று அலற...
உந்தை, இவர்க்கு கதிஅளி என்று அனுப்பினன் - உன்னை
வந்தனை வேலவா, வந்தனை உனக்கு,
வாராய் குமரா! வண்ண மயிலில்...
எந்தனது துயரது போக்கி, எங்கள் தேசம் மலர அருள்கொடு கந்தா!

உம்பர் துயர் போக்க வேல்கொண்டு சமர் செய்த வேலவா!
இம்பர்யாம் படுகின்ற, முடிவிலா இன்னல் கண்டு
நீ பொறுப்ப தேனையா?
ஆனைமுகற்கு அருமைத்தம்பி - சூரனை
வதைக்க வலம் வந்த ஆறுமுகவா!
பானை வயிற்றார்க்குச் சொல்லப்பா
நாங்கள் படுகின்ற அவலத்தை...

தாயும் சேயும் சுற்றமும், சுகமும் உடமையும் - தாமிழந்து
ஓலமிட்டு அழுகின்றார்...
நீயும், இத்தனையும் கண்டு கசிந்துருகி, துயர்போக்காய்...?
கல்நெஞ்சா கந்தா? இருக்கின்றாய் ஏனப்பா?
அசுர சேனையை வேரோடு சாய்த்தவனே!
இந்தா! எனச்சொல்லி அருள் புரியும் குறிஞ்சிக் குமரா! பாரையா!

இன்னல் துடைத்து, கொடுஞ் சமர்க்கு முடிவுசெய்து
சொந்தங்கள் எல்லாம்...
இன்பமுடன் வாழ இன்னருளைச் சொரிந்திடப்பா - எங்கள் குகனே!
பாட்டியுடன் விளையாடி, அவள் தமிழை
உலகினுக்குச் சொன்னவனே!
நாட்டிவிடு விடுதலையை, நாங்கள்
நலமுடனே வாழ்ந்திடவே.....!

ந. பாலமுரளி,
விரிவுரையாளர்,
பொருளியற் துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாள் கோள்தான்
# என்ன செய்யும்...!

பாரதத்துக்கோர் பழனியென்று ஈழத்துக்கொரு குறிஞ்சியென,
சாத்துவீக ஒளிகொண்டு வீற்றிருக்கும் சண்முகனின்
பாவவினை போக்கும் பரத்துவத்தின் தத்துவத்தை
தூய மலைத்தாரகைகள் சொல்லி நிற்குமே!

நாள் கோள்தான் என்ன செய்யும் - நின்
நாமம் அதை ஜெபித்திருந்தால் குலம்
பாய்ந்தோடிக் குழி பறிக்கும் பில்லி, சூனியமும்
'பகலவனின் கதிர் கண்ட பனியதுபோல்' ஆகாதோ!

மரணங்கள் மலிந்துவிட்ட மாசுற்ற பூமியதில்
சுடர்விடும் முத்தாகத் திருவித்தாக நின்று,
மறுவுற்ற மாந்தரவர் வடுதனைப் போக்குவது
மயில்வாகனா உனையன்றி யாரோ!

ஆவி துடிக்குதய்யா அருளமுதின் அருமருந்தின்,
வேலழகைச் சொல்லுதற்கு மீண்டும் மீண்டும்
தேடிக்களைக்கின்றேன் என்ன செய்ய நறுஞ்
செந்தமிழாம் சங்கத்தமிழிலும் வார்த்தையில்லையே!

மன்னுயிர்களையும் மனம் கொண்ட கந்தா - நினது
பொற்பாத செம்மலரில் சென்னி வைத்துச்,
சித்தமிழந்து விழிநீர் செத்து வேண்டுகிறேன்
உத்தரவு தாருமப்பா நித்தமும் நின்புகழ் பாடுதற்கு!

கலைமதி நாகமுத்து,
3ம் வருடம்,
கலைப்பீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைத்து எழு!

கர்ப்பக்கிரகத்துள் கல்லாய்ச் சமைந்திருக்கும்
சிற்பவனே! - உன் காதில்
சற்றேனும் எங்கள் சாவோலம் கேட்கலையோ?
அர்ச்சனையில் பூரித்து
ஐயர்களோதுகிற மந்திரத்தில் மனம் லயித்து
கற்பூர வாசனையில் களிப்புண்டு - கழுத்தில் நிறைந்த
பூமாலை ஸ்பரிசத்தில் புளங்ககித்து
காண்டா மணியிசைக்குச் செவிகொடுத்துச்
சிலிர்த்திருக்குஞ் சோதியனே! - உன் காதில்
சற்றேனும் எங்கள் சாவோலம் கேட்கலையோ..!

நேற்றைக்கெம் சொந்தங்கள்
நீலக்கடலலையின் நெடும்பசிக்கு
இரையாகி
நூற்றுக்கணக்கில் நுரை தள்ளிக்கரை சேர்ந்த - கோரத்தின்
சோகத்தில் - நாமிட்ட சாவோலம்
காற்றைக்கிழித்ததுவே!
நாதா - உன்காதில்
சற்றேனும் எங்கள் சாவோலம் கேட்கலையோ?

நாள்தோறும் நாங்கள்
சாவோடு போராடிச்
சீவித்துக்கொண்டுள்ளோம்

ஒவ்வோர் தடவை எம்மவரின்
செங்குருதி மண் நனைக்கும் வேளையிலும்
எங்களது சாவோலம்
பொங்கிடுமே! - புண்ணியனே ஓர்காலும்
நாமெழுப்பும் சாவோலம் உன் செவியில்
சப்திக்கவேயிலையா?

ஆண்டுக்கணக்கில்
நீண்டு தொடரும் - எம் பேரவலம் நன்கறிந்தும்
வேண்டுமென்றே நீயங்கு
வராவிருக்கின்றாய் - எம்
வேதனைகள் யாவும் உந்தன்
வேடிக்கையாயிற்றோ?

கர்ப்பக்கிரகத்துள் கல்லாய்ச் சமைந்திருக்கும்
சிற்பவனே - சீக்கிரத்தில் நீ கொண்ட
மௌனம் கலைத்து எழு!

ஜெ. பிறேம்குமார்,
3ம் வருடம்,
பொறியியற்பீடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரீர் குமரன் அடி வணங்குவதற்கு...

காற்றில் கடலில்
குன்று மலைக் காடுகளில்
வேற்றின்றி எங்கும்
விரவிப் பரந்தவனாய்
வீற்றிருந்து ஆளுகிற
வினையறுக்கும் நாயகனெம்
வேல் சுமந்த வேள் குமரன்
தாள் பணிந்தால் போதும்!
தரணி செழிக்கும்!

குறிஞ்சியிலே குடியிருந்து
அருள் சுரக்கும்
குமரனவன்
அடி பணியின்
அகம் வெளிக்கும் - சோகம்
பொடி பட்டுப் போகும் - அவன்
அருட்பார்வை உஷ்ணத்தில்
மருள் நீங்கிப்போகும்!
மனதில் சுகம் பெருகும்!

பனி மேவும் குன்றுக்குப்
படியேறி நாம் போகின்
பரவசிக்கும் நெஞ்சு!

பாலகனின் கை சுமந்த
வேல் ஔியெம்
வேதனைகள் வீழ்த்திச்சிரிக்கும்! - எம்
கால் அவனின் கோயில் மண்
தொட்டால் துயர் சரியும்!

பேராதனைப்பதியில்
பெருமை சுமந்துறையும் -
நாதன் அடி பணிந்து
ஆராதனை செய்வம்! - அருட்கடலில் நீந்தி
தீராத நம் குறைகள்
தீர வழி சமைப்பம்!

ஸ்ரீ. பகீதரன்,
3ம் வருடம்,
பொறியியற்பீடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தருள் ஐயா..!

கார்முகிலென சூழும் கர்ம வினைகளை
கழித்தருளும் கணபதியே!
காத்திரமாய் நான் கந்தன் பெருமைகள்
கூறக் காத்தருள் ஐயா!

அழுந்திய தேவர்தம் இடர்தீர்க்க அக்னியாய்
சரவணப் பொய்கையில் உதித்து
அன்னையாம் பார்வதி தேவியின் அரவணைப்பில்
ஆறிரு கைகளைப் பெற்ற ஐயா!

செவிலியாய் காத்த கார்த்திகையரை
விண்மீனாய் மின்னச் செய்த வித்தகனே!
செம்மையாய் கார்த்திகை சஷ்டிவரை ஆறுநாட்கள்
விரதம் நோற்கும் அடியாரை ஆற்றும் ஐயா!

ஞானத்தை பிரணவமாய் பிரமனுக்கருளி ஞானசக்தியாய்
வேலைக் கரம் ஏந்திய வேலவா!
ஞானப் பழத்துக்காய் சினம்கொண்டு பழனிக்குன்றுதனில்
ஆண்டியாய் கோலம் கொண்ட ஆண்டவனே!

கலியுகத்தின் கலி துடைக்க அசுரரை
கடைந்தெடுத்த கடம்ப ஆரா!
கச்சியப்பருக்கு அடி யெடுத்தருளி கச்சிதமாய்
கந்தபுராணம் பாடல்பெற்ற கணேசன் இளையா!

சூரவதம் புரிந்து மயிலும் கொடியில் சேவலும்
சூழநின்ற தேவ சேனாதிபதியே!
தேவேந்திரன் தன்மகளைக் கைப் பிடித்து
தெய்வயானை சமேதராய் நின்றவனே!

அருணகிரி தன் திருப்புகழ் தனில்
திருவடி மகிழ்ந்தேத்தும் தேவா!
தெய்வஉரு குறைத்து வேடனாகி குற
வள்ளியை கூட்டிக் கொண்டகுகனே!

இச்சா கிரியா சக்தியாய் வள்ளியையும்
தெய்வ யானையையும் உடன்கொண்டு
இன்னல் தீர்க்க ஆறுபடை இல்லம்தோறும்
குடியிருந்து குவலயம் காக்கும் குமரேசா!

பேராதனைப் பதியினில் உவந் தமர்ந்து
உன்பதம் பேணும் உண்மையடியாரை
உவகையுற வைக்கும் குறிஞ்சிக் குமரா
காத்தருள் எமைக் காத்தருள் ஐயா...!

ச. லவப்பிரதன்,
பல் மருத்துவ விஞ்ஞான பீடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறம் செய்ய விரும்பு

மனிதா!
அறம் செய்ய விரும்பு
அறத்தின் அர்த்தம்
அழிந்து போகாமல்
இருப்பதற்காய்..

இயந்திரம் விழுங்கிய
இன்றைய வாழ்வில்
அறத்திடம்
புதிய அர்த்தங்கள்
அடைக்கலம்.

பசித்தவனுக்கு
புசிக்கக் கொடுப்பதறம்
அன்று.
இன்று,
பதிலுக்குப் பதில்
பலியெடுப்பது
ஓர் அறம்.

புராணம் சொன்னது
அறம் நிலைநாட்ட
நரகாசூரனை
அழித்த கதை
அது அறப்போர்.
இன்றும் போர்,
அறம் மறந்து
அரசியல் ஆட்சிக்காய்
மனிதம் இழந்து
மண்ணுக்காய்..

மனிதா!
புரிந்து கொள்
அறம் இன்றி
அகிம்சையில்லை
அமைதி வேண்டின்
அறம் செய்ய விரும்பு

அறநெறி நின்று
தலநெறி போற்றி
வளர்ந்தது
எம்மதம்.
மதவழி நின்று
அறவழி சென்று
ஆனந்தமடைவது
உத்தமம்.

வாழ்வை நெறிப்படுத்த
அறம்
வாழ்வை வளப்படுத்த
பணம்
பணத்துள் தொலைந்த
மனிதமனம்
பணத்தால், வாங்க
நினைக்குது அறம்.

மனிதா!
அறம் வாங்க
இடம் தேடாதே!
அறம் சிக்குவதில்லை
சில்லறைக்குள்.

எழுத்தறிவித்தல் அறம்
அதை விற்றல் மறம்
மறத்தால் மாளாமல்
அறத்தால் வாழ்.

இல்லறம் சிறக்க நல்லறம்
ஆற்று
இல்லாதாரிடம் இன்முகம்
காட்டு
அறவழி உன்தொழில்
ஆற்று
அகிம்சையை நிலைநாட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதவன் தோன்றாத
நாளில்லை
அலைகடல் ஒலிக்காத
நேரமில்லை
தென்றலும் வீச
மறந்ததில்லை
இயற்கையே மாறாதபோது

மனிதா!
நீ மட்டும்
அறம் செய்ய
மறந்ததென்ன?
அவதியில்
வாழ்வதென்ன?

கொலையும் கொள்ளையும்
கொண்டாடும் நாட்டில்
கோண மலையானுக்கு
என்ன வேலை?

பொய்யும் புரட்டும்
போர்த்த உலகில்
போதிமர புத்தனுக்கு
என்ன வேலை?

பழியும் பாவமும்
பரவிய பாரில்
யேசு பாலகனுக்கு
என்ன வேலை?

மனிதா!
வழிப்படுத்த
வந்தோரை
வழி அனுப்பிவிட்டு
வாழ முடியுமா?

அவர் வழி சென்று
அகிம்சை உணர்ந்து
ஆறுதலடைய
அறம் செய்ய விரும்பு

மனிதா!
புரிந்து கொள்
அறம் இன்றி
அகிம்சையில்லை
அகிம்சையின்றி
அமைதியில்லை
அமைதி வேண்டின்
அறம் செய்ய விரும்பு.

ஜவனீதா நடராஜா,
இறுதி வருடம்,
கலைப்பீடம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொழுது விடியாதோ...?

மங்கள வாழ்த்தொலிகள்...
தெருவெங்கும் விளக்கொளிகள்...
அழகுச் சிலைகளின் அணிவகுப்பு
ஆலய மணியோசையின் ஆர்ப்பரிப்பு
மகிழ்ச்சியில் மக்கள் கூட்டம் கொந்தளிப்பு!
ஈழத்தாயின் கையில் புலிக்கொடி பறக்குது
சோழர் பரம்பரை நாம் என்பதைப் பறைசாற்றி நிற்குது
நானிலத்தை ஆட்சிபுரிந்த சோழ பரம்பரை
இன்று நாலடி மண்ணுக்கு போரிங்கு புரியுது
வீரத்தில் விளைந்த நம் தமிழினம்தான்
இன்று வீணாகச் செத்து மடியுது
தமிழீழம் இனி விடியாதோ? ~ நம்
வேதனைகள் இன்றோடு தீராதோ?
வேட்டொலிகள் மாறாதோ?
எங்கள் வெஞ்சினங்கள் தீராதோ?
காரிருள் நீங்கிக் கதிரொளிதான் தோன்றாதோ?
கன்னித் தமிழ் எங்கள் கரம் தன்னில் சேராதோ?
சங்கத்தமிழ் எங்கள் காதினில் ஒலிக்காதோ?
பூபாளம் நான் இசைக்க
இப்புவிதனிலே புதுப்பொலிவு தோன்றாதோ?
புதிதான சமாதானம் எமக்காகப் பிறக்காதோ?
குமரன்தன் கண்பார்வை நம்மீது படாதோ...?

ம. சிவகுமார்,
2ம் வருடம்,
தமிழ்த்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பதிவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 51வது இந்து மாணவர் சங்க செயற்குழுவின் ஆண்டறிக்கை (2007 - 2008)

05-01-2007 எமது செயற்குழு பொறுப்பேற்றது.

15-01-2007 தைப்பொங்கல் விழா சிறப்பாக இடம்பெற்றது.

22-01-2007 அலங்கார உற்சவம் ஆரம்பமாகி 02-02-2007 வரை சிறப்பாக இடம்பெற்றது.

04-02-2007 எமது செயற்குழு உறுப்பினர்களின் பங்களிப்புடன் பரிசாரகர் இல்ல (chummary) திருத்தப்பணிகள் ஆரம்பமாகி தொடர்ந்து 3 தினங்கள் இடம்பெற்றது.

16-02-2007 மஹா சிவராத்திரி - வழமைபோல் இம்முறையும் 4 ஜாம விஷேஷ பூஜை ஆராதனைகளும் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. முதன்முறையாக பலேகல்ல பாலர் பாடசாலை மாணவர்கள் மத்திய மாகாண இந்து மாமன்ற அனுசரணையுடன் நாடக நிகழ்வொன்றை வழங்கி சிறப்பித்தனர்.

14-04-2007 சர்வஜித் வருடப்பிறப்பு - விஷேஷ அபிஷேக பூஜை ஆராதனைகளுடன் இடம்பெற்றது.

15-04-2007 மரநடுகையும் சிரமதானமும் - அகில இலங்கை இந்து கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளின் பேரில் சிறப்பாக இடம்பெற்றது.

02-05-2007 சித்திரா பூரணை - விஷேஷ அபிஷேக பூஜை ஆராதனைகளுடன் இடம்பெற்றது. அடியார்களுக்கு சித்திரைக்கஞ்சியும் வழங்கப்பட்டது.

30-05-2007 வைகாசி விசாக உற்சவம் - விஷேஷ அபிஷேக பூஜைகளுடன் இடம்பெற்றது.

22-06-2007 ஆனி உத்தரத்திருவிழா - அதிகாலையில் நடேசர் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நடேசர் தரிசனமும் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து நவோத்ரசகஸ்ர சங்காபிஷேகமும் இடம்பெற்றது.

12-08-2007 ஆடி அமாவாசை - விஷேஷ அபிஷேக பூஜை இடம்பெற்றது.

15-08-2007 ஆடிப்பூர உற்சவம் - விஷேஷ பூஜை வழிபாடுகளுடன் அம்பாள் திருவீதியுலாவும் இடம்பெற்றது.

18-08-2007 புதிய மாணவர் வரவேற்பு வைபவம் - காலை 8.30 மணியளவில் சகல பீடங்களையும் சேர்ந்த புதிய மாணவர்களால் ஆலயச்சுற்றாடலில் சிரமதானம் ஆரம்பிக்கப்பட்டு நண்பகல்வரை தொடர்ந்தது. பின்னர் மதிய போசனத்தைத் தொடர்ந்து பி.ப 2.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு புதிய மாணவர்கள் வரவேற்கப்பட்டனர்.

25-08-2007 யாத்திரிகர் வருகை – நீர்கொழும்பு இந்து அமைப்பின் ஏற்பாட்டில் யாத்திரிகர்களினால் ஆலய மண்டபத்தில் திருவாசக முற்றோதல் நடாத்தப்பெற்றது.

15-09-2007 விநாயகர் சதுர்த்தி உற்சவம் - விஷேஷ அபிஷேக பூஜைகளுடன் எம்பெருமான் திருவீதியுலாவும் இடம்பெற்றது.

12-10-2007 முதல் 21-10-2007 வரை நவராத்திரி பூஜை – ஒன்பது நாட்களும் கொலு வைக்கப்பட்டு வசந்தமண்டபப் பூஜை இடம்பெற்று தேவி தோத்திரங்கள் ஓதப்பட்டன. இறுதிநாளான விஜயதசமியன்று அம்பாள் திருவீதியுலாவுடன் மானம்பூ உற்சவம் இடம்பெற்று அடியார்களுக்கு இராப்போசனமும் வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 02,03,04 -11-2007 | திருத்தலயாத்திரை – 02-11-2007 அன்று இரவு 11.00 மணியளவில் பேராதனையில் இருந்து புறப்பட்டு மறுநாட்காலை கதிர்காமம் சென்றடைந்து மாணிக்கப்பிள்ளையார், ஏழுமலைப் பெருமானைத் தரிசித்து யாத்திரிகர் மடமொன்றில் மதியபோசனத்தை ஏற்பாடு செய்தோம். மாலையில் செல்லக்கதிர்காமத் தரிசனத்தை முடித்துக்கொண்டு இராப்போசனத்தின் பின்னர் சிலாபம் நோக்கிய பயணத்தை ஆரம்பித்தோம். மறுநாட்காலை உடப்பு கடற்கரைக்குச் சென்றபின் திரௌபதையம்மன் தரிசனத்தையும் முடித்துக்கொண்டு முன்னேஸ்வரத்திலுள்ள யாத்திரிகர் மடமொன்றில் மதியபோசனத்தை ஏற்பாடு செய்தோம். மாலையில் முன்னேஸ்வரப் பெருமானைத் தரிசித்த பின்னர் இரவு 10.00 மணியளவில் மீண்டும் பேராதனையை வந்தடைந்தோம். |
| 05,06-11-2007 | திரைப்பட விழா – 2007ம் ஆண்டிற்கான திரைப்பட விழாவையொட்டி கலைப்பீட AT திரையரங்கில் 4 திரைப்படங்கள் திரையிடப்பட்டன. |
| 08-11-2007 | தீபாவளி - முருகப்பெருமானுக்கு காலை அபிஷேக பூஜைகளுடன் விக்கிரகங்கள் யாவற்றுக்கும் புத்தாடை அணிவித்துக் கொண்டாடப்பட்டது. |
| 10-11-2007 | ஸ்கந்த ஷஷ்டி உற்சவ ஆரம்பம் - ஆறு நாட்களும் எம்பெருமானுக்கு விஷேஷ வசந்த மண்டபப்பூஜை ஆராதனைகளுடன் ஸ்கந்த ஷஷ்டி கவசமும் ஓதப்பட்டது. |
| 15-11-2007 | சூரஸம்ஹாரம் - சிறப்பாக இடம்பெற்று அடியார்களுக்கு இராப்போசனமும் வழங்கப்பட்டது. |
| 16-11-2007 | திருக்கல்யாணம் - முருகன் வள்ளியைக் கவர்வதற்குச் செய்த லீலைகளும், வள்ளியைச் சமாதானப்படுத்தியதும், திருமாங்கல்யதாரமும் இடம்பெற்றன. |
| 24-11-2007 | திருக்கார்த்திகை உற்சவம் - முருகப்பெருமானுக்கு மாவிளக்கு ஏற்றப்பட்டு ஆலயம் அகல் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு எம்பெருமான் வள்ளி தேவசேனா சமேதராக திருவீதியுலா எழுந்தருளினார். |
| 04முதல்10 -12-2007 | பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் ஆசாரியாரின் சிஷ்யை ஸ்ரீ ஸ்ரீ அருணாச்சலம் கௌரிஜி அவர்களினால் மாணவர்களுக்கு வாழுங்கலைப்பயிற்சி அளிக்கப்பட்டது. |
| 15-12-2007 | விநாயகர் ஷஷ்டி உற்சவம் - விஷேஷ அபிஷேக பூஜைகளுடன் எம்பெருமான் திருவீதியுலாவும் இடம்பெற்றது. |
| 15முதல்24 -12-2007 | தினமும் அதிகாலையில் திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி ஓதப்பட்டு நடராஜப்பெருமானுக்கு விஷேஷ அபிஷேக பூஜை ஆராதனைகள் இடம்பெற்றது. இறுதி நாள் ஆருத்திரா அபிஷேகமும் தரிசனமும் இடம்பெற்றது |
| 11-01-2008 | 2008ம் ஆண்டிற்கான புதிய செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. |

**மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுடன் கார்த்திகை உற்சவங்கள், நடேசர் அபிஷேக தினங்கள், பங்குனி உத்தரம், கிருஷ்ண ஜெயந்தி, விஷேஷ அபிஷேக பூஜைகள், சுவர்க்க வாயிலேகாதசி, வெள்ளிக்கிழமை பூஜைகள், பஜனைகள், சிரமதானங்கள், மற்றும் பல நிகழ்வுகளும் சிறப்புற நடைபெற்றன.**

**எமது செயற்குழு சிறப்பாக இயங்க ஒத்துழைத்த அனைவருக்கும் எமது நன்றிகள்.**

**"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"**

**இணைச்செயலாளர்கள்**
**செல்வன் பா. குகப்பிரியன்.**
**செல்வி ஜீவினி, க.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகளின் நிழல்கள் - 2007



**தைப்பொங்கல்**

ஆலய முன்றலில் பீட ரீதியாக பொங்கலைக் கொண்டாடும் மாணவர்கள்.



**தைப்பூசத்திருவிழா**

பூந்தண்டிகையில் எம்பெருமான் வள்ளி, தேவசேனா சமேதராக திருவீதியுலாக் கொண்ட கோலம்



**ஆனி உத்தரத்திருவிழா**

வள்ளி, தேவயானை சமேத முருகப்பெருமானின் திருவீதியுலா.



**நவராத்திரி**

அலங்கரிக்கப்பட்ட இலக்குமி, சரஸ்வதி, மற்றும் துர்க்கை கொலு பொம்மைகளுடன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஜயதசமி**

ஆலய முன்றலில் பிரதம குருவினால்
ஏடு தொடக்கப்படுகின்றது.






**சூரஸம்ஹாரம்**

சூரன் போர் நடைபெற்ற
காட்சி.

**திருக்கல்யாணம்**

மணவாளக்கோலத்தில் குமரன் வள்ளி, தேவயானை
சகிதம் திருவுலா எழுந்தருளிய காட்சி.





**விஷ்ணுவாலய தீபம்**

அகல் விளக்குகளினால் அலங்கரிக்கப்பட்டு
மிளிரும் விஷ்ணுவாலயம்.

தொகுப்பு : இ. றஞ்சித்
(இதழாசிரியர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமாணவர் சங்கம் 2007 / 2008



இருப்பவர்கள் (இ-வ) : ஸ்ரீ. பகீதரன், சி. திவாகரன், திரு. வ. தர்மதாசன், பேராசிரியர் எச். அபேகுணவர்த்தன (துணைவேந்தர்) வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி, பா. குகப்பிரியன்.

நிற்பவர்கள் (இ-வ) : ஜீவினி,க., மோ. மகிபன், ச.முரளீஸ்வரன், வே. சிவாகரன், செ. பகீதரன், இ. றஞ்சித், ந. நிரோசன், த. யெகன், செ. ஜெயசுதன், ஜென்சி, ம.

படத்தில் இல்லாதிருப்போர் : கலாநிதி வே. சிவகுமார், சி. கஜேந்திரன், வி. அஜீதன், ம. முரளிதாஸ், க. திரிலோசனன், க. சுமன், யாழினி, ர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக்குழு 2007 / 2008



இருப்பவர்கள் (இ-வ) : திரு. இரா. மகேஸ்வரன், திரு. வ. தர்மதாசன், பேராசிரியர் செ. சிவயோகநாதன், பேராசிரியர் எச். அபேகுணவர்த்தன (துணைவேந்தர்) வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி, கலாநிதி வ. மகேஸ்வரன், கலாநிதி ப. சரவணகுமார்.

நிற்பவர்கள் (இ-வ) : செ. ஜெயசுதன், சி. திவாகரன், ஸ்ரீ. பகீதரன், ந. நிரோசன், பா. குகப்பிரியன்.

படத்தில் இல்லாதிருப்போர் : திரு. அ. அரியரத்தினம், திரு. கே. நீலகண்டன், திரு. ரி. சிவசுப்பிரமணியம், திரு. எஸ். நாகேந்திரன், பேராசிரியர் அ.சிவராசா (அமரர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து மாணவர் சங்கம்

## செயற்குழு – 2007/2008

| | | |
|---|---|---|
| பெருந்தலைவர் | : | வைத்திய கலாநிதி தி. ஆனந்தமூர்த்தி |
| பெரும் பொருளாளர் | : | திரு வ. தர்மதாசன் |
| கௌரவ கணக்காய்வாளர் | : | கலாநிதி வே. சிவகுமார் |
| தலைவர் | : | செல்வன் சி. திவாகரன் |
| உபதலைவர் | : | செல்வன் மோ. மகிபன் |
| இணைச்செயலாளர்கள் | : | செல்வன் பா. குகப்பிரியன் |
| | | செல்வி ஜீவினி, க. |
| இளம் பொருளாளர் | : | செல்வன் ஸ்ரீ. பகீதரன் |
| இதழாசிரியர்கள் | : | செல்வன் இ. நருஞ்சித் |
| | | செல்வன் வே. சிவாகரன் |
| பண்டக முகாமையாளர் | : | செல்வன் ச. முரளீஸ்வரன் |
| நிர்வாக அலுவலர் | : | செல்வன் த. யெகன் |
| இணைப்பாளர் | : | செல்வன் ந. நிரோசன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | செல்வன் சி. கஜேந்திரன் |
| | | செல்வன் வி. அஜீதன் |
| | | செல்வன் ம. முரளிதாஸ் |
| | | செல்வன் க. திரிலோசனன் |
| | | செல்வன் செ. பகீதரன் |
| | | செல்வன் க. சுமன் |
| | | செல்வி ஜென்சி, ம. |
| | | செல்வி யாழினி, ர. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பாண்மைக்குழு
# 2007/2008

| | | |
|---|---|---|
| தலைவர் | : | வைத்திய கலாநிதி. தி. ஆனந்தமூர்த்தி |
| பொதுச்செயலாளர் | : | திரு. வ. தர்மதாசன் |
| நிர்வாகச்செயலாளர் | : | திரு. இரா. மகேஸ்வரன் |
| பொருளாளர் | : | கலாநிதி. ப. சரவணகுமார் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | பேராசிரியர். செ. சிவயோகநாதன் |
| | | கலாநிதி. வ. மகேஸ்வரன் |
| | | திரு. ஏ. அரியரத்தினம் |
| | | திரு. கே. நீலகண்டன் |
| | | திரு. ரி. சிவசுப்பிரமணியம் |
| | | அமரர் பேராசிரியர். அ. சிவராசா |
| | | திரு. எஸ். நாகேந்திரன் |
| | | செல்வன் சி. திவாகரன் |
| | | செல்வன் பா. குகப்பிரியன் |
| | | செல்வன் ஸ்ரீ. பகீதரன் |
| | | செல்வன் ந. நிரோசன் |
| | | செல்வன் செ. ஜெயசுதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# Jey Shakthi
## ஜெய் சக்தி



*Dealers in*
*Gold covering Jewellery,*
*Fancy Goods, Cosmetic,*
*Gift Items,*
*Eversilver Items &*
*Stationeries.*

No 564, Main street,
Matale.

*With Best Complements From*

# Hotel Rej

**For Delicious Foods & Luxury Rooms with Hot Bath, Western, Indian & Chinese Foods Internet, IDD, Fax, Photocopy Facilities.**

E-mail: shanth1983@yahoo.com

No 292A, Nuwara-Eliya Road,
Kudaoya, Hatton.

Tel: 051-2222806
060-2510080-82

*With Best Complements From*

# Shakthi Trade Centre



Dealers in General Hardware,
Building materials, Specialist in Gate Items,
Roller, Shutter Iron Doors,Home Gates
and Authorized Dealer in Multilac Paint &
Colour Bank

No 92, Dimbulla Road,
Hatton.

Tel: 051-2224309
051-4451033

*With Best Complements From*

# *Arul Jewellery*
## அருள் ஜுவலரி



*Excellent Craftsmanship,*
*Exquisite Design and*
*Genuine 22kt Sovereign*
*Gold Jewellery*

No 131/D, Main Street, Matale.
*E-mail: aruljewell@yahoo.com*

Tel: 066-4902823
078-5175160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

**CENTRAL ESSENCE SUPPLIERS**

(Suppliers to Confectioners & Bakers)



No 76B, Kings Street,
Kandy.

Tel : 081-2224187,081-2204480

*With Best Complements From*

**Ganga Textiles**

*Wholesale & Retail Dealers*
*in Textiles*
*Specialist in*
*High Quality Sarees.*



No 123, Kotugodella Veediya,
Kandy.

Tel: 081-2222911,081-4477334

*With Best Complements From*

KUMARAN
STORES



No 384, Main Street,
Matale.

*With Best Complements From*

**A. அரியரத்தினம்**

**கணக்குப் பரிசோதகர்கள்**



215, கொழும்பு வீதி,
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

## SRI VINAYAKAR STORES

*Dealers in All kinds of Groceries*
*Whole Sale & Retail*

121, Colombo Street, Kandy.
Tel: 081-4474369

*Branch:*

**New Central Traders**

No 134, Colombo Street, Kandy.
Tel: 081-2224523

*With Best Complements From*

## RATHIKA JEWELLERY

(PAWN BROKERS)



*(Orders Under Taken and Executed Punctually)*

*Buyers of Old Gold, Carat Gold & Silver at current rates*

No 24, D.S. Senanayaka Veediya,
Kandy.
Tel: 081-2225407

*With Best Complements From*

## SRILEKAH JEWELLERS

SINCE 1976

House of **916** Gold Jewellery



57, Yatinuwara Veediya,
Kandy.

Tel: 081-2202925,2229105

*With Best Complements From*

## ASHOK MOTOR CENTRE



NO 37, Peradeniya Road,
Kandy.

Tel: 081-2222864, 2232420
Fax: 081-2232148

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# NEW KESAVAN BOOK STALL

**Authorized Agent for M.D. Gunasena**

*Tamil, English & Sinhala Text Books on any Subject, Books & Magazines published in Sri Lanka & India.*
*School & Office Stationaries also available.*

**Telephone & Photocopy Services Available.**

No 52, Dunbar Road, Hatton.

Tel: 051-2222504,2222977

*With Best Complements From*

# LATHA JEWELLERS

**Jewellers & Pawn Brokers**



*Express your LOVE with GOLD*

No 27, Kotugodella Veediya,
Kandy.

Tel: 081-2232027

*With Best Complements From*

# COMMERCIAL HARDWARE STORES



43, Colombo Street,
Kandy.

Tel: 081-5627723
081-2234323
Fax: 081-2223565
Mob: 077-3260074

*With Best Complements From*

# ஹோட்டல் சௌமியா



இல 09, டி..எஸ். சேனாநாயக்க வீதி,
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# SRI MUTHUMARI STORES



150, Colombo Street,
Kandy.

Tel: 081-2234205

*With Best Complements From*

# SUN TRADER




154, Colombo Street,
Kandy.

Tel: 081-2225212

*With Best Complements From*

# RAJAH & SONS

*Dealers in*
*Tobacco, Perfumes,*
*Video Cassettes &*
*Photo Films.*



No 109, Colombo Street,
Kandy.

Tel: 081-2222835

*With Best Complements From*

# *Jayanthys*

Dealers in Textile



No 106, Colombo Street,
Kandy.

Tel: 081-2222464


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# KAVIJA ELECTRICAL

*Govt.Suppliers, Dealers in Electrical Goods Appliances & Hardware.*





Rajarata Super Market,
2nd Floor,
98-2/1, Colombo Street,
Kandy.

Tel : 081-2233215,5627455
Fax: 081-2244055

*With Best Complements From*

# Chithra JEWELLERS



**22 Carat Sovereign Gold Jewellers**

No 41, D.S. Senanayake Vidiya,
Kandy.

Tel: 081-5628531

*With Best Complements From*

# KRISHNA STORES



163, Colombo Street,
Kandy.

Tel: 234204

*With Best Complements From*

# NEW KARUNANITHI STORES



*General Merchants*
*Whole Sale & Retail*

124, Colombo Street,
Kandy.

Tel : 060-2843342
Mob: 077-3477492

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

## NEW CENTRAL HARDWARES

*General Hardware Merchants &*
*Estate Suppliers*
*Dealers in Power Tools, Engineering Tools,*
*Sanitary ware,*
*GI Fittings & Bolts & Nuts.*

No 39, Colombo Street, Kandy.

Tel : 081-2223242,081-2234103
Fax : 081-4477622
Mobile : 0777-842457
E-mail : prasansel@yahoo.com

*With Best Complements From*

## Central Agencies (Pvt) Ltd.

**IMPORTERS - CONTRACTORS - SUPPLIERS:**
**ELECTRICAL & HARDWARE MERCHANTS**



NO 127, Kotugodella Vidiya,
Kandy.

Tel: 081-2224203
081-2200063
Fax: 081-2232290

*With Best Complements From*

# NAGALINGAMS
## JEWELLERS



பாரம்பரிய நகைத்தொழிலில் 108 வருட கால
அனுபவமுள்ளவர்கள்

*Exclusivity for over a century*

Tel: 081-2232545

No 101, Colombo Street,
Kandy.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# S.K. COMPANY

*Wholesalers & Retailers*



No 93, Colombo Street,
Kandy.

Tel: 081-2222492

*With Best Complements From*

# *Mangalaa*

**JEWELLERY**



WESTERN UNION
MONEY TRANSFER

*E-mail: mangalaa_kandy@pre.sltnet.lk*

68, Yatinuwara Street,
Kandy.

Tel: 081-2234064
Fax: 081-2222431

*With Best Complements From*

# Eagle Electricals

*CONTRACTORS &*
*DEALERS IN*
*ELECTRICAL GOODS*

No 5, Kumara Veediya,
Kandy.

Tel: 081-2222913
Fax: 081-2234573

*With Best Complements From*

# ARUJUNA

Jewellers & Pawning (Pvt) Ltd.

*"Citadel of Gold City"*

**Specialist in:** *22kt Gold Jewellery*
*White Gold, Platinum*
*Sports Items*
*Quality offset Printing*

No 94A, Main Street, Hatton.
Tel: 0512222666, 0512224495

*E-mail: vsasi@sltnet.lk*

**Branch:** Aruna Jewellery
No 02, City Plaza, Dickoya Road, Hatton.
Tel: 0512224150

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# PALAYAKATS
## *Mega Store*





No 76, Colombo Street, Kandy.

Tel: 081-2223654 Fax: 081-2224509

*With Best Complements From*

## Sujatha JEWELLERS சுஜாதா ஜுவலர்ஸ்

*Genuine 22 Ct Gold*

No 278, Main Street, Matale. Tel: 066-4460658

*With Best Complements From*

## *Sri* MAHESWARI TRADERS

*Dealers in Gunny Bags, Scrap Iron, Scrap Metals, Old Cardboards, Mixed Papers & Waste Papers*

No 198, Colombo Street, Kandy. Tel: 081-4481475,081-5671336

*With Best Complements From*

## LANKA CENTRAL BOOK DEPOT

*DEALERS IN BOOKS, MAGAZINES AND STATIONERY*

(Whole sale & Retail)

No 84, Colombo Street, Kandy. Tel: 081-2222562

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# CHANDRA STORES

CS *IMPORTERS, EXPORTERS & WHOLESALE DEALERS*

No 207, Colombo Street, Kandy.

Tel: 081-2234332
081-2232756
081-2229175

Fax : 081-2229174
Mob: 077-3015151

**Branch:** No 60, New Moor Street, Colombo-12.

Tel: 011-2448420,2343959,2343960
Fax: 011-2436108

*E-mail: chandraimports@yahoo.co.in*

*With Best Complements From*

AT

மரம், பிளாஸ்டிக் மற்றும் உருக்கினாலான தளபாடங்கள்,
ஆர்ப்பிகோ, தம்ரோ மற்றும் MDF தயாரிப்புக்கள்
ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

# அரவிந் டிரேடர்ஸ்

(தளபாடங்கள்)

இல 13 C, டன்பார் றோட், ஹட்டன்.

தொலைபேசி: 051-23903, 2222074

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# MURUGAN STORES



No 90, Colombo Road,
Peradeniya.

Tel : 0812386395
Mob: 0773267355

*With Best Complements From*

# *Vicktoriya Stores*

*Dealers in: Polythene, PVC Sheeting, Nylon Ropes, Rigifoam Items & Rexine etc.*

No 122, Colombo Street,
Kandy.

Tel: 081-4470493

*With Best Complements From*

# SRI HARAN HARDWARE

ESTD: 1972



**Dealers in:**
**Machinery, Water Pumps, Tools, Paints, PVC Pipes, Power Tools, and Agents for Asian Paints & Anton Product.**

*E-mail: rihhk@sltnet.lk*

182, Colombo Street,
Kandy.

Tel: 081-2223750
081-2232371
Fax: 081-2232371

*With Best Complements From*

# SRI MURUGAN'S

Wholesale &
Retail Dealers
in Textiles



No 94, Colombo Street,
Kandy.

Tel: 081-2223399

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# RANJITHA TRADERS

IMPORTERS, GENERAL MERCHANTS & COMMISSION AGENTS

180, Colombo Street,
Kandy.

Tel: 08-232350,229155
Fax: 08-229156

*With Best Complements From*

# VASANTHAS

SINCE 1967



**Jewellers, Pawn Brokers & Authorised Money Changers**

*E-mail: vasanthas.kandy@gmail.com*

No-56, D.S.Senanayake Veediya,
Kandy.

Tel: 081-2233151,2224300
Fax: 081-2223627

*With Best Complements From*

# VIGNESWARAN STORES




Dealers in Coconut Oil

173, Colombo Street,
Kandy.

Tel: 081-2223014

*With Best Complements From*

# THE INTERNATIONAL HARDWARE STORES



*Authorized Dealers for Robbialack & asian paints, Hardware & Estate Suppliers.*

60, D.S. Senanayake Vidiya,
Kandy.


Tel: 081-2222220
081-2223432

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*



# SEAGULL PROPERTY DEVELOPERS (PVT) LTD.



**( A BOI Approved Company)**

*Mail to:* vakeesan@lanka.com.lk *or*

*visit us at:* www.seagullonline.com



12, Melbourne Avenue, Colombo - 04,
Sri Lanka.

Phone : +94(0112)503266
Mobile : +94(0777)317075
Fax : +94(0112)360481

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From*

# கலியாணி ஸ்ரோர்ஸ்



55, யட்டிநுவர வீதி,
கண்டி.

*With Best Complements From*

INDIA'S CUISINE

# SRIRAM

Indian Restaurant (Pte) Ltd.

## ஸ்ரீ ராம்

87, Colombo Street,
Kandy.

Tel: 081-5677287

*www.sriramrestaurant.com*

*With Best Complements From*

# SIVASAKTHI CORPORATION



No 258, Main Street,
Matale.

Tel: 066-2222599,2223835

*With Best Complements From*

ஹற்றன் மாநகரில் க.பொ.த. உயர்தர
விஞ்ஞான, கணித பாடங்களில் முன்னணி
வகிக்கும் கல்வி நிலையம்



# SCIENCE CENTRE

*Director: Haran*

No 176, Dimbulla Road,
Hatton.

Tel: 051-4920137

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி மறந்திலோம்...


இவ்விதழ் இடையூறின்றி வெளிவருவதற்குப் பல்வேறு வழிகளிலும் துணை நின்ற அனைத்து உதவும் உள்ளங்களுக்கும் நன்றிகூற நாம் கடமைப்பட்டுள்ளோம்.

- 'எம்மை எமக்கறிவித்து' எம்மோடு கூடிவாழும் குறிஞ்சிக் குமரன்.
- இம்மலர் சிறப்புற வேண்டுமென ஆசியுரைகள் வழங்கிய அனைத்து பெரியோர்கள்.
- தரம்மிக்க, சிறந்த ஆக்கங்கள் தந்துதவிய பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவச் சகோதரர்கள்.
- விளம்பரங்கள் தந்துதவி இந்நூல் சிறக்க உதவிய வர்த்தகப் பெருமக்கள்.
- நூல் தொடர்பாக, இயன்றவரை எழுத்துப் பிழைகள், சந்தேகங்கள் தீர்த்துதவிய பேராசிரியர்கள். க. அருணாசலம், இரா.வை.கனகரத்தினம், மற்றும் திரு. சி. சிவகாந்தன், திரு. செ. சுதர்சன் ஆகியோர்.
- கணனி வடிவமைப்புக்களில் துணை நின்ற நண்பன் ஸ்ரீ. பகீதரன்.
- இம்மலர் நிறைவுற எம்மோடு தோள்கொடுத்துழைத்த எம் நெஞ்சம் நிறைந்த சுரேந்திரன், திருவரங்கன், சுதர்சன், நவநீதன், சுபாஸ், சாந்தகுமார், மற்றும், எழுத்துப் பிழைகள் பார்த்துதவிய கீதா, அ. கலைமதி, நா. மற்றும் விளம்பரங்கள் சேகரிப்பதற்கு உதவிய பா. குகப்பிரியன்.
- தத்ரூப அட்டைப்படம் வரைந்த அபிராமி, த.
- இந்நூலை சிறப்புற அச்சிட்டு வெளியிட உதவிய சந்துனி பதிப்பகத்தார்.
- ஏனைய, நன்றிகூற மறந்த நன்றிக்கடன்பட்டோர்.

அனைவருக்கும் பணிவுடன் பல கோடி நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை*
*செய்நன்றி கொன்ற மகற்கு.........*

*(திருக்குறள்)*



**இந்துமாணவர் சங்கம்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

**இதழாசிரியர்கள்**





**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்.....





- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டுவந்தாய், அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
- மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

இந்த மாற்றம் உலக நியதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Complements From....*



# MATRIX CONSTRUCTION (PVT) LTD.

MTX

No: 20, Pereira Lane, Colombo-06,
Sri Lanka.

Hotlines
+94 777 276044
+94 777 742069

Tel : +94 115 524 181
Fax : +94 115 524 185
E-mail : info@matrixlk.com
Web : www.matrixlk.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org